ஜோதி

சுடர் 1 பிப்ரவரி-1938 கதிர் 7



ஜோதி

ஆசிரியர் — வெ. சாமிநாத சர்மா

சுடர் 1 — பிப்ரவரி 1938 — கதிர் 7

அடுத்த பக்கங்களில்

நமது நியாய சபை	—	1
மனிதவர்க்கத்தின் பரம்பரையும் ஸ்தாவர வர்க்கத்தின் அபிவிருத்தியும்	எஸ். சம்பத் M. Sc., (oxon)	11
அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் வரவு செலவுத் திட்டம்	—	14
உலகத்தில் என்ன நடக்கிறது?	(கார்ட்டூன்கள்)	15
ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ்	"சாமி"	17
ஸ்ரீ போஸ் படங்கள்	—	21
சுதந்திரத்திற்காக உயிர் துறந்த வீர மன்னன்	ச. முனிஸ்வாமி பிள்ளை	25
அடுத்த யுத்தம் ஏற்பட்டால்?	எப். ஜே.	29
ஒரு நாட்டின் மீது பல கண்கள்	சி. லேக்ளேர்	35
உலகப் பேர்வழிகள்	—	39
வாழ்க்கைப் போராட்டம்	வெங்கைக் கிழான்	40
அஜண்டா குகை சித்திரங்கள்	வி. ராகவேந்திர ராவ் M. A., B. T.,	41
தெய்வமும் தர்மமும்	எஸ். கே. நாராயணய்யர் B. A., B. L.,	46

எதியோப்பியாவும்—இந்தியாவும்	து. மி.	49
யோசனை கூறுங்கள்—கொஞ்சம்—	பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை M. A., B. L.,	55
தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஒரு பரிகாரம்	பி. எஸ். ஜேம்ஸ்	57
ஸ்ரீ சாரதாமணி தேவி	தனலட்சுமி முத்தையா	59
ஸர் பிரோஸிஷா மேர்வான்ஜி மேத்தா	ஒரு காங்கிரஸ் வாதி	62
அசோகன் சாஸனங்கள்	"மௌத்கல்யன்"	65
இரண்டு பர்மிய யுத்தங்கள்	கு. கோ. கிருஷ்ணன் B. Sc., (Hons)	69
ஜெர்மனியில் ஒரு தமிழ்ப் புலவர்	நமது அந்நிய நாட்டு நிருபர்	71
ஏக்கம் (ஸ்ரீமதி சரோஜினி தேவியின் பாடல்)	"அழகன்"	75
கனகாவின் கடிதங்கள்	"சரசா"	76
துலாக்கோல்	(புஸ்தக விமர்சனம்)	78
நமது நிருபர்களுடன்—	—	81
நமது அரசியல் டைரி	—	86
உலகத்தை நிறுப்ப தெப்படி?	"விஞ்ஞான போதகர்"	88
ஒரு புருஷனுக்குப் பல மனைவிகள்—ஒரு மனைவிக்குப் பல புருஷர்கள்!	ஆர். தெய்வ ஸஹாயம்	97
எங்களூர்க் கோவில்	சொ	102
எனது தாயார்	பண்டித ஜவஹர்லால் நேரு	106
ஸாபியா ஹானெம்—'எங்கள் தாய்'	பி. சி.	108
அயல் நாட்டு இந்தியர் பிரச்னை	வி. தேவாச்சாரியன்	111
அன்றாட உலகம்	—	116

ஒரு இயற்கைக் காட்சி

ஜோதி

சுடர் 1 பிப்ரவரி 1938 கதிர் 7

ஸ்ரீ போஸ்

சாதாரணமாகக் காங்கிரஸுக்கு ஒருவரைத் தலைவராகத் தெரிந்தெடுத்து விட்டால், தேசத்தினரால் அளிக்கப் படக்கூடிய மகத்தான கௌரவம் அவருக்குக் கிடைத்திருக்கிற தென்றும், அவரை முடிசூடாமன்ன ரென்றும் என்னென்னவோ சொல்லி யழைப்பார்கள். அப்படி யெல்லாம் ஸ்ரீ போஸை, நாம் சொல்லவோ அழைக்கவோ விரும்பவில்லை. ஏனென்றால், காங்கிரஸ் தலைமைப் பீடமானது, இப்பொழுது மல்லிகைப் பூ படுக்கையல்ல. அஃதொரு பலி பீடம். அதில் ஏறி நிற்கிறவர்கள், தம்மையே அதற்கு ஒப்புக் கொடுத்து விட வேண்டும். அப்பொழுதுதான் அதற்கும், அதன் மீது அமர்ந்திருப்பவர்களுக்கும் சிறப்புண்டாகிறது. காங்கிரஸ் தலைமை ஆசனம் தியாகத்தின் தீக்குழி; ஒழுங்கின் ஜீவநாடி; சதா சுழன்று கொண்டிருக்க வேண்டிய ஒரு மின்சார யந்திரம்; தேச மக்களின் அபிலாஷைகளை யெல்லாம் ஒருமுகப்படுத்தித் தன் பக்கத்தே இழுத்துக் கொண்டிருக்கும் ஆகர்ஷணப் பெட்டி; மகத்தான சிரமத்தின் மீது கட்டப் பெற்று, சென்ற அரை நூற்றாண்டில், முதல் முப்பத்தைந்து வருஷம் ஒரு போக்கிலும், மறு பதினைந்து வருஷம் வேறொரு போக்கிலும் போய்க் கொண்டிருக்கிற காங்கிரஸ் கப்பலின் சுக்கான். இந்தச் சுக்கானைப் பிடித்துக் கொள்ள வேண்டிய பொறுப்பு இந்த வருஷம் ஸ்ரீ போஸிடம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. இந்தப் பொறுப்பு மகத்தானது. இதனை ஏற்றுக் கொள்ள அசாதாரணமான தைரியம் வேண்டும். அப்படிப் பட்ட தைரியம் ஸ்ரீ போஸுக்கு இருக்கிறதைக் குறித்து அவரை நாம் பாராட்டுவோம்; வாழ்த்துவோம். தைரியம் சும்மா வந்து விடுமா? தன்னுடைய திறமையிலே நம்பிக்கை வேண்டும். இந்தத் தன்னம்பிக்கை ஸ்ரீ போஸுக்கு நிறைய இருக்கிறது.

'மதித்தற்கரிய சுதந்திரத்தை நாம் பெறுவதற்கு முன்னர் நாம் தனியாகவும், ஒரு சமூகமாகவும் எத்தனையோ துன்பங்களை அநுபவிக்க வேண்டியிருக்கும். நான் இங்கே ஆன்ம அமைதி பெற்றிருக்கிறேன். கடவுள், தனது அருட் பெருக்கினால், நான் என்

னென்ன துன்பங்களை யெல்லாம் அநுபவிக்க வேண்டுமென்று விருப்பங் கொண்டிருக்கிறரோ, அவற்றை யெல்லாம் இட சித்தத்துடன் ஏற்று அநுபவிக்கத் தயாராயிருக்கிறேன். நம்முடைய ஜன சமூகம் இழைத்த பழைய பாவங்களுக்கெல்லாம் பிராயச் சித்தமாக நான் இப்பொழுது தவஞ் செய்கிறேனென்று இந்தச் சிறை வாசத்தைக் கருதுகிறேன். இப்படிப் பிராயச் சித்தஞ் செய்து கொள்வதிலே நான் இன்பங் காண்கிறேன். நமது எண்ணங்கள் அழிந்து படா; ஜன சமூகத்தின் நினைவிலிருந்து நமது நினைவுகள் இறந்து படா. நமது ஆசைக் கனவுகளுக்கெல்லாம் நமது சந்ததியார் வார்சுகளாயிருப்பார்கள். இந்த நம்பிக்கைதான், என்னுடைய துன்பங்களினின்று எப்பொழுதும் என்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கும்.'

1927ம் வருஷம் ஸ்ரீ போஸ், சிறையிலிருந்து தன் சகோதரர் ஸ்ரீ சரத் சந்திர போஸுக்கு எழுதிய ஒரு கடிதத்தில் காணப்படும் வாக்கியங்கள் இவை. ஸ்ரீ போஸின் குன்றாத தன்னம்பிக்கைக்கு இதனைவிட வேறு எடுத்துக் காட்டு தேவையில்லை. இந்தத் தன்னம்பிக்கையுடன்தான் இப்பொழுது இவர் காங்கிரஸ் கப்பலின் சுக்கானைப் பிடிக்கிறார். இவருக்கு வெற்றி யுண்டாவதில் என்ன தடை?

நமது தனிப்பட்ட அபிப்பிராயங்கள் பலவிதமாக இருக்கலாம். ஸ்ரீ நேருவுக்குத்தான், இந்த வருஷமும் காங்கிரஸ் தலைமைப் பதவியைக் கொடுத்திருக்க வேண்டுமென்று கருதுவோர் பலர் இருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். அவர்களிலே நாமும் சேர்ந்தவர்கள்தான். ஆனல், தேசமக்கள் ஏகமனதுடன் ஸ்ரீ போஸைத் தலைவராகத் தெரிந்தெடுத்துவிட்ட பிறகு, அவரை வாழ்த்த வேண்டியது நமது தருமம்; அவரைப் பின்பற்ற வேண்டியது நமது கடமை.

ஏறக்குறைய நாற்பது வயது அளவிலே, காங்கிரஸ் அக்கிராசன மேடையில் ஏறி நிற்கும் பாக்கியத்தைப் பெற்றவர்களில் ஸ்ரீ போஸ், நான்காவதாவர். 1905ம் வருஷம், காசியில் நடைபெற்ற காங்கிரஸுக்கு கோகலே தலைமை வகித்தபோது அவருக்கு ஏறக்குறைய நாற்பது வயதுதான். 1923ம் வருஷம் டெல்லியில் நடைபெற்ற விசேஷ காங்கிரஸ் என்னும் படகை, ஒத்துழையாமை இயக்கப் புயலில் சாமர்த்தியமாகக் கடத்திச் சென்ற மௌலானா அபுல் கலாம் அஜாத்துக்கு அப்பொழுது நாற்பது வயது. 1929ம் வருஷம் லாகூரில் நடைபெற்ற காங்கிரஸில் மோதிலால், தாம் தரித்து வந்த காங்கிரஸ் 'மகுட'த்தை ஜவஹரின் சிரசில் வைக்கிறபோது, பின்னவருக்குச் சரியாக நாற்பது வயது. 1938ம் வருஷம் ஹரிபுராவில் நடைபெறுகிற காங்கிரஸில் தலைமை வகிக்கிற சுபாஷ் சந்திரருக்கு நாற்பது வயது முடிகிறது. எனவே, இளைஞருலகம் இவருக்கு விசேஷமான ஒரு சந்தோஷத்தைத் தெரிவித்துக் கொள்ளக்கடமைப் பட்டிருக்கிறது.

காங்கிரஸ் இப்பொழுது தனது ஐம்பது வயதைப் பூர்த்தி செய்து கொண்டு ஐம்பத்தோராவது வயதில் வந்து நிற்கிறது. இனி இது, நாற்பது வயதுக்குட்பட்ட இளைஞர்களுடைய தலைமையிலேயே செல்ல விரும்பும் என்று நாம் எதிர்பார்க்கிறோம். காலக் கடிகாரம் இந்தச் சூசகத்தைத்தான் நமக்குக் காண்பிக்கிறது.

ஒரு நெருக்கடியான சந்தர்ப்பத்தில் ஸ்ரீ போஸ் காங்கிரஸ் தலைமையை ஏற்றுக் கொண்டிருக்கிறார் என்று பத்திரிகாசிரியர்களுடைய சம்பிரதாயமான சொற்றொடர்களை நாம் இங்கே உபயோகிக்க விரும்பவில்லை. ஏனென்றால், ஒவ்வொரு வருஷமும் நமக்கு நெருக்கடிதான். நமது லட்சியமாகிற பரிபூர்ண சுய ராஜ்யத்தை அடைகிற வரை நெருக்கடிகள் இருந்து கொண்டு தானிருக்கும். எனவே, வேறொரு கோணத்திலிருந்து கொண்டு நாம் ஸ்ரீ போஸின் தலைமைப் பதவியை நோக்க விரும்புகிறோம்.

ஸ்ரீ போஸ், காங்கிரஸில் இடப்பக்கக் கட்சியைச் சேர்ந்தவர். அதாவது அதி தீவிர வாதி. இவரைத் தேசம், ஒரு மனதுடன் தலைவராகத் தெரிந்தெடுக்கிறது. வயது நிறைந்தவர்கள், அரசியல் அநுபவம், தியாகம் என்கிற தராசுகளில் நிறுத்துப் பார்த்தால் ஏற்கனவே காங்கிரஸ் தலைமைப் பீடத்தில் அமர்ந்திருக்க வேண்டியவர்கள், இப்படிப் பட்டவர்கள் ஸ்ரீ போஸுக்கு அநுகூலமாகத் தங்கள் பெயர்களை வாபீஸ் வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது? ஜன சக்தியானது, எந்தப் பக்கம் திரண்டு உருண்டு வருகிற தென்பதையே காட்டுகிறது. இந்த ஜன சக்தியின் பிரதிநிதியாகவே இன்று, ஸ்ரீ போஸ் காங்கிரஸ் தலைவர் பீடத்தில் அமர்கிறார். இந்தப் பலத்தை இதற்கு முன் எந்தக் காங்கிரஸ் தலைவரும் பெற்றதில்லை.

தவிர காங்கிரஸானது, இதுகாறும் போல்இனியும் அரசியல் போராட்டத்தோடு தன்னை வரையறுத்துக் கொண்டிருக்க முடியாது. பல முகங்களிலும் அது போராட வேண்டி யிருக்கும். இனி பொருளாதாரத்துறையிலேதான் அதற்கு அதிக போராட்டம் இருக்கிறது. இதிலே, பல சக்திகளையும் அது எதிர்த்து நிற்க வேண்டியிருக்கும். ஏகாதிபத்தியச் சிறகுகளின் நிழலிலே நின்று கொண்டு மதம், அதனை உறுத்துப் பார்க்கலாம்; ஏகபோக உரிமைகள் அதனை வழி மறிக்கலாம்; சில்லரைப் பூசல்கள் அதனைக் காலை வாரி இழுத்து விடலாம். இவற்றை யெல்லாம் லட்சியம் செய்யாமல் தேசத்தை—அதன் பிரதி பிம்பமான காங்கிரஸை—நேரிய பாதையில் அழைத்துச் செல்கிற தலைவரே இப்பொழுது தேவை. அந்தப் பொறுப்பு, ஸ்ரீ போஸிடம் ஹரிபுராவில் ஒப்படைக்கப் படுகிறது.

காங்கிரஸானது, இதுகாறும் ஆக்க வேலைகள் எதையும் செய்ய வில்லை. அதற்குப் பூர்வாங்கமாக அவசியம் செய்யப் பட வேண்டிய சில வேலைகளையே அது இது வரையில் செய்து வந்திருக்கிறது. இனி, தேசத்தின் நிர்மாண சக்திகளெல்லாம் ஒன்று திரட்டப் பட வேண்டும். தேச நன்மைக்கு அவை உபயோகிக்கப் பெற வேண்டும். உதாரணமாக, ஒத்துழையா இயக்கத்தின்போது பள்ளி பகிஷ்காரத்தை வற்புறுத்தினோம். ஆயிரக் கணக்கான மாணாக்கர்கள், பள்ளிக்கூடங்களினின்று வெளியேறி விட்டார்கள். ஆனால் அவர்களுக்கு வேறு நல்ல வழியை நாம் காண்பிக்க வில்லை. தேசிய முறையில் புதிய பள்ளிக்கூடங்களை அமைத்துக் கொடுக்க வில்லை. இனியும் அப்படி யிருக்க முடியாது. கல்வி முறை, கைத்தொழில் அபிவிருத்தி, பொருளுற்பத்தி முதலிய எல்லாத் துறைகளிலும் காங்கிரஸ் சில திட்டங்களை வகுத்து நேர் முகமாகவோ, பின் புறமாகவோ இருந்து கொண்டு தேசத்திற்கு வழி காட்ட வேண்டிய நிலைமை இப்பொழுது ஏற்பட்டிருக்கிறது. அரசாங்க

நிருவாக மனைத்தையும் கொண்டு செலுத்த வேண்டிய பொறுப்பு காங்கிரஸுக்கு ஏற்படும். இவை யனைத்தையும் நடத்திச் செல்ல வேண்டியவர் ஹரிபுரா காங்கிரஸ் தலைவர்.

தாய்நாட்டுப் பிரச்னைகளைக் கவனிக்கிறதோடு, உலகப் பிரச்னைகளையும் கூர்ந்து கவனிக்க வேண்டிய பொறுப்பு இப்பொழுது காங்கிரசுக்கு அதிகமாக ஏற்பட்டிருக்கிறது. உலகத்தினின்று பிரிந்து இந்தியா வாழ முடியாது. எவ்வளவோ முன் யோசனையுடன்தான், அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி காரியாலயத்தில், அந்நிய நாட்டுக் கிளை இலாகா ஒன்று ஏற்படுத்தப் பட்டிருக்கிறது. ஸ்ரீ போஸின் நிருவாகத்தின் கீழ் இந்த இலாகா இன்னும் அதிகமாகப் பலப் படுத்தப் படும் என்றும், இதன் உபயோகமும் அதிகரிக்கும் என்றும் எதிர் பார்க்கிறோம்.

ஜன சக்தி பின் தொடர்ந்து வர, காந்தி யடிகளின் ஆன்ம சக்தி வழி காட்ட, காங்கிரஸ் கப்பலை ஸ்ரீ போஸ் ஜாக்கிரதையாக—ஆனால் வேகமாக நடத்திச் செல்வார் என்ற நம்பிக்கை நமக்குப் பூரணமாக உண்டு.

தெய்வப் பிரார்த்தனை

மாகாண சட்ட சபைகளில், ஆரம்பத்தில் தெய்வப் பிரார்த்தனை தேவையா இல்லையா வென்பதைப் பற்றி பலத்த வாதப் பிரதிவாதங்கள் நடைபெற்று வந்தன. டெல்லியில் சமீபத்தில் கூடிய மாகாண சட்ட சபைகளின் தலைவர்கள், தெய்வப் பிரார்த்தனை தேவையில்லை யென்று முடிவு கட்டி யிருக்கிறார்கள். இது நமக்கு முற்றிலும் சம்மதம். இதனால் நமக்கு தெய்வ நம்பிக்கையில்லை யென்பது அர்த்த மில்லை. இந்தத் தெய்வப் பிரார்த்தனைப் பிரச்னையானது, அநுபவ சாத்திய மில்லாத ஒரு பிரச்னையாக இருக்கிறது. ஒரு சட்ட சபையிலே எல்லா மதஸ்தரும், எல்லாப் பாஷையினரும், கடவுள் நம்பிக்கை யில்லாதவர்களுங் கூட கலந்து இருப்பார்கள். முதலில் எந்த மதத்தினருடைய பிரார்த்தனையை எந்தப் பாஷையில் தொடங்குவது? ஹிந்து மதம் சநாதன மத மென்றும், சமஸ்கிருதம் ஆதி பாஷை யென்றும், அதனால் வேதத்திலிருந்து சில வாக்கியங்களை எடுத்துச் சொல்வது பொருந்தும் என்றும் ஹிந்துக்கள் கூறலாம். ஆனால் ஹிந்துக்கள் எல்லாருமே இதனை அங்கீகரிப்பார்களா வென்பது சந்தேகம். ஹிந்துக்களிலேயே, ஆரிய சமாஜத்தார், பிரம சமாஜத்தார் முதலிய பலரும் இருக்கிறார்கள். தவிர, எந்தப் பாஷையில் சொல்வது என்பது ஒரு கடும் பிரச்னை. இந்தச் சிக்கல்களெல்லாம் தோன்றாமலிருப்பதற்கு வழி, தெய்வப் பிரார்த்தனை இல்லாமற் செய்து விடுவதுதான். தவிர, கால நிலைக்கேற்றவாறு மனிதனுடைய அறிவைக் கொண்டு இயற்றப் படும் சட்டங்களுக்குத் தெய்வத்தின் துணையை நாடுவது அவ்வளவு பொருத்தமாக நமக்குத் தோன்றவில்லை. நம்முடைய சக்தியிலே நமக்கு நம்பிக்கை யிருந்தால்தான், கடவுளின் சக்தி நமக்குத் துணை செய்யும். மற்றும், அரசியல் வேறு, மதம் வேறு என்று தனித் தனியாகப் பிரித்து விட வேண்டு மென்ற வாதம் உலகத்தின் எந்தப் பாகத்திலும் பலமாக நடந்து கொண்டிருக்கிறபோது, இந்தப் பிரச்னையை நாம் இங்கே இப்பொழுது கொண்டு புகுத்த வேண்டியதில்லை.

தேசீய கீதம்

ஆனால் ஒவ்வொரு சட்ட சபைக் கூட்டத்தின் ஆரம்பத்திலும் தேசிய

கீதம் பாடப்பட வேண்டுமென்று நாம் விரும்புகிறோம். இதில் மதபேதமோ, பாஷை வேற்றுமையோ, கட்சிப் பிளவுகளோ வந்துபுக வேண்டியநியாயமே இல்லை. தேசம் எல்லாருக்கும் பொது. அதனுடைய நல் வாழ்வை நாடுவது எல்லாருடைய கடமை. இதனை நமக்கு நினைவூட்டுவதுதான் தேசிய கீதம். முன்னே நாம் கூறியபடி, தேசிய கீதம், தேசியக் கொடி முதலிய தேசியச் சின்னங்கள் எல்லா நாடுகளிலும் எப்பொழுதும் உண்டு. அப்படிப்பட்ட தேசியச் சின்னங்களை நாமும் நமக்கென்று வகுத்துக் கொண்டு அவற்றிற்கு மரியாதை செலுத்துவது நமது கடமை. இந்தியாவிலுள்ள மாகாணங்களைப் பாஷை வாரியாகப் பிரிக்கிற வரையில், ராஷ்ட்ர பாஷையாகிய ஹிந்தியில் இந்தத் தேசிய கீதம் எல்லா மாகாண சட்டசபைகளிலும் பாடப் பெறல் நலம். பின்னர், அந்தந்த மாகாணத்தில் பிரதானமாக வழங்கப் பெறும் பாஷையில் தேசியகீதம் பாடப்பெறுவதும், இந்தியா அனைத்திற்கும் பொதுவாக அமைக்கப்படும் சட்ட சபைகளில் ஹிந்தியில் பாடப் பெறுவதும் பொருத்தமாயிருக்கும்.

எங்கள் தமிழ்மொழி

'தமிழ் மொழியைக் கட்டாயமாக்கி எல்லாப் பாடங்களையும் தமிழ் மொழியிலேயே சொல்லித் தர வேண்டுமென்றும், முதல் மூன்று பாரங்களில் ஹிந்தியைக் கட்டாய உதவி பாஷையாகக் கற்றுக் கொடுக்க வேண்டுமென்றும் போட்டிருக்கிற திட்டத்தை இம் மகாநாடு முழு மனதுடன் ஒப்புக் கொள்கிறது.'

வத்தலகுண்டு மகாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இது. ஹிந்தியை ஒரு பாடமாக ஏற்படுத்துவதனால், தமிழ் மொழிக்கு ஏதோ ஆபத்து வந்துவிடப் போகிறதென்று கூச்சலிடுகிறவர்கள், தமிழ் மொழிக்குக் கல்வித் திட்டத்தில் என்ன ஸ்தானம் கொடுக்கப்பட்டிருக்கிறதென்பதை அறியாமலேதான் பேசுகிறார்கள் என்று கருதுகிறோம். தாய் மொழி மூலம் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்ற சென்னை மாகாண மந்திரிச் சபையின் கொள்கை கொஞ்சம் கூட மாறவில்லை. இதனால் தமிழ் மொழி வளர்ச்சியடையுமே யல்லாது குன்றாது. தற்போது அகில இந்திய விவகாரங்களைச் சரளமாக நடத்துவதற்கு ஹிந்தி தேவையாயிருக்கிறது என்ற ஒரே கருத்துக் கொண்டுதான் அதனைக் கட்டாய உப பாடமாக வைக்கத் தீர்மானித்திருக்கிறார்கள் மந்திரிச் சபையார். இனி, 'தமிழுக்கு ஆபத்து' என்ற கிளர்ச்சி அடங்கி ஒடுங்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

ஜமீன்தாரி முறை

தேவையான அளவு ஈடுபடுத்தியாகிலும் ஜமீன்தாரி முறையை ஒழிக்க வேண்டுமென்று தமிழ் நாட்டு மகா நாட்டில் நிறைவேற்றப் பட்ட தீர்மானம், நமக்கு ஒரு திசையறி கருவிபோல் இருக்கிறது. இந்த மாதிரியான தீர்மானம், இதற்கு முந்திய மகா நாடுகளில் நிறைவேறியது கிடையாது. இதனால் தேச மக்களின் எண்ணங்கள் எந்தப் பக்கம் திரும்பிக் கொண்டிருக்கின்றன வென்பதை நாம் நன்கு உணர்ந்து கொள்ளலாம். இந்த ஜமீன்களும் ஜாகீர்களும் ஏற்பட்ட வரலாறே மிக ஆச்சரியமானது. ஆதியில் பிரிட்டிஷார் தங்கள் சாம்ராஜ்யத்தை இந்தியாவில் ஸ்தாபித்த காலத்தில், தங்களுக்கு உதவிசெய்தவர்

களுக்குத் தரிசாகக் கிடந்த விசால மான பூப்பிரதேசங்களை உரிமைப் படுத்திக் கொடுத்தார்கள். 'ஆற்றிலே போகிற தண்ணீரை அப்பா குடி, ஐயா குடி' தானே. தவிர, கிழக்கிந்தியா கம்பெனியாருடைய நிருவாகத்தின் கீழ் கம்பெனிக்கு எப்படியாவது பணத்தைச் சேர்த்துக் கொடுக்க வேண்டுமென்ற ஒரே நோக்கத்துடன் கம்பெனி உத்தியோகஸ்தர்கள் விவசாயிகளிடமிருந்து நில வரியை வசூலிக்கிற போது, வரி செலுத்த முடியாதவர்களுடைய நிலங்களை யெல்லாம் ஏலம் போட்டார்கள். அவற்றைச் சொற்ப விலை கொடுத்து வாங்கி, மொத்தமாக அரசாங்கத்திற்கு வருஷத்தில் இவ்வளவு நில வரி கட்டுவதென்று ஒப்பந்தம் செய்துகொண்டு ஜமீன்தார்களானவர் பலர். பொதுவாகவே, இந்தியாவில் பொருளுற்பத்தி அதிகமாகவும் திறமையாகவும் செய்யப் படாம லிருப்பதற்கு முக்கிய காரணமாகக் கூறப்படுவது, விவசாய நிலங்களைச் சிறு சிறு துளைகளாகப் பிரித்திருப்பதே யென்று சொல்லப்படுகிறது. ஒரு சிலரிடத்தில் பெரும்பாலான நிலங்களி ருப்பதும், பெரும்பாலோரிடத்தில் சிறுபான்மை நிலங்கள் இருத்தலும் தேசத்தின் பொருளாதார வாழ்விலே எப்பொழுதும் ஒரு புரைபோலத்தான். இந்த நிலைமையில், ஜமீன்தார்கள், மிராசுதார்கள் முதலியோர் கொஞ்சம் கீழிறங்கிப் பார்க்க வேண்டுமென்று விரும்புகிறோம். எப்பொழுதும் போல் மேலேயே பார்த்துக் கொண்டிருந்தால், எந்தச் சமயத்திலும் கால் சறுக்கி விடலாம். ஆதலின், இவர்கள் விரைவிலேயே, தேச மக்களுடைய மனோ பாவத்தை உணர்ந்து கொண்டு தங்களைச் சரிப்படுத்திக் கொண்டு விடுதல் நல்லது.

பட்டம்

கௌரவப் பட்டங்கள் அளிப்பது இந்தியாவில் புராதன சம்பிரதாயம். மன்னனுக்கும் மன்பதைக்கும் தொண்டு செய்து அதன் மூலம் அவர்களுடைய நன்றியை இந்தப் பட்டங்கள் மூலமாகப் பெறுவது வழக்கம். அரசர்கள், இவர்களைக் கௌரவித்து, பட்டத்துக் குரிய சில சின்னங்களையும் அளிப்பார்கள். பண்டைக் காலத் தமிழ் நாட்டிலும் இந்த வழக்கம் இருந்து வந்திருக்கிறது. உதாரணமாகக் 'காவிதி' என்றபட்டம் உயர்ந்த வேளாளர் பெறுவ தென்றும், இப் பட்டத்தினர் அணியும் பூவொன்றுண்டென்றும், அரசனிடத்தில் அமைச்சராயிருந்தார்க்கே இது பெரும்பாலும் வழங்கப் பட்ட தென்றும் தெரிகின்றன. பொதுவாக, தேசமக்களினால் மானிக்கப் பட்டவர்கள் தான் அப்பொழுது பட்டதாரிகளாக இருந்தார்கள். தவிர, அப்பொழுது மன்னன் வேறு, மன்பதை வேறு என்று பிரிக்க முடியாத நிலைமை இருந்தது. இப்பொழுது நிலைமை வேறு. பொது ஜன அபிப்பிராயத்திற்கும், அரசாங்கத்திற்கும் எத்தகைய தொடர்பு இருக்கிற தென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. இந்த நிலையில் அரசாங்கத்தாரால் வழங்கப் படுகிற பட்டங்களுக்கு அர்த்தமே யில்லை. ராவ்பகதூர் திவான் பகதூர் போன்ற பட்டங்களெல்லாம், மொகலாய சாம்ராஜ்ய சம்பிரதாயத்தின் துண்டு துணுக்குகள். இவைகளை, இந்த இருபதாம் நூற்றாண்டில் வழங்கிக் கொண்டிருப்பதில் யாருக்கு என்ன நன்மை உண்டாகப் போகிறது? அநேக பட்டதாரிகளைப் பொது ஜனங்களுக்குத் தெரியவே தெரியாது. ஜனப் பிரதிநிதித்துவம் வாய்ந்திராத ஓர் அரசாங்

கத்தின் உப்பை அவர்கள் ஏராளமாகத் தின்றிருக்கலாம். அதற்காக—? இந்த மாதிரியான பட்டங்கள் வழங்கப்படக் கூடாதென்று பம்பாய்ச் சட்டசபையில் நிறைவேற்றப் பட்ட தீர்மானத்தை நாம் முற்றிலும் ஆதரிக்கிறோம். பட்டதாரிகளே இதற்கு ஆதரவு கொடுப்பார்களென்பது நமது நம்பிக்கை.

உலக சமாதானத்திற்கா?

1937ம் வருஷத்தில் உலகத்திலுள்ள எல்லா நாடுகளும் சேர்ந்து, யுத்த தளவாடங்களுக்காக 36,000,000,000 ரூபாய் செலவழித்திருக்கின்றன. இங்கிலாந்து, அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, இத்தலி, ஜப்பான், ருஷ்யா ஆகிய இந்த ஏழு நாடுகளும் சேர்ந்து 24,000,000,000 ரூபாய் செலவழித்திருக்கின்றன. அதாவது மொத்தச் செலவில் முக்கால் பாகம் இந்த ஏழு நாடுகளும் விழுங்கியிருக்கின்றன. ஐரோப்பிய மகா யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன்னர், எல்லா நாடுகளின் மொத்த ஆயுதச் செலவு 12,557,139,000 ரூபாய். 1932ம் வருஷம் ஆயுதப் பரிகரண மகாநாடு நடைபெற்றபோது, எல்லா நாடுகளின் தளவாடச் செலவு 19,500,000,000 ரூபாய். இந்தப் புள்ளி விவரங்கள், உலக சமாதான பாதையில் உள்ள மைல்கற்கள் போலும்!

அழிவுக்குத்தானு?

1937ம் வருஷத்தில் இங்கிலாந்திலிருந்து 55,146,195 ரூபாய் பெறுமான ஆகாய விமானங்களும் அவை சம்பந்தமான மற்றக் கருவிகளும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பட்டிருக்கின்றன. அதாவது 1936ம் வருஷத்தை விட 11,280,000 ரூபாய் அதிகம். இவையெல்லாம் எதற்காக உபயோகிக்கப் பெறுமோ? அழிவுக்குத்தானு?

விஸ்தரிப்பு

செயிண்ட் ஜான் பில்பி என்பவர் 'ஓர்ல்ட் ரெவ்யு' என்ற பத்திரிகையில் பின்வருமாறு எழுதுகிறார்:—

'ஸ்ரீ ஏடன், சென்ற ஜூலை மாதம் (பார்லிமெண்டில்) பேசியபோது, 'செங் கடலுக்குக் கிழக்குக் கரையிலே, எந்தவல்லரசும் தன்னுடைய ஆதிக்கத்தை ஸ்தாபித்துக் கொண்டுவிடக்கூடாதென்பது கிரேட் பிரிட்டனுடைய முக்கியகருத்து' என்று கூறினர். அதே மாதத்தில், பாலஸ்தீனப் பிரிவினை சம்பந்தமாக அறிக்கை வெளியிடுகிற போது, அகாபா (Aqaba) என்ற பிரதேசத்தைத் தங்களுக்கென்று ஒதுக்கிவைத்துக் கொள்ளத்தீர்மானித் திருப்பதாக பிரிட்டிஷ் அரசாங்கத்தார் தெரிவித்தனர். இதற்கு நான்கு மாதங்களுக்கு முந்தித்தான், மந்திரிச் சபையின் உத்திரவு மூலம், அராபிய சிற்றரசர்களுடன் செய்து கொள்ளப்பெற்ற சாசுவத உடன்படிக்கைகளுக்கு விரோதமாக, தென் அரேபியாவில் ஒரு லட்சம் சதுர மைல் விஸ்திரணமுள்ள பிரதேசம் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தோடு சேர்க்கப்பட்டது.'

இதற்கு வியாக்கியானம் எழுதாமலே விட்டுவிடுகிறோம்!

பயங்கரம்

ஜப்பான் தொடுத்துள்ள போரின் பயனுக, சீனுவில் எந்த நிலைமை ஏற்பட்டிருக்கிறதென்பதைப் பற்றி ஒரு நண்பர் வருணிக்கிறபோது நமக்கு உண்மையிலேயே பயங்கரமாயிருக்கிறது.

'ஷாங்காய்க்கும் நாங்கிங்குக்கும் நடுவேயுள்ள பிரதேசங்கள், உலகத்

திலேயே செழிப்புள்ள விவசாயப் பிரதேசங்களாகும். இங்கே ஆயிரக் கணக்கான கிராமங்களும் நூற்றுக் கணக்கான நகரங்களும் பரவிக் கிடக்கின்றன. சீனாவிலேயே இந்தப் பிரதேசத்தில்தான் ஜன நெருக்கம் மிக அதிகம். இந்தப் பிரதேசங்களைச் சென்ற நான்கு மாதகாலமாக ஜப்பானியர், ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகளைப் பொழிந்து வருணிக்க முடியாத சேதத்தை உண்டுபண்ணியிருக்கிறார்கள். சரித்திரத்திலேயே இதற்கு முன்னர் நடைபெற்றிராது என்று சொல்லும்படியாக, திரள்திரளான ஜனக்கூட்டம் ஊர் விட்டு ஊர் போய்க்கொண்டிருக்கிறது. சூசௌ என்ற நகரம் ஒரு சமயம் செழிப்புள்ளதாகவும் அழகுள்ளதாகவும் இருந்தது. இதில் இரண்டரை லட்சம் சீனர்கள் வசித்திருந்தார்கள். ஜப்பானியர்கள் இந்த நகரத்தைக் கைப்பற்றிக் கொண்டபோது இதில் 500 சீனர்களே இருந்தார்கள்! இதற்கு மேற்கில் இருபது மைல் தூரத்தில் ஊசி என்றதொரு நகரம் இருக்கிறது. சீனாவின் கைத்தொழில் அபிவிருத்திக்கு இதுதான் மூலஸ்தானம். ஆனால் இப்பொழுது இது பாலைவனம் மாதிரியிருக்கிறது. * * * மைல் கணக்காக, நிலங்களில் பயிர்கள் காய்ந்து கிடக்கின்றன. அநேக பண்ணைகளும் கிராமங்களும் எரிக்கப்பட்டு சவக்குழிகள் மாதிரி தென்படுகின்றன. * * * சில மாதங்களாக நடைபெறும் யுத்தத்தின் விளைவு இது. இந்த யுத்தத்திற்கு என்ன காரணம் என்பதை ஏழை விவசாயிகள் அறியமாட்டார்கள். ஆனால் அவர்கள்தான் அதிகமாகக் கஷ்டப்படுகிறார்கள். ஆனால், அன்ன ஆகாரமில்லாமல், பணமும் உடையுமில்லாமல், பயந்த வண்ணம் மேற்குப் புறமாக ஓடிக் கொண்டிருக்கிறார்களே அவர்களைவிட, ஆயிரக்கணக்கில் பிணமாக விழுந்து கிடக்கிறார்களே அவர்களை மகா புண்ணியசாலிகள் என்று சொல்லவேண்டும். இங்ஙனம் ஓடுகிறவர்களுக்கு என்ன கதி நேரிடப் போகிறதோ யாரறிவார்?'

வைத்திய உதவி

சீனாவின் தற்போதைய நெருக்கடியான நிலைமையில் அதற்கு வைத்திய உதவிகள் செய்ய வேண்டுமென்று அந் நாட்டின் சேனாதிபதிகளில் ஒருவர் பண்டித ஜவஹர்லால் நேருவுக்கு ஒரு வேண்டுகோள் விடுத்திருந்தார். இந்த உதவியைச் செய்யுமாறு பண்டித நேரு எல்லாக் காங்கிரஸ் ஸ்தாபனங்களையும் கேட்டிருக்கிறார். பர்மா மாகாண காங்கிரஸும் இதற்கென்று ஒரு நிதி திரட்ட ஏற்பாடு செய்திருக்கிறது. இதற்கு அன்பர்கள் பலரும் தங்களாலியன்றவளவு உதவி செய்வது மிகவும் அவசியம். மேலே நாம் காட்டியிருக்கிற வருணனையைப் படித்துப் பார்க்கிறவர்கள், சீனாவுக்கு எவ்வளவு உதவி செய்தாலும் அது தகுதிதான் என்று அங்கீகரிப்பார்கள். 'சத்தியத்திற்கும், மனிதத் தன்மைக்கும் இணங்கி உங்கள் கடமையைச் செய்யுங்கள்' என்று நமக்கு அனுப்பப் பெற்றுள்ள அறிக்கை கூறுகிறது. இதற்கு நாம் எதிரொலி கொடுக்கிறோம். உதவி செய்ய விரும்புவோர் 'கே. நடராஜன், கௌரவ பொக்கிஷதார், பர்மா காங்கிரஸ் சீனா வைத்திய உதவி நிதி, 30, மொகல் தெரு, இரங்கூன்' என்ற விலாசத்திற்கு அனுப்ப வேண்டுகிறோம்.

தென்னமெரிக்காவில்

தென்னமெரிக்காவில், தனித்தனி ராஜ்யங்கள் பல சிதறிக் கிடக்கின்றன. இங்கெல்லாம், ஐரோப்பாவின் பல பாகங்களி லிருந்தும் குடியேறியவர்கள் தான் அதிகம். இங்கு இத்தலியும், ஜெர்மனியும் போட்டா போட்டி போட்டுப் பிரசாரஞ் செய்து வருகின்றன. இதில் நாமும் ஏன் கலந்து கொள்ளக்கூடாதென்றுஜப்பானும்இப்பொழுது தலையிட்டிருக்கிறது. எல்லாம் வியாபாரப் பெருக்கத்திற்குத்தான். ஜனங்களுடைய நன்மைக்கு உபயோகப்படக் கூடிய விதமாக வியாபாரத்தைப் பெருக்கிக் கொள்வதானுல் கூட அவ்வளவு பாதகமில்லை. அதைவிட ஒருபடி முன்னேறி யிருக்கின்றன இந்த நாடுகள். யுத்த தளவாடங்களைத் தென்னமெரிக்க நாடுகளிலே கொண்டு திணிக்க இந்த பாசிஸ்ட் நாடுகள் பகீரதப் பிரயத்தனஞ் செய்கின்றன. மிட்சூபீஷி என்ற பிரபல ஜப்பானியக் கம்பெனி, பிரேஜில் அரசாங்கத்திற்கு யுத்தக் கப்பல்கள் சப்ளை செய்வதாகவும், அதற்குப் பதில் காபிக் கொட்டையும் ரொக்கமும் பாதி பாதியாகக் கொடுத்தால் போது மென்றும் சொன்னதாக ஒரு வதந்தி கூறுகிறது. இதேமாதிரி பண்ட மாற்று செய்து கொள்ளும் முயற்சியில் ஜெர்மனியும் இத்தலியும் தீவிரமான முயற்சியில் இறங்கி யிருக்கின்றன. இப்பொழுது, தென்னமெரிக்காவின் வட கிழக்கில் இருக்கும் பெரு மாகாணம், ஒரு சர்வாதிகாரியின் ஆட்சிக் குட்பட்டிருக்கிறது. பெனுவிடேஸ் (Benavides) என்ற இந்தச் சர்வாதிகாரி, முஸோலினியின் கருவியாக இருக்கிறுன். பிரேஜீலின் சர்வாதிகாரி கெடூலியோ வர்காஸ் (Getulio Vargas) என்பவன், நாஜீயத்தின் பிரதிநிதி. ஐரோப்பாவில், ருமேனியா இப்பொழுது ஒரு சர்வாதிகாரியின் கீழ் அசைத்துக் கொடுக்கிறது. ஹிட்லரும், எம். கோகா என்ற இந்தச் சர்வாதிகாரியும் பரஸ்பரம் முதுகைச் சொரிந்து கொள்கிறுர்கள். இவையெல்லாம் எதைக் காட்டுகின்றன? ஜனநாயக சக்தியின் மலினத் தன்மையையே காட்டுகின்றன.

சர்வாதிகாரிகள் சிரஞ்சீவிகளா?

இத்தலியில், பள்ளிக்கூடங்களில் படிக்கும் ஏழைப் பிள்ளைகளுக்கு இடை வேளைப் போஜனம் அரசாங்கச் செலவில் அளிக்கப் படுகிறது. அப்படி சாப்பிட உட்காருவதற்கு முன்னர், இந்தப் பிள்ளைகள், பின் வரும் பிரார்த்தனையைச் செய்யுமாறு கூறப்பட்டிருக்கிறுர்கள்:—

> 'இல் ட்யூஷே! (முஸோலினியே!) நான் ஆரோக்கிய மாகவும் பலசாலியாகவும் வளர்ச்சி யடைய வேண்டுமென்பதற்கு நீ எனக்கு அளிக்கும் ஆகாரத்திற்கு உனக்கு வந்தன மளிக்கிறேன். கடவுளே! பாசிஸ்ட் இத்தலி நீண்ட காலம் நிலைத்திருப்பதற்காக இல் ட்யூஷேயைக் காப்பாற்று.'

இளைஞர்களுடையபசுமைமனதிலே, தன்னுடைய முக்கியத்துவத்தை எப்படி வேரூன்ற வைக்கிறுர்கள் இந்தச் சர்வாதிகாரிகள் என்பதற்கு இஃது ஒரு நல்ல உதாரணம். இந்தச் சர்வாதிகாரிகள், சிரஞ்சீவிப் பட்டம் வாங்கிக் கொண்டு வந்திருக்கிறுர்கள் என்று நாம் நம்பவில்லை. அப்படியிருக்க, இவர்களுக்குத் தங்களுடைய நித்தியத்துவத்திலே ஏன் இவ்வளவு திடமான நம்பிக்கை? தங்களுடைய செல்

வாக்கு எந்தக் காலத்திலும் குறைந்து போகலாமென்ற ஓர் அச்சந்தான், இந்த மாதிரியான உத்திர வுகளைப் பிறப்பிக்குமாறு இவர்களைத் தூண்டுகிறது.

பொருத்தம் !

ஜினிவாவின் சர்வதேச சங்கக் கவுன்சிலின் நூறுவது கூட்டம் கூடுவதும், ஸ்பெயினில் கலகக்காரர்களும் அரசாங்கத்தினரும் ஒருவருக்கொருவர் ஆகாய விமானக் குண்டுகளினால் பரிமாறிக் கொள்வதும் எவ்வளவு பொருத்தமாயிருக்கிறது ! உலக வல்லரசுகள், சர்வதேச சங்கத்தைச் செயல் திறனற்றபதுமைகள் நிறைந்த ஒரு பொருட் காட்சிக் கூடமாகவே கருதி யிருக்கின்றன. வல்லரசுகள் என்று சொல்லிக் கொண்டு சிறிய தேசங்களுக்கு வழி காட்டியாயிருக்க வேண்டிய பெரிய தேசங்கள், தங்களுடைய ராணுவத் திமிரினால், சர்வதேச சங்கத்தைத் தங்கள் வசப்படுத்தப் பார்க்கின்றனவே தவிர, அதன் வழி தாங்கள் கொஞ்சங்கூட விட்டுக் கொடுத்துச் செல்ல இணங்க வில்லை. மற்றொரு உலக யுத்தம் வந்தால், இந்தச் சர்வதேச சங்கத்திற்கு ஏதேனும் ஒரு வழியாக விமோசனம் பிறக்குமா?

ஹரிபுரா காங்கிரஸ்

ஹரிபுரா காங்கிரஸ் நடவடிக்கைகள் பூராவையும், விசேஷ படங்களுடன் 'ஜோதி' யின் மார்ச் மாத கதிரில் வெளியிடப் பெறும். இதற்கான எல்லா ஏற்பாடுகளும் முடிந்து விட்டன. 'ஜோதி' யின் விசேஷ நிருபர் ஹரிபுரா காங்கிரஸுக்கு சென்றிருக்கிறார். காங்கிரஸினுடைய பூரா விவரங்களையும் அழகான படங்களுடன் ஒரே இதழில் பார்க்கலாம். பிற்காலம் இது நல்ல ரிகார்ட்.

வழக்கமாக வருகிற பக்கங்களைக் காட்டிலும் அதிகமான பக்கங்கள். உடனே பதிவு செய்து கொள்ளுங்கள்.

மானேஜர்.

மனிதவர்க்கத்தின் பரம்பரையும் ஸ்தாவர வர்க்கத்தின் அபிவிருத்தியும்

——எஸ். சம்பத்
M. Sc., (Oxon)

இக் கட்டுரை எழுதிய திரு எஸ். சம்பத் மிக ஊக்கமும் உழைப்பும் வாய்ந்த ஓர் அறிவாளி. இங்கிலாந்தில் அநேக வருஷம் இருந்திருக்கிறார். ஆக்ஸ் போர்டு கல்லூரியில் விவசாய ஆராய்ச்சிப் பரீட்சையில் தேறி M. Sc., (oxen) பட்டம் பெற்றவர். காசி ஹிந்து சர்வ கலாசாலையில் போதகராக இருக்கிறார். சமீபத்தில் இங்கிலாந்தி லிருந்து வந்த தத்துவ ஆராய்ச்சி சங்கப் பிரதிநிதிகள் (Science delegates) இவரது பொறுமை யான உழைப்பைப் பார்த்து மெச்சி யிருக்கிறார்கள்.

வம்சத்துவ மென்பது ஜீவராசிக ளின் உற்பத்திக்குக் காரணமாகவும் ஒவ்வொரு பரம்பரையிலு முள்ள ஜந் துக்களில் ஒன்றுக்கொன் றுள்ள ஒற் றுமை வேற்றுமைகளுக்குக் காரணமா கவு மிருக்கும் ஓர் மறுக்க முடியாத உண்மை. இவ் வம்சத்துவ மென்பது பொதுவாக எல்லாப் பிராணிகளிலும் பரம்பரையாகப் பிரகாசித்து வருகி றது.

நல்ல புஷ்டியுள்ள பொலி எருதுகளி னால், நன்றாய் வேலை செய்யக் கூடிய காளைகள் தயாராகின்றன. நாய்கள், பார்வைக்கு ஒன்றா யிருந்த போதிலும் சில நாய்களின் வம்சங்கள் அபூர்வ மான தேகக் கட்டுடையவைகளாக வும் மிகுந்த உக்கிரமான குணத்தை யும் கட்டுக் கடங்காத விசுவாசத்தை யும் உடையவைகளாகக் காணப்படு கின்றன. இவ்வித மிருத்தல் எவ்வித காரணமு மின்றி அதிருஷ்ட வசமெ னச் சொல்ல முடியுமா?

சாதாரணமாக வழங்கி வரும் 'கருப் புக் கோழியும் வெள்ளை முட்டையி டும்' என்றபழமொழியின் கருத்தையும் 'வெண் பசு வெண்ணிறப் பால் கறந் தால் செந்நிறப் பசு காபியே கறக் காதா?' என்ற பழமொழியும் மிகுந்த அர்த்த புஷ்டியுள்ள தென்பதை எத் தனை அறிஞர்கள் அறிவார்களோ! இப் பழமொழியின் உண்மையாவது, எவ்வகைப் பிராணியா யிருந்த போதி லும் அந்தந்த வர்க்கத்திற்கு அடிப் படையாகவுள்ள அம்சங்களை எக் கார ணங்களினாலும் இயற்கையாக மாற்ற முடியாதென்பதே யாகும். இக் கார ணங்களைக் கொண்டே தற்கால தத் துவ ஆராய்ச்சியாளர்கள் இவ் வம்ச பரம்பரை அபிவிருத்தித் துறையில் மிகவும் ஈடு பட்டு அதன் அதி நுட்ப மான காரணங்களைக் கண்டு பிடித்தி ருக்கிறார்கள்.

சமீபகாலத்தில்சிலமேதாவிகள் திட காத்திரமான பொலி யெருதுகளின் இந்திரியங்களை யெடுத்து, சில தினங் கள் வரையுங்கூடப்பாதுகாத்து அவை களைப் பசுக்களில் பிரயோகப் படுத்தி நல்ல பலனை அடையலா மென்று தெரிந்து தெளிவு படுத்தியிருக்கிறார் கள். இன்னும் சற்றுத் துணிந்து சொல்லச் சென்றால், மேனாட்டில் பெருந் தனவந்தர் குடும்பங்களிலுள்ள ஸ்திரீகளில் மிக அறிவுடைய புத்தி ரனை விரும்புவோர்கள் எவ்வித அகௌ ரவமும் இழிவுமின்றி ஒருவர்க் கொரு வர் பெயர்களை வெளிப் படுத்திக்

கொள்ளாமலே அதிமேதாவிகளுடன் சரீர சம்பந்தமின்றியே நற்புத்திரர்களை உற்பத்தி செய்வது சாத்தியமென்றும் ருஜூப்பித்திருக்கிறார்கள் பரம்பரை ஆராய்ச்சி நிபுணர்கள். இத்துறையின் ஞானம் ஒரு புராதனமானதாயினும் இதில் மனிதவர்க்கம் கவனஞ் செலுத்த ஆரம்பித்தது சமீபகாலத்திலிருந்தே. ஆஸ்திரியா தேசத்திய மெண்டல்* என்னும் அறிவாளியே இத்துறையில் தலைமை பூண்டு உழைத்திருக்கிறார்.

பிராணிகளில் விளங்கும் வம்ச பரம்பரைத் தொடர்பினின்றும், மனிதவர்க்கத்தில் அத் தொடர்பு மிகவும் திட்டமாகவும் தெளிவாகவும் விளங்குவதைக் காணலாம். ஆனதால் ஒவ்வொரு பிதாவும் இவ்வுண்மையை சதா உணர்ந்து தன் வம்சம் எக் குற்றமுமின்றி பரம்பரை நீண்ட ஆயுளையுடையதாகச் செய்ய வேண்டுமென்பதைத் தன் முக்கிய கொள்கையாக வைத்துக் கொள்ள வேண்டும்.

சில குடும்பங்களி லுள்ளவர்கள் நீண்ட ஆயுளையும் திட சரீரத்தையும் உடையவர்களாகவும், சில குடும்பங்களில் 30 வயதுக்குள்ளேயே ஜீவிய காலம் பூர்த்தியாகியும் அவ்வயதினுள்ளும் துர்ப்பலமாகவும் வியாதி பீடிக்கப்பட்டுமிருக்கக் காண்கிறோம். சில குடும்பங்களில் ஒரே வியாதி பரம்பரையாக வருவதும் சகஜமாக இருக்கிறது. பெற்றோர்களின் குணாதிசயங்களே பல பிள்ளைகளிடமிருக்கக் காண்கிறோம். தகப்பனின் தொழிலை, பிள்ளை சர்வ சாதாரணமாகச் செய்து முடிக்கும் வல்லவனாகிறான். இக்கொள்கையின் உண்மையைக் கொண்டே நமது வர்ணாச்சிரம கர்மங்களும்வரையறுக்கப்பட்டிருக்கின்றன. தகப்பன் தச்சனாயிருந்தால் மகனும் தச்சனாக வரவேண்டுமென்றும் அதுவே இலகுவென்றும் சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. பெற்றோர்கள் நல்ல விஷயங்களையே நினைவிற்குக் கொண்டு வந்தும் அழகிய உருவங்களைப் பார்த்தும், இனிய கீதங்களைக் கேட்டும் மனதை ரம்மியமாக வைத்திருந்தால் அவர்களின் சந்தானங்களும் நல்ல இயற்கையமைப்பு உடையவர்களாக ஆகிறார்களென்பதையும் கண்டறிந்திருக்கிறார்கள் அறிவாளிகள். இதனின்று ஒரு தகப்பனின் கோத்திரமே பிள்ளைக்கு வருகிறதென்றும் வரையறுத்திருக்கிறார்கள்.

இவைகள் எல்லாவற்றையும் தீர்மானிப்பது ஆண் பெண்களின் ஜனனேந்திரியங்களிலிருந்து வந்துஒன்று சேரும் கிருமிகளின் தன்மையைப் பொறுத்ததாயிருக்கிறது.

ஏற்கனவே இரத்தக் கலப்புள்ள குடும்பங்களிலிருந்து விவாகம் செய்து கொள்ளும் தம்பதிகளின் ஜீவ உற்பத்திக் கிருமிகள் ஒன்று சேரும் போது மிகவும் மந்தமும் சுறுசுறுப்பற்றவைகளாகவும் இருக்கின்றன. இதனால் பெரும்பாலும் இச்சந்தானங்கள் தீவிரச் செய்கைகளை உடையவர்களாக இருக்கிறதில்லை. இக்காரணத்தைக் கொண்டே தாய்வழியில் ஐந்து தலைமுறைக்குள்ளும் தகப்பன் வழியில் ஏழு தலை முறைக்குள்ளும் ஆண் பெண்கள் விவாக சம்பந்தம் வைத்துக் கொள்ளக்கூடாதென சாஸ்திரங்களும் விதிக்க முன் வந்திருக்கின்றன. முற்றிலும் அன்னியமான ஒரு குடும்

---

* Gregor Mendel—இவர் ஆஸ்திரியா தேசத்திலுள்ள ஹீன்ஸென்டோர்ப் என்ற ஊரில் 1822-ம் வருஷம் பிறந்தார். இவர் சிறு தோட்டமொன்று அமைத்து அதில் சுமார் பதினாயிரம் செடிகளை வைத்துப் பயிரிட்டு, அவைகளைக் கொண்டு பல பரிசோதனைகளை நடத்தினார். 1884-ம் வருஷம் இறந்து போனார்.

ஆசிரியர்

பத்தில் விவாகம் செய்வது நல்ல பலனைத்தருகிறது. ஜாதிக் கட்டுப்பாட்டிற்குள் விவாகம் நடைபெற வேண்டுமென்று சொல்லப்படுவதிலும் ஓர் அளவு உண்மையில்லாமலில்லை. அதாவது ஒவ்வொரு விவாகமும் ஒரு வரம்புக்கு உள்ளிலும் ஒரு வரம்புக்கு வெளியிலும் நடைபெற வேண்டியதே மிகவும் பொருத்தமுடையது. எவ்விதமெனில், தன் வழக்க பழக்கங்களுக்கும் அறிவிற்கும் தாழ்ந்த ஒரு குலத்திலோ சமூகத்திலோ விவாகம் செய்வது சந்தானங்களை நாளடைவில் படிப்படியாகக்கீழே தள்ளுவது போலாகுமானதால் அந்த ஓர் எல்லையைக் கடக்காது தனக்கு ஒத்த ஒரு வகுப்பிலும் தனக்கு அதிகச் சமீபத்தில் இரத்தக் கலப்புள்ள ஓர் எல்லையைக் கடந்துமே ஒவ்வொருவரும் விவாக சம்பந்தத்தை வைத்துக் கொண்டால் சந்தானங்கள் மிகப் பிரகாசமுள்ளவைகளாக இருக்குமென்பதை அறிவாளிகள் ஒப்புக் கொண்டிருக்கிறார்கள்.

இம் மனித உற்பத்திக் கொள்கையை ஆராயப் போனால் யாரும் பெரியவரென்றோ சிறியவரென்றோ சண்டையிடவே மார்க்கமில்லை. பெரும் சந்ததிகளிலும் வகுப்புக்களிலும் பல வகையான கலப்புக்கள் ஆயிரக் கணக்கான வருஷங்களாக ஊடாடிவந்திருக்கின்றன. இதனாலேயே மனிதசமூகம் இன்று பெருங் குடும்பம் என்று வழங்கப்படுகிறது. எந்த ஒரு வகுப்பும் சுத்தமானது என்று இன்றுஆராய்ச்சி பூர்வமாக நிரூபிப்பது கடினமே.

எவ்விதம் மானிடவர்க்கத்தில் பரம்பரை வம்சத்வம் வேலை செய்கிறதோ அவ்வாறே ஸ்தாவர வர்க்கத்திலும் வேலை செய்கிறது. இரண்டுவித மகரந்தப்பொடிகள் ஒன்று சேர்ந்தே வித்து உண்டாகிப் பலன் கொடுக்கிறது. இப்பொடிகளில் ஆண் பெண் என்ற இரண்டு சக்திகளையுடைய பொடிகளும் ஒரே செடியிலிருந்து உண்டாகி ஒன்று சேர சந்தர்ப்பங்கள் சிருஷ்டிக்கப்பட்டிருக்கின்றன. எவ்வித வியாதிகளுமின்றி செழித்து வளர்ந்து முற்றிய செடிகளின் விதையையே பயிரிட உபயோகிக்க வேண்டும். அவ்விதம் செய்வதினால் சாதாரண பலனுக்கு மேல் 100 க்கு 20 வீதம் அதிகப் பலனை அடையலாம்.

தத்துவ ஆராய்ச்சிக்காரர்கள் வீணே பல வருஷங்களைக் கல்லூரியில் செலவிடுகிறார்கள் எனப் பலர் கருதுகின்றனர். இது தவறாகும். ஒவ்வொரு துறையிலும் இறங்கினால் அவற்றில் ஓரளவு ஞானம் பெற மானிட வாழ்நாள் போதாததாகவே இருக்கிறது.

விவசாயத்துறை முன்னேற்றத்தில் நல்ல விதைகளை உபயோகித்து சில சாதாரண விஷயங்களையும் கொள்கையையும் அனுசரித்தால் சர்வ சாதாரணமாக நம் தேசத்தில் பிரதி வருஷமும் தற்போதைய அளவை விட இன்னும் ஒரு நூறு கோடி ரூபாய் அதிக லாபத்தை விவசாயிகள் பிரதி வருஷமும் அடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்தியா ஒரு விவசாய தேசமாக இருந்தும், அதன் நுட்பங்களை ஜனங்கள் அறியாமலும் அவ்வித அறிவை உண்டாக்க சாதாரண நூல்களும் பிரத்தியேகமான பள்ளிகளும் இல்லாமலுமிருப்பது இன்று மிகவும் வருந்தத் தக்கதே. இத் துறையிலும் அறிவாளிகள் தங்கள் கவனத்தைச் செலுத்துவது மிகவும் அத்யாவசியம். மேலும் இது ஜனங்களின் வேலையில்லாக் கஷ்டத்தையும் ஓரளவு போக்க உதவியாயிருப்பது குறிப்பிடத் தக்கதாகும்.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் வரவு செலவுத் திட்டம்

1-10-1937 முதல் 30-9-1938 வரை

இந்த வரவு செலவுத் திட்டம் **1938**ம் வருஷம் ஜனவரி மாதம் **2, 3, 4** தேதிகளில் கூடிய காரியக் கமிட்டி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

உத்தேச வரவு

1.	காங்கிரஸிலிருந்து (பெய்ஸ்பூர், ஹரிபுரா)	....	26,000
2.	நிதி வசூல்	....	10,000
3.	மாகாண காங்கிரஸ் கமிட்டிகளிடமிருந்து	....	8,500
4.	அ. இ. கா. க. அங்கத்தினர் சந்தா	....	3,600
5.	பிரதிநிதிகள் கட்டணம்	....	8,200
6.	சில்லரை	....	900
7.	பழைய பிரதிகள் விற்பனை	....	500
		....	57,700

உத்தேசச் செலவு

1	சிப்பந்திச் செலவு	....	18,000
2	தந்தி தபால் வகையரா	....	3,300
3	அச்சுக்கூலி, ஸ்டேஷனரி வகையரா	....	2,000
4	பிரயாணச் செலவு	....	3,000
5	வாடகை, வரி முதலியன	....	700
6	மரச் சாமான்கள்	....	1,500
7	புஸ்தகசாலை	....	2,000
8	சுயராஜ்ய பவனத்திற்கு ரிப்பேர் முதலியன	....	1,000
9	சில்லரை	....	800
10	ப்ராவிடெண்ட் பண்டுக்கு	....	350
11	உலக சமாதான மகா நாட்டுக்குச் சந்தா	....	2 000
12	ஒலி பெருக்கும் கருவியோடு கூடிய லாரிக்கு	....	8.000
13	அதிக வரவு	....	15,050
			57,700

உலகத்தில் என்ன நடக்கிறது?

ஸ்டாலின்தான் தற்போதைய ருஷியாவின் தலைவிதியை நிர்ணயிக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறான். ஆனால் அரசாங்க நிருவாகத்தில் அவன் தலைமைப் பதவி ஏற்றுக்கொள்ளவில்லை. பொது வுடமைக் கட்சியின் தலைவனாக இருப்பதிலேயே திருப்தி யடைகிறான்.

சோவியத அரசாங்கத்தில் புதிய பார்லிமெண்ட் 12-1-38ல் கூடியது. இதற்கு மொத்தம் பிரதிநிதிகள் 1,148 பேர். இவர்களில் பலர் 6,000 மைல்களுக்கு அப்பா லிருந்து வருகிறவர்கள். இந்த ஆயிரத்து நூற்றுச் சொச்சம் பிரதிநிதிகளும் ஒரே ஜாதியா ரல்லர். சுமார் 150 ஜாதியினர் இந்தப் பிரதிநிதிக் கூட்டத்தில் அடங்கி யிருக்கிறார்கள். மொத்தப் பிரதிநிதிகளில் இருநூறு குடியானவர்கள், அநேக பால்காரிகள், கரி வியாபாரம் செய்வோர் முதலியோர் இருக்கின்றனர். முதல் கூட்டத்தின் போது, ஸ்டாலின் சபையில் ஆஜரானான். அப்பொழுது பிரதிநிதிகள் எட்டு நிமிஷ நேரம் கை கொட்டி ஆரவாரம் செய்தார்கள்.



ஆயுதப் பரிகரண மகாநாடுமுதல், நடைபெற்ற ஒவ்வொரு மகா நாடும் இப்படித்தான் ப்ஸ்ஸ் என்று போய் விட்டது. சீன ஜப்பானிய யுத்த சம்பந்தமாக ப்ரஸ்ஸெல்ஸ் நகரில் கூடிய மகா நாட்டைப் பற்றி வருணிக்கிற படம் இது.



குடியேற்ற நாட்டுப் பசு, எத்தனை நாட்களுக்குத் தான் பால் கறக்கும்?

பாசிஸம், உலகத்தில் இந்தத் திருக்கூத்தைத் தான் செய்யுமா வென்று ஒரு ருஷ்ய பத்திரிகை கேட்கிறது!

தற்போதைய யூதர்களின் நிலையை விவரிக்கிற படம் இது. யூதர்கள் எங்குச் சென்றாலும் விரட்டப் பட்டிருக்கிறார்கள். சுமார் இரண்டாயிரம் வருஷ காலமாக அவர்களுடைய வாழ்க்கை நாடோடி வாழ்க்கையாகவே இருக்கிறது. சமீபத்தில் ருமேனியாவிலிருந்து இவர்கள் விரட்டப் பட்டு வருகிறார்கள்.

ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ்

—"சாமி"

திரு சுபாஷ் சந்திர போஸ் ஹரிபுரா காங்கிரஸ் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிற விஷயம் எத்தனை பேருக்கு எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறதென்பதை நாம் சொல்லத் தேவையில்லை. இந்தச் சந்தர்ப்பத்தில் இவருடைய ஜீவிய சரித்திரத்தைச் சுருக்கமாகத் தெரிந்து கொள்ள நண்பர்கள் ஆசைப்படுவது சகஜந்தான். திரு. போஸின் விரிவான சரித்திரம், இன்னும் தமிழில் எதுவும் வரவில்லை. இனி பல வெளித் தோன்றக் கூடும். திரு. போஸே, தமது வாழ்க்கையையும் இந்திய தேசீய இயக்கத்தையும் பிணைத்து ஆங்கிலத்தில் ஒரு நூல் எழுதிக் கொண்டு வருகிறார் என்று அறிகிறோம். அதிலிருந்து நாம் புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்வதற்குப் பூர்வாங்கமாக இந்தக் கட்டுரை இருக்குமென்று நம்புகிறோம்.

பொன்னும் பொருளும் பெற்று போக வாழ்க்கையை நடத்தலாம் என்று ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ் மனங் கொண்டிருப்பாரானால், இப்பொழுது அவர், ஒரு ஜில்லா மாஜிஸ்ட்ரேட்டாகவோ, கமிஷனராகவோ வந்திருக்க வேண்டும். ஆனால் அவர் வாழ்க்கையை, புடம்போட்டுப் புனிதமாக்க வேண்டுமென்று ஆண்டவன் தீர்மானித்து விட்டான். செல்வாக்குள்ள ஒரு குடும்பத்திலே பிறந்து, தன்னுடைய திறமையினாலே உரிமையாக்கப் பெற்ற உயர் பதவிகளையும், அதிகார ஆடம்பரத்தையும் துறந்து, அதுவும் இளமையிலே தேசத்திற்காகச் சிறைவாசத்தையும் உடல் நோயையும் வருவித்துக் கொண்ட ஸ்ரீ போஸின் மகத்வ பூர்ண தியாகத்தை நினைக்கிற போது, மயிர் கூச்செறிகிறது. ஸ்ரீ போஸின் உலகியல் வாழ்வு, மங்கலாகப் பிரகாசிக்கத் தொடங்கத் தொடங்க, அவருடைய ஆன்மார்த்த வாழ்வு கொழுந்து விட்டு எரிய ஆரம்பிக்கிறது. இல்லாவிட்டால், நாற்பது வயதிலேயே அவருக்குக் காங்கிரஸ் தலைமைப் பதவி கிடைத்திருக்குமா ?

தேச பந்து தாஸர், ஏராளமான வருமானம் கிடைக்கக் கூடிய தமது வக்கீல் தொழிலை விடுத்தபோது அவரைப் பலர் சாபமிடத் தொடங்கினார்கள். ஏனென்றால், தேசத்திற்காகச் சிறையிலே தவங்கிடந்த இளைஞர்களுடைய குடும்பங்களுக்கு அவர் உதவிக் கொண்டு வந்தார். தமது வருமானம் குறையவே, அவர், இந்த உதவியையும் கொஞ்சம் கொஞ்சமாக நிறுத்திக் கொள்ள வேண்டியதாயிற்று. தவிர, எத்தனையோ இளங் குருத்துகள் அவரால் கொளுத்தப் பெற்ற தியாகத் தீயிலே விழுந்து கருகிப் போயின. ஆயிரக்கணக்காகச் செலவழித்து, உயரிய பட்டங்களை யெல்லாம் பெற்று, எதிர் காலத்தில் கௌரவமான உத்தியோகங்களை வகிப்பதற்குத் தயாராயிருந்த எத்தனையோ இளைஞர்கள், எல்லாவற்றையும் உதறித் தள்ளி விட்டு, தேசபந்து உயர்த்தின கொடியின் கீழ் வந்து நின்று கொண்டார்கள். தங்களுடைய ஜீவ

னத்திற்கு இவர்களையே நம்பிக் கொண்டிருந்த இவர்களுடைய பெற்றோர்கள் எல்லாரும் தேசபந்துவைச் சபிக்காம லிருப்பார்களா ? ஆனால் தேசபந்து, இவற்றை யெல்லாம் ஆசீர்வாதங்களாகவே ஏற்றார்.

மகாத்மா காந்தி, 1921ம் வருஷம் 'ஒத்துழையா இயக்கத்தை ஆரம்பித்தார். வங்காளத்தில் தேசபந்து தாசர் 'சேர வாரும் செகத்தீரே' என்று சங்கநாதம் செய்தார். 'சேர வந்தேன்' என்றார் சுபாஷ் சந்திரர். இங்கிருந்து இவருடைய புனிதமான —ஆனால் துன்பங்கள் நிறைந்த—வாழ்க்கை ஆரம்பமாகிறது.

ஸ்ரீ போஸ், செல்வமும் செல்வாக்கும் நிறைந்த ஒரு குடும்பத்தில் பிறந்தவர். இவருடைய தகப்பனார் ஜானகி நாத் போஸ், கட்டக் நகரத்தில் அநேக வருஷ காலம் அரசாங்க வக்கீலா யிருந்து நிறையப் பொருள் சம்பாதித்தார். அரசாங்கத்தார், இவருடைய திறமையையும் நேர்மையையும் பார்த்து இவருக்கு 'ராய் பகதூர்' பட்டம் அளித்தார்கள். ஜானகி நாத் போஸுக்கு எட்டு பிள்ளைகள். இவரில் ஒருவர் சுபாஷ் சந்திரர். தமது பிள்ளைகள் எல்லாருக்கும் அவர் உயர்தரக் கல்வி அளித்தார். எல்லாப் பிள்ளைகளையும் அவர் ஐரோப்பாவுக்கு அனுப்பி அவர்களுடைய கல்வியைப் பூர்த்தி செய்வித்தார். ஸ்ரீ சரத் சந்திர போஸ், ஒரு பெரிய வக்கீல்; ஸ்ரீ சுனீல் சந்திர போஸ் ஒரு பெரிய டாக்டர். இப்படி ஒவ்வொருவரும் ஒவ்வொரு பெரிய அந்தஸ்தில் இருக்கிறார்கள்.

ஸ்ரீ போஸின் தாயார் மதபக்தி நிறைந்தவர்; தான தருமஞ் செய்து மோட்சம் அடையலாம் என்பதில் நம்பிக்கை யுடையவர். இவருடைய செல்வாக்கு, ஸ்ரீ போஸின் வாழ்க்கையில் ஆழமான முத்திரையிட்டிருக்கிறது.

ஸ்ரீ போஸ், கட்டக் உயர்தர பள்ளிக் கூடத்தில் படித்து 1913ம் வருஷம் மெட்ரிகுலேஷன் பரீட்சையில் தேறினார். பின்னர் கல்கத்தாவுக்கு வந்து பிரசிடென்சி காலேஜில் சேர்ந்து படித்து சர்வ கலாசாலையிலேயே இரண்டாவது மாணாக்கனாக இண்டர்மீடியெட் பரீட்சையில் தேறினார். இவர் கல்லூரியில் படிக்கிறபோதே, ஏழை மக்களுக்குத் தொண்டு செய்தல், நோயாளிகளுக்குச் சிகிச்சை செய்தல் முதலிய பரோபகாரச் செயல்களில் ஈடுபட்டிருந்தார். ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸருடைய உபதேசங்களை யெல்லாம் படித்து பெரியவர்களுடன் தத்துவ விசாரணை செய்வார். தமது தாயாருடன், நமது மதநூல்களி லிருந்து பல சிக்கலான பிரச்னைகளை எடுத்துக்கொண்டு வாதிப்பார். இதன் பயனாகவோ என்னவோ இவர், துறவுபூண வேண்டு மென்று ஆசை கொண்டார். இதற்காக, காசி, பிருந்தாவனம், ஹரித்வாரம் முதலிய புண்ணிய ஸ்தலங்களுக்கு ஒரு குருவை நாடிச் சென்றார். பல சாதுக்களைக் கண்டு பேசினார். ஆனால் அவர்கள், சாதுக்கள் என்று சொல்லிக் கொண்டு நடத்துகிற ஆடம்பர வாழ்க்கை இவருக்குக் கொஞ்சம் கூடப் பிடிக்கவில்லை. இதனால் வெறுப்புக் கொண்டு இவர் மீண்டும் வீடு வந்து சேர்ந்தார்.

பின்னர் பிரசிடென்சி காலேஜில் பி. ஏ. வகுப்பில் சேர்ந்து, தத்துவ சாஸ்திரத்தைத் தனது முக்கியபாடமாக எடுத்துக் கொண்டு படித்து வந்தார். அப்பொழுது, காலேஜ் போதகாசிரியராக இருந்த எப். ஓடன் என்பவர், காலேஜ் மாணாக்கர்களை ஏதோ தூஷித்துப் பேசிவிட்டார். அதற்காக

ஸ்ரீ போஸ் அவரைத் தாக்கினர் என்று குற்றஞ் சாட்டப்பட்டு காலேஜி லிருந்து விலக்கப் பட்டார். பின்னர், காலேஜில் நடைபெற்ற வேலை நிறுத்தத்திற்குக் கூட இவர்தான் காரணம் என்று சொல்லப் பட்டது. இத்தகைய காரணங்களினல் இவருடைய படிப்பு கொஞ்சகாலம் தடைப்பட்டது. பிறகு 1917ம் வருஷம், கல்கத்தா சர்வகலாசாலையின் வைஸ்சான்ஸலராயிருந்தவர் அஷுதோஷ் முகர்ஜியின் முயற்சியின் பேரில், ஸ்ரீ போஸ் மறுபடியும் மேல் படிப்புப் படிக்கச்சேர்த்துக்கொள்ளப் பட்டார். 'ஸ்காட்டிஷ் சர்ச்சஸ் காலேஜில்' சேர்ந்துபடித்து, பி. ஏ. வகுப்பில் முதன்மையாகத் தேறினர். 1919ம் வருஷக் கடைசியில், ஐ. சி. எஸ். பரீட்சைக்குப் படிக்க இங்கிலாந்து சென்று அங்கே படித்துப் பரீட்சையில் நாலாவதாகத் தேறினர். அதனோடு, கேம்பிரிட்ஜ சர்வகலாசாலையில் பி. ஏ. வகுப்பிலும் தேறினர். பிறகு இந்தியாவுக்கு வந்து வங்காளத்தில் சப் டிவிஷனல் மாஜிஸ்ட்ரேட்டாக உத்தியோகம் ஏற்றுக் கொண்டார்.

ஆனல் பாரதமாதா, காந்தி, தேசபந்து தாஸர் முதலியோர் மூலமாக 'மகனே! உன் சேவையை எதிர்பார்க்கிறேன்' என்று அறை கூவி அழைத்தாள்.

தேச மெங்கணும் பள்ளி பகிஷ்காரம், கோர்ட் பகிஷ்காரம், பட்டங்கள் துறத்தல் முதலியன மும்முரமாகப் பரவின. தேச பந்து தாஸர், பண்டித மோதிலால் நேரு, ஹகீம் அஜ்மல் கான், மௌலானா அபுல் கலாம் அஸாத் முதலிய செல்வப் பிரபுக்களெல்லாரும், காந்தியடிகளுடைய ஒத்துழையா இயக்கத்தில் ஈடுபட்டார்கள். ஸ்ரீ போஸும், தமது ஐ. சி. எஸ். உத்தியோகத்தை ராஜீநாமா செய்து விட்டு, ஒத்துழையா இயக்கத்தில் வந்து சேர்ந்தார். அப்பொழுது தேசபந்து தாஸர், பள்ளி பகிஷ்கார இயக்கத்தில் தீவிரமாக ஈடுபட்டு ஆயிரக் கணக்கான மாணக்கர்களைக் கல்வி நிலையங்களிலிருந்து வெளியேறும் படி செய்தார். தேசியக் கலாசாலைகள் ஆங்காங்கு ஏற்பட்டன. 1921ம் வருஷம் மே மாதம் தேசபந்துவினல் ஸ்தாபிக்கப் பட்ட வங்காள தேசிய காலேஜுக்கு ஸ்ரீ போஸ் பிரின்ஸ்பாலாக நியமிக்கப் பட்டார். அதனோடு, தேசிய தொண்டர் படைத்தலைவராகவும் தொண்டு புரிந்தார். அந்த வருஷம் டிசம்பர் மாதம் இவர் கைது செய்யப் பட்டு ஆறு மாதச் சிறை வாசத் தண்டனை பெற்றார்.

1922ம் வருஷம் அக்டோபர் மாதம் வங்காளத்தின் வடபாகத்தில் ஒரு வெள்ளச் சேதம் ஏற்பட்டது. இதற்காக, கஷ்ட நிவாரண கமிட்டி ஒன்று ஏற்பட்டது. இதற்கு ஸ்ரீ போஸ் காரியதரிசியாயிருந்து, அநேக கஷ்ட நிஷ்டூரங்களுக்கிடையே அரிய தொண்டுகள் பல புரிந்தார். 1922ம் வருஷம் டிசம்பர் மாதம் கயா காங்கிரஸுக்குச் சென்று, சுயராஜ்யக் கட்சியை ஆதரித்துப் பேசினர். அங்கிருந்துதிரும்பி வந்து தேர்தல்பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டார். பின்னர், சுயராஜ்யக் கட்சிப் பிரசாரத்திற் கென்று ஆரம்பிக்கப்பட்ட 'பார்வர்ட்' என்ற பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்தார். 1924ம் வருஷம் கல்கத்தா நகர சபையை, காங்கிரஸ் கட்சியினர் கைப்பற்றினர்கள். தேசபந்து தாஸர் மேயரானர். ஸ்ரீ சுபாஷ் சந்திரர், பிரதம நிருவாக உத்தியோகஸ்தராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். இந்தக் காலத்தில் இவர், நகர சபையில் செய்த சீர்திருத்தங்கள் பல.

1924ம் வருஷம் அக்டோபர் மாதம் வங்காள அரசாங்கத்தார் தீவிரமான அடக்கு முறைகளை ஆரம்பித்தனர். சுயராஜ்யக் கட்சியைச் சேர்ந்த பலர் சிறையிலடைக்கப் பட்டனர். ஸ்ரீ சுபாஷ் போஸும் கைது செய்யப்பட்டு 1924ம் வருஷம் அக்டோபர் மாதம் 25ந் தேதி முதல், 1927ம் வருஷம் மே மாதம் 15ந் தேதி வரை, முதலில் அலிபூர் சிறையிலும் பிறகு பர்மாவிலுள்ள மாண்டலே சிறையிலும் வைக்கப்பட்டிருந்தார். இந்த மாதிரி உயரிய லட்சியம் வாய்ந்த இளைஞர்கள் பலர், சிறையிலே அடைக்கப் படுவதைக் கண்டு தேசபந்து மனம் நொந்தார். அவருடைய உள்ளத்தில் கோபக் கனல் மூண்டெழுந்தது. கல்கத்தா நகர சபையில் இதைப் பற்றிப் பேசுகிறபோது பின் வருமாறு கூறினர்:—

> "தேசத்தை நேசிப்பது ஒரு குற்றமானல் நான் ஒரு குற்றவாளி. நகர சபையின் பிரதம நிருவாக உத்தியோகஸ்தர் மட்டும் குற்றவாளியல்ல; நகர சபை மேயர் கூட குற்றவாளி தான்!"

மாண்டலே மிகவும் உஷ்ணமான பூமி. அங்கே சிறைவாசம், ஸ்ரீ போஸுக்கு அதிக உபத்திரவத்தைக் கொடுத்தது. தேகம் வரவர மெலிந்து போக ஆரம்பித்தது. எடையில் சுமார் 40 பவுண்ட் குறைய ஆரம்பித்தது. க்ஷய ரோகம் வருவதற்குரிய அறிகுறிகள் தென்பட்டன. படுத்த படுக்கையாகி விட்டார்; ஆனல் மனஞ் சோரவில்லை. முகத்திலே பிரகாசங் குன்ற வில்லை. இவருடைய அபாயகரமான நிலைமையைக் கண்ட அரசாங்கத்தார் இவரை விடுதலை செய்தனர். சிறிது காலம் ஓய்வு எடுத்துக் கொண்டார். பின்னர் பழையபடி தீவிரமாகத் தேசிய இயக்கத்தில் ஈடுபட்டார். 1928-ம் வருஷம் இவர், வங்காள மாகாண காங்கிரஸ் கமிட்டியின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார். அந்த வருஷம் டிசம்பர் மாதம் கல்கத்தாவில் பண்டித மோதிலால் நேருவின் தலைமையில் நடைபெற்ற 42வது காங்கிரஸின்போது, இவர் தொண்டர் படைத் தலைவரா யிருந்து ஆற்றிய தொண்டுகள் இன்றும் என்றும் போற்றப்பட்டு வரும்.

1930ம் வருஷம் சட்டமறுப்பியக்கம் ஆரம்பிக்கப் பட்டது. அப்பொழுது ஸ்ரீ போஸ் காப்பில் வைக்கப் பட்டார். இதனல் உடம்பு பாதிக்கப் பட்டது. கடைசியில் 1932ம் வருஷம், சிகிச்சை செய்து கொள்ள மேனாட்டுக்கு அனுப்பப் பட்டார். இந்தியாவுக்குள் பிரவேசிக்கக் கூடாதென்று இவருக்குத் தடை யுத்திரவு பிறப்பிக்கப்பட்டது. இது மிக அநியாயம் என்று பார்லிமெண்டிலும், இந்தியாவிலும் பலத்த கிளர்ச்சிகள் நடந்தன. கடைசியில் 1936ம் வருஷம் இவர் தாய்நாட்டுக்குத் திரும்பி வந்தார். இவர் மேனாட்டில் வசிக்கிறபோது, இந்தியாவின் சுதந்திர இயக்க வளர்ச்சியைப்பற்றி ஒரு நூலெழுதினர். ஆனல் அது இந்தியாவுக்குள் வரக் கூடாதென்று தடை செய்யப்பட்டது.

மீண்டும் தேக சௌகரியத்தை முன்னிட்டு 1937ம் வருஷம் நவம்பர் மாதம் 18ந் தேதி கல்கத்தாவிலிருந்து புறப்பட்டு, வியன்னவுக்கு அருகிலுள்ள பாட்கேஸ்டீன் என்ற ஊரில் தங்கி தேக சுகத்தைக் கவனித்து வந்தார். இங்கே இருந்ததன்பயனக, இவருடைய தேகம் பழைய நிலை எய்தியது. இந்தச் சந்தர்ப்பத்தில், காங்கிரஸ் தலைவராக இவர் தெரிந்தெடுக்கப்பட்டார்.

ஹரிபுரா காங்கிரஸ் தலைவர் திரு. சபாஷ் சந்திரபோஸ், தேக சௌக்கிய நிமித்தம், ஆஸ்திரியா தேசத்திலுள்ள வியன்னா நகரத்திற் கருகாமையிலுள்ள பாட்காஸ்டீன் (BADGASTEIN) என்ற ஊரில் தங்கியிருந்தாரென்பது அன்பர்களுக்குத் தெரியும். இந்த பாட்காஸ்டீன், மெயின் லைனுக்கு ஒதுங்கியுள்ள ஒரு சிறு ஸ்டேஷன். இயற்கையழகு நிரம்பியது. இங்கு நமது நிருபர் எடுத்த படங்கள் இவை. இந்த போட்டோக்கள் யாவும் 'ஜோதி'க்கென்று தனியாக எடுக்கப்பட்டவையென்பதைத் தெரிந்து கொள்ள, வாசகர்கள் அதிக சந்தோஷப்படுவார்கள்.

பாட்காஸ்டீனில் ஸ்ரீ போஸ்

இந்த ஹோட்டலில்தான் தங்கியிருந்தார்.

குதிரை வண்டியில் உட்கார்ந்திருப்பதே ஒரு கம்பீரம்.



தமது அறையில் படித்துக்கொண்டிருக்கிறபொழுது.



பனி நிறைந்த இந்தப் பாதையில் தினம் மூன்று மைல் தூரம் நடந்தார்.

பாட்காஸ்டைன் காட்சிகள்



தமது சகாக்களுடன்

இடப் புறத்திலிருந்து:—திரு. நம்பியார், ஹிந்து நிருபர். திரு. பிலிப் முல்லர்.
திரு. சுபாஷ் சந்திர போஸ், மிஸ் ஷென்கல் (போஸின் காரியதரிசி)
பின் பக்கம் ஏ. என். போஸ் (திரு. சரத் சந்திர போஸின் மகன்.)

நமது நிருபருடைய காமிராவுக்கு எதிரே

சுதந்திரத்திற்காக உயிர் துறந்த வீரமன்னன்

—ச. முனிஸ்வாமி பிள்ளை

ஏறக்குறைய இரண்டாயிரத்தைந் நூறு வருடங்களுக்கு முன் மிக்க நாகரிக மடைந்திருந்த பாரசீக தேசத்தை செர்செக்ஸ் என்னு மரசன் அரசாண்டு வந்தனன். அப் பாரசீகத்தையே யன்றி வேறு பல நாடுகளையும் வென்று, அவை யாவும் தன் பொன் குடை நிழற் கீழ்த் தங்கும்படி அரசாட்சி செய்து வந்தனன். இச் சக்கரவர்த்தியி னுளுகையில் இருந்த பல நாடுகளில் ஒருவன் சுகத்தை யனுபவிப்பதற்கு வேண்டிய பொருள்களே யன்றிப் பொன், வெள்ளி முதலிய நாணயங்கள் கிடைக்கும் பெருஞ் சுரங்கங்களு மிருந்தன. செர்செக்ஸ் என்னும் மன்னர் மன்னன், தன் செல்வத்தின் பெருமையாலும் பிரசித்தி பெற்ற தன் வீரர்களின் புய வன்மையாலும், உலகத்திலுள்ள நாடு நகரங்கள் யாவும் தன்னுடைய சட்டத்திற் கடங்கி யிருக்க வேண்டு மென்றே எண்ணங் கொண்டனன். இவ் வெண்ணத்தை நிறை வேற்றும் பொருட்டு ஐந்து லக்ஷம் பாரசீக வீரர்களையும், தன் ஆட்சிக் கடங்கி யிருந்த நாட்டுப் படைகளையுங் கொண்ட ஒரு பெருஞ் சேனையைச் சேகரித்துக் கிரீஸ் தேசத்தை வெல்லத் துணிந்தனன். பின்னர், தான் வெல்லக் கருதிய கிரீஸ் தேசத்திற்கு போர் செய்யப் படைகளை அனுப்பினன். எனினும், அக்காலத்தில் கிரீஸ் தேசத்தில் அனேக மலைகள் விசேஷமாகக் காணப் பட்டனவே யன்றிச் சிற்சிலவாகவே சரியான நேர் பாதைகள் தோன்றின. கடலுக்குச் சமீபத்திற் கிழக்குக் கடற் கரையில் மலைகளுக் கிடையில் 'தெர்மாபிலே' என்ற ஒரு கணவாயுள்ளது. கிரீஸ் தேசத்தை யடைய இக் கணவாயை அவர்கள் கடக்க வேண்டும்.

இதனிடையில் செர்செக்ஸ் தம் தேசத்தை வெற்றி அடையக் கடல் போன்ற பெரும் படையைத் தெர்மாபிலே கணவாயில் செலுத்தி வருகிறானென்பதை யறிந்த லியோனிதாஸ் மன்னன், ஓ ராலோசனை சபையைக் கூட்டி செர்செக்ஸ், 'தெர்மாபிலே கணவாயைக் கடப்பின் நம்முடைய தேசத்திற் குண்டாகு மிடுக்கண்கள் பலவாகும்' என்று எடுத்துரைத்து அக் கணவாயைக் காவல் செய்யத் தக்க தைரியம் படைத்தார் யாருளர்?' எனக் கேட்டனன். எவரு மின்மையால் தானே அக் கணவாயைக் காவல் செய்யும்படி யெண்ணிய விருப்பத்தைச் சபையாரிடந் தெரிவிக்க, அவர்கள் சந்தோஷமும், துக்கமும் அடைந்து 'மன்ன! அவ்வாறே செய்க!' என்று உறுதி மொழி கூறினர். அது கேட்ட அரசன் பெரு மகிழ்ச்சி கொண்டனன். அன்றியும் இதனைக் கேள்வியுற்ற அவனுடைய குடி ஜனங்களுக்குள் முந்நூறு வீரர்கள் 'அரச! யாங்களும் நின்னுடன் காவல் புரியுமாறு வருகின்றோம்' என்றனர். மன்னன் 'அப்படியே ஆகுக!' என்று வாக்களித்துத் தன் னரண்மனைக் கேகினன். அங்ஙனஞ் சென்ற அரசன் தன் ஆருயிரனைய நாயகியைக் கண்டு 'யான் தெர்மாபிலே கணவாயைக் காவல் செய்யச் செல்லாம லிருப்பின் நம்முடைய தேசத்துக்குப் பாரசீக மன்னனால் பெருந் துன்ப முண்டாகும்' என் றுரைத்தனன்.

அவ்வீர மொழி கேட்ட அவள், முக மலர்ச்சியுடன் செல்லும் படி விடை தர, பின், 'என்னுயிரினுஞ் சிறந்த பாவாய்! யான் இறப்பது திண்ணம். யானெவ்விதம் கல்வி கேள்விகளில் தேர்ச்சியடைந்தேனோ அவ் வண்ணமே என்னுடைய அருமைக் குழந்தைகளும் கல்வி கேள்விகளில் தேர்ச்சியடையச் செய்வது உனது சிறந்த கடமையாகும்' என்று கூறித் தன் சிறிய குழந்தைகளைக் கரத்தி லேந்தி முத்தமிட்டு அரண்மனையை விட்டு நீங்கினன்.

வியக்கத் தக்க வீரம் வாய்ந்த லியோனிதாஸ் மன்னனும், அவன் முந்நூறு வீரர்களும், முழு மனதுடன் நேசித்த கன்னியர்களைச் கடிமணஞ் செய்ய மிக்க உவகையுடனே செல்லு மாடவர்களைப் போல், தெர்மாபிலே கணவாய்க் கேகினர். அவ்வாறு அவர்கள் செல்வதைக் கண்ட நண்பர்களாகிய டெகேடேயர்களும், மந்தினியர்களும் ஒன்று கூடிய ஆயிரம் வீரர்களும், ஆயிரம் ஆர்கேடியர் களும், மூன்றாயிரத்து நூறு வீரர் களடங்கிய வேறு பிலோபானியர் களும், நூறு போக்கியர்களும், நானூறு தீபர்களும், எழுநூறு தெஸ்பியர்களும் போர்த்துணையாக உடன் வந்து சேர்ந்தனர். அவ்வீரர்கள் வந்தடைந்ததைக் கண்டு மகிழ்ந்த மன்னன் தெர்மாபிலேயினையடைந்தனன்.

செர்செக்ஸ், பெருங்கடல் போலப் பரவிய தன் சேனையுடன் வந்து அக் கணவாயின் எதிரிலுள்ள சமவெளியில் தங்கினன். அக்கணவாயிலே போர் புரியுமாறு தங்கியிருந்த அச் சிறியசேனையைக்கண்டு நகைத்தனன். 'ஒரு முயல், மதங்கொண்ட ஒரு யானையை தாக்குமோ?' என்று வியப் படைந்தனன். 'ஆகாரமற்ற பசு ஒன்று ஆண்மையுடனே திரியும் ஒரு புலியை எதிர்க்குமோ?' என்று ஆச் சரிய மடைந்தனன். இதுவுமன்றிச் சத்துருக்கள் கணக்கற்றவர்களாக முன்னிருந்துஞ்சற்றும் அச்சங்கொள் ளாமல், கிரேக்கர்கள். மல் யுத்தம் செய்தும் இன்புடன் விளையாடியும் மயிர்களைக் கோதிக் கொண்டிருந்ததை யுங் கண்டு செர்செக்ஸ் மன்னன் வியப்படைந்து, தன் சேனையிலுள்ள சில கிரேக்கர்களை நோக்கி, 'அவர்கள் இச்சமயத்தில் இவ்வாறு மயிர்களைக் கோதற்குக் காரணமென்ன?' என்று கேட்க, அவர்கள் 'மன்ன! அபாய மதிகமாகஇருக்கும்பொழுது ஸ்பார்ட்டர்கள் மயிர் வாருதல் வழக்கம்' என்று கூறினர். ஒரு தேசப் பற்றுடையவன் யுத்தத்திலிறப்பான் என்பதையும், ஆனலொருபோதும் பகைவனுக் கடங்கான் என்பதையும், அவன் தன் தேசத்தின் கீர்த்திக்காகத் தன்னிடத்திலுள்ள எல்லா வற்றையும் அர்ப்பணஞ் செய்வான் என்பதையுமறியாத செர்செக்ஸ், லியோனிதாஸ் மன்னனும், அவன் வீரர்களும், தன் சேனையைக் கண்டு நடு நடுங்கித் தனக்குச் சரண மடைவார்கள் என்னும் துர் எண்ணங் கொண்டு நான்கு நாட்கள் மட்டும் அவர்களோடு போர் புரியாமலிருந்தனன். அதையறிந்த சேனைத் தலைவர்கள் செர்செக்ஸ் மன்னனை நோக்கி 'மன்ன, ஸ்பார்ட்டர் களுயிரிழப்பினுமிழப்பர்; ஆனல் சரணடையார்' என்று கூறினார்கள்.

அதைக் கேள்வியுற்ற மன்னன் தன் வீரர்களிற் சிலரை நோக்கி 'அக்கணவாயைப் பாது காத்திருக்கும் கிரேக்கர்களையும் அவர்கள் தலைவனையும் உயிருடன் பிடித்துக் கயிற்றால் பிணித்து என் எதிரிற் கொணர்வீர்' என உத்திரவு அளித்தனன். அவன் கூறிய மொழிக்கிணங்கிப் பல வீரர்கள் மிக்க கோபத்துடன், அமை

நியற்ற அலைகள், கடலிடையிருக்குமொரு மலையினிடம் மோதியெப்படித் துளி துளியாகச் சிதறுகின்றனவோ அதே வண்ணம் கிரேக்கரைத் தாக்கியழித்தனர். அவ்விதம் பலமுறை போர்புரிந்து பாரசிக வீரர்கள் அக்கணவாயில் கணக்கற்று மாண்டனர். பெருங் காற்றால் புரட்டித் தள்ளப்படும் விருட்சங்கள் போல், லியோனிதாசின் ஈட்டியினாலும், அவனுடைய வீரர்களின் தைரியத்தாலும், பாரசீகர்கள் புரட்டித் தள்ளப் பட்டார்கள். கடலில் உலவு மொரு சுறு மீன் பல மச்சங்களைக் கொலை புரிவது போலவும், பசியால் வருந்துமொரு வேங்கை ஆட்டுக்கிடையிற் புகுந்து தன் னெதிர்ப்பட்ட ஆடுகளைக் கொல்வது போலவும் தங்களை யெதிர்த்த பாரசிக வீரரைக் கிரேக்கர்கள் தாக்கியழித்ததை அறிந்து, பெருஞ்சினத்துடன் துள்ளி யெழுந்தனன் செர்செக்ஸ் மன்னன். முதல் நாட் சமரில் தன்னுடைய பெரும் படை யிவ்வாறு அழிவுறுவதைக் கண்ட அம் மன்னர் மன்னன் உலகத்தில் பிரசித்தி பெற்ற 'மீடர்' வீரர்களை நோக்கி, 'இக் கிரேக்கர்களைத் தாக்கியழிமின்' என்று கூற, அவ் வீரர்களும் தங்கள் கொற்றவன் விரும்பிய வண்ணம் மிக்க சினத்துடன் புலிபோன்று பாய்ந்து கிரேக்கர்களைத் தாக்கினர். ஆயினும் அவர் முயற்சிகள் முன்னர்ப் பொருத்த மற்ற வீரர்களின் முயற்சிகள் போலவே மீடர்களின் முயற்சி பயனற்று விட்டன. இவ்விதம் இக் கொடிய யுத்தம் இரண்டு நாள் அளவாக நடந்தது. இரண்டு நாட்கள் வரையில் சில கிரேக்க தேச பக்தர்கள் ஐந்து லக்ஷம் பாரஸீகரை யெதிர்த்ததுடன் அவர்களுக்குள் பலரையும் தங்கள் வாட்படைக்கு விருந்தளித்தனர்.

இரவிலெங்கும் பரவும் நிறை யிருளை யொழித்துப் பால்போலும் வெள்ளிய குளிர்ந்த நிலவைப் பொழிகின்ற பூரண சந்திரனிடத்தும் களங்கமிருப்பதுபோல், தேசத் துரோகி யொருவனிருந்தனன். யுத்தம் தொடங்கிய இரண்டாம் நாள் சாயங்காலம் செர்செக்ஸ் மன்னன் மிக்க துக்கத்துடனிருக்கும் பொழுது, பாதகமே ஒரு வடிவெடுத்து வந்ததுபோல் செர்செக்ஸ் சமூகத்தில் ஒரு கிரேக்கன் வந்து சேர்ந்தனன். அப்பொழுது அக்கொற்றவன் அவனை நோக்கி 'இங்கு நீ இதுபொழுது வந்ததற்குக் காரணமென்ன?' என்று வினவினான். அதுகேட்ட அவ்வஞ்சகன் 'மன்ன! ஓர் ரகசியமான பாதை எனக்குத் தெரியும்; அதை இடையர்கள் அறிவார்களே யன்றி மற்றவர் யாவருமறியார்; அதன்மூலமாய் அக்கிரேக்கர்களிருக்கும் கணவாயின் பின் புறத்தை யடைந்து அவர்கள் யாவரையுங் கொன்று வெற்றி யடைதல் மிகவும் சுலபம்' என்றான்.

அதைக்கேட்ட வேந்தர் வேந்தன் மிக்க உவகையடைந்து 'அழிவற்றார்' என்னும் பட்டம் வாய்ந்த பதினாயிரம் பராக்கிரம சாலிகளையும், ஹைடார்னெச் என்னும் தளகர்த்தனையும் அவ்வஞ்சகனுடன் அனுப்பினான். அப்பெருஞ் சேனை 'கெல்லிடராமச்' என்னுங் கணவாயின் மூலமா யிரவு முழுதும் நடந்து வைகறையில் பெரிய கருவாலி மரங்களால் அடர்ந்த ஒரு குன்றை யடைந்தது. லியோனிதாஸ் மன்னவன், தான் தெர்மாபிலே கணவாய்க்கு வந்தபோது, தன் வீரர்களிற் சிலரை ரகசியமான இப்பாதையைக் காவல் செய்யும் வண்ணம் அனுப்பியிருந்தான். அப்பாதையைக் காவல் செய்ய அனுப்பப்பட்டவர் ஆயிரம் வீரராவர். அங்குள்ள அவ்

வீரர்கள் பகைவர்களாகிய பாரசீகர் வருவதைப் பெரிய மரங்கள் அடர்த்தியாக வளர்ந்தோங்கி யிருந்தமையால் அறிந்தாரில்லை. ஆயினும், காலைக் காற்றில் பாரசீகர் நடப்பதாலுண்டாகும் ஒருவகை ஒலியைக் கேட்டுத் திடுக்கிட்டு, அக்குன்றின் மேலிருந்து கீழே பாரசீக சேனை யிறங்குவதைக் கண்டனர். பின்னர் கிரேக்க வீரர்கள் அம்புமாரி பொழிந்தனர். அம்மாரியால் சற்றேனும் பயன்படாமையால், கூடிய சீக்கிரத்தில் அக்கிரேக்கர்கள் அங்குள்ள சிகரத்திற்கேகினர். உடனே பாரசீகர்கள் மலையினுச்சியிலிருந்து கீழே யிறங்கி, ஒரு வளைந்தபாதையின் மூலமாய்த் தெர்மாபிலேயைக் காவல் செய்யும் கிரேக்கர்களின் பின் புறத்தில் அடைந்தனர்.

அதைக்கண்ட லியோனிதாஸ் மன்னன் தனக்குதவி செய்யும்படி வந்த அரிய நண்பர்களையும், அவர்களின் தைரியத்தையும் மிகவும் வியந்து, அவர்களைத் தங்கள் இல்லங்களுக்குச் செல்லும்படி கூறியபின், தன் முந்நூறு வீரர்களை நோக்கி அவர்களுக்குப்பலவித வீர வார்த்தைகளை எடுத்துக்கூறித் தங்களைத் தாக்குதற்குச் சேர்த்திருக்குஞ் சேனையை நள்ளிரவில் தாக்கி, செர்செக்ஸ் வேந்தர் வேந்தனையும் கொல்ல வேண்டுமென்று கொண்ட தன் எண்ணத்தைத் தெரிவித்தனன். அதைக் கேட்ட அவ்வீரர்கள் 'எங்கள் தலைவ! அவ்வாறே செய்வோம்' என்று உறுதி மொழி கூறினர். அவ்வுறுதி மொழி கேட்டு மிக்க ஆனந்த மடைந்தான் மன்னன். பகலவன் மேற்கு திசையில் அஸ்தமித்த போது தன் வீரருடன் சிற்றாகார மருந்தினன்.

லியோனிதாஸ் மன்னனும் அவன் வீரர்களும் பாரசீகர்கள் தங்கி யிருக்கும் பாசறைக்கேகி அங்குள்ள படாடங்கள் பலவற்றையு மழித்தனர். தங்களை யெதிர்த்த பலரையுங் கோறல் புரிந்தனர். செர்செக்ஸ் மன்னர் மன்னன் வசித்த பாசறையையு மழித்து, அங்குள்ளவிலையுயர்ந்த அரிய பொருள்களையும், பொற் பாத்திரங்களையுமுடைத்தனர். இவ்வித மிரவு முழுவதும் பாரசீகர்களையும் அவர்கள் கூடார முதலிய பலவற்றையும் அந்தக் கிரேக்கர்க ளழித்தனர்.

சூரியன் கிழக்குத் திசையிலுதித்தனன். லியோனிதாஸையும், அவன் வீரர்களையும் பாரசீக சேனைவளைந்து வந்த பின்னர், மலையும் மலையுமோதினாற் போல, பாரசீக வீரரும், கிரேக்க தேச பக்தரும், மிக்க பராக்கிரமத்துடனும் கோபாவேசத்துடனும் பெரும் போர் புரிந்தனர். கிரேக்கர்கள் தமது கூறிய ஈட்டிகளாற் புலியெனப் பாய்ந்து பல சத்துருக்களையும் மாய்த்தனர். அது பொழுது அவ்வீட்டிகளுடைந்து நொறுங்கினமையினால், வாட் படைகளைக் கையிலேந்தி மேலும் பல பாரசீக வீரர்களை யழித்தனர். தங்கள் வாளாயுத முடைந்த பின்னர்க் கேடயங்களைக் கொண்டு மற்றும் பல பாரசீகரை வதைத்தனர். அக்கேடயங்களழிந்த பின்னர் தங்கள் முஷ்டிகளால் குத்தியும், மார்பால் தாக்கியும், பற்களாற் கடித்தும், காலாலுதைத்தும் அனேகம் பாரசீகரைக் கொன்றனர். மிக்க வீரத்துடன் சண்டை செய்து கொண்டே லியோனிதாஸ் மன்னனும் அவன் வீரரும் முடிவில் ஒவ்வொருவராகச் சுதந்திரத்திற்காகத் தங்களரிய உயிர்களையும் ஒரு பொருட் படுத்தாது, தங்களது கடமையை முடித்து, பூதவுடம்பை விட்டுப் புகழுடம்பை நிலை நிறுத்தி, வெற்றி வீராய்ப் போர்க் களத்தில் உயிர் நீத்தனர்.

அடுத்த யுத்தம் ஏற்பட்டால்?

—எப். ஜே.

உலக வல்லரசு நாடுகளிலே இப்பொழுது, யுத்த தளவாடச் சாலைக ளின் யந்திர சப்தங்கள்தான் அதிகமாகக் கேட்கின்றன. ஆனாலும், இந்தப் பேரிரைச்சலுக்கிடையே, சமாதான முனுமுனுப்பும் கேட்டுக்கொண்டுதா னிருக்கிறது. இப்பொழுதுள்ள உலக நிலையிலே எதையும் நிர்ணயித்துக் கூறுவதற்கில்லை. எந்த நாடு எந்த நாட்டோடு எந்தச் சமயத்தில் முட்டிக் கொள்ளப் போகிறதோ சொல்ல முடியாது. உதாரணமாக இங்கிலாந்தும் இத்தலியும் ஒரு சமயம் சுமுகமாயிருக்கின்றன. திடீரென்று இரண்டு நாடு களுக்கும் பிணக்கு ஏற்பட்டதாக ராய்ட்டர் தந்தி கூறி விடுகிறது. இவை யெல்லாம் ஒரு வேடிக்கையாக இல்லையா? இந்தக் கட்டுரை, இங்கி லாந்துக்கும் இத்தலிக்கும் யுத்தம் நேரிட்டால், என்ன நிகழும் என்பதைப் பற்றி ஜெர்மானியர்கள் கொண்டுள்ள கருத்தை ஒருவாறு விளக்குகிறது. இது சரியென்றோ, முடிவானதென்றோ ஒப்புக்கொள்ள முடியாது. ஆயி னும், ஒரு கட்சி என்ன சொல்லுகிறதென்பதை நாம் தெரிந்து கொள்ளலா மல்லவா?

அடுத்த யுத்தம் ஏற்பட்டால், கிரேட் பிரிட்டன், 1750 மைல் நீள முள்ள மத்திய தரைக் கடலிலுள்ள முக்கியமான பாதுகாப்பு ஸ்தலங்களை பத்திரப்படுத்தி வைத்துக் கொண்டி ருக்க முடியுமா? முடியாது என்று தான் பல நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். மத்திய தரைக் கடலில் ஆதிக்கம் பெற்றுள்ள மற்றொரு வல் லரசோடு இங்கிலாந்து, மத்திய தரைக் கடலில் போராட வேண்டி நேரிட்டால், பிரான்ஸின் உதவியில்லா விட்டால் முடியாது.

மத்திய தரைக் கடலின் நடுவில், வடக்கிலிருந்து தெற்கே செல்கிற ஒரு பாதை, இத்தலியின் ஆதீனத்தில் இருக்கிறது. இத்தலிக்கு மேற்கே, ஸிஸிலியாவிலிருந்து தெற்கே பான் டெல்லேரியா தீவு வரை இத்தலியின் சுவாதீனத்தில் இருக்கிறது. பான் டெல்லேரியா, ஒரு பெரிய துறைமுக மாயில்லா விட்டாலும், இப்பொழுது, நீர் மூழ்கிக் கப்பல்களும் ஆகாய விமா னங்களும் தங்குவதற்குரிய ஓர் பாது காப்பு ஸ்தலமாக அமைக்கப்பட்டு வருகிறது. ஸிஸிலி ஜலஸந்தி 94 மைல் அகல முடையது. குண்டுகளை வீசி யெறிவதற்கென்று தயார் செய்யப் பட்டுள்ள ஓர் ஆகாயவிமானம் இதனை அரை மணி நேரத்தில் கடந்து விட லாம். மத்திய தரைக் கடலின் மேற்குப் பாகத்திற்குச் செல்ல வேண் டுமானால் இந்த வழியாகத்தான் செல்ல வேண்டும்.

இத்தலிக்குச் சொந்தமான மற் றொரு பாதையும் மத்திய தரைக் கட லில் இருக்கிறது. இது வடக்கே டோடெகானீஸ் (Dodecanese) தீவி லுள்ள லெரோஸ் (Leros) என்ற இடத்தில் ஆரம்பித்து, தெற்கே லிபி யாவிலுள்ள டோப்ருக் (Tobruk) என்ற இடத்தை வந்து சேருகிறது. லெரோஸ் துறைமுகத்திலிருந்து கொண்டு இத்தலியானது, மத்திய தரைக் கடலின் போக்கு வரத்துக் களைத் தடை செய்ய முடியும்.

மத்திய தரைக் கடலின் கிழக்குப் பாகத்திலுள்ள தனது கடல் பாதை களை இங்கிலாந்து காப்பாற்றிக் கொள்ள வேண்டும். அதோடு கூட,

மேற்படி பாதைகளின் அருகாமையில் தனது பாதுகாப்பை நம்பியிருக்கும் பிறதேசங்களையும் அது காப்பாற்ற வேண்டும். தன்னுடைய அரசியல் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்காக வேண்டியாவது, அஃதா—இங்கிலாந்து—தோல்வி யடையாமல் தன்னைப் பாது காத்துக் கொள்ளல் அவசியம். எகிப்தை, இத்தலி தாக்க ஆரம்பிக்கிறது என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது, எகிப்தின் துணைக்கு இங்கிலாந்து செல்ல வேண்டியது அவசியமாகும். அதாவது, சூயஸ் கால்வாயைப் பாதுகாவல் செய்ய வேண்டும். அதனோடு, எகிப்தின் மேற் கெல்லைப் புறத்தையும் பாது காக்க வேண்டும். ஏனென்றால் இந்தப் பக்கம் லிபியாவில் மேற்கும் கிழக்குமாக 940 மைல் நீளமுள்ள ஒரு பாதையை இத்தாலியர்கள் போட்டிருக்கிறார்கள். மற்றும், இத்தாலியர்கள், சூடானைச் சுற்றி வளைத்துக் கொள்ளாமல் இருக்க, பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்ய வேண்டும். செங்கடல் மூலமாக அபிசீனியாவுக்குள் துருப்புகளைக் கொண்டு இறக்கலாம் என்று இத்தலி நினைக்குமானால், கிரேட் பிரிட்டனானது, செங்கடலுக்குள் இத்தலி பிரவேசிக்காதபடி போர்ட் செயிட் துறை முகத்தையும் ஏடன் துறை முகத்தையும் மூடி விடலாம். ஆனால், இத்தலிக்கு இதைச் சமாளிக்க மற்றொரு மார்க்கமிருக்கிறது. ஏடன் வளைகுடா பிரதேசத்தை யொட்டியிருக்கும் இத்தாலிய சோமாலிலாந்திலிருந்து கொண்டு செங்கடலின் தெற்குப் பாகத்திலுள்ள பேபெல்மாண்டப் (Babel-mandeb) என்ற பிரிட்டிஷ் பாதுகாப்பு ஸ்தலத்திற்குத் தொந்திரவு கொடுக்கலாம். அஸ்ஸாப் (Assab) மஸ்ஸுவா(Massua)துறை முகங்களிலிருந்தும், இத்தலி, பிரிட்டிஷாருக்குத் தொந்திரவு கொடுக்கலாம்.

செங்கடலில் எந்தவிதமான யுத்தப் பிரச்னையும் ஏற்படாதென்றுதான் இது வரையில் இருந்தது. ஆனால் அபிசீனியாவை, இத்தலி வெற்றி கொண்ட பிறகு, இந்த பிரச்னை ஒரு முக்கியத்துவம் பெற்று விட்டது. 'செங்கடலின் ஆசியா கண்டத்துத் துறை முகப் பிரதேசத்தில் எந்த நாடும் ஆதிக்கம் செலுத்தாமலிருக்க நாம் பார்த்துக் கொள்ள வேண்டு' மென்ற பொருளில், காமன்ஸ் சபையில் ஸ்ரீமான் ஈடன் பேசியிருக்கிறார்.

ஆகாய விமானங்களை வேகமாகச் செலுத்துவதின் நுணுக்கங்கள் எவ்வளவுக் கெவ்வளவு அபிவிருத்தி யடைகின்றனவோ, அவ்வளவுக் கவ்வளவு இத்தலியின் வெற்றிகாணும் அறிகுறிகளும் அதிகமாகின்றன. ஆனால், சென்ற இரண்டு வருஷ காலத்திற்குள், கிரேட் பிரிட்டனானது, மத்திய தரைக் கடலில் தன் பலத்தை அதிகப் படுத்திக் கொண்டு வந்திருக்கிறது. ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகளைப் பொழிவதன் மூலமாகவோ, நீர் மூழ்கிக் கப்பல்களைக் கொண்டு கப்பல்களைத் தகர்ப்பதன் மூலமாகவோ, இனி பிரிட்டிஷ் கப்பல் படைக்கு அதிக ஆபத்து இராதென்று தான், பிரிட்டிஷ் யுத்த நிபுணர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள்.

1936ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 26ந் தேதி இங்கிலாந்தும் எகிப்தும் செய்து கொண்ட உடன்படிக்கை நல்ல சந்தர்ப்பத்தில் செய்து கொள்ளப் பட்டது. ஏனென்றால் அந்தச் சந்தர்ப்பத்தில், இத்தலி—அபிசீனிய யுத்தம் நடந்து கொண்டிருந்தது. இதற்கு முன்னர், இங்கிலாந்தும் எகிப்தும் ஒரு சமரஸத்திற்கு வர ஆறு முறை முயற்சிகள் நடை பெற்

றன. ஆனால் பலிக்கவில்லை. இத்தலி-அபிசீனிய யுத்தம் இதைப் பலிக்கும்படி செய்தது. இந்த உடன்படிக்கையினால், கிரேட் பிரிட்டனுக்கு அதிகமான ராணுவப் பொறுப்புகள் இருக்கின்றனவானாலும், எதிர் காலத்தில் அதற்கு அநேக சாதகங்கள் இருக்கின்றன. யுத்தம் ஏற்படுமானால், எகிப்து, தன் வசத்திலுள்ள துறைமுகங்கள், ஆகாய விமான நிலையங்கள், பாதைகள் முதலியவற்றை இங்கிலாந்தின் வசம் ஒப்புவிக்க வேண்டும். முக்கியமான ராணுவ ஸ்தலங்களுக்கு ரோட்டுகளும் ரெயில்வேக்களும் போட்டுத் தர வேண்டும். பிரிட்டிஷாருடைய மேற் பார்வையில், பிரிட்டிஷாருடைய யுத்த தளவாடங்களைக் கொண்டு, இருபதினாயிரம பேரடங்கிய ஓர் ராணுவத்தை தயாரில் வைத்திருக்க வேண்டும். சூயஸ் வாய்க்கால் பிரதேசத்தில், பதினாயிரம் பேரடங்கிய ஒரு ராணுவத்தையும், 400 ஆகாய விமானிகளையும் கிரேட் பிரிட்டன் வைத்துக் கொள்ள உரிமையுண்டு. அலெக்ஸாந்திரியா துறைமுகத்தை, பிரிட்டிஷ் கப்பற் படையின் வசத்தில் ஒப்படைக்க வேண்டும். இவைதான் உடன்படிக்கையிலுள்ள முக்கிய ஷரத்துகள். இந்த உடன்படிக்கையை மறுபடியும் பரிசீலனை செய்ய வேண்டுமானால், இருபது வருஷத்திற்குப் பிறகுதான் செய்ய வேண்டும். ஆனால் அப்பொழுது கூட அதன் அடிப் படையான கொள்கைகளை மாற்றியமைக்கக் கூடாது.

பாலஸ்தீனத்தில், பிரிட்டிஷாருடைய கொள்கையெல்லாம், அதனைச் சமாதானப்படுத்திக் கொண்டு போக வேண்டுமென்பதுதான். தனது தேவைகளை உத்தேசித்து பிரிட்டனுக்கு, ஹைபா (Haifa) துறைமுகத்தைத் தன் வசப்படுத்திக் கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. இந்த ஹைபா, ஒரு முக்கியமான துறைமுகமாயில்லா விட்டாலும், இதற்குத் துணையாக அலெக்ஸாந்திரியாவும் சைப்ரஸும் இருக்கின்றன. மத்திய தரைக் கடலின் கிழக்குப் பாகத்தில் இந்த மூன்று துறைமுகங்களும் சேர்ந்துதான், பிரிட்டனுடைய பாதுகாப்பு ஸ்தலங்களாயிருக்கின்றன. சைப்ரஸ் தீவில் அதிகமான ஆகாய விமானங்கள் தங்குவதற்கு வசதிகள் இருக்கின்றன.

1936-ம் வருஷம் ஜூலை மாதம் 30-ந் தேதி நிறைவேறிய டார்டனெல்ஸ் ஒப்பந்தப்படி, டார்டனெல்ஸ் ஜலசந்தியில் பிரிட்டன் தாராளமாகச் செல்ல இடம் இருக்கிறது. தவிர, துருக்கியும் இதற்குத் துணை செய்ய வேண்டுமென்றிருக்கிறது. கிரேட் பிரிட்டன், துருக்கி, கிரீஸ், யூகோஸ்லேவியா ஆகிய இந்த நாடுகளுடன் சிநேகமாகவே இருக்க விரும்புகிறது. ஆனாலும், முன்னே கூறியபடி, மத்திய தரைக் கடலில் கிரேட் பிரிட்டன் கொண்டுள்ள பலமெல்லாம், பிரான்சின் உதவியைப் பொறுத்து இருக்கிறது. மத்தியதரைக் கடலில் தங்களுடைய நலன்கள் பாதுகாக்கப்பட வேண்டுமென்பதற்காக வாவது, கிரேட் பிரிட்டனும், பிரான்ஸும் சமரஸமாக இருக்க வேண்டும். மத்தியதரைக்கடலின் கிழக்கிலிருந்து மேற்குப்பாகத்திற்குப் போகவும் வரவும் எவ்வித இடையூறுகளும் இருக்ககூடாதென்பதில் கிரேட் பிரிட்டனுக்கு நிரம்ப கவலை. அதேமாதிரி, பிரான்சுக்கு, ஆப்ரிக்காவிலுள்ள தனது குடியேற்ற நாடுகளுடன் போக்கு வரத்துக்கு எவ்வித தடையும் இருக்கக்கூடாதென்பதில் கவலை. தவிர, இந்தோ—சைனா, மடகாஸ்கர்

முதலிய பிரதேசங்களிலிருந்துபிரான்ஸுக்கு வர வேண்டுமானால், இந்த மத்தியதரைக் கடல் வழியாகத்தான் வர வேண்டும். மற்றும், பிரான்ஸுக்கு வேண்டிய எண்ணெய் சப்ளையெல்லாம், ஈராக்கிலிருந்து, மத்தியதரைக்கடல் மூலமாகவே வரவேண்டியிருக்கிறது.

சர்வதேச சம்பந்தப்பட்ட விஷயங்களில், ஸ்பெயின் நடு நிலைமை வகிக்க வேண்டு மென்பதுதான் கிரேட் பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் கவலை. மத்தியதரைக் கடலில் பிரான்ஸுக்குச் சொந்தமான டுலோன், அஜாஷியோ, பிஸெர்டா, மெர்ஸ்—எல்—கெபிர், அல்ஜியர்ஸ் முதலிய துறைமுகப் பிரதேசங்கள், மிகப் பலமாகப் பாதுகாக்கப்பட வேண்டு மென்பதில் கிரேட் பிரிட்டனுக்கு அதிக சிரத்தை உண்டு. மத்தியதரைக் கடலில் ஒரு கால் யுத்தம் நேரிடுமாயின், பிரான்ஸின் துணையின்றி, ஸிஸிலி பிர தேசத்தையோ, ஜிப்ரால்டருக்கும் மால்டாவுக்கும் இடையிலே யுள்ள 940—மைல் நீளமுள்ள கடல் பாதையையோ பாதுகாத்துக் கொள்ள முடியாது.

மால்டா, ஜிப்ரால்டர் இவைகளின் நிலைமை என்ன? சமீப காலமாக மால்டா, பலமாக பந்தோபஸ்து செய்யப்பட்டு வருகிறது. இத்தாலிய ஆகாய விமானங்கள் ஸிஸிலியிலிருந்து, இருபது நிமிஷத்தில் மால்டாவை வந்து தாக்க முடியும். ஆகாயவிமானங்களி லிருந்து தாக்கப் பட்டால், மால்டா, தன்னை எவ்வளவுதூரம் பாதுகாத்துக் கொள்ள முடியும் என்பது சந்தேகந்தான்.

1713—ம் வருஷத்தி லிருந்து பிரிட்டனுக்குச் சொந்தமா யிருந்துவரும் ஜிப்ரால்டர் விஷயத்திலும் சில பலஹீனங்கள் இருக்கின்றன. இந்தத் துறைமுகம், ஒரு மலைப் பாறையின் மீது அமைந்திருக்கிறது. அதனால் இங்கே, விசாலமான ஆகாய விமான நிலையங்களை ஏற்படுத்திக் கொள்ள வசதிகளில்லை. பதினெட்டாவது நூற்றாண்டிலேயே இந்த ஜிப்ரால்டர் துறைமுகத்தைக் கொடுத்து விட்டு, அதற்கெதிரே யுள்ள க்யூடா துறைமுகத்தை மாற்றிக் கொள்ளலாமென்று சில ராஜதந்திரிகள் யோசனை கூறினர்கள். 1904—ம் வருஷத்தில், மொராக்கோ பிரதேச சம்பந்தமாகக் கிரேட் பிரிட்டனுக்கும் பிரான்ஸுக்கும் ரகசிய ஒப்பந்தம் ஏற்பட்ட போது, இந்த மாதிரி மாற்றிக்கொண்டிருக்கலாம். ஆனால் கிரேட் பிரிட்டனது, கௌரவத்தை உத்தேசித்து இங்ஙனம் செய்யாமல் விட்டது. ஆனால் இப்பொழுது பிரிட்டிஷ் ராஜதந்திரிகள் இதற்காக விசனிக்கிறார்கள். என்ன பலன்? ஆனால், இப்பொழுதுள்ள நிலைமையிலுங் கூட, ஜிப்ரால்டர், பலமான பந்தோபஸ்திலேயே இருக்கிறது. எந்த நாட்டு வியாபாரக் கப்பல்களாயினும், இந்தக் குறுகிய ஜலசந்தி வழியாகத்தான் செல்ல வேண்டும். இந்த ஜலசந்திப் பிரதேசமோ, பிரிட்டிஷாருக்குச் சொந்தமானது. இது, பூப்பிரதேசத்திலிருந்து தாக்கப் படாமலிருப்பதற்குத் தான், ஸ்பெயின், எந்தச் சச்சரவுகளிலும் நடுவு நிலைமை வகிக்க வேண்டுமென்று கிரேட் பிரிட்டன் விரும்புகிறது. கிரேட் பிரிட்டனுக்கு விரோதமான ஒரு நாட்டுடன், ஸ்பெயின் சேர்ந்து கொள்ளுமே யானல் அப்பொழுது தான் இந்த ஜிப்ரால்டர் துறைமுகத்திற்கு ஆபத்து இருக்கிறது.

1878—ம் வருஷம், அல்ஜிஸெராஸ் துறைமுகத்தை ஸ்பெயின், பந்தோபஸ்து செய்யத் தொடங்கியபோது பிரிட்டன் கண்டித்தது. அப்பொழுது

Courtesy-New York Times

உலக யுத்தம் சமீபத்திலே வராதென்று அநேக ராஜ தந்திரிகள் சொல்லிக் கொண்டிருக்கிருர்கள். அப்படி நேரிடுமாயின் அது மத்திய தரைக் கடலில்தான் ஏற்படும் என்று சொல்கிருர்கள். அப்பொழுது, மத்திய தரைக் கடலைச் சுற்றியுள்ள தேசங்கள், தங்களை எவ்வாறு பந்தோபஸ்து செய்து கொள்ள வேண்டியிருக்கும் என்பதை இந்தப்படம் தெளிவாகக் காட்டுகிறது.

இரு நாடுகளுக்கும் ஒரு சமரஸம் ஏற்பட்டது. அதாவது, மேற்படி துறைமுகத்தை ஸ்பெயின் பந்தோபஸ்து செய்வதில்லையென்றும், அதற்குப் பதிலாக, கிரேட் பிரிட்டன் மேற்படி பிரதேசத்தைப் பாதுகாத்து வருவதாகவும் இந்தச் சமரஸத்தில் காணப்பட்டன. இப்பொழுது ஸ்பெயினில் உள் நாட்டுக் குழப்பம் முடிந்ததும், ஜிப்ரால்டர் சம்பந்தமாக இத்தகைய சமரஸம் ஒன்று ஏற்படுத்திக் கொள்ளலாமென்று பிரிட்டன் எதிர்பார்க்கிறது.

எனவே, மத்தியதரைக் கடலில் அடுத்த யுத்தம் ஏற்படுமானால்—அங்கேதான் அடுத்த யுத்தம் நிகழப்போவதாக யுத்த நிபுணர்கள் கூறிக்கொண்டிருக்கிறார்கள்—பிரான்ஸின் உதவி இங்கிலாந்துக்குத் தேவையாயிருக்கும். யுத்த ஆரம்பத்தில் ஜிப்ரால்டரையும், போர்ட் செயிட்டையும் பிரிட்டன் அடைத்து, எதிரிகளின் போக்குவரத்தைத் தடைசெய்ய முடியும். ஆனால் யுத்தம் நீடித்து நடைபெறுமானால், மால்டாவை, பிரிட்டன் காலி செய்ய வேண்டியதாகவே இருக்கும். இது ஒரு சாராருடைய அபிப்பிராயம். இன்னும் ஒரு சிலர் கூறுவதென்னவென்றால், ஆரம்பத்திலேயே, பிரிட்டனானது தனது கடல் படைகளை கடல்பாதைகளிலிருந்து வாபீஸ் வாங்கிக்கொண்டு விடவேண்டுமென்றும், பின்னர் ஏடனிலிருந்தும் ஜிப்ரால்டரிலிருந்தும் எதிரிகளுக்கு உணவுப் பொருள்கள் போகாமல் தடைசெய்ய வேண்டுமென்றும் கூறுகின்றனர். அநேகமாக, கிரேட் பிரிட்டன் இந்த இரண்டு விதமான யோசனைகளையும் பின்பற்றாமல் மத்தியதரமான ஒரு வழியைப் பின்பற்றும் என்று சிலர் கருதுகின்றனர். அதாவது வியாபாரக் கப்பல்களை தென்னாப்ரிக்காவிலுள்ள நன்னம்பிக்கைமுனை வழியாகச் செல்ல விட்டு, யுத்தக் கப்பல்களை மத்தியதரைக்கடலில் வைத்துப் போராடும் என்பது இவர்கள் கருத்து.

ஒவ்வொரு நாட்டினுடைய ராணுவ பலம் எவ்வளவு?

உலகத்திலுள்ள ஒவ்வொரு நாடும், பிரதி வருஷமும் தற்காப்பு என்றும், சமாதானம் என்றும் சொல்லிக் கொண்டு, தனது ராணுவ பலத்தைப் பெருக்கிக் கொண்டே வந்திருக்கிறது. 1937-ம் வருஷத்தில் ஒவ்வொரு நாட்டினுடைய தரைப்படை பலம் எவ்வளவாக இருந்ததென்பதைக் கீழ்க்கண்ட புள்ளி விவரத்தினால் தெரிந்து கொள்ளலாம். இந்தப் புள்ளி விவரத்தைப்பற்றி அபிப்பிராய பேதங்கள் இருக்கின்றனவென்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தரைப் படை தவிர, ஆகாயப்படை, பீரங்கிப் படை, முதலியன ஒவ்வொரு நாட்டுக்கும் உண்டு.

கிரேட் பிரிட்டன்	216,048	பேர்
அமெரிக்கா	166,114	,,
பிரான்ஸ்	450,000	,,
ஜெர்மனி	800,000	,,
இத்தலி	1,000,000	,,
ருஷ்யா	2,000,000	,,
போலந்து	266,000	,,
ஜப்பான்	1,700,000	,,
பெல்ஜியம்	67,000	,,
ஸ்பெயின்	136,000	,,
ஆஸ்திரியா	30,000	,,
துருக்கி	190,000	,,

ஒரு நாட்டின் மீது பல கண்கள்

—சி. லே க்ளேர்

நமது தாய் நாட்டுக்கு வடக்கே யுள்ளது ஆப்கானிஸ்தானம். சிறிய நாடு. இப்பொழுதுதான் தலை தூக்கிக் கொண்டு பார்க்க ஆரம்பித்திருக்கிறது. இதற்குள் இதன் மீது எத்தனை பேருடைய திருஷ்டி? இதைப் பற்றி சி. லே க்ளேர் என்பவர் 'ஆசியா' வில் எழுதிய கட்டுரை இது. ஸ்ரீ லே க்ளேர், இந்த வியாசத்தில், அமெரிக்கக் கம்பெனிக்கு 270,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்தின் உரிமையைக் கொடுத்திருப்பதாகக் கூறுகிறார். ஆனால் ஆப்கானிஸ்தானத்தினுடைய மொத்த விஸ்தீரணமே சுமார் 245,000 சதுர மைல்கள்தான். இதனால், ஈரான் அரசாங்கத்தினிடமிருந்து உரிமையாகப் பெற்ற பிரதேசங்களைச் சேர்த்துக் கூறி யிருக்கிறார் என்று நாம் ஊகிக்க வேண்டி யிருக்கிறது. ஆனால் விஸ்தீரணம் முக்கியமல்ல; உரிமைதான் முக்கியம்.

ஆப்கானிஸ்தானத்து ஜனத்தொகை சுமார் 11,000,000. இந்த நாடு, 1934-ம் வருஷம், சர்வ தேச சங்கத்தில் ஓர் அங்கத்தினராயிற்று.

சமீப காலந் தொட்டு, கீழ்த்திசையிலுள்ள முக்கிய நாடுகள், தங்கள் அரசியல், பொருளாதார உறக்கத்தினின்று விழித் தெழுந்திருப்பதை ஐரோப்பிய நாடுகள் கூர்ந்து கவனித்துக் கொண்டு வருகின்றன. சிறப்பாக, 1937ம் வருஷம் ஜுலை மாதம் 9-ந் தேதி, ஈரான், ஆப்கானிஸ்தானம், ஈராக், துருக்கி ஆகிய நான்கு நாடுகளும் ஓர் ஒப்பந்தம் செய்து கொண்டதிலிருந்து, இந்தக் கவனம் அதிகரித்துக் கொண்டு வருகிறது. இந்த நான்கு நாடுகளும், தங்களுக்குள் எவ்வித மான மனஸ்தாபமும் வரும்படியாக நடந்துகொள்வதில்லை யென்றும், முக்கியமான பிரச்னைகளில் பரஸ்பரம் கலந்துஆலோசிப்பது என்றும் இந்த ஒப்பந்தம் கூறுகிறது. ஐரோப்பிய நாடுகளில் இந்த உடன்படிக்கை, கொஞ்சம் அதிர்ச்சியைக் கொடுத்திருக்கிற தென்று சொல்ல வேண்டும். மேற்படி நாடுகளில் தங்களுக்கு இருந்த அரசியல் அந்தஸ்து கொஞ்சம் குறைவு படுவதோடு, வியாபார சம்பந்தமாக இருந்த சலுகைகளும் மட்டுப் படுமே என்று இந்த வல்லரசுகள் அஞ்சுகின்றன. ஈரானில் அநேக வருஷங்களாக பெட்ரோல் உற்பத்தி செய்து கொண்டிருந்த ஆங்கிலோ-ஈரானிய எண்ணெய்க் கம்பெனிக்கும், ஈரான் அரசாங்கத்திற்கும் வியாபார சம்பந்தமாக 1933ம் வருஷம் ஒப்பந்தம் ஏற்பட்டதிலிருந்தே பேனாட்டாருடைய அரசியல் செல்வாக்கு கீழ் நாட்டில் குன்றி வர ஆரம்பித்தது என்று சொல்லலாம்.

1936ம் வருஷம் டிசம்பர் மாதம் 30ந் தேதி லண்டன் பத்திரிகைகளில் ஒரு செய்தி வெளியாயிற்று. ஆப்கானிஸ்தானத்தில், சுமார் 270,000 சதுர மைல் விஸ்தீரணமுள்ள பிரதேசத்தில் எண்ணெய் உற்பத்தி செய்து கொள்வதற்கு, ஆப்கன் அரசாங்கத்தார், ஓர் அமெரிக்க எண்ணெய்க் கம்பெனிக்கு 75 வருஷ உரிமை கொடுத்திருக்கின்றனர் என்று இந்தச் செய்தி கூறியது. மேலே கூறப்பட்ட 270,000 சொச்சம் சதுர மைல் விஸ்தீரண முள்ள பிரதேசம் ஈரான் தேச எல்லைக்குத் தெற்கிலும், இந்தியாவிலிருந்து கிழக்கு ஈரான்

எல்லை வரையிலும்' இருக்கிறது. உலகத்திலே இது வரை உற்பத்தி செய்ய முடியாத அவ்வளவு பெரிய அளவில் இங்கே எண்ணெய் உற்பத்தி செய்ய முடியும் என்று வியாபார நிபுணர்கள் கருதுகிறார்கள். ஆப்கானிஸ்தானத்தில் அமெரிக்கர் போட்டிருக்கிற இந்த எண்ணெய்த் திட்டம் மிகப் பெரியது. எண்ணெய்க் கிணறுகள் தோண்டுவது ஒரு புறமிருக்கட்டும்; கடல் மூலமாக ஏற்றுமதி செய்வதற்கநுகூலமாகவும், உள் நாட்டில் பல இடங்களிலும் சப்ளை செய்வதற்காகவும் ஆயிரக் கணக்கான மைல் தூரம் குழாய்கள் போட வேண்டும். ஆப்கானிஸ்தானம், மலைகளும் பள்ளத்தாக்குகளும் நிறைந்த பிரதேசம் என்பது இங்கே நினைவிலிருத்திக் கொள்ளத் தக்கது. இப்பொழுது ஈரானில் ஓர் அமெரிக்க எண்ணெய்க் கம்பெனி வேலை செய்து கொண்டிருக்கிறது. இதற்கு 'அமீரேனியன் எண்ணெய்க் கம்பெனி' என்று பெயர். இதற்கும் ஆப்கானிஸ்தானத்தி லேற்பட்டுள்ள கம்பெனிக்கும் தொடர்பு இருக்கிறது.

ஆப்கன் அரசாங்கத்திற்கும் மேற்படி அமெரிக்க எண்ணெய் கம்பெனிக்கும் ஏற்பட்ட ஒப்பந்தத்தில், ஸ்ரீமான் ஹார்ட் என்பவர் கையெழுத்துப் போட்டிருக்கிறார். இவர், 1933ம் வருஷம் ஈரானில், அமெரிக்க ஸ்தானீகராயிருந்தார். ஆப்கன் அரசாங்கத்திடமிருந்து இந்த எண்ணெய் எடுக்கும் உரிமைகளைத் தாங்கள் அடைய வேண்டுமென்று பிரிட்டிஷார் முயற்சி செய்தனர். ஆனால் அது பலிக்கவில்லை. துருக்கி, ஈரான், ஆப்கானிஸ்தானம் ஆகிய இந்த மூன்று நாடுகளும், தங்கள் தங்கள் நாட்டிலுள்ள மூலப் பொருள்களைச் சுரண்டுவதற்கு, வெளி நாட்டாருடைய பொருள்தேவை என்பதை உணர்ந்திருக்கின்றனவேயாயினும், பிரிட்டிஷாருக்கு இது சம்பந்தமாக எவ்வித சலுகையும் காட்டப்படக் கூடாதென்பதில் பிடிவாதமாயிருக்கின்றன.

இப்பொழுது ஆப்கானிஸ்தானத்தின் அரசராயிருப்பவர் மகம்மது ஜாஹிர் ஷா. இவருடைய தகப்பனார் நாதிர் ஷா, 1934ம் வருஷம் கொலை செய்யப்பட்டார் என்பதும், அதற்கு முன்னர், பாச்சா—இ—சாகோ என்பவன் கையில் சிறிது காலம் ஆப்கன் தேசம் அகப்பட்டுக்கொண்டு தவித்ததென்பதையும் நேயர்கள் அறிவார்கள். ஆப்கானிஸ்தானத்திலே இயற்கைப் பொருள்கள் ஏராளமாக இருக்கின்றன. இவைகளை வெளிக்குக் கொணர்ந்து உபயோகப்படுத்த ஆப்கன் அரசாங்கத்திற்கு, முதல் தேவையாயிருக்கிறது. உதாரணமாக ஹரி—ரூட் கணவாயிலும், ஹீராட்டுக் கருகிலும் பெட்ரோல், கோர்பந்து கணவாய், குர்பந்து கணவாய்ப் பிரதேசங்களில் நிலக்கரி, பஞ்சேஷெர் கணவாயில் வெள்ளி, கதார்லே, பர்மால் பிரதேசங்களில் இரும்பு முதலியவைகள் ஏராளமாக இருக்கின்றன. இவைகளை நன்கு உணர்ந்திருந்த பிரிட்டிஷார், 1929-ம் வருஷம் பட்டத்துக்கு வந்த நாதிர் ஷாவுக்குப் பல உதவிகளைச் செய்தனர். பாச்சே—இ—சாகோவுக்கு விரோதமாக நாதிர்ஷா நடத்தின போராட்டத்தில், பின்னவருக்கு 175,000 பவுனும் 10,000 துப்பாக்கிகளும் கொடுத்திருக்கின்றனர். மற்றும் நாதிர்ஷா கொலை செய்யப்படுவதற்கு முன்னர், அவர், கைபர் கணவாய் ரெயில்வேயை காபூல்வரை நீட்டிக் கொள்ள பிரிட்டிஷாருக்கு உரிமை கொடுக்கச் சம்மதித்திருந்தார். ஆனால் அவர் திடீரென்று மரணமடைந்தது, பிரிட்டிஷாருக்கு எத்த

கைய வருத்தத்தை உண்டுபண்ணியது என்பதற்கு அத்தாட்சி, இப்பொழுதுள்ள அரசரிடத்தில் அவர்கள் எவ்வளவு விசுவாசமாக நடந்துகொள்ளுகின்றனர் என்பதே. சமீபத்தில் ஆப்கன் பிரதம மந்திரியான ஸர்தார் முகம்மது ஹஷீம்கானும், அப்துல் மஜீத்கான் என்ற வேறொரு மந்திரியும் லண்டனுக்கு விஜயஞ் செய்திருந்தார்கள். இவரில் முன்னவர், தற்போதைய அரசருடைய சிறிய தகப்பனார். இவர்தான் அரசாங்கத்தின் சூத்திரதாரி என்று சொல்லப்படுகிறது. பின்னவரோ, 'ஆப்கன் நேஷனல் பாங்கி அண்ட் டிரேடிங் கம்பெனி' என்றஒரு ஸ்தாபனத்தின் தலைவர்.

இப்பொழுது, ஆப்கன் தலைநகராகிய காபூலுக்கும் இந்தியாவுக்கும் டெலிபோன், தந்தி தொடர்பு இருக்கிறது. ஜப்பான், ஆஸ்திரேலியா, தென்னாப்பிரிக்கா, லண்டன், நியூயார்க் ஆகிய தொலை தூரங்களிலும் பேசக்கூடிய சக்தி வாய்ந்த கம்பியில்லாத் தந்தி ஸ்தாபனங்களை ஐந்து இடங்களில் நிறுவிக்கொள்ள, ஒரு பிரிட்டிஷ் கம்பெனிக்கு ஆப்கன் அரசாங்கம் உரிமை கொடுத்திருக்கிறது.

இந்தச் சமயத்தில் ஜப்பான் சும்மாயிருக்கவில்லை. உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் தனக்கு ஏதேனும் ஒரு விதமான உரிமை ஏற்படுத்திக் கொள்ளவேண்டுமென்பதில் ஆவல்கொண்ட ஜப்பான், ஜப்பானிய வியாபார ஸ்தாபனங்களை, ஆப்கானிஸ்தானத்தில் பல ஊர்களிலும் ஏற்படுத்த 1934-ம் வருஷத்தில் ஒரு வியாபார தூதுக் கோஷ்டியை அனுப்பியது. இதன்பயனாக, ஆப்கன்—ஜப்பானிய வியாபார சபை ஒன்று ஏற்படுத்தப் பெற்றது. காபூலிலே, நவீன முறையில் பல தொழிற் ஸ்தாபனங்களை ஜப்பான் ஏற்படுத்தப் போவதாகச் சொல்லப் படுகிறது. ஜப்பான் அரசாங்கத்தின் ஸ்தானீகர் ஒருவர் காபூலில் நிரந்தரமாக நியமிக்கப் படுவார் என்றும் சொல்லப் படுகிறது.

ஜெர்மனியும், ஆப்கானிஸ்தானத்தில் தன் உரிமையை ஸ்தாபித்துக் கொள்ள விரும்புகிறது. வியாபார அபிவிருத்திக்காக இந்த விருப்பத்தைக் கொண்டிருக்கிறதா அல்லது, ஆசியா கண்டத்தின் மத்திய பாகத்தில் கொஞ்சம் ஊன்றிக் கொள்ள வேண்டுமென்ற நோக்கமா என்பதைச் சொல்ல முடியாது. ஆப்கன் அரசாங்கத்தினுடைய அழைப்பின் பேரில், ஜெர்மன் அரசாங்க உத்தியோகஸ்தரான டாக்டர் டப்ளியு.பெல்டோ(Dr. W. Beldow) என்பவர், எங்கெங்கே, எப்படி எப்படி ரோடுகள் போடலாம், போக்குவரவு சாதனங்களை எப்படி அபிவிருத்தி செய்யலாம் என்பவைகளைப் பற்றி ஆப்கன் அரசாங்கத்திற்கு ஆலோசனை கூற வந்திருக்கிறார். ஜெர்மன் அரசாங்கத்தின் பொருளாதார மந்திரியாயிருந்த டாக்டர் சாசெட் என்பவர் (Dr. Schacht) 1937ம் வருஷம் ஜனவரி மாதம் அங்கோராவுக்கும் (துருக்கியின் தலைநகர்) டெஹரானுக்கும் (ஈரானின் தலைநகர்) விஜயஞ் செய்திருந்தார். இந்த இரண்டு நாடுகளுக்கும் ஆப்கானிஸ்தானத்திற்கும் ஏற்பட்டுள்ள தொடர்பானது, ஆப்கானிஸ்தானத்திலும் ஜெர்மனி செல்வாக்குத் தேடிக் கொள்ள வேண்டுமென்பதில் ஆவல் கொண்டிருக்கிறது என்பதை நன்கு புலப்படுத்துகிறது துருக்கி அரசாங்க பாங்கிக்கும், ஆப்கன் பாங்கிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறதென்பது இச் சமயத்தில் குறிப்பிடத்தக்கது.

ருஷ்யாவுக்கும் ஆப்கானிஸ்தானத்திலே கண் இருக்கிறது. சமீபத்தில்

இந்த இரண்டு நாடுகளுக்குள் ஒரு வியாபார ஒப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது. ருஷ்யாவிலிருந்து எவ்வளவு (தயார் செய்யப்பட்ட) பொருள்கள் இறக்குமதியாகின்றனவோ, அவ்வளவு ஆப்கானிஸ்தானத்திலிருந்து மூலப் பொருள்களை அது வாங்கிக் கொள்ள வேண்டும் என்று இந்த ஒப்பந்தம் கூறுகிறது. ஆப்கானிஸ்தானத்தின் வடக்கே, ருஷ்யாவுக்குச் சொந்தமான மூன்று பருத்தி உற்பத்தி ஸ்தாபனங்கள் நிறுவப்பட்டிருக்கின்றன.

மேலே கூறப்பட்ட, பிரிட்டிஷ், அமெரிக்க, ஜப்பானிய, ஜெர்மன், ருஷ்ய நாடுகள் தவிர, வேறு பல நாட்டாரும், தனி முறையில் ஆப்கானிஸ்தானத்தில் உரிமை கொண்டாடி வருகின்றனர். ஆப்கன் அரசாங்கத்தின் கீழ் பல இத்தாலியர்கள் உத்தியோகம் பார்க்கிறார்கள். ஆப்கன் அரசாங்கத்துக்கு, பண வரவு செலவு சம்பந்தமாக ஆலோசனைகூறும் அதிகாரி மான்ஸ்யோலி என்ற ஓர் இத்தாலியர்; நீர்ப்பாசன இலாகா அதிகாரி அலோய்ஸி என்ற ஓர் இத்தாலியர்; ராணுவப் பயிற்சிப்பள்ளிக்கூடத்து ஆசிரியர்களில் இருவர் இத்தாலியர். இவர்கள் தவிர, ஜெக்கோ—ஸ்லோவேகியாவிலிருந்தும், ஸ்வீடனிலிருந்தும் பல நிபுணர்கள் வரவழைக்கப்பட்டு வேலை பார்த்து வருகிறார்கள்.

மேலே கூறப்பட்ட நாடுகள், ஆப்கானிஸ்தானத்தில் பொருளாதார சம்பந்தமாக ஏதேனும் உரிமைகள் தேடிக் கொள்ளலாமே தவிர, அரசியல் செல்வாக்கு தேடிக்கொள்ள முடியாது. அக்காலம் மலையேறி விட்டது.

'கடவுள் பேரில் ஆணை'

நாம் சகஜமாக ஒருவருக்கொருவர் பேசிக் கொள்கிறபோது, நமது கட்சியை வலியுறுத்திப் பேசுவதற்காகவும், எதிராளி நம்பேச்சை நம்பவேண்டுமென்பதற்காகவும் 'கடவுள் பேரில் ஆணை' யென்றும், 'சத்தியமாக' என்றும் சொல்கிறோம். ஆனால் இது கடவுள் மீது பழி சுமத்துவதாகும் என்றும், நமது கீழான நிலைக்குக் கடவுளை இழுக்க வேண்டாமென்றும், மத நம்பிக்கையுள்ள பலர் கூறுகின்றனர். இந்த வழக்கம் உலகத்தில் அதிகமாகப் பரவி வருகிறதென்றும், இதனை ஒழிப்பது அவசியமென்றும் கருதி ஒரு மகா நாடு கூடியிருக்கிறது. இந்த மாதிரியான மகா நாட்டை எங்கேயாவது நீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஆனால் உண்மையில் இது நடந்தேயிருக்கிறது. கிரீஸ் தேசத்திலுள்ள ஏதென்ஸ் நகரத்தில், சமீபத்தில் இந்த மகா நாடு நடைபெற்றது. கிரீஸ், ஜெக்கோ-ஸ்லோவேகியா, யூகோ-ஸ்லேவியா முதலிய நாடுகளிலிருந்து பாதிரிமார்கள் பலர் இம் மகா நாட்டில் பிரதிநிதிகளாக ஆஜராயிருந்தார்கள். ஏதென்ஸ் சர்வகலாசாலை ஆசிரியரான ஹாரண்டெல்டானேஸ், முதலில் மகா நாட்டைத் திறந்து வைத்துப் பேசினார். ஆதிகாலத்தில், கிரீஸ் தேசத்தில்தான் இந்தப் பழக்கம் இருந்ததென்றும், கடவுள் பேரில் ஆணையிடுகிற வழக்கத்தைச் சட்ட பூர்வமாக எல்லா நாடுகளிலும் தடுக்க வேண்டுமென்றும் கூறினார். மற்றொரு பிரதிநிதி பேசுகையில், கிரீஸிலும் இத்தலியிலுந்தான் இந்தப் பழக்கம் இருக்கிறதென்று சொன்னார். உலகத்தில் பொருளாதார நெருக்கடி வர வர அதிகமாகிக் கொண்டு வருகிறதென்றும், இதனால்தான் ஜனங்கள் கடவுளை நொந்து கொள்கிற மாதிரியாகப் பேச நேரிடுகிறதென்றும் இன்னொருவர் சொன்னார். கடைசியில் இந்த மகா நாடு முடிவான தீர்மானங்கள் ஒன்றையும் நிறைவேற்றாமல் கலைந்து விட்டது.

உலகப் பேர்வழிகள்

தளபதி ஸர் ஜான் சைமன் 1937ம் வருஷம் மே மாதம் முதல் தேதியிலிருந்து பிரிட்டிஷ் மந்திரிச் சபையில் பொக்கிஷ மந்திரியாக இருக்கிறார். இவருடைய தகப்பனார் ஒரு பாதிரி. இ. சைமன் என்று பெயர். ஸர் ஜான் சைமன் ஐரோப்பிய மகா யுத்தத்தில் சேவை செய்தார். 'மேஜர்' என்ற பொறுப்புள்ள ராணுவ பதவிக்குக் கூட உயர்த்தப் பட்டார். 1917ம் வருஷம் டிஸம்பர் மாதம் ஸ்ரீமதி மான்னிங் என்ற ஒரு பெண்ணை விவாகஞ் செய்து கொண்டார்.

சைமன் பார்த்த உத்தியோகங்கள்:- அட்டர்னி ஜெனரல்; உள் நாட்டு மந்திரி; அந்நிய நாட்டு மந்திரி; பொக்கிஷ மந்திரி முதலியவைகள்.

ஸர் ஜான், உலகத்திலுள்ள முதல் தரமான வக்கீல்களில் ஒருவர். இந்தியாவிலிருந்து சென்ற சில பிரிவி கௌன்ஸில் வழக்குகளில் கூட இவர் ஆஜராகியிருக்கிறார். தவிர, 1927-1928ம் வருஷத்து சைமன் கமிஷன் பகிஷ்காரத்தில் ஈடுபட்டிருந்தவர்கள், இவர் பெயரை மறக்க முடியாதல்லவா?

சைமன் நல்ல குணசாலி; யாரையும் மனம் நோகும்படி பேச மாட்டார். வாசாலகமாகப் பேசுவதில் மகா கெட்டிக்காரர். எப்படிப் பட்ட நெருக்கடியான நிலைமை ஏற்பட்டாலும் எல்லாரையும் திருப்திப் படுத்துகிற மாதிரி பேசி நிலைமையைச் சமாளித்து விடக்கூடிய சக்தியுள்ளவர்.

இவர் கென்ஸிங்டனிலுள்ள அடிலன் வீதியில் வசிக்கிறார். இவர் மனைவி பல பொது நலத் தொண்டுகளில் ஈடுபட்டவர். எப்பொழுதும் சுறுசுறுப்பாயிருப்பார். இந்த அம்மாவின் அறையின் முன்பக்கத்தில் பின்வரும் வாக்கியங்கள் அடங்கிய போர்ட் தொங்க விடப் பட்டிருக்கிறது:-

'சோம்பேறிகள், இறந்து போனவர்களைப்போல் பயனற்றவர்கள்.'

சைமன் பொக்கிஷ மந்திரியாயிருப்பதற்கு எவ்விதத்திலும் லாயக்குள்ளவர்தான். தம் சொந்த விஷயத்தில் கூட மகா சிக்கனமாயிருப்பார். தமக்குக் கிடைக்கிற 5500 ரூபாய் மாதச் சம்பளத்தில், சராசரி 3000 ரூபாய் எப்படியாவது மிச்சம் பிடித்து விடுகிறார். பணஞ் சேகரிப்பதில், எல்லா மந்திரிகளையும் விட இவர்தான் பலே பேர்வழி.

பேர்வழி—2
தளபதி ஸர் ஜான் சைமன்
பிரிட்டிஷ் பொக்கிஷ மந்திரி
பிறந்தது-1874

சைமன் எதை எதை விரும்புகிறார்?

பணஞ் சேகரிப்பதை.
ரோஜா புஷ்பங்களை.
ரோஜா செடிகளைப் பிரதானமாகக் கொண்ட தோட்டப் பயிரில்.
கால் பந்து விளையாட்டு.
நல்ல சந்தர்ப்பத்தில் மாவிலும் படாமல் மாங்காயிலும் படாமல் பேசுவதில்.

சைமன் எதை எதை வெறுக்கிறார்?

சிகரெட், சுருட்டு பிடிப்பதை.
மதுபானஞ் செய்வதை.
ஆடம்பரமாகப் பணஞ் செலவழிப்பதை.

வாழ்க்கைப் போராட்டம்

—வெங்கைக்கிழான்

வாழ்க்கை, ஒரு பெரிய போர்க்களம்;
அதில், ஆண்டவனே! எனக்கு ஒரு கௌரவமான ஸ்தானம் கொடு.
அந்தப் போராட்டத்தில் கலந்து கொள்ள
எல்லாரையும் போல் எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கொடு;
முயற்சி செய்ய, துணிவாக நடக்க ஒரு தைரியத்தை அளி;
நான் வெற்றியுற்றால், அந்த வெற்றிக் கட்டிடத்தின் மீது
என் நம்பிக்கையும் நாணயமும் கொடிகளாகப் பறக்கட்டும்;
தோல்வி யுற்றேனாயின், வெற்றி காண்பவர்களுக்கு
வழி விலகிவிட்டு, அவர்களுக்காக கை கொட்டிக் களிக்கும்
மனப்பான்மையைக் கொடு.

சில புள்ளி விவரங்கள்

1938-ம் வருஷத்து பிரெஞ்சு அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டம் வருமாறு:-

வரவு 54,600,000,000 பிராங்க்

செலவு 54,599,000,000 பிராங்க்.

1937 ம் வருஷத்தில் இங்கிலாந்தில் 17,280 நூல்கள் வெளியாயின.

அமெரிக்க ஐக்கிய மாகாணத்தில் 332,397 இந்தியர்கள்-1930ம் வருஷம் எடுத்த ஜன கணிதப்படி இருக்கிறார்கள்.

இங்கிலாந்தின் ஜனத் தொகையில் ஐந்தில் நான்கு பங்கு பேர், நகரங்களிலேயே வசிக்கிறார்கள். இந்த நகர வாசிகளில் பாதி பேர், 51 பெரிய நகரங்களில் மட்டும் வசிக்கிறார்கள்.

1933ம் வருஷம் ஜனவரி மாதத்தில்-அதாவது ஹிட்லர் சர்வாதிகாரப் பதவியை ஏற்றுக் கொண்ட வருஷம்- ஜெர்மனியில் 497,000 மோட்டார் வண்டிகளும், 152,000 லாரிகளும் 819,000 மோட்டார் சைகிள்களும் இருந்தன. 1937 ம் வருஷம் ஜனவரி மாதம்-ஹிட்லர் பதவி ஏற்றுக் கொண்ட நான்கு வருஷங்களுக்குப் பிறகு, 1,126,000 மோட்டார் வண்டிகளும் 322,000 லாரிகளும், 1,327,000 மோட்டார் சைகிள்களும் இருந்தன.

இமய மலை ஒரு சமுத்திரம்!

600 லட்சம் வருஷங்களுக்கு முன்னே இந்தியா எப்படி யிருந்தது? இப்பொழுதுள்ள இமய மலை இருந்ததா? அதிலிருந்து பல நதிகள் உற்பத்தியாயினவா? அந்தக் காலத்தில்-அதாவது 600 லட்சம் வருஷங்களுக்கு முன்னாடி, திபேத்து, காஷ்மீரம், இமய மலைப் பிரதேசம் முதலியவை யாவும் அகண்ட சமுத்திரமாயிருந்த தென்பதற்கு ஆதாரமாக, பர்மாவில் பிரதான நதியாக ஓடும் ஐராவதி நதிக்கரையிலுள்ள ஓர் ஊரில் சில கிளிஞ்சல் வகையராக்கள் அகப்பட்டிருக்கின்றன. இந்தியா அரசாங்கத்து பூமி சாஸ்திர நிபுணர்கள், இவற்றைக் கண்டு பிடித்து மேற்கண்ட முடிவுக்கு வந்திருக்கிறார்கள். அப்படியானால் இப்பொழுதுள்ள இந்திய மகா சமுத்திரம், முற்காலத்தில் பெரிய நிலப்பரப்பா யிருந்த தென்றும், இதில் தமிழர் நாகரிகம் தலைசிறந்து நின்ற தென்றும் நாம் திடமாக நம்பலாமா? நமது தமிழ் நூல்களில், இந்தக் கட்சியை வலியுறுத்துவதற்கு அநேக ஆதாரங்கள் இருக்கின்றனவே.

அஜண்டா குகை சித்திரங்கள்.

இயற்கை யழகு நிரம்பிய இந்த இடத்திலே தான் அஜண்டா இருக்கிறது.

—வி. ராகவேந்திர ராவ்

M. A., B. T.,

இந்தக் கட்டுரையை எழுதிய ஸ்ரீ ராகவேந்திர ராவ், மைசூர் மகாராஜா காலேஜில் ஓர் ஆசிரியர்.

நைஜாம் ராஜ்யத்திலுள்ள அஜண்டாவைச் சென்று பார்க்க விரும்புவோர், ஜி. ஐ. பி, ரெயில்வேயிலுள்ள ஜல்கோன் (Jalgaon) ஸ்டேஷனில் இறங்க வேண்டும். (ஜல்கோன், பம்பாய்க்கு 261 மைல் தூரத்தில் இருக்கிறது.) இங்கிருந்து 37 மைல் தொலைவில் அஜண்டா இருக்கிறது. நேரான மோடார் பாதை உண்டு. ஜல்கோன் ஸ்டேஷன் மாஸ்டருக்கு முன் கூட்டியே தெரிவித்தால், மோடாருக்கு எற்பாடு செய்து கொடுப்பார். ஒரே நாளில் ஜல்கோனிலிருந்து அஜண்டாவுக்குப் போய் வர சுமார் 60 ரூபாய் பிடிக்கும். இது சம்பந்தமான விவரங்களுக்கு, கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதினால் எல்லாம் தெரிந்து கொள்ளலாம். "The Curator, Ajanta caves, P. O. Vakod, East Khandesh."

அஜண்டா, எல்லோரா என்ற பெயர்களை, இந்தியர்களைவிட அந்நியர்கள்தான் அதிகமாகக் கேள்விப் பட்டிருக்கிறார்கள். ஏனென்றால், கலாஞானமானது, இந்தியாவைவிட அந்நியநாடுகளில்தான் அதிகமாகப் பரவியிருக்கிறது. இந்தியாவில் யாத்திரை செய்யும் எந்த அந்நியநாட்டுப் பிரயாணியும், இந்தக் கலைக்களஞ்சியங்களைப்பார்வை யிடாமல் செல்வதில்லை. படித்த வகுப்பினரான இந்தியர்களுக்கு இந்த இடங்கள், தனது நாட்டாரைப்பற்றிப் பெருமை கொள்ளக் கூடிய ஒரு உற்சாகமும், தனது மூதாதையர்களின் சிற்பத் திறமையில் ஒரு பெருமையும் கொள்ளச் செய்கின்றன. தவிர, சீனாவிலும் ஜப்பானிலும் அப்பசிக்கப் பட்டு வரும் சிற்பக் கலைக்கு அஜண்டா சித்திரங்கள் தாயகம்போல இருக்கின்றன. அப்படியானால் இந்த இடத்திலுள்ள அதிசயமான அமிசங்கள் தானென்ன?

எந்த இடத்தில் இந்தச் சித்திரங்கள் செதுக்கப் பட்டு அமைக்கப்பட்டிருக்கின்றனவோ அந்த இடமே மிகவும் மனோ ரம்மியமான இடம். இயற்கை யழகு நிரம்பியுள்ள இந்த இடத்தில் மனிதனுடைய மனோ தருமத்தினாலும், கைத்திறமையினாலும் நிர்மாணிக்கப்பட்ட செயற்கை யழகும் கலந்து இந்த இடத்தில் சோபிக்கிறது. அருகாமையில் ஓடும் நதியின்

சல சல சப்தம், பட்சி ஜாலங்களின் குதூகல இரைச்சல், இயற்கையாகப் புஷ்பித்திருக்கிற மலர்களின் மந்த காசம் இவை யனைத்தையும் சகபாடி களாகச் சேர்த்துக் கொண்டு பிரகிருதி தேவதை இந்த அஜந்தாவில் ஆனந்த நடனம் புரிகிறாள்.

நைஜாம் ராஜ்ஜியத்திற்கு வடமேற்கெல்லைப் புறத்தில் அஜந்தா மலைகள் இருக்கின்றன. இதில் 29 குகைக் கோயில்கள் இருக்கின்றன. புத்தபிட்சுக்கள், தங்களுக்காகவும் தங்கள் மாணாக்கர்களுக்காகவும் இந்தக் கோயில்களை நிர்மாணித்துக் கொண்டார்கள். ஏனென்றால் அந்தக் காலத்தில் அஜந்தா ஒரு பெரிய கல்வி ஸ்தாபனமாக இருந்தது. இந்த அஜந்தா மலையானது ஒரு குதிரையின் குளம்பு போன்ற வடிவுடையதாய் இருக்கிறது. இதன் நடுப்பாகம் ஓர் ஆற்றுப்படுகையில் அமைந்திருக்கிறது. மலையின் பக்கங்களில் பூமி மட்டத்திற்கு 200 அடிக்குமேல் இந்தக் குகைகள் வெட்டப்பட்டிருக்கின்றன. எனவே இந்தக் குகைகளுக்குச் செல்லவேண்டுமானால், மலையின் மீது கொஞ்சம் ஏறித்தான் செல்ல வேண்டும்.

இவைகளைக் குகைகள் என்று சொல்வது தவறு என்று நான் நினைக்கிறேன். ஒரு மூலையில் விக்கிரகம் வைக்கப் பட்டிருக்கிற பெரிய கோயில் மண்டபங்கள் என்றுதான் இவைகளைச் சொல்ல வேண்டும். இந்த மண்டபங்களில் பல, 60 அடி நீளமும் 40 அடி அகலமும் 25 அடி உயரமும் உள்ளவை. இன்னுஞ் சில 95 அடி நீளமும், 45 அடி அகலமும், 27 அல்லது 30 அடி உயரமும் உள்ளனவா யிருக்கின்றன.

இக்தக் காலத்தில் சந்தன மரத்தில் எப்படி சித்திரவேலைகள் செய்வார்களோ அப்படி அந்தக் காலத்தில், மலை யோரமா யுள்ள கற்பாறைகளில் இந்த மாதிரியான வேலைகள் செய்யப் பட்டிருக்கின்றன. தனித்தனிக் கற்களை இணைத்து இந்த மண்டபங்கள் நிர்மாணிக்கப் படவில்லை. இந்த மண்டபங்களின் முகத் துவாரம் ஒவ்வொன்றும் மிக வேலைவாகச் செதுக்கப்பட்டிருக்கிறது. இதுதான் மிகவும் கஷ்டமான வேலை. இதில் மூன்று நுழைவாயில்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இதன்மேல் சூரியவெளிச்சம் புகுவதற்கென்று ஒரு பலகணி மாதிரி இருக்கிறது. இது குதிரைக் குளம்புமாதிரி இருக்கிறது. மண்டபத்தில் புத்தர் உருவங்கள உட்கார்ந்த வண்ணமாகவும் நின்ற வண்ணமாகவும் பலபட செதுக்கப்பட்டிருக்கின்றன. இடையிடையே யுள்ள ஸ்தம்பங்கள், தந்த வேலைமாதிரி அவ்வளவு நுண்மையாகச் செதுக்கப்பட்டிருக்கின்றன. ஒவ்வொரு மண்டபத்திலும், இரண்டு வரிசை ஸ்தம்பங்கள், முப்பதடி உயரமுள்ள மேல் தளத்தை (கூரையை) தூங்குமாறு குடையப்பட்டிருக்கின்றன. இந்த ஒவ்வொரு ஸ்தம்பமும் சித்திர வேலை நிரம்பியதா யிருக்கிறது. ஸ்தம்பங்களின் மேல் பாகம், தெய்வ உருவங்கள் செதுக்கப்பட்டிருக்கின்றன. மண்டபத்தின் கோடியில், சதுர வடிவமான ஒரு மேடை மீது ஒரு ஸ்தூபி நிறுவப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தூபியின் சிகரத்தின் மீது ஒரு குடைமாதிரி செதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஸ்தூபிக்கு முன்னடி, ஒரு சிம்மாசனத்தின் மீது உட்கார்ந்திருக்கிற புத்தர் வடிவம் செதுக்கப்பட்டிருக்கிறது.

கல்லிலே செதுக்கப்பட்ட வேலைகளுக்காக மட்டும் அஜந்தா பிரசித்தி பெறவில்லை. அதனுடைய ஓவிய வேலைக்கும் அது பிரசித்தி பெற்றிருக்கிறது. மண்டபத்தின் சுவர்களில்



குகை—1

சிலா சாஸன ஆராய்ச்சிக்காரர், அஜண்டாவிலுள்ள சிற்ப இடங்களை 26 குகைச் சித்திரங்களாகப் பிரித்திருக்கின்றனர். கட்டுரையில் கூறியுள்ளபடி இவை குகைகளல்ல; மண்டபங்கள் என்று தான் சொல்ல வேண்டும். இந்த முதலாவது குகை கி. பி. 6வது நூற்றாண்டில் செதுக்கப் பட்டது.

புத்தருடைய 555 முந்திய பிறப்பு வரலாறுகள் செதுக்கப்பட்டிருக்கின்றன. கௌதம புத்தருடைய பிறப்பு வளர்ப்பும் செதுக்கப்பட்டிருக்கின்றன. புத்தருடைய தர்பார் மண்டபம், ஸ்திரீகள் சிங்காரித்துக் கொள்ளும் காட்சி, அரச தம்பதிகள் கேளிக்கையாக இருத்தல் முதலிய காட்சிகளெல்லாம் செதுக்கப்பட்டிருக்கின்றன. மண்டபங்களின் எந்தப் பாகத்திலும் ஓர் அங்குலங் கூட இடம் விடப்படாமல் எல்லாம் சித்திர வேலைப்பாடு நிரம்பி யிருக்கிறது. ஆனால் எதுவும் அனாவசிய மென்றோ பொருத்தமற்றவை யென்றோ தோன்றவில்லை. உலகத்தில் எந்த இடத்திலும், சிற்ப வேலையும் சித்திரமும் இங்ஙனம்



குகை 19

இது கி. பி. 6 அல்லது 7-வது நூற்றாண்டில் செதுக்கப்பட்டதாகச் சொல்லப்படுகிறது.



ஒருங்கு சேர்ந்து அழகு கொடுக்கவில்லையென் றுதிண்ணமாகக்கூறலாம்.

இந்த அஜண்டா சித்திரங்களில் ஒரு முக்கியமான அமிசம் என்னவென்றால், இங்கே செதுக்கப்பட்டிருக்கும் ஸ்திரீ உருவங்கள் தான். புத்த பிட்சுக்கள், இந்தச் சித்திர வேலைப் பாடுகள் நடைபெறுவதற்குக் காரணர்களா யிருந்த போதிலும், இங்குக் காணப்படும் ஸ்திரீ உருவங்கள் அழகில் இணையற்றவையாய் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் இந்த அழகு வடிவங்களெல்லாம் கடவுளின் தொண்டுக்கு அர்ப்பணம் செய்யப் படுவதாகவே சித்திரிக்கப்பட்டிருக்கின்றன. தற்காலச் சித்திரக் கலைஞர்களுக்கு, அஜண்டா சித்திரங்

24-வது குகையில்

ஒரு ஸ்தம்பத்தின் சிகரத்தில் செதுக்கப்பட்டிருக்கும் அற்புதமான வேலைப்பாடு இது.

கள் ஒரு நல்லாசிரியனைப் போல் வழி காட்டியா யிருப்பதில் ஆச்சரிய

மென்ன இருக்கிறது? அஜண்டா தான் நமது தேசிய சித்திர பொக்கிஷம்.

முதல் குகையின் பின்புறத்துச் சுவற்றில் தீட்டப் பட்டிருக்கும் ஓர் அற்புதமான சித்திரம். தெய்வலோகத்திலிருந்து அப்ஸர ஸ்திரீகளும், கந்தர்வர்கள், கின்னரர்கள் முதலியோரும் வந்து, அவலோகிதரை ஆசீர்வதிக்கிறார்கள். புத்தர் பிரான், சுத்தோதன மகாராஜனுடைய திருமகனாக அவதரிப்பதற்கு முன்னர் 555 பிறவிகள் எடுத்ததாகவும், அதில் முதற் பிறவிக்கு அவலோகிதர் என்று பெயர் என்றும் பௌத்த நூல்கள் கூறும்.

தெய்வமும் தர்மமும்

—எஸ். கே. நாராயணய்யர்
B. A., B. L.,

இந்துக்களிடத்தே, அதிலும் சிறப்பாகத் தமிழ் மக்களிடத்தே தெய்வத்தைப் போன்று அனாதியாயிருப்பது தர்மமென்பது. கடவுள் எத்துணைப் பெயர்களாலும் ரூபங்களாலும் வணங்கப் படுகின்றதோ அதேபோல் தர்மமும் பல்வேறு பாகுபாடுகளுடையது. பொதுத் தர்மத்தை, பெரும் பகுதியாக வைதீக தர்ம மென்றும் லௌகீக தர்மமென்றும் இருவகையாய்ப் பிரிக்கலாம். பின்னால் ராஜ தர்மமென்றும், ஸ்திரீ தர்மமென்றும், குல தர்மமென்றும், மக்கள் தர்மமென்றும், பிரஜைகள் தர்மமென்றும், வேதியர் தர்மமென்றும் பற்பல பாகுபாடுகளையுமுடையது. உற்று நோக்குமிடத்து இத்தகைய தர்மங்கள் ஒவ்வோர் வகுப்பினர் அல்லது மக்கள் கடமைகளையும் நடை முறையையும் குறித்துக் காட்டும். இந்த தர்மம் மக்களுக்கும் மற்றுமுள்ள ஜீவராசிகளுக்குமேயன்றி தேவர்க்கும் யாவர்க்கும் மேம்பட்ட தெய்வத்திற்கும் இயைந்திருக்கும். ஆக்கல், அருளல், அழித்தலென்னும் முத்தொழிலைச் செய்யும் மூர்த்திகளாய் வணங்கப் படும் கடவுளரும் இத்தருமத்திற்கு உட்பட்டவர்களே. இதனை உத்தேசிக்குமிடத்து தர்மம் கடவுளினும் முந்தியதென்னலாம்.

மருப்படாது தனிப்பட்டிருந்த இத் தர்மம் பின்னர் பாகுபாடு செய்யப் பெற்ற போது வரையறுத்தோரால் ஒரு சிறிது கலப்படைந்து, தன் தன்மையில்கொஞ்சம்குறைந்தது. அப்படி பரிகாரங்களாகக் கூறப்பெற்ற தர்மச் செயல்களுக்குப் பரிகாரங்கள் ஏற்படுத்தினர். அதனையே பிராயச்சித்தமென்று அழைத்தனர். நீதி என்றும் நியதியென்றும் கூறப்பெற்று மக்களிடத்தே உலவுவனவாயின. அவ்விதம் நமக்கு நீதி சாஸ்திரத்தை முதல் முதலில் தந்தவர் மனுவென்றே தெரிகிறது. ஹிந்து மதமும் அதனைச் சேர்ந்த பிறமதங்களும் பரவியுள்ள நாடுகளிலெல்லாம் மனு நீதி மிகுதியும் கொண்டாடப் பெற்று வந்திருக்கிறது. தர்மத்தின் வாயிலாகப் பிறந்த இந் நீதி நூல், தர்மத்தையே சொல்லுமென்பது புலப்பட இதனை மனு தர்ம சாஸ்திர மென்பர். ஏகதேசம் இந்து மதப்பரிச்சய முள்ளவர்களும் சுவாயம்புமனுவென்றும், வைவஸ்வத மனுவென்றும் இரு மனுக்களிருந்தனரென்பதையறிவர். மனு தர்மசாஸ்திரமென்பது இதில் எந்த மனுவால் செய்யப் பெற்றதென்று உசாவுவர். இப்போது நடப்பது வைவஸ்வத மனுவந்தரமாகையால் இதற்கு முந்தியே சுவாயம்பு மனுவந்தரமிருந் திருக்க வேண்டும். தவிர சுவாயம்புவென்னும் நாமமே முதல் மனு வென்னும் குறிப்பை யுணர்த்துவதுபோலிருக்கிறது. அனாதியான தர்ம சாஸ்திரத்தைத் தொகுத்தவர் முதல் மனுவாயிருப்பதே பொருத்தமும் சிலாக்கியமுமாதலால் இதனை சுவாயம்பு மனுவின் முயற்சியாலுண்டான நூலென்பதே நேர்மையாம். சரித்திர பூர்வமாய் ஆராயும்போது சூர்ய வம்சமானது சுவாயம்பு மனுவினிடமிருந்து உற்பத்தியானதாயும் இம்மனு

வினிடை யிருந்தே இட்சுவாகு பிறந்ததாகவும் கூறப்படுகிறது. மிகப் பழமையான சூர்ய குலத்தின் மூல புருஷனுகிய சுவாயம்பு மனுவே தர்ம நூலைத் தொகுத்தனர் என்பது ஏற்புடைத்து.

தவிர மனுவின் பின் வந்தவராதலின் நம்மை மனிதரென்றனர். தம் பின்னோருக்குரிய கடமைகளை முதற்பிதா தொகுத்து வைத்ததில் தப்பொன்று மில்லை. இம்மனுதர்ம சாஸ்திரம், முன் சொல்லியதினின்றும் தர்மத்தின் ஓர் தொகுப்பே என்பது வெள்ளிடை மலை. இந்நூலில் எல்லா மக்களுக்கும் அவரவர்க்குள்ள கடமைகள் குறிக்கப் பெற்றுள்ளன. இந்நூல் முதலில் ஆரிய பாஷையில் செய்யப் பெற்றது. புத்தக ரூபமாயிராமல் கர்ன பரம்பரையாய் வேதங்கள் போன்று வந்துளதென்றும் சொல்லுவர். தந்தைக்குப் பின் தனயனிடம் வந்து வளர்ந்த இந்நூல் இடையிடையே ஒரு சிறிது பேதமடைதலும் ஒருவர் அல்லது ஒரு பகுதியார் கூறும் பான்மை வேறுபட்டிருத்தலும் சகஜம். இதனுலேயே இந்துக்களின் மனுநூலும் பர்மியரின் மனுதர்மமும் சிற்சில விடங்களில் வேறு பட்டிருக்கக் காரணம் புலனுகின்றது. தவிர மனு தர்ம சாஸ்திரத்திற்கு, வியாக்யான கர்த்தாக்களும் தங்கள் தங்கள் சாமர்த்தியத்திற்கும் புத்தி சாதுர்யத்திற்கும் ஏற்றவாறு ஒரு சிறிது திரித்துச் சொல்லுதலும் சகஜம்.

இந்துக்கள் தர்ம நிலையும் மேனுட்டினர் தர்ம நிலையும் மிகுதியும் வேறுபட்டுளது. மக்களுக்குரிய தர்மமெல்லாம், நீதியாக, மேனுட்டினர் கொள்கையின் படி அரசனிடத்தினின்று முண்டாகின்றன. நீதி சாஸ்திரங்களுக்கு அரசனே பிறப்பிடம்; ஊற்று. இத்தகைய கருத்திருப்பதனுலேயேநீதியுண்டாகும் இடத்தில்அநீதி எப்போது முண்டாகாதென்னும் நிச்சயம். இக்கருத்தினையே 'அரசன் அநீதி செய்யவியலா' தென்று (The king can do no wrong) கூறப்படுகிறது. ஹிந்துக்கள் கொள்கையோ வெனின் தர்மம் அனுதியானது; பிரஜைகளேயன்றி அரசனும் மற்ற மனிதர்களைப் போன்றே கருதப்படுவான் என்பது. இவ்வித அடிப்படையான மூலம் பாடிருப்பதனுலேயே மேல்நாட்டுச் சட்டங்களையும் நம் நாட்டுச் சட்டங்களையும் ஒத்துச் சேர்த்து உசாவுவதற்கில்லாமலிருக்கிறது.

இதல்லாமல் மேல் நாட்டினர்கள் லௌகிகத்திற்கே சட்டமியற்றுகின்றனர். வைதிகச் சட்டங்கள் மதாசாரியர்களுடைய கோட்பாட்டின்படி இயைந்து வரும். ஆனுல் ஹிந்துக்களிடத்தே வைதீகமாயினும் லௌகிகமாயினும் தர்மமொன்றுகவேயிருந்தது. பின்னுல் சமூக நிலையில் பல்வேறு மாறுதல்கள் ஏற்படவே அவற்றிற் கேற்றுப்போல் தர்மசாஸ்திரங்களையும் திருத்தி யமைத்துக் கொண்டனர். அப்படி ஏற்பட்டவைகளே பராசரஸ்மிருதி, நாரதஸ்மிருதி, யாக்ஞவல்கிய ஸ்மிருதி, வசிஷ்ட ஸ்மிருதி, பிரகஸ்பதி ஸ்மிருதி முதலிய அநேக ஸ்மிருதிகள். இப் பெரியார்கள் தங்கள் காலத்தில் சமூகமிருந்த நிலையை உத்தேசித்து தர்மத்தை ஒரு சிறிது திருத்தியும் திருத்தாமைபோல் ஏற்படுத்தினர். இந்த ஸ்மிருதிகளில் இப்போது பெரும்பாலும் ஹிந்துக்களால் சட்டமாகக் கொள்ளப் படுவது யாக்ஞவல்கிய ஸ்மிருதி. இந்நூலும் எளிதின் புலப்படாத பாஷையில் இயற்றப் பெற்றுள்ளதால் இதற்கொரு வியாக்கியானம் செய்யப் பெற்றது. அத்தகைய வியாக்கியானம் செய்

தவர் விஞ்ஞானேசுவரர். இவர் செய்துள்ள வியாக்கியானத்தை விளக்க வந்த விற்பன்னர்கள் அதனையும் பல்வேறு விதமாகப் பாகுபடுத்திக் கூறுகின்றனர். அதிகமான முரணும் பாகுபாடுமில்லை யெனினும் வித்தியாசமிருக்கத்தான் செய்கிறது. பொதுவாக இந்தியாவின் எல்லாப் பகுதிகளிலும் கொண்டாடப்படும் சட்டத்தினின்று மாறுபட்டுள்ளது வங்காள நாட்டினர் கொண்டாடும் சட்டம். வங்காளத்தில்வழங்கும் ஹிந்துநீதியை 'தாயபாக' மென்றும், பிறபகுதிகளில் வழங்கும் நீதியை 'மிதாக்ஷர' மென்றும் கூறுவர். முன் கூறியபடி இம்மிதாக்ஷரத்தில் 'மதராஸ் முறை' 'மார் வாடிய முறை' 'பனாரஸ்முறை', மிதிலை முறை' யெனப் பல முறைகளுண்டு. இம்முறைகளில் சிற் சில விஷயங்களில் ஒரு சிறிது வேற்றுமையுண்டு. அத்தகைய வேறுபாடுகளை பின்னரமயம் கிடைத்துழிக் குறிக்க நேரும்.

உலக வியலில், தர்மம், நீதி சாஸ்திரங்களாகக் கற்கப் படுகின்றதெனினும், தர்மம் தன்னிலை மாறி எல்லாப் பொருள்களைப் போல் தர்மத்திற்கும் வேற்றுமைகளுண்டாகின்றன. புராணங்களின் மூலமாய் நீதி சாஸ்திரங்களைப் புகட்டப் புகுந்த பெரியார்கள் தர்மத்தை ஒரு பசுவாகவும் அது முதல்யுகத்தில் நான்கு கால்களோடும் நன்கு நடந்து வாழ்வதாயும், பிந்திய யுகத்தில் மூன்று கால்களோடும், துவாபர யுகத்தில் இரண்டு கால்களோடும், கலியுகத்தில் ஒரு காலாலும் நடந்து வாழ்வதாக ஒரு வகைப் படுத்திக் கூறுவர். ஒவ்வோர் யுகத்திலும் தர்மத்தின் நிலையில் குறைவேற்பட்ட போது பகவான் பூமியில் அவதரித்து மறுபடியும் தர்ம ஸ்தாபனம் செய்வதாகவும் புராணம் கூறும். பகவான் திருவாய் மலர்ந்த பகவத்கீதையைப் படித்தோர்க்கு இவ்விஷயம் உள்ளங்கை நெல்லிக்கனி. இவ்விஷயங்களினூடே புலப்படுவது யாதெனின், கால தேச வர்த்தமானங்களுக்கேற்ப தர்மமும் திரிந்து வருவதாகவும், அளவுமிகுந்து அதர்மம் தோன்றும் போது மறு முறையும் முதல் நிலைமை வந்து சேருகிறதென் பதுமே. உலகப் பொருள்களெல்லாம் உருண்டை வடிவாகக் கருதப்படுவதும் குறிக்கப்படுவதும் தொன்று தொட்ட பழக்கம். கால சக்கரமென்பதும் இதனையே புலப்படுத்தும். மார்க்கண்டேயர் பஞ்சவர்க்குச் சொல்லும் நீதிகளையோ, அனுசாஸனிக பர்வத்தில் கூறும் தர்மங்களையோ கவனித்தவர், தர்மத்தின் நிலையை எளிதினறியலாம். தற்போதுள்ள கலிகாலத்தில் தர்மமிருக்கும் நிலை எப்படிப்பட்டதென்று கேட்கச் சிலருக்கு மனமெழலாம். அதனையும் தமிழறிஞர் ஒருவர் விவரித்துள்ளார். அவர் சொல்வது:—

'தாய்புத்தி சொன்னால் மறுத்திடும்
காலமுயர்
தந்தையைச் சீறுகாலம்,
சற்குருவை நிந்தைசெய்
கால மெய்க் கடவுளைச்
சற்று மெண்ணுதகாலம்,
பேய் தெய்வ மென்றுபசரித்திடும்
காலமுயர்
புரட்டருக்கேற்ற காலம்,
பெண்டாட்டி வையினும்கேட்
கின்ற கால நற்
பெரியோர் சொல்கேளாத காலம்,
தேய்வுடன் பெரியவன் சிறுமை
யுறு கால மிகு
சிறியவர் பெருகு காலம்,
செருவில்விட் டோடினோர் வரிசை
பெறு காலம் வசை
செப்புவோர்க் குதவு காலம்.
வாய் மதம் பேசிவிடு மனியாயகாரர்க்கு வாய்த்தகலி காலமையா.'

எதியோப்பியாவும்—இந்தியாவும்

— து. மி.

வீழ்ந்துபோன அபிசீனியாவுக்கும் சுதந்திரத்திற்காகத்துடித்துக்கொண்டிருக்கும் இந்தியாவுக்கும் இருந்த சம்பந்தத்தை ஒருவாறு விளக்குகிறது இந்தக் கட்டுரை. இதை நாம் படிக்கிறபோது, நமது உள்ளத்தில் நம்மையறியாத ஓர் அநுதாப உணர்ச்சி, அடிவயிற்றிலிருந்து குமுறி எழுகிறது. இந்தக்கட்டுரையில் வெளியாகியுள்ள படங்கள் யாவும், 'பிரபஞ்ச ஜோதி பிரசுரம்' இரண்டாவது வெளியீடான 'அபிசீனிய சக்ரவர்த்தி' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டவை.

எதியோப்பியா! நீ இருந்த இடங்கூட இன்னும் சில காலத்திற்குள் பூகோள படத்திலிருந்து மறைக்கப்பட்டு விடலாம். ஆயிரக் கணக்கான வருஷங்களாக நீ சுதந்திரமாக வாழ்ந்ததும், மற்ற தேசத்து அரசர்களுக்கு நீ தூதுகள் அனுப்பியதும், வெறும் கட்டுக் கதைகள் என்று கூட சொல்லப்பட்டு விடுமோ என்னவோ? 1935ம் வருஷம் வரை, சுதந்திரமாக ஆண்டு கொண்டிருந்த உனது மன்னன்—ஹெயிலி செலாஸி—ஐயோ! இப்பொழுது, உலக சமாதான தேவதையை உபாசித்துக் கொண்டு, எங்கேயோ ஒரு மூலையில், சாதாரண ஒரு குடியானவனைப்போல் காலத்தைக் கழித்து வருகிறான். இத்தாலிய ஏகாதிபத்திய ஆசையானது, உன் உதரத்தைச் சுரண்டி சின்னாபின்னப் படுத்திக்கொண் டிருக்கிறது. ஆனால் உன்னிடத்திலே எனக்கு—புராதன இந்தியாவுக்கு—ஏற்பட்டுள்ள அநுதாபம் அதிகப் பட்டு வருகிறது. எதியோப்பியாவுக்கும் இந்தியாவுக்கும் நெடுங்காலமாக இருந்துவந்த சம்பந்தத்தை நினைக்க நினைக்க, என் மனம் உருகுகிறது. இரு நாடுகளும் சுதந்திரமாக இருந்த காலத்தில் ஒருவருக்கொருவர் தூது கோஷ்டிகளை அனுப்பி, பரஸ்பரம் மரியாதைகளைக் கொடுத்தும் பெற்றும் வந்தோம். ஆனால் இப்பொழுது இருவரும் வீழ்ச்சியுற்றிருக்கிறோம். வீழ்ச்சியில் சில வித்தியாசங்கள் இருக்கலாம். ஆனால் வீழ்ச்சி வீழ்ச்சிதானே. சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன், நம்மிருவருக்கும் இருந்த சம்பந்தத்தில் ஓர் அம்சத்தை மட்டும் கொஞ்சம் இங்கே எடுத்துக் காட்டுகிறேன். இப்படி பழைய சம்பந்தங்களைப் பற்றி நினைப்பதனால், நம்மிருவருக்கும் உள்ள அநுதாபம் பரஸ்பரம் அதிகப் படலா மல்லவா?

இந்தியாவில் மொகலாயசக்ரவர்த்தியாகிய அவுரங்கஜீப் (கி. பி. 1658—1707) ஆண்டு கொண்டிருந்தான். அப்பொழுது இந்தியா சுபிட்சமாயிருந்தது. உலகத்திலுள்ள பல தேசத்து அரசர்கள், அவுரங்கஜீப்புக்குச் சன்மானங்கள் அனுப்பினார்கள். அதனால் கௌரவமும் அடைந்தார்கள். இந்தியா என்றால் அப்பொழுது அவ்வளவு மதிப்பு இருந்தது. இங்ஙனம் மொகலாய தர்பாருக்குச் சன்மானங்களை எடுத்துக் கொண்டு வந்தவர்களில் எதியோப்பிய அரசனிடமிருந்து வந்த தூது கோஷ்டியினரும் ஒருவர். இவர்களைப்பற்றி பெர்னியர் என்ற ஒரு யாத்திரிகன் பின்வருமாறு நிரம்ப அழகாக வருணித்திருக்கிறான்:-

'அவுரங்கஜீப் சக்ரவர்த்தியைப் பேட்டிகாண, எதியோப்பிய அரசனிடமிருந்து இரண்டு தூதர்கள் வந்தார்கள். தன்னுடைய அதிகாரத்தையும், ஆடம்பரத்தையும்,

குடை நிழ லிருந்து குஞ்சர மூர்ந்தோர்.

பல அடிமைகளை அழைத்துக் கொண்டுபோய் இந்தியாவிலேவிற்று அதன் மூலம் கிடைக்கிற பணத்தைக் கொண்டு இந்தியச் சாமான்களை வாங்கிக் கொண்டு வருவதற்காகஇந்த வியாபாரியை எதியோப்பிய அரசன் பொறுக்கி யெடுத்தான். மற்றொரு தூதன் அர்மீனிய கிறிஸ்தவ வியாபாரி. அலெப்போ என்ற ஊரில் பிறந்து அங்கேயே கல்யாணஞ் செய்து கொண்டவன். எதியோப்பியாவிலே இவனை மூராத் என்று அழைத்தார்கள்.

புகழையும் (இந்தியாவிலே) பரப்பத் தீர்மானித்து எதியோப்பிய மன்னன் இந்த தூது கோஷ்டியை அனுப்பினன். ஆனல் உண்மையில், அவுரங்கஜீப்பினுடைய தாராளமான கைகளிலிருந்து விலைமதிப்புள்ள சன்மானங்களைப் பெற வேண்டுமென்பதிலே தான் இவன் பார்வை இருந்தது.

தூதர்களில் ஒருவர் முகம்மதிய வியாபாரி. ஆப்ரிக்காவிலிருந்து

மொகலாய தர்பாரில் தன்னுடைய தூதர்கள் கௌரவமாகத் தோன்ற வேண்டுமென்பதற்காக, ஆப்ரிக்க அரசன், அவர்களுடைய செலவுகளுக்காகத் தாராளமாகக் கொடுத்தான். சிறுவர்களும் சிறுமிகளுமாக முப்பத்திரண்டு அடிமைகளைக் கொடுத்து அவர்களை மோகா என்ற ஊரில் விற்று, அந்தப் பணத்தைக் கொண்டு பிரயாணச் செல

நடைமேலிந் தோரூர் நண்ணினு நண்ணுவர்

வைச் சரிப்படுத்திக் கொள்ளுமாறு சொன்னான். தவிர, மொகலாய சக்ரவர்த்திக்குச் சன்மானமாக கொடுக்குமாறு இருபத்தைந்து அழகான அடிமைகளை அனுப்பினான். தவிர, பதினைந்து குதிரைகள், வரிகள் நிரம்பிய ஒருவகை கோவேறு கழுதை, ஒரு பலசாலி கையால் எடுத்துத் தூக்க முடியாதபடி அவ்வளவு பெரிய இரண்டு யானை தந்தங்கள், ஓர் எருதுக்கொம்பு நிறைய ஜவ்வாது இவைகளையும் அனுப்பினான்.

தூதர்கள் மோகா நகருக்கு வந்து அங்கே மார்க்கெட்டில் குறைந்த விலைக்கு அடிமைகளை விற்றார்கள். இந்தப் பணத்தைக் கொண்டு, ஓர் இந்தியக் கப்பலில் ஏறி, இருபத்தைந்து நாள் கஷ்டமான பிரயாணத்திற்குப் பிறகு, சூரத் நகரம் வந்து சேர்ந்தார்கள். வழியிலே பல குதிரைகளும் அடிமைகளும் இறந்து போயினர். கோவேறு கழுதையும் இறந்து போயிற்று. இவர்கள், சூரத் நகரம் வந்து சேர்ந்த சில மணி நேரங்களுக்குள் சிவாஜி என்பவன் பிரவேசித்து ஊரைச் சூறையாடினான்; வீடுகள் பலவற்றை எரித்தான். தூதர்கள் இருந்த வீடும் எரிந்து போயிற்று. இதனின்று மிகுந்த சிலவே, இவர்களிடத்தில் சன்மானப் பொருள்களாக இருந்தன. எருதுக் கொம்பில் கொண்டு வந்த ஜவ்வாதும் காலியாகி விட்டது.

சூரத்திலிருந்த டச்சு வியாபார

சாலையின் அதிகாரியாயிருந்த அட்ரியன் (Adrian) என்பவன் இவர்களை அறிமுகப்படுத்தி எனக்கு (பெர்னியருக்கு) ஒரு கடிதம் கொடுத்தனுப்பியிருந்தான். இவர்களிருவரையும் ஏற்கனவே அபிசீனியாவில் பார்த்திருந்ததனால், ஐந்து ஆறு வருஷங்கள் கழித்து இவர்களை மறுபடியும் பார்ப்பதில் எனக்குச் சந்தோஷம் ஏற்பட்டது. என்னாலான உதவியைச் செய்வதாக இவர்களுக்குச் சொன்னேன். தர்பாரைச்சேர்ந்த ஆஸ்தானிகர்களிடத்தில் எனக்கு நிறையச் செல்வாக்கு இருந்தபோதிலும், வெறுங்கையர்களாக வந்த இந்தத் தூதர்கள் விஷயத்தில் எனக்குக் கொஞ்சம் கஷ்டமே உண்டாயிற்று. கோவேறு கழுதையின் தோலிலும் எருதுக் கொம்பிலும் அரக்கு, பிராந்தி இவைகளை நிரப்பிக் கொண்டு வந்திருந்தார்கள். இதுதான் இவர்களுடைய சன்மானப் பொருள்கள். தவிர இவர்களுடைய தோற்றமே பரிதாபகரமாயிருந்தது. டெல்லியின் வீதிகளில் இவர்கள் பல்லக்கின்றியே நடந்தார்கள். பிதோனியர்களைப்போல் நடந்தார்கள். பிதோனியர்களைப் போல் உடையணிந்திருந்தார்கள். காலிலும் தலையிலும் ஒன்றுமில்லாத ஏழெட்டு அடிமைகள்தான் இவர்களைப் பின்

பெர்னியர் Bernier-கி. பி. 1620ம் வருஷம் பிறந்த ஒரு பிரெஞ்சு யாத்ரிகன். வைத்திய நிபுணன். இவன் முதலில் அபிசீனியாவுக்குச் சென்று அங்கே பல புதிய பிரதேசங்களைக் கண்டு பிடிக்க வேண்டுமென்று முயன்றான். ஆனால் அது முடியவில்லை. பின்னர் செங்கடல் வழியாக இந்தியாவுக்கு வந்து, மொகலாய தர்பாரில் செல்வாக்குத் தேடிக்கொண்டான். அவுரங்கஜீப்பின் மூத்த சகோதரனை தாரா ஷுகோவுக்கு இவன் வைத்தியனாக இருந்து, அவனுக்குப் பல உதவிகளைச் செய்திருக்கிறான். இவனுடைய யாத்திரைக் குறிப்புகள் சுமார் முந்நூறு வருஷங்களுக்கு முன் இந்தியா இருந்த நிலைமையை நமக்கு ஒருவாறு புலப்படுத்துகின்றன.

--ஆசிரியர்

தொடர்ந்து சென்றார்கள். இந்த அடிமைகளோ மிகச் சாதாரண உடைகளையே அணிந்திருந்தார்கள். உடைந்துபோன ஒரு வண்டி தான், இந்தத் தூதர்களின் வண்டியாக இருந்தது. ஒரு பாதிரியின் குதிரையை இரவல் வாங்கிக் கொண்டு, அதனைச் சாக அடித்து விட்டார்கள்.

இகழப்பட்ட இந்த மனிதர்களின் சார்பாக நான் பல முயற்சிகள் எடுத்துப்பார்த்தேன். ஆனால் இவர்களைப் பிச்சைக்காரர்கள் மாதிரியே அதிகாரிகள் நடத்தினார்கள். ஒருநாள் அந்நிய நாட்டுமந்திரியும் எனது எஜமானருமாகிய தானேஷ்மந்த்கான் என்பவருடன் நான் பேசிக்கொண்டிருந்தபோது, எதியோப்பிய மன்னருடைய பெருமைகளைப் பற்றி வருணிக்க ஆரம்பித்தேன். கடைசியில் அவுரங்கஜீப், இவர்களுக்குப் பேட்டி கொடுக்க இசைந்தார். அப்படியே இவர்கள் பேட்டி கண்டு தங்கள் அரசருடைய அறிமுகக் கடிதங்களைக் கொடுத்தார்கள். அரசரும், இவர்களுக்குப்பதில் மரியாதையாக, பட்டும் சரிகையும் கலந்த தலைப்பாகை, கச்சை முதலியவற்றைக் கொடுத்து, இவர்களுடைய நித்தியச் செலவுக்கும் ஏற்பாடு செய்யும்படி சொன்னார். மற்றொரு முறை இவர்களுக்குப் பேட்டி

கொடுத்து, மற்றொரு தலையணியும், ஆறாயிரம் ரூபாயும் அளித்தார். ஆனால் இந்தப் பணத்தை இருவரும் சரிபாதி பங்கிட்டுக் கொள்ளாமல், முகம்மதியர் நாலாயிரம் ரூபாயும், மூராத் என்ற அர்மீனியக் கிறிஸ்தவர் இரண்டாயிரம் ரூபாயுமாக எடுத்துக் கொண்டார்கள்.

அவுரங்கஜீப், எதியோப்பிய மன்னனுக்கு இந்தத் தூதர்கள் மூலம் கீழ்க்கண்ட பொருள்களைச் சன்மானமாக அனுப்பினார்:— சிறந்த தலைப் பாகை ஒன்று; வெள்ளி முலாம் பூசின இரண்டு பெரிய எக்காளங்கள்; இரண்டு வெள்ளி நகாராக்கள்; சிவப்புக் கற்கள் இழைத்த இரண்டு கட்டாரிகள்; ஏறக்குறைய பதினாயிரம் ரூபாய் பெறுமான தங்க வெள்ளி நாணயங்கள். எதியோப்பியாவில் (உலோகங்களின் மீது) அச்சிட்ட நாணயங்கள் கிடையாததால், இந்த நாணயங்கள் எதியோப்பிய மன்னரால் பெரிதும் பாராட்டப் படும் என்று அவுரங்கஜீப் கருதினார். ஆனால், எதியோப்பிய தூதர்கள், இந்த ரூபாயை ஹிந்துஸ்தானத்திற்கு வெளியே எடுத்துப் போக மாட்டார்கள் என்பதும், இந்தப் பணத்தைக் கொண்டு தங்களுக்கு வேண்டிய பொருள்களை இந்தியாவிலிருந்து வாங்கிக் கொண்டு செல்வார்களென்பதும் மொகலாய சக்ரவர்த்திக்குத் தெரியும். அவர் எதிர்பார்த்த படியே நடந்தது. இந்தப் பணத்தைக் கொண்டு, அவர்கள், வாசனை வகைகள், தங்கள் அரச குடும்பத்திற்கு வேண்டிய ஜவுளி தினுசுகள், காற்சட்டைக்கும் கைச் சட்டைக்கும் உபயோகப்படக் கூடிய பட்டுத்துணி வகைகள், அரண்மனையிலுள்ள ஸ்திரீ ஜனங்களுக்கு உபயோகப் படக் கூடிய மாதிரியான பல துணி வகைகள் முதலியவைகளை வாங்கினார்கள். இன்னும், ஏற்றுமதித் தீர்வையில்லாமல் எடுத்துக் கொண்டு செல்லக் கூடிய அநேக சாமான்களையும் எடுத்துக்கொண்டு போனார்கள்.

ஆனால் இவர்களுக்கு இவ்வளவு உபகாரத்தை ஏன் செய்தேன் என்று நான் பின்னர் வருந்தினேன். எதியோப்பியாவிலுள்ள ஒரு மசூதியானது, போர்த்துகேசியருடைய ஆட்சி காலத்திலிருந்து பாழாகிக் கிடக்கிறதென்றும், தமது அரசரைக் கொண்டு அதனைப் பழுது பார்க்கச் செய்வதாகவும் அந்தத் தூதர்கள் கூறினார்கள். அதைக் கேட்டு அவுரங்கஜீப், பழுதுக்கென்று இரண்டாயிரம் ரூபாய் கொடுத்தார். மற்றும், எதியோப்பிய மன்னருக்கு குரானையும், இஸ்லாமிய மதத்தை ஆதரித்து எழுதப் பட்டுள்ள எட்டு நூல்களையும் தங்கள் அரசருக்கு அனுப்புமாறு இவர்கள் மொகலாய சக்ரவர்த்தியைக் கேட்டார்கள். ஒரு கிறிஸ்தவ மன்னரின் சார்பாக வந்திருக்கும் ஒரு கிறிஸ்தவ தூதர் இங்ஙனம் கேட்பது எனக்கு இழிவாகவே பட்டது.'

பெர்னியருடைய இந்தக் குறிப்புகளினால், எதியோப்பியாவுக்கும் இந்தியாவுக்கும் எத்தகைய தொடர்பு இருந்ததென்பது நன்றாக புலப்படுகிறதல்லவா? இந்தியாவிலிருந்து பல அறிஞர்களும் தொழிலாளர்களும் எதியோப்பியாவுக்கு அநேக நூற்றாண்டுகளுக்கு முன்னரேயே சென்றிருக்கிறார்கள் என்பதற்கும் ஆதாரங்கள் இருக்கின்றன. இரண்டு நாடுகளுக்கும் வியாபாரப் போக்குவரவு இருந்தது. அபிசி

னியாவின் தலைநகராக ஒரு காலத்தில் இருந்த-பிரசித்தி பெற்று விளங்கிய கோண்டார் (Gondar) என்னும்ஊரில் அநேக இந்திய வியாபாரிகள் வசித்திருந்தார்கள் என்று தெரிகிறது. இந்த ஊரில் 16 வது நூற்றாண்டில் போர்த்துகேசியர் ஒரு கோட்டை கட்டினார்கள். அதில் பல இந்தியத் தொழிலாளர்கள் கலந்து வேலை செய்திருக்கிறார்கள். இந்தக் கோட்டை, இப்பொழுது கூட அதிகமாகச் சிதில மடையாதபடி பலமாக இருப்பதற்குக் காரணம் இந்த இந்தியத் தொழிலாளர்களின் திறமையே என்று சொல்லப்படுகிறது.

இங்ஙனம் சரித்திர சம்பந்தம் பெற்றுள்ள இந்த இரண்டு நாடுகளும் இப்பொழுது ஒன்றுக்கொன்று அநுதாபஞ் செலுத்திக் கொள்வதில் விநோதம் ஒன்றுமில்லையே. எதியோப்பியா மறுபடியும் சுதந்திரம் அடையும் நாள் எந்நாள்? இந்தியா சுதந்திரம் பெற்ற பிற்பாடுதானா?



இதுதான் கோண்டார் கோட்டை. இதன் சுவர்களை இப்பொழுது தட்டிப் பார்த்தால் வெண்கலம் போல் ஓசைப்படுகிறது. எவ்வளவு கெட்டியான செங்கற்களாக இருக்கவேண்டும் பாருங்கள். இந்தக்கோட்டை கட்டுவதில் நமது மூதாதையர்கள் அதிகமான பங்கெடுத்துக்கொண்டார்கள் என்கிறபோது, நமக்கு ஒரு பெருமை ஏற்படுகிற தல்லவா?

யோசனை கூறுங்கள்—கொஞ்சம்—

—பொ. திரிகூட சுந்தரம் பிள்ளை
M. A., B. L.,

எங்கள் ஊரில் ஒரு குடும்பம். அந்தக் குடும்பத்தைப் போல் ஐஸ்வர்யம் படைத்திருந்த குடும்பம் வேறு எதுவும் எங்கள் ஊரில் கிடையாது. ஆனால் இப்பொழுது அதைப்போல் ஏழையாயுள்ள குடும்பமும் வேறு கிடையாது. இந்த வறுமை நிலைமை ஏற்பட்டது எப்படி என்பதைக் குறித்து நான் எழுதினால் 'ஜோதி' நண்பர்கள் ஆச்சர்யப் படுவார்கள். அநியாயம், அநியாயம் என்று கூறாமல் இருக்கமுடியாது. ஆனால் அந்தக் கதையை இப்பொழுது நான் எழுத விரும்பவில்லை. இப்பொழுது நான் அந்தக் குடும்பத்தில் கண்ட ஒரு முக்யமான பிரச்னையைக்கூறி உங்களிடம் யோசனை கேட்கவே விரும்புகிறேன்.

அந்தக் குடும்பம் தரித்திர நிலையில் தளர்ந்து நிற்கிறது என்பது மட்டுமன்று; அது ஒரு பெரிய குடும்பமுமாகும். தாயும் மக்களுமாகப் பதினொரு பேருக்குக் குறைவில்லை. மக்கள் சிறியவர் பெரியவர் பத்து பேரும் சதாகாலமும் உழைக்கிறார்கள். ஒரு நிமிஷமும் சோம்பியிருப்பதில்லை. இரவு பகலாய் வேலை செய்கிறார்கள். அவர்களுடைய எஜமானர்கள் அவர்களைச் சாமர்த்திய சாலிகள் என்றும் கூறுகிறார்கள். ஆயினும் அவர்கள் வாழ்விற்குப் போதுமான பணம் கிடைப்பதில்லை. அவர்கள் மனித வாழ்வைக் கனவிலுங்கூடக் கருதுவதில்லை. மிருக வாழ்வு கிடைத்தால் போதும். அவர்கட்குத் திருப்திதான். அவர்கள் பத்துப்பேர் உழைத்தாலும் ஆறு ஏழு பேருக்குப் போதுமான உணவே—அதற்குப் போதுமான பணமே கிடைக்கும்.

அதைக் கொண்டுபோய் அன்னையிடம் கொடுப்பார்கள். அவள் மனம் எப்படி இருக்கும்? தாராளமாய் தான தருமம் செய்து கீர்த்தியுடன் வாழ்ந்த அந்தக் குடும்பத்தில் ஆகாரம் கூடப்போதுமான அளவு கிடைக்கவில்லையே. அவர்கள் கொடுப்பதைக் கொண்டு சமையல் செய்வாள். சமையல் முடிந்ததும் மக்களைச் சாப்பிடக் கூப்பிடுவாள். அவர்கள் சாப்பிடுவதற்காக இலை விரித்து உட்காருவார்கள். அதற்குள் விருந்தாளி ஒருவர் வருவார். தாங்கள் பத்துப்பேர்: அந்தப் பத்துப் பேர்க்கும்போதுமான சாதம் சமைக்கப்படவில்லை. ஏதோ உள்ளதை நிரவி அரை வயிறு உண்டு பிறகு ஜலங்கொண்டு நிரப்பிவிட எண்ணி இலை விரித்திருக்கிறார்கள். இந்த நிலைமையில் விருந்து அவசியமா?

ஆனால் விருந்தோம்பல் அந்தக் குடும்பத்தின் குலதர்மம் அல்லவா? கஷ்ட காலம், வறுமையில் வாடும் சமயம் என்று குல தர்மத்தைக் கைவிடமுடியுமா? அதனால் வந்த விருந்தாளியைச் சந்தோஷமாய் வரவேற்று உட்கார வைத்து அவர்க்கும் இலை விரிக்கிறார்கள்.

ஆனால் அதற்குள் மற்றொரு விருந்தாளி. ஒரு விருந்தாளி வந்ததே கஷ்டம். மற்றொரு விருந்தாளி வந்துவிட்டாரே. என் செய்வர்? ஒரு விருந்துக்கு உபசாரம் செய்து வழியனுப்பியதும் மறு விருந்து எப்பொழுது வரும் என்று எதிர்நோக்கி நிற்பது அந்தக் குடும்பத்தின் மூதாதையர் வழக்கந்தான். ஆனால் முதல் விருந்துக்கே போதிய உணவு அளிக்க முடியாத நிலைமை; அந்த விருந்தும்

இன்னும் உணவு உண்ணக்கூட ஆரம்பிக்க வில்லை. அதற்குள் மறு விருந்து என்றால் என் செய்வது? அனால் வந்த விருந்தை வேண்டாம் என்று சொல்லாது அவரையும் வரவேற்று உபசரிக்கிறார்கள். இலை விரித்து விட்டார்கள். ஜலம் தெளிக்க ஆரம்பிக்கிறார்கள்.

அனால் இதென்ன? மறுபடியும் விருந்தா? ஆம், விருந்தாளிதான். இப்பொழுது வீட்டிலுள்ள தாயும் மக்களும் மட்டுமல்ல; முன்னால் வந்த இரண்டு விருந்தாளிகளுங்கூட யோசிக்கிறார்கள். ஆனால் யோசித்துப்பயனென்ன? 'நாம் அழைக்க வில்லை; விருந்து தானாக வந்து விட்டது கடவுள் அருள்தான்' என்று எண்ணி அந்த மூன்றாவது விருந்தாளியையும் உட்கார வைத்து இலை விரிக்கிறார்கள்

அனால் ஐயோ, இதென்ன மறுபடியும் விருந்தாளியா? இனித் தாங்க முடியாது. கடவுள் என்ன நம்மைச் சோதிக்கிறாரா? என்ன சோதனையானாலும் அதற்கு உட்பட வேண்டியது தானே. வேண்டாம் என்று விலக்க முடியுமா? யோசித்துப் பயனில்லை என்று நினைந்து விருந்தாளியை வரவேற்கவே தயாராகிறார்கள்.

ஆனால் வரவேற்று முடியவில்லை. அதற்குள் அதோ வருவது யார்? வாசற்படியில் நிற்பவர் யார்? விருந்தாளிதான். சந்தேகம் என்ன? ஆனால் மக்களில் சிலர் முணு முணுக்க ஆரம்பிக்கிறார்கள். முன்னால் வந்த விருந்தாளிகளிலும் ஒருவரிருவர் அதில் சேர்ந்து கொள்கிறார்கள். ஆனால் மற்றவர்களோ 'ஆம், கஷ்டந்தான்; இப்படி விருந்து வந்தால் தாங்க முடியாது தான். ஆனால் ஆண்டவன் தானே அனுப்புகிறான். அனுப்புகிறவன் அளிக்கவுஞ் செய்வான் அல்லவா' என்று கேட்கிறார்கள். இதை எண்ணி எல்லோரும் மனதில் சமாதானம் அடைகிறார்கள். 'விருந்து அனுப்புவதைக் காண்கிறோம், ஆனால் சாதம் அளிக்கக் காணோமே, பானையில் சாதம் பெருகக் காணோமே' என்று அவர்கள் சிந்திக்க வில்லை. சிந்தியாமல் தங்கள் சித்தாந்தத்தில் திருப்தியுற்று வாசலில் போய் விருந்தாளியை வரவேற்று அழைத்து வருகிறார்கள்.

அவர்கள் மறுபடியும் இலை முன் உட்கார்ந்து தீரவில்லை. அதற்குள் மறுபடியும் ஒரு விருந்தாளி. இப்படி விருந்துக்கு மேல் விருந்து வந்து கொண்டே இருந்தால் சமைத்த சாதத்தில் நமக்கு ஏதேனும் கிடைக்குமோ என்று கையைப் பிசைகிறார்கள். ஆனால் இதைச் சமாளிக்கும் வழி தெரியவில்லை; மயங்கி நிற்கிறார்கள்.

விருந்தோம்பும் குலாசாரம் ஒரு பக்கம். கடவுள் ஆணை வழி நிற்பது கடமை என்னும் மதபோதனை மற்றொரு பக்கம். விருந்தோம்பல் போதும் என்று அறிஞர்கள் பிரசங்க மாரி பொழிகிறார்கள். அவனன்றி ஓரணுவும் அசையாது என்று மதாசாரியர்கள், வேதாந்த சித்தாந்த பண்டிதர்கள் தினந்தோறும் முழங்குகிறார்கள். இந்த இரண்டையும் அந்தக் குடும்பத்தினர் அலட்சியம் செய்ய தைரியம் வருமோ?

அதனால் கடைசியாக ஒன்றும் தோன்றாமல் மனம் சோர்ந்து வருகின்ற விருந்தெல்லாம் வரட்டும்என்று கையைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்து விடுகிறார்கள். அன்னை முகத்தில் அருளில்லை. மக்கள் கண்களில் தெளிவில்லை. இந்த விருந்து வெள்ளத்தில் நீந்திக் கரை ஏறுவது உண்டோ?

இந்த நிலைமையிலுள்ள குடும்பத்திற்கு 'ஜோதி' நண்பர்கள் ஏதேனும் விமோசன மார்க்கத்திற்காக யோசனை கூற மாட்டார்களா?

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு ஒரு பரிகாரம்

—பி. எஸ். ஜேம்ஸ்

பொதுவாக உலகத்திலும் சிறப்பாக இந்தியாவிலும் இப்பொழுது ஏற்பட்டிருக்கிற துன்பங்கள், நெருக்கடிகள் முதலியவற்றிற் கெல்லாம் காரணம், பொருளாதார சம்பந்தப் பட்டதே யென்பதை நியாய புத்தியுள்ள எல்லாரும் அங்கீகரிக்க வேண்டும். இந்தப் பொருளாதாரக் குழப்பத்தை நாம் ஒரே ஒரு வாக்கியத்தில் அடக்கிச் சொல்லலாம். அதாவது செல்வத்தின் சீரழிவு. செல்வம் என்ற பதத்திற்குப் பணம் என்பது மட்டும் பொருளல்ல. ஒரு தேசத்திலிருந்து உற்பத்தியாகும் மூலப் பொருள்கள், உணவுப் பொருள்கள் முதலியவைகளும், செல்வம் என்று தான் அழைக்கப் பட வேண்டும். இந்தச் செல்வத்தை ஒழுங்கான முறையில் உற்பத்தி செய்வதற்கும், ஜனங்களிடையே விநியோகிப்பதற்கும், தொழிலாளர்களும் அவர்களுடைய உழைப்பும் எவ்வளவு அவசியமாயிருந்த போதிலும், அடிப்படையாயுள்ள மூலப் பொருள்களும் உணவுப் பொருள்களும் இல்லாமற் போனால் இவை யொன்றும் பயன்படா. இந்த மாதிரியான (மூலப் பொருள்களும் உணவுப் பொருள்களும்) செல்வம் உலகத்தில் ஏராளமாக இருக்கிறது. ஏன்? இப்பொழுதை விட இதற்கு முன் இவ்வளவு செல்வம் குவிந்திருந்தது கிடையாது. இப்படியிருந்தும் ஏன் உலக மெங்கணும் ஒரு பொருளாதார நெருக்கடி ஏற்பட்டிருக்கிறது? உற்பத்தியாகும் பொருள்களை ஒழுங்கான முறையில் சேமித்து வைக்கவும், அப்படி சேமித்து வைத்த பொருளை ஒழுங்கான முறையில் விநியோகிக்கவும் இப்பொழுது நடைமுறையில் இருக்கும் ஏற்பாடுகள் சரியானபடியில்லை என்று தான் சொல்ல வேண்டும். தவிர, ஒரு திட்டம் போட்டுக் கொண்டு பொருள்களை உற்பத்தி செய்யாமல் ஏதோ மானாவாரியாகத் தான் இப்பொழுது பொருளுற்பத்தி நடைபெறுகிறது.

உலகத்தின் பல பாகங்களில் ஜனங்கள் பசியால் பாதித்து நிற்கிறார்கள். ஆனால், கானடாவில் கோதுமையும், ப்ரேஜீலில் காபி கொட்டையும், (அதிகமாக உற்பத்தியாகி விட்டன வென்பதற்காக) அழிக்கப் படுகின்றன. தற்கால வியாபார முறைக்கும் பொருளாதார முறைக்கும் இதை விட பழிப்புச் சொல் வேறு தேவையில்லையல்லவா? முதலாளித்துவம் ஒழிய வேண்டுமென்பதற்கு பொதுவுடைமை வாதிகள் இந்த உதாரணங்களை எடுத்துக் காட்டுகிறார்கள்? தங்களுடைய கொள்கைகளின் நியாயத்தை வலியுறுத்திப் பேசுகிறார்கள்; முதலாளித்துவ முறை ஒழிந்தால், மற்ற சிக்கல்களெல்லாம் தாமே அறுபட்டுப் போகும் என்று சொல்கிறார்கள்.

பொருளாதார நெருக்கடி தீர்வதற்கு, பொருளின் உற்பத்தி, சேமிப்பு, விநியோகம் ஆகிய மூன்றும் ஒழுங்கான முறையில் அமைய வேண்டும். இப்பொழுது பாங்கிகளின் இரும்புப் பெட்டகங்களிலே

குவிந்து கிடக்கும் நாணயங்களும், மற்ற கடன் பத்திரங்களும், உண்மைச் செல்வமாக மாற்றப் படாத வரை பயனற்றவைதான். மேலே சொன்ன செல்வமானது வற்றி விட்டாலும், அல்லது உற்பத்தியாகாமல் போனாலும் பாங்கிகளிலிருக்கிற இந்தப் பொருள் எல்லாம் வீண்தான். இந்தப் பாங்கிப் பெட்டகங்களில் உண்மைச் செல்வம் குவிக்கப் பட்டு ஜனங்களுக்குச் சரியான முறையில் விநியோகிக்கப் பட்டால் எவ்வளவு நன்மை உண்டாகும் என்பதைச் சற்று யோசித்துப் பாருங்கள். இந்த யோசனை பலருக்குப் புதுமையாகத் தோன்றலாம். பாங்கிகளை, தானிய விற்பனைக் கடைகளாக்க முடியுமாவென்று சிலர் கேட்கலாம். அப்படியெல்லாம் ஒன்றுமில்லை.

இந்தியாவில் இதை எப்படி நடைமுறையில் கொணரலாம் என்பதைச் சிறிது ஆராய்வோம். கூட்டுறவு பாங்கிகளும், சில அடமான பாங்குகளும், மேலெழுந்தவாரியான நன்மைகளையே செய்ய முடியும். இவைகளால் அடிப்படையான குறைகள் நீங்க மாட்டா.

உணவுப் பொருள்களையும் விவசாயப் பொருள்களையும் சேமித்து வைக்கக்கூடிய பாங்கிகள், இந்தியாவின்பல பாகங்களிலும் ஏற்படுத்தப் பெற வேண்டும். விவசாயப் பொருள்களின் கிடங்குமாதிரி இந்தப் பாங்கிகள் இருக்கும். இந்தப் பொருள்களை விற்பனை செய்யவும் மற்றபடி விநியோகம் செய்யவும் இந்தப் பாங்கிகள் ஏற்பாடு செய்ய வேண்டும். பதார்த்தங்கள் கெடாதபடி பாது காக்கக் கூடிய வசதிகளும், பொருள்களை ஏற்றுமதி செய்யக் கூடிய அநுகூலங்களும் இந்தப் பாங்கிகளுக்கு இருக்க வேண்டும். இந்தப் பொருள் ஏற்றுமதி விஷயத்தில் ரெயில்வே கம்பெனிகளின் ஒத்துழைப்பு வேண்டும். விவசாய பரிசோதனை சபை (Imperial Council of Agricultural Research) யினரால் நிர்ணயிக்கப்படும் ஒரு திட்டப்படி, ரிசர்வ் பாங்கியின் மேற்பார்வையில் இந்தப் பாங்கிகள் நடைபெற வேண்டும். இந்த ஒவ்வொரு விவசாய பாங்கிக்கும் ஒரு விவசாய நிபுணர் இருப்பார். இவர், விவசாயிகளுக்கு, தக்க ஆலோசனைகள் கூறிக்கொண்டிருப்பார். இந்தப் பாங்கிகளிலே போட்டு வைத்திருக்கும் விவசாயப் பொருள்களின் மீது ஜாமீனாக இந்தப் பாங்கிகள் ஒரு தொகையை விவசாயிகளுக்குக் கடனாகக் கொடுத்து, நல்ல பலன் தரக்கூடிய விதைகளை விதைக்கச் சொல்லியும், நவீன விவசாயக் கருவிகளை வாங்கச் சொல்லியும் ஏற்பாடு செய்யலாம். எந்தெந்த காலத்தில் என்னென்ன பொருள்களை உற்பத்தி செய்தால் நலமாயிருக்குமென்பதை இவர்கள் விவசாயிகளுக்கு எடுத்துச் சொல்லலாம். இந்த மாதிரியான முறைகளினால், நாட்டில் பொருள்கள் சரியான முறையில் விநியோகிக்கப் படுவதோடு கூட, விவசாயப் பொருள்களின் விலை ஏற்ற இறக்கத்தினால் விவசாயிகள் பாதிக்கப்படவும் மாட்டார்கள். பாங்கிகளிலிருந்து வெளியேறும் பணம் தாராளமாகப் புழக்கத்தில் இருக்கும். வேலையில்லாத் திண்டாட்டம் குறையும். பஞ்சங்களும் அதிகமாக வராது. பொருள்களை உற்பத்தி செய்கிற சக்தியும் வாங்குகிற சக்தியும் விவசாயிகளுக்கு அதிகப்படுவதன் மூலம், தேசத்தில் கைத்தொழில்களும் அதிக அபிவிருத்தியடையும். ஜனங்களுக்கு புஷ்டியான ஆகாரங்கள் கிடைக்குமாதலால், தேகாரோக்கியத்தோடு அவர்கள் சுக ஜீவனம் நடத்துவார்கள்.

ஸ்ரீ சாரதாமணி தேவி

—தனலட்சுமி முத்தையா

பிறப்புகள் எல்லாவற்றிலும் மனிதப் பிறவியே உயர்ந்தது பிறப்பு இன்பமோ துன்பமோ என்பதைப்பற்றி நாம் கவலைப்பட வேண்டாம். இவ்வுலகத்தில் பிறவாதார் யார்? பிறப்பை எடுத்தல்லவோ உயர்ந்த நிலையை அடையவேண்டும். அவ்வகை யடைந்தவர்களை யன்றோ உலகம் போற்றுகிறது. உயர் நிலை அடைவதற்குப் பெண் என்றும் ஆண் என்றும் வித்தியாசம் கிடையாது. எல்லாப் பிறப்பும் ஆண் பெண் வடிவமாக அல்லவா காட்சி அளிக்கிறது. தாயின் வயிற்றில் உறையாதார் யாவர்?

உலகொளியாய், கடவுள் நெறியோம்பி, கடவுள் நிலை பெற்று பெண் உலகத்திற்குப் பெருமையும் மேன்மையும் கொண்டுவந்த பெண்மணிகள் பலர் உளர். அவர்களில் ஒருவராக விளங்கியவர், ஸ்ரீ சாரதாமணி தேவியார். உலகம் போற்றும் உத்தமர் ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் தேவியாராவர் இவர்.

இவ்வுத்தம மாது ஏழைக் குடும்பத்தில் 1853-ஆம் வருஷம் டிசம்பர் மாதம் 22-ஆம் தேதி கல்கத்தாவிற்குச் சமீபத்திலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தார். தாய் தந்தையர்கள் ஏழையர்களாக இருந்தாலும் தெய்வபக்தி உடையவர்களாக இருந்தார்கள்.

விதியின் வலிமையை உணராதார் யார்? அம்மையாருக்கு 5-வயதாயிற்று. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் பெற்றோர்கள், தம் மகன் காளி பக்தியில் ஆழ்ந்து உலகத்தைப் பொருட் படுத்தாது பித்தன்போல் திரிவதைக்கண்டு, மனக்கஷ்டம் அடைந்து, ஒரு வேளை கல்யாணம் பண்ணிவிட்டால் நல்வழிப் படுவான் என்று, தகுதியுள்ள ஒரு பெண்ணை ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு மனைவியாகத் தேடலானார்கள். மனிதர்கள் நினைப்பதுபோல் உலகத்தில் காரியங்கள் சித்தி பெறுவதில்லை. இதனால் தம் பெற்றோர்கள் மனக்கஷ்டம் அடைந்திருப்பதை ஸ்ரீ ராமகிருஷ்ணர் கண்டார். உடனே தம் தாயிடம் சென்று விதி வசத்தால் கல்கத்தா சாரதாமணியே தனக்கு மனைவியாளாகப் போவதாகவும் அதற்காக அவர் பெற்றோரிடம் தூது அனுப்பினால் மணம் சீக்கிரம் முடிவடையும் என்றும் கூறினார். அவ்விதமே இருவருக்கும் மணம் முடிவுற்றது.

காளி பக்தியில் மூழ்கி இருந்த இராம கிருஷ்ணருக்கு கல்யாணமேன் என்று கேட்கலாம். உண்மை வேதாந்தம், பெண்ணை வெறுக்குமாறு உரைக்கவில்லை. பெண்ணிடத்திலுள்ள அன்பும், கடவுள் தன்மையும் விளங்கப் பெறுவோர் மற்ற இடங்களில் கடவுளைக் காணார். 'அறம் எனப்பட்டதே இல்வாழ்க்கை' என்றும், 'இல்லற மல்லது நல்லறமன்று' என்றும் பெரியோர்கள் சொல்லியிருப்பது பொய்யல்ல.

சிறு வயதிலேயே சாரதா மணி கோயிலுக்குச் சென்று ஆழ்ந்த பக்தியோடு கடவுளை வணங்குவாராம். அம்மையாருக்கு 13ஆம் வயது உற்ற போது ஸ்ரீ ராம கிருஷ்ணர், அம்மையாருடன் இல் வாழ்க்கை நடாத்த கல்கத்தாவிலிருந்து தமது கிராமம் அடைந்தார். இவ் வில்லற வாழ்க்கை சில மாதங்களே நடந்தது.

ஐந்து வருஷங்கள் கழிந்தன. சாரதா மணிக்குக் கணவர் பேரில்

அவா மேலிடலாயிற்று. மதி நிறைந்த மார்கழித் திங்களில் மாதர்கள் அனைவரும் கங்கையில் மூழ்குவது வழக்கம். அக் காரணத்தைக் கொண்டு அம்மையார் கல்கத்தாவிற்குப் போக பெற்றோர்களிடம் விடை கேட்டனர். அவரின் உள்ளுணர்வைக் குறிப்பால் உணர்ந்த பெற்றோர்கள், பிரயாணத்திற்கு வேண்டியனவற்றைச் சித்தம் செய்து புறப்படலாயினர். வழியில் ஒரு விநோத சம்பவம் நடைபெற்றது. அக்காலத்தில் ரயில் வண்டி கிடையாது. பல்லக்கு மீது செல்ல வேண்டும்; இல்லா விட்டால் கால் நடையாகச் செல்ல வேண்டும். அதிக தூரம் நடந்த களைப்பால் அம்மையாருக்கு ஜுரம் வந்தது. இதனால் இவர் தமது கணவரை மறுபடியும் பார்ப்போமா என்று மனம் ஏங்கினர். உணர்வு அடங்கி நித்திரை வரும் சமயத்தில் அம்மையார் ஓர் கனவு கண்டார். கனவில் இள வயதும் பிரகாசமுமான முகம் உடைய பெண் ஒருத்தி தன்னிடம் வந்து தன்னுடலைத் தடவிக் கொடுப்பது போல் கண்டார். அச் சிறு பெண், தெய்வ கன்னிகை போல் தோன்றிற்று. அச்சிறுமி, அம்மையாரைப் பார்த்து 'நீ கவலைப்படாதே. ஸ்ரீ ராம கிருஷ்ணரை உனக்காகவே தக்ஷிணேசுவரத்தில் தங்க வைத்துள்ளேன்!' என்று கூறி மறைந்து விட்டாள். அம்மையார் விழித்ததும் ஜுரம் காணவில்லை. உடனே துரிதமாகப் புறப்பட்டு கணவரது ஊரைச் சேர்ந்து இன்புற்றார்.

இவர் வாழ்க்கையில் நடந்த இரண்டு சம்பவங்களைக் குறிப்பிட நினைக்கிறேன். ஒன்று, ஒரு சமயம் மார்வாடி வியாபாரி ஒருவர், ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் வைத்த பக்தியால் பத்தாயிரம் ரூபாய் தக்ஷிணையாக ஏற்றுக் கொள்ளும்படி ஸ்ரீ ராமகிருஷ்ணரை வேண்டினர். ஸ்ரீ பரஹம்ஸர், கனவிலும் பணத்தை நினைப்பதில்லை. அவர் இப் பதினாயிரம் ரூபாயை எப்படி வாங்குவார்? அதனால் தாம் எவ்வளவு மறுத்தும் அந்த மார்வாடி கனவான் விடாததால் பரஹமஸர், தாம் அதை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும், வேண்டுமானால் தமது மனையாள் இஷ்டப்பட்டால் அவளிடம் கொடுத்துச் செல்லலாமென்றும் கூறிவிட்டார். அம் மார்வாடி கனவான், ஸ்ரீ அம்மையாரை அப்பணத்தை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டினர். கண்கள் இரண்டும் ஒரு பொருளையே நோக்குவது போல் காதன் மனையாளும் காதலனும் வாழ்க்கையை ஒரே மாதிரியாக நடத்த வேண்டு மல்லவா? இல்லாவிட்டால் இல்லறம் நல்லற மாகாதே. 'இல்லற மென்பது ஆண் பெண் என்னும் ஈருடலை நடாத்தும் ஓர் உயிர்'. ஆகையால் தம் கணவர் வெறுத்ததை அம்மையார் வாங்குவாரோ? ஸ்ரீ பரமஹம்ஸரின் பக்திக்குக் கேடு சூழ நினைப்பாரோ? கணவன் ஏற்றாலென்ன? தான் ஏற்றாலென்ன? இரண்டும் ஒன்றே. ஆகையால் அப்பொருளைச் சிறிதும் ஏற்க மாட்டேன் என்று தள்ளி விட்டார். இவரல்லவா உத்தம பத்தினி!

இரண்டாவது, ஸ்ரீ பரமஹம்ஸரும் அம்மையாரும் ஒரே அறையில் படுப்பது வழக்கம். ஓர் நாள் ஸ்ரீ பரமஹம்ஸருக்கு, தேவிபூஜை செய்ய எண்ணம் உண்டாயிற்று. அதை உணர்ந்த ஸ்ரீ சாரதாமணியும் அதற்கு இசைந்தார். பூஜைக்கு வேண்டிய சாமான்கள் யாவும் தயாரிக்கப்பட்டன. பூஜையைப் படுக்கையறையிலேயே செய்வதென்று ஸ்ரீ பரமஹம்ஸர் தீர்மானித்தார். பீடம் ஒன்று அம்பிகைக்கென அமைக்கப்பட்டது. பூஜை ஆரம்பிக்

குத்தருவாயில் ஸ்ரீ ராமகிருஷ்ணர், ஸ்ரீ சாரதாமணியை அப் பீடத்தில் உட்காரும்படி சைகை செய்தனர். கணவர் சொற்படி நடக்கும் அம்மையார் ஆழ்ந்த பக்தியில் இருந்தமையால் ஒன்றும் உணராது அப் பீடத்தில் உட்கார்ந்தார். ஸ்ரீ பரமஹம்சர் ஸ்ரீ தேவிக்கு பூஜை நைவேத்தியங்கள் ஆராதனை முதலியன செய்து யோகத்தில் ஆழ்ந்து விட்டார். அவ்விதமே அம்மையாரும் உணர்வற்று ஆழ்ந்த நிஷ்டையில் அமர்ந்திருந்தார். பொழுது விடியவும் இருவரும் எழுந்து ஸ்ரீ காளிதேவியின் பூஜையை வழக்கம்போல் புரிந்தனர். பெண்ணை காமப் பொருளாகக் கருதாமல் அவளைக் கடவுளாகவும் நம் பெரியோர்கள் கண்டனர். இதற்கு நம் பெரியோர்கள் நிலைமையே காரணம். நாம் பெண்மைக் குணத்தை வளர்க்க வேண்டும். 'அன்னை தயையும் அடியாள் பணியும் மலர்ப்பொன்னி னழகும் புவிப் பொறையும்—மந்திரி மதியும் வேசி துயிலும் இவை யுடையாள் பெண்' என்னும் ஆன்றோர் வாக்கை கவனிக்க. நாம் தமயந்தி, சந்திரமதி மரபினர் என்பதை உணர வேண்டும். இல்லற வாழ்க்கையிலுள்ள ஒவ்வொரு சகோதரியும் புத்திரப் பேற்றை விரும்புவது இயற்கையே.

'குழலினிது யாழினிது என்பர் தம் மக்கள் மழலைச் சொல் கேளாதவர்' என்றார் திருவள்ளுவனார். ஒரு வேளை ஸ்ரீ சாரதாமணி தேவிக்கும் இவ்வாசை இருக்குமென்று எண்ணினவராய் ஸ்ரீ பரம ஹம்சர் அவரை நோக்கி 'உனக்குப் பிள்ளைகள் இல்லாததால் கவலைப்படாதே. ஓரிரண்டு பிள்ளைகளைப் பெறுவதனால் என்ன பலன்? தாய் தந்தைகள் பிள்ளைகளைப் பெறுவதில் பெருமையில்லை. அவைகளை நல்ல வழியில் ஒழுங்கு முறையில் வளர்ப்பது பெருமை. உலகிலுள்ள எல்லா மக்களும் உன்னிடம் வந்து அம்மையே என்று அழைப்பர். அதுவல்லவா பாக்கியம்' என்று கூறினார். அவரது உட்பொருளை உணர்ந்த அம்மையாரும் மனக் கவலைப்படாது தம் கணவரோடு ஒருமனதுடனே வாழ்ந்து வந்தார்.

ஸ்ரீ பரமஹம்சருடன் சதாவாழ்ந்து வந்தமையால் அம்மையாரும் காளி பக்தியில் தலை சிறந்து பலருக்கும் நல் மொழிகள் கூறித் தம்மிடம் வந்த எல்லோரையும் ஒரு மனதுடன் பாவித்து அவரவர்க்கு அருள் மொழிகள் கூறி ஸ்ரீ பரமஹம்சரின் திருத்தொண்டில் அமர்ந்திருக்கும் நாள் தமது 67ஆம் வயதில் விண்ணுலகம் அடைந்தார்.

இவரது வாழ்க்கையைப் படிப்பதாலோ கேட்பதாலோ மட்டும் பலன் கிடையாது. பெரியோர்கள் காட்டிய வழியைப் பின்பற்றிச் செல்லுவதே நமது கடமை. அதுவே நமது லட்சியமாகும். ஸ்ரீ சாரதாமணி தேவியார் இன்றைக்கு இறந்து 18 வருஷங்களாகியும் அவரை இன்றும் நாம் புகழ்வது எதற்காக என்று சிறிது எண்ணிப் பார்ப்போமாக.

ஜனனீம் சாரதாம் தேவீம்

ராம கிருஷ்ண ஜகத்குரும்

பாத பத்மாம் தயோ: ஸ்ரித்வா

ப்ரணமாமி முஹுர் முஹு:

உலக மாதாவாகிய சாரதா தேவியினுடையவும் ஜகத் குருவாகிய ஸ்ரீ ராம கிருஷ்ண தேவருடையவும் பாத பத்மங்களை ஆசிரயித்து நான் மறுபடியும் மறுபடியும் நமஸ்கரிக்கிறேன்.

ஸர் பிரோஸிஷா மேர்வான்ஜி மேத்தா

ஜனனம்—1845 மரணம்—1915

—ஒரு காங்கிரஸ்வாதி

காங்கிரஸ் மகா சபையின் ஆரம்ப தசையில் அதற்கு ஒரு தூண் போல் இருந்து, தம்முடைய சேவையினால் மற்றவர்களையும் பொது ஜன சேவையில் ஈடுபடச் செய்த பெரியார்களுள் ஸர் பிரோஸிஷா மேத்தாவுக்கு ஒரு முக்கிய ஸ்தானம் உண்டு. நீண்ட காலம், தொடர்ந்து பொதுஜனசேவையில் ஈடு பட்டிருந்தவர்களில், தாதா பாய் நௌரோஜிக்கு அடுத்த படியான பெயர் மேத்தாவுக்கு உண்டு. சுமார் நாற்பது வருஷகாலம் சேவை செய்தார் என்று மட்டும் மேத்தா விஷயத்தில் சொல்ல முடியாது. அந்த நாற்பது வருஷ காலத்தில் அவருடைய சேவைகளின் தன்மைகளும் மகத்தானவை. ஸர் மேத்தா, வெளிப் பார்வைக்கு மிடுக்குள்ள தோரணையுடன் கூடியவர் என்று சொல்லும் படியாக நடந்து கொள்வார். ஆனால் அந்தத் தோற்றத்திற்குள்ளே, இளகிய நெஞ்சம், தேச மக்களின் க்ஷேமத்தைக் கோரி சதா துடித்துக் கொண்டிருந்தது. இந்தத் துடிப்பு ஒரு சிலருடைய செவிகளுக்கு மட்டுந் தான் கேட்டுக் கொண்டிருந்தது.

ஸர் மேத்தா பம்பாயில் 1845ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 4ந் தேதி ஜனனமானார். இவருடைய தகப்பனார் ஒரு பெரிய வியாபாரி. அந்தக் காலத்தில் மிகப் பிரபலமாக அந்நிய நாட்டு வியாபாரஞ் செய்து கொண்டிருந்த காமா கம்பெனியில் ஒரு பாகஸ்தர். இவர், வெறும் வியாபாரியாக மட்டுமில்லை. இலக்கியத்திலும் இவருக்குச் சுவை இருந்தது. அதனால் தம் மகனை, பாலியத்திலேயே வியாபாரத்தில் கொண்டு புகுத்தாமல், உயர்ந்த முறையில் கல்வி கற்பிக்க ஏற்பாடு செய்தார். 1861ம் வருஷம்—பதினாறாவது வயதில்—மெட்ரிகுலேஷன் பரீட்சையிலும், 1864ம் வருஷத்தில் பி. ஏ. பரீட்சையிலும், அதற்கு ஆறு மாதங்கழித்து எம். ஏ. பரீட்சையிலும் இவர் தேறினார். இவர் படித்தது பம்பாய் எல்பின்ஸ்டன் காலேஜில். அப்பொழுது மேற்படி காலேஜுக்குத் தலைவராயிருந்தவர் ஸர் அலெக்ஸாந்தர் கிராண்ட். இவர், அக்காலத்தில் மிகப் பிரசித்தி பெற்ற அறிஞர்களுள் ஒருவராகக் கருதப்பட்டார். கிராண்டின் கவனத்தை, மேத்தாவின் கூர்மையான அறிவு இழுத்தது. எனவே கிராண்ட், மேத்தாவின் முன்னேற்றத்துக்குப் பல வழிகளிலும் துணை செய்

தார். கிராண்டின் தூண்டுதல் பேரில் மேத்தா உபகாரச் சம்பளம் பெற்று இங்கிலாந்துக்குச் சென்று பாரிஸ்டர் பரீட்சைக்குப் படிக்கலானார். முதலில், மேத்தாவின் தகப்பனார், தம் மகனை இங்கிலாந்துக்கு அனுப்பச் சம்மதிக்கவில்லை. பின்னர் சம்மதித்தார். ஆனால் உபகாரச் சம்பளத் தொகையை ஏற்றுக் கொள்ளாமல் தம் சொந்தச் செலவிலேயே மகனை அனுப்பி வைத்தார்.

மூன்று வருஷ காலம் இங்கிலாந்திலே படித்து 1868ம் வருஷம் பாரிஸ்டர் பரீட்சையில் தேறிவிட்டு, அந்த வருஷத்திலேயே பம்பாய் வந்து சேர்ந்தார். இவர், என்று பம்பாயில் வந்திறங்கினாரோ, அதே தினத்தில் இவரால் குருவென மதிக்கப்பட்டு வந்த ஸர் அலெக்ஸாந்தர் கிராண்டுக்கு, பிரிவு உபசாரக் கூட்டம் நடைபெற ஏற்பாடாகி யிருந்தது. துறை முகத்தில் வந்திறங்கியதும் இந்தச் செய்தியைக் கேள்விப்பட்ட மேத்தா, வீட்டுக்குக் கூடச்செல்லாமல், நேரே கூட்டத்திற்குச் சென்றார். குருபக்தி இருந்தவாறென்னே!

மேத்தா இங்கிலாந்திலிருந்த காலத்தில், தாதாபாய் நௌரோஜி, உமேச சந்திர பானர்ஜி, மனமோகன கோஷ் முதலியவர்களுடைய அரிய நட்பைப் பெற்றார். பின்னிருவரும் இவருடைய ஒரு சாலை மாணாக்கர்களாக இருந்தார்கள். இந்த அனைவரும் சேர்ந்து, 'லண்டன் இலக்கியச் சங்கம்' என்ற தொரு சங்கத்தை ஸ்தாபித்தார்கள். இதுவே பிற்காலத்தில் 'கிழக்கிந்திய சங்கம்' என்று பிரபலமாக விளங்கி வருகிறது.

மேத்தாவுக்கு வக்கீல் தொழிலில் நிரம்பச் செல்வமும் புகழும் கிடைத்தன. இவருக்குச் சமதையாக வக்கீல் தொழிலில் சம்பாதித்தவர்கள் இந்தியாவிலேயே ஒரு சிலர் தான் என்று, பாலியத்திலேயே இவருக்குப் பெயர் கிடைத்துவிட்டது.

மேத்தாவின் வக்கீல் வாழ்க்கை என்றைய தினம் ஆரம்பமாயிற்றோ அன்றைய தினத்திலிருந்தே அவருடைய பொதுநல வாழ்க்கையும் தொடங்கியது என்று கூறலாம். 1869ம் வருஷம், தாதாபாய் நௌரோஜி, இங்கிலாந்திலிருந்து இந்தியாவுக்குத் திரும்பி வந்த சமயம், அவருக்கு ஒரு பண முடிப்பு அளிப்பதற்கு ஏற்பாடு செய்தவர் இவர் தான். 1872ம் வருஷம்—அதாவது இவருடைய இருபத்தேழாவது வயதில்—இவர் பம்பாய் நகர சபையில் ஓர் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். இவர் அங்கே ஓர் அலங்கார புருஷராக வீற்றிருக்கவில்லை. அங்கே நடைபெற்று வந்த ஊழல்களை யெல்லாம் வெளிக்குக் கொணர்ந்தார். நிர்வாகத்தில் ஒழுங்கும் கண்டிப்பும் இருக்கவேண்டுமென்பதை வலியுறுத்தினார். நகர சபைக் கூட்டங்களில் இவர் பேசுகிற போது, தயவு தாட்சண்யமின்றி, எதிர்க்கட்சியினர் எவரும் குறை காண முடியாதபடி அவ்வளவு கம்பீரமாகவும், ஆனால் எதிரிகளை நன்றாகத் தாக்குவதாகவும் இருக்கும். நகர சபை நிர்வாகத்தில் இவர் காட்டிய நுணுக்க ஆராய்ச்சியும், திறமையும், இவருக்கு, 'நகர சபையின் முடிசூடா மன்னன்' என்ற பெயரைக் கொடுத்தன. மூன்று முறை, இவர் பம்பாய் நகர சபையின் தலைவராகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

நகர சபையோடு, மேத்தாவின் பொது ஜன சேவை நின்றுவிடவில்லை. ஸ்ரீமான்கள் கே. டி. டிலாங், பத்ருத்தீன் தயாப்ஜி முதலியவர்களுடைய ஒத்துழைப்பின் பேரில், 'பம்பாய் மாகாணச் சங்கம்' என்றதொரு ஸ்தா

பனத்தை ஆரம்பித்தார். 1886ம் வருஷம் இவர் பம்பாய்ச் சட்டசபையில் ஓர் அங்கத்தினராக நியமனம் பெற்றார். இந்தக் காலத்தில், ஸ்தல ஸ்தாபனங்களுக்கு இன்னும் அதிகமான உரிமைகள் கொடுக்கப்பட வேண்டுமென்பதற்காக இவர் போராடியது, நல்ல பலனைக் கொடுத்தது. ஜனங்கள் இவரிடத்தில் மதிப்பு வைக்கத் தொடங்கினார்கள். 1892ம் வருஷம், புதிய அரசியல் சீர்திருத்தம் வழங்கப்பட்டு, சட்டசபைகளின் அந்தஸ்தும் உரிமையும் விசாலிக்கப் பட்டபோது, மேத்தா, பொது ஜனங்களால் தெரிந்தெடுக்கப்பட்ட ஒரு பிரதிநிதியாக, பம்பாய்ச் சட்ட சபையில் ஒரு ஸ்தானம் வகித்தார். சட்ட சபையில் இவர் பேசுகிறார் என்றால், அரசாங்க உத்தியோகஸ்தர்கள் செவி கொடுத்துக் கேட்பார்கள். ஆனால் உள்ளத்திலே நடுக்கமும் கொள்வார்கள். தமது நாட்டாருக்கு அரசாங்க உத்தியோக விஷயங்களில் பங்கு தர வேண்டுமென்பதற்காகத் தீவிரமாகப் போராடியவர்களுள் இவர் ஒருவர்.

1894-ம் வருஷம் இவர் இந்தியா சட்ட சபைக்கு அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். அந்தச் சபையில் இவருடைய பேச்சுக்களுக்கு அலாதி மதிப்பு இருந்தது. சபையில், இவர் ஒரு புதிய உணர்ச்சியை உண்டு பண்ணி விட்டார் என்று அரசாங்க உத்தியோகஸ்தர்கள் முணுமுணுக்க ஆரம்பித்தார்கள். ஆனால் மேத்தா இவைகளுக்கு அஞ்சுபவரா? எதிரிகள் வாதம் செய்தால் வாதிப்பார்; பரிகசித்தால் தாமும் பரிகசிப்பார். பேச்சிலே இவருக்கு மிஞ்சியவர் கிடையாது என்று அந்தக் காலத்தில் இவருக்குப் பெயர் உண்டு.

மேத்தா, பம்பாய் சர்வகலாசாலையிலும் ஓர் அங்கத்தினரா யிருந்தார். பம்பாய் மாகாணத்தில் கல்விச் சீர்திருத்தங்கள் ஏதேனும் ஏற்பட்டிருக்கின்றன வென்றால் அதற்கெல்லாம் காரணம் மேத்தாவும் ரானடேயும் என்றுதான் சொல்ல வேண்டும்.

காங்கிரஸ் மகா சபை 1885ம் வருஷம் ஆரம்பிக்கப் பட்டதிலிருந்து அதன் அங்கத்தினரா யிருந்து, அரசாங்கத்தாருடைய பரிகாசங்களுக்கிடையே, அதன் செல்வாக்கைவளர்த்தார். 1889ம் வருஷம் பம்பாய் காங்கிரஸ் கூடியபோது, அதன் வரவேற்புக் கமிட்டித் தலைவராக இருந்தார். 1890ம் வருஷம் கல்கத்தா காங்கிரஸின் போது அதன் தலைவரா யிருந்தார். 1904ம் வருஷம் காங்கிரஸ் மறுபடியும் பம்பாயில் கூடிய போது அதன் உபசரணைக் கூட்டத் தலைவரா யிருந்தார்.

இவை யெல்லாவற்றிற்கும் மேலாக, மேத்தா பல பொது நலச் சங்கங்களுக்குத் தலைவராகவும் ஸ்தாபகராகவும் இருந்து வேலை செய்தார். இவருடைய பொது நல சேவையைப் பாராட்டி அரசாங்கத்தாரும் பல பட்டங்களை இவருக்கு வழங்கினார்கள். 1906ம் வருஷம் (பின்னடி ஐந்தாவது ஜார்ஜ் என்று பட்டத்திற்கு வந்த) இளவரசரும் இளவரசியும் இந்தியாவுக்கு விஜயஞ் செய்தபோது, இளவரசி, தமது கையெழுத்துப் புத்தகத்தில் மேத்தாவின் கையெழுத்தை வாங்கிக் கொண்டார். இதனால், இவர், அரசாங்கத்தினராலும் மற்றவர்களாலும் எவ்வளவு தூரம் மதிக்கப் பட்டு வந்தார் என்பது நன்கு புலனாகும்.

இவ்வளவு அரிய சேவைகளைச் செய்து வந்த ஸர் பிரோஸிஷாமேத்தா, 1915ம் வருஷம் நவம்பர் மாதம் 5ம் தேதி உயிர் நீத்தார். அப்பொழுது இந்தியா முழுவதும் ஒரு குரலெடுத்து அழுதது என்று சொல்லலாம்.

அசோகன் சாஸனங்கள்

—"மௌத்கல்யன்"

ஸ்தம்ப சாஸனங்கள்

1

அரசாங்கத்தின் கொள்கைகள்

தேவப்ரிய பிரியதர்சி மகாராஜர் பின் வருமாறு தெரிவிக்கிறார்:— நான் ராஜ்யாபிஷேகம் செய்து கொண்ட இருபத்தாறுவது வருஷத்தில் இந்தத் தர்ம சாஸனத்தை எழுதுவித்தேன்:—

பௌத்த தர்மத்தின் மீது அதி தீவிரமான பற்றுதல் கொள்வதனுலும், ஆத்ம பரிசோதனையினுலும், பெரியோர்களுக்குக் கீழ்ப்படிவதனுலும், தீயனவற்றைக்கண்டு அஞ்சுவதினுலும், தீவிர முயற்சியாலும் அன்றி இகலோகமும் பரலோகமும் கிடைப்பது கடினம். ஆனுலும் என்னுடைய போதனையின் பயனுக, பௌத்த தர்மத்தில் ஒரு ஆவலும், தர்மத்தின் மீது ஒரு ஆசையும் (ஜனங்களுக்கு) வளர்ந்து வருகின்றன. இன்னும் வளரும் என்பதும் நிச்சயம்.

என்னுடைய காரியஸ்தர்கள், உயர்ந்தவர்களாயினுஞ் சரி, மத்திய அந்தஸ்திலிருப்பவர்களாயினுஞ் சரி, எல்லாரும் என்னுடைய போதனைகள்படி நடக்கிறார்கள். மற்றவர்களையும் நல்வழியில் நடக்கும்படி செய்விக்கிறார்கள். உறுதியான மனப் பான்மை இல்லாதவர்கள் சரியான வழியில் அழைத்துச் செல்லப்பட வேண்டுமல்லவா? எல்லைப்புறத்தைப் பாதுகாவல் செய்யும் உத்தியோகஸ்தர்களும் இதே மாதிரிதான் நடக்கிறார்கள். பௌத்த தர்மப்படியே ஆட்சி முறை நடைபெறும். அந்தத் தர்மப்படியே சட்ட திட்டங்களும் அமையும். அதன் மூலமாகவே சந்தோஷமும் ஏற்படும். தர்ம வழியே எல்லாருக்கும் பாதுகாப்பு ஏற்படும். இதுவே ஏற்பட்ட விதியாகும்.

2

அரசரே வழிகாட்டி

தேவப்ரியரான பிரியதர்சி மகாராஜர் பின் வருமாறு சொல்கிறார்:— 'பௌத்த தர்மம் மிகவும் சிரேஷ்டமானது.' ஆனுல் புத்த தர்மம் என்றுல் எங்கே யுள்ளது? குற்றங் கடிதல், நல்ல காரியங்களைச் செய்தல், தயை, விரிந்த மனப்பான்மை, சத்தியம், தூய்மை முதலியவைகளில்தான் பௌத்த தர்மம் அடங்கியிருக்கிறது.

ஜனங்களுக்கு நான் பலவகையிலும் ஞானக் கண் கொடுத்திருக்கிறேன். இரண்டு கால் பிராணிகளுக்கும், நாலு கால் பிராணிகளுக்கும், பட்சிகளுக்கும், நீர் வாழ்வனவற்றிற்கும் நான் பிராண பிட்சை கூட கொடுத்திருக்கிறேன். இன்னும் பல நல்ல காரியங்களை நான் செய்திருக்கிறேன்.

பௌத்த தர்மப் படி ஜனங்கள் நடந்து கொள்ள வேண்டுமென்பதற்காகவும் தர்மம் நீடுநிலைத்திருக்க வேண்டுமென்பதற்காகவும் நான் இந்தத் தர்ம சாஸனத்தை எழுதுவித்தேன். யாரொருவர், இந்தத் தர்ம மார்க்கத்தில் நடக்கிறார்களோ அவர்கள் நல்லதைச் செய்தவர்களாகிறார்கள்.

3

ஆத்ம பரிசோதனை

தேவப்ரிய பிரிய தர்சி மகாராஜர் பின் வருமாறு தெரிவிக்கிறார்:—

ஒவ்வொரு மனிதனும், தான் செய்த நல்ல காரியத்தைப்பற்றிச் சிந்திக்கிறான். பிறகு, 'இந்த நல்ல காரியத்தை நான் செய்தேன்' என்று சொல்லிக்கொள்கிறான். தான்செய்த கெட்ட காரியத்தைப் பற்றி அவன் சிந்திப்பதுமில்லை. 'இந்தக் கெட்ட காரியத்தை நான் செய்தேன்; இது தர்ம விரோதம்' என்று அவன் சொல்லிக் கொள்வதுமில்லை.

இந்த மாதிரி ஆத்ம பரிசோதனை செய்து கொள்வது கஷ்டந்தான். ஆனால் ஒவ்வொருவனும் இதைக் கவனிக்க வேண்டும். கொடுமை, கோபம், கர்வம், பொறாமை முதலியவைகளெல்லாம் தர்ம விரோதமென்று உணர்ந்து இந்தக் காரணங்களால், தர்ம மார்க்கத்தினின்று நான் நழுவி விடாமலிருக்கட்டும்' என்று உறுதி கொள்ள வேண்டும்.

இகலோகத்திலாகட்டும், மறுலோகத்திலாகட்டும் இந்த மாதிரி அநுஷ்டிப்பதனால் நன்மையே உண்டாகும் என்பதை ஒவ்வொரு மனிதனும் உணர வேண்டும்.

4

உத்தியோகஸ்தர்களுடைய அலுவல்கள்

தேவப்ரிய பிரியதர்சி மகாராஜா பின் வருமாறு கூறுகிறார்:—

நான் ராஜ்யாபிஷேகம் செய்து கொண்ட இருபத்தாறுவது வருஷத்தில் இந்தத்தர்ம சாஸனத்தை எழுதுவித்தேன்.

என்னுடைய உத்தியோகஸ்தர்கள் (ராஜுகர்கள்) நூறாயிரக் கணக்கான ஜனங்களின் மேற் பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் ஜனங்களைச் சன்மானிக்கவும் அவர்களுக்குத் தண்டனை விதிக்கவும் நான் சுதந்திரம் அளித்திருக்கிறேன். இவர்கள், தங்கள் கடமையை நம்பிக்கையுடனும் தைரியமாகவும் செய்வதற்கும், ஜனங்களுக்கும் தேசத்திற்கும், நன்மையைச் செய்ய வேண்டுமென்பதற்காகவும் நான் இந்த மாதிரியான சுதந்திரத்தை அளித்திருக்கிறேன்.

இவர்கள், தங்களுடைய கீழ் உத்தியோகஸ்தர்கள் மூலமாக ஜனங்களுடைய சுகதுக்கத்திற்குக் காரணங்களை அறிந்து ஜனங்களை தர்ம மார்க்கத்தில் நடக்குமாறு செய்து, அவர்கள் இகலோகத்திலும் பரலோகத்திலும் சுகமடையுமாறு செய்வார்கள்.

என்னுடைய (மேற்படி ராஜுகர்கள் என்ற) உத்தியோகஸ்தர்கள் எனக்குச் சேவை செய்ய வேண்டுமென்பதில் ஆவலுள்ளவர்களாயிருக்கிறார்கள். என்னுடைய ஏஜெண்டுகள் என் இஷ்டப்படியும் உத்திரவுப்படியும் நடப்பார்கள். இந்தக் கீழ் உத்தியோகஸ்தர்களும் அவ்வப்பொழுது ஜனங்களுடைய நன்மையை நாடி உபதேசம் செய்வார்கள். அப்பொழுது மேலுத்தியோகஸ்தர்களும் என் பிரீதியைச் சம்பாதிக்கமுயல்வார்கள்.

எப்படி ஒருவன், தன் குழந்தையை திறமையுள்ள ஒரு தாதியினிடத்தில் ஒப்படைத்து விட்டு, 'இந்தத் திறமையுள்ள தாதி, என் குழந்தையின் சந்தோஷத்தைப் பாது காத்துக் கொள்வாள்' என்று தன்னம்பிக்கையுடன் இருக்கிறானே, அது போலவே எனது உத்தியோகஸ்தர்களும், தேசத்தின் க்ஷேமத்திற்காகவும் சந்தோஷத்திற்காகவும் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். இவர்கள், அச்சமின்றி, நம்பிக்கையுடன், அமைதியாகத் தங்கள் கடமைகளைச் செய்வார்கள் என்ற நம்பிக்கையுடன் நியமிக்கப்பட் டிருக்கிறார்கள். இதனாலேயே, என்னுடைய இந்த உத்தியோகஸ்தர்கள், ஜனங்களுக்குச்

சன்மானம் அளிக்கவும், அவர்களுக்குத் தண்டனை விதிக்கவும் அதிகாரம் அளிக்கப் பட்டிருக்கிறார்கள்.

நீதி இலாகா நடைமுறையிலும், தண்டனைகள் விதிப்பதிலும் ஒருவித ஒழுங்கு இருக்க வேண்டுமென்பதற்காக, இந்த நாள் முதல் நான் கீழ்க் கண்ட விதியை ஏற்படுத்தியிருக்கிறேன். அதாவது, மரண தண்டனை விதிக்கப் பட்டு சிறையிலே இடப்பவர்களுக்கு மூன்று நாள் மன்னிப்புக் கொடுக்கப்பட வேண்டுமென்பது உத்திரவு.

மன்னிப்புப் பெறுகின்ற இந்த இடைக் காலத்தில், தண்டனை விதிக்கப் பட்ட மேற்படியார்களுடைய உறவினர்கள், அவர்களுடைய ஆத்மாக்கள் நற்கதியடையுமாறு, அவர்களைத் தியானிக்குமாறு சொல்வார்களாக. அல்லது தாங்களே தானஞ் செய்வார்களாக; அல்லது உபவாசமிருப்பார்களாக. என்னுடைய நோக்கம், தண்டிக்கப் பட்டவர்கள் கூட மறு உலகத்தையடைய வேண்டுமென்பதேயாகும்; ஜனங்களிடத்தில் நல்ல வழக்க பழக்கங்கள் படிய வேண்டுமென்பதே யாகும். இந்த நல்ல பழக்கங்களில், தன்னடக்கம், தானம் வழங்குதல் முதலியனவும் சேர்ந்தனவே.

5

ஜீவ ஹிம்சை

தேவப்ரியரான ப்ரியதர்சி மகாராஜர் பின் வருமாறு தெரிவிக்கிறார்:—

நான் ராஜ்யாபிஷேகம் செய்து கொண்ட 26 வருஷங்களுக்குப் பிறகு கீழ்க்கண்ட ஜந்துக்கள் கொலைக்குட் படக் கூடாதென்று தடுக்கப் பட்டிருக்கின்றன:—கிளிகள், பெரிய வாத்துக்கள், குள்ள வாத்துக்கள், நந்தி முகங்கள், கிலேதங்கள், வெளவால்கள், எறும்புகள், பெண் ஆமைகள், எலும்பில்லா மீன்கள், வேதவியாகங்கள், கங்காபு புடகங்கள், சங்கு மீன்கள், ஆற்றில் கிடக்கும் ஆமைகள், முள்ளம்பன்றிகள், அணில்கள், பாரசிங்க மான்கள், எருதுகள், குரங்குகள், காண்டா மிருகங்கள், மாடப் புறாக்கள், மணிப் புறாக்கள் முதலியவைகளும், உபயோகப்படாத அல்லது தின்னப் படாத மற்ற எல்லா நாற்கால் பிராணிகளும் கொலையினின்று தடுக்கப் பட்டிருக்கின்றன.

வெள்ளாடுகள், செம்மறியாடுகள், பெண் பன்றிகள் போன்ற பால் கொடுக்கும் பிராணிகளும் ஆறு மாத வயதையுடைய அவைகளின் குட்டிகளும், கொலையினின்றும் தடுக்கப் பட்டிருக்கின்றன.

சேவல்களை நலமடிக்கச் செய்தல் கூடாது.

உமியானது அதனுடன் கூடியிருக்கும் உயிருள்ள ஜந்துக்களுடன் எரிக்கப் படக்கூடாது.

தீங்கு செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடனாவது உயிருள்ள பிராணிகளை வதைக்க வேண்டுமென்றாவது காடுகளைக் கொளுத்தக் கூடாது.

உயிருள்ளவர்கள் உயிருள்ளவர்களால் போஷிக்கப் படக்கூடாது. மூன்று ருதுக்களில் உண்டாகும் பௌர்ணிமைகளிலும், திஷ்ய மாதத்துப் பௌர்ணிமைகளிலும், ஒவ்வொன்றிலும் மூன்று நாட்களில், அதாவது முதல் பட்சத்துக் கடைசி இரண்டு நாட்களிலும் பின் பட்சத்து முதல் நாளிலும்—எல்ல உபவாச தினங்களிலும் மீன்கள் கொல்லப்படக்கூடாது; விற்கப்படவுங் கூடாது.

மேற் கூறப்பட்ட நாட்களில் யானைச் சாலைகளிலும் மீன் குட்டைகளிலும், எந்தவிதமான பிராணிகளும் கொல்லப் படக்கூடாது.

ஒவ்வொரு பட்சத்தின் எட்டாவது, பதினைந்தாவது, பதினோந்தாவது நாட்களிலும், திஷ்ய நாளிலும், புனர்வசு நாளிலும் மற்ற எல்லா உற்சவ காலங்களிலும் எருதுகள் விதையடிக்கப் படக்கூடாது. விதை யடிப்பதற்குரிய மற்றப் பிராணிகளும் அங்கஹனம் செய்யப் படக்கூடாது.

திஷ்ய நாளிலும், புனர்வசு தினத்திலும், மற்ற பௌர்ணிமைகளிலும், பௌர்ணிமை வரக்கூடிய பட்சங்களிலும், குதிரைகளுக்கும் மாடுகளுக்கும் சூடு போடக்கூடாது.

எனக்கு ராஜ்யாபிஷேகம் நடந்த இருபத்தாறு வருஷங்களிலும், இருபத்தாறு முறை சிறைகளிலிருந்து கைதிகளை விடுதலை செய்திருக்கிறேன்.

பார்லிமெண்டில் ஸ்திரீகளுக்கென்று தனிக் கட்சி

பிரிட்டிஷ் பார்லிமெண்டில் ஒன்பது பெண் அங்கத்தினர்கள் இருக்கிறார்கள். இவர்கள் 'ஸ்திரீகள் பார்லிமெண்டரிகட்சி' யென்று தனிக்கட்சி யொன்று ஏற்படுத்திக் கொள்ள முயற்சி செய்கிறார்கள். இந்த ஒன்பதின்மருடைய பெயர்கள் வருமாறு:–

1 லேடி ஆஸ்டர் (கன்ஸர்வேடிவ்கட்சி)
2 லேடி டேவிட் ஸன் ,,
3 அத்சோல் சீமாட்டி ,,
4 இரேனே வார்ட் ,,
5 மேவிஸ்டேட் ,,
6 வில்கின்ஸன்-தொழிற்கட்சி
7 ஜார்ஜ் ஹார்டி ,,
8 எலியனோர் } சுயேச்சை
ராத்போன் }
9 மெகன் லாயிட் } லிபரல்
ஜார்ஜ் } கட்சி

பெண் போலீஸ்

லண்டனில், போலீஸ் இலாகாவில் 90 பெண்கள் உத்தியோகம் பார்க்கிறார்கள். இவர்களில் ஒருவர் சூப்பிரண்டெண்டெண்ட்; ஐவர் இன்ஸ்பெக்டர்கள்; பதின்மர் சார்ஜண்டுகள்; 74 பேர்கள் கான்ஸ்டேபில்கள். இவர்களில் பெரும்பாலோர், போலீஸ் உடை தரிப்பதில்லை.

ஸ்திரீகளை, போலீஸ் உத்தியோகத்தில் நியமிக்கிறபோது, சில நிபந்தனைகளுண்டு. அதாவது 5 அடி 4 அங்குல உயரமிருக்க வேண்டும். வயது 24க்கு மேல் 35க்குள் இருக்க வேண்டும். கான்ஸ்டேபில்களுக்கு வாரச் சம்பளம் 2 பவுன் 16 ஷில்லிங் முதல் 4 பவுன் வரையில் கொடுக்கப்படும். சார்ஜண்டுகளுக்கு வாரச் சம்பளம் 5 பவுன். இன்ஸ்பெக்டர்களுக்கு 6 பவுன் 12 ஷில்லிங். இவர்களனைவருக்கும் இலவச வைத்திய உதவி அளிக்கப் படும். சப்பட்டையான பாதமுடையவர்கள், பல் சொத்தை யுடையவர்கள், உள்ளாக்கு வளர்ந்திருப்பவர்கள், வசீகரமான முகமில்லாதவர்கள் முதலியோர், உத்தியோகத்திற்கு எடுக்கப்படுவதில்லை. சிறப்பாக, ஒழுக்க முடையவர்களைத்தான் உத்தியோகத்திற்குப் பொறுக்கி யெடுக்கிறார்கள். இவர்களுக்கு வருஷத்திலே 12 நாள் ரஜா உண்டு. வெளியிலே சுற்றுகிற வேலையாயிருந்தால் தினம் ஏழரை மணி நேரம் வேலை செய்ய வேண்டும்.

இந்தப்பெண் போலீஸ் உத்தியோகஸ்தர்களுக்குக் கீழ்க் கண்ட வேலைகள் இடப்படுகின்றன:-

1. வீதிகளிலும் திறந்த இடங்களிலும் ரோந்து வருதல்.
2. விபசாரத்தைக் கண்டு பிடிப்பது.
3. கோர்ட்டுகளுக்கு அழைத்துச் செல்லப்படும் ஸ்திரீ குற்றவாளிகளைப் பின்தொடர்தல்.
4. ஒழுங்கீனமான குடும்பங்கள் வசிக்கும் வீடுகளை ஆண் போலீஸார் சோதனை செய்யும் போது கூட இருத்தல்.
5, கள்ளப்பிரசவம், சிசு ஹத்தி முதலியவைகளைக் கண்டு பிடித்தல்,
6. மரியாதைக் குறைவாகத் தாக்கப் படுகிற ஸ்திரீகளிடமிருந்து வாக்கு மூலம் வாங்குதல்.

இரண்டு பர்மிய யுத்தங்கள்

—கு. கோ. கிருஷ்ணன்
B. Sc., (Hons)

இரண்டாது பர்மிய யுத்தம்-1852.

பகான்மின் என்பவன் பர்மாவை அரசாட்சி செய்யுங் காலத்தில் (1851) பர்மியர்கள், பிரிட்டிஷ் வியாபாரிகளுக்கு அநேக துன்பங்கள் இழைத்ததாகக் கூறப்படுகிறது. பெகு கவர்னராயிருந்த மாங் ஓக் என்பவன் பிரிட்டிஷ் வியாபாரக் கப்பல் மீகாமன்களாகிய ஷெப்பர்ட், லூயின் என்பவர்களைக் கொலைகள் செய்ததாகக் குற்றஞ்சாற்றிக் கைதி செய்தான். பிறகு விடுதலை செய்து மறுபடியும் கைதி செய்து நூற்றுக்கணக்கான ரூபாய்களைப் பெற்றதினால், இரு கைதிகளும் தகுந்த நியாயம் கிடைக்கும்படி பிரிட்டிஷ் சர்க்காருக்குத் தெரிவித்துக் கொண்டனர். அப்பொழுது கவர்னர் ஜெனரலாகவிருந்த லார்ட் டல்ஹௌஸி என்பவன் லாம்பெர்ட் என்பவனுடைய தலைமையில் ஆறு யுத்தக்கப்பல்களை அனுப்பிவைத்தான்.

மாங் மான் என் புதிய பர்மிய கவர்னரும், மாங் ஓக்செய்தது போல பிரிட்டிஷ் கப்பல்காரர்களைத் துன்புறுத்தியதாகவும் அதற்காக அநேக கப்பல்காரர்கள் ஒன்று கூடி அவனிடத்தில் மனுச்செய்து கொண்டபோது அவர்களை வெயிலில் நிற்கவைத்துத் திரும்பிப்போகச் செய்ததாகவும் கூறப்படுகிறது. இதையுணர்ந்த லாம்பெர்ட், பர்மிய கப்பலைப் பிடித்து இரங்கூன் ஆற்றையும் முற்றுகை செய்தான். சிறிய சச்சரவு ஏற்பட்டது. ஒரு முடிவு காணாமல் லாம்பெர்ட் கல்கத்தாவுக்குச் சென்றான்.

ஆகவே பிரிட்டிஷ் சர்க்கார், 1852ம் வருஷம்பிப்ரவரிமாதம்18ந்தேதிபர்மா அரசனுக்கு விடுத்த அறிக்கையில் லூயின், ஷெப்பர்ட் இவர்களையும், மற்றும் பல பிரிட்டிஷ் உத்தியோகஸ்தர்களையும் துன்பம் செய்ததற்காக மன்னிப்புக் கேட்க வேண்டுமென்றும் இதற்காக யுத்தத்திற்குத் தயாரான வகையில் நஷ்ட ஈடு ரூபாய் ஒரு லட்சம் கொடுக்க வேண்டுமென்றும் கூறப்பட்டிருந்ததை பர்மிய அரசன் ஒரு பொருட்படுத்தாது பேசாதிருந்தான். ஆகவே பிரிட்டிஷ் சர்க்கார் 1852ம் வருஷம் ஏப்ரல் மாதம் பர்மா அரசனோடு யுத்தத்திற்கு ஆரம்பித்தனர்.

ஜெனரல்காட்வின், தன்னோடு 1400 படைகளையும் அநேக பீரங்கிக் கப்பல்களையும் சேர்த்துக் கொண்டு ஏப்ரல் 5உ மார்ட்டபான் என்ற இடத்தையும், பிறகு 14உ சுவேடாகன் புத்தர் ஆலயத்தையும் கைப்பற்றியதால், இரங்கூன் பிரிட்டிஷார் கைவசமாயிற்று. இச்சண்டையில் பிரிட்டிஷாருக்கு ஏராளமான நஷ்டமெனவும் தெரிகிறது. லாம்பெர்ட் என்பவன் மே மீ 18உ நான்கு யுத்தக் கப்பல்களுடன் சென்று பாசின் நகரத்தையும் கைப்பற்றினான்.

பிரிட்டிஷ் கப்பல்கள் ஐராவதி ஆறு வழியாக புரோம் நகரை முற்றுகை போடச் சென்றபோது மகா பண்டுலா குமாரன் மாங்ஜீ என்பவன் 7000 துருப்புகளுடன் எதிர்த்தான். ஆகவே பிரிட்டிஷ் கப்பல்கள் புரோம் நகரையடுத்துச் சென்றும் அதிகத் துருப்புகளில்லாமல் பின் வாங்க நேரிட்டது

லார்ட் டல்ஹௌஸி கோரகவே

ஜூலை ஆகஸ்டு மாதங்களில் இரங்கூனுக்கு வந்து ஜெனரல் காட்வினோடு ஆலோசனைகள் செய்து திரும்பினான். அதன் பிறகு பிரிட்டிஷ் படைகள் தந்திரமாக புரோம் நகரைக் கைப்பற்றியதால் மாங்ஜி சரணமடைந்தான். காட்வின் பெருஞ் சேனைகள் பிரட்டி பெகுவையும் கைப்பற்றிக் கொண்டான். இதனால் தென்பர்மா முழுவதும் பிரிட்டிஷார் கைவசமடைந்து பெகு மாகாணத்திற்கு, காப்டன் ஆர்தர் பேயர் என்பவன் கவர்னராக நியமிக்கப் பட்டான். இச்சமயம் பகான்மின் என்பவனை அவன் சகோதரன் (மாற்றாந்தாய்க்குப் பிறந்தவன்) மிண்டன் மின் கைது செய்து, தானே ஆட்சிக்கு வந்தான். பகான்மின் அம்மை நோயால் 1881ம் வருஷத்தில் காலஞ் சென்றான். மிண்டன்மின், பிரிட்டிஷாரோடு வெகு நேசமாய் நடந்துகொண்டதால் உடன்படிக்கையொன்றும் ஏற்படவில்லை.

மூன்றாவது பர்மிய யுத்தம்-1885.

மிண்டன்மின்னுக்கு நூற்றுக் கணக்கான பிள்ளைகளிருந்தன. அவனுக்குப் பின் அவன் காதலியான அலேனந்தோ ராணியின் சூழ்ச்சியால் அவன் குமாரர்களில் ஒருவனான தீபோ என்பவன் அரசனானான். இவன் அநுபவமற்றவனாகவும், தைரியமற்றவனாகவுமிருந்த போதிலும் அலேனந்தோ குமாரத்தி சுப்பயா லெட் என்பவளை நேசித்ததால் இப்பதவி கிடைத்தது. பிறகு 1879ம் வருஷத்தில் அவனுடைய சகோதரர்களில் சுமார் 70 பேர்களைக் கொலை செய்து ஒரு படுகுழியில் புதைத்து விட்டனர். இதற்குக் காரணம் அலேனந்தோ ராணியும் அவள் குமாரத்தி சுப்பயா லெட்டுமே. பிறகு தீபோ, சுப்பயா லெட்டின் சகோதரி சுப்பயா ஜீ என்பவளையும் மணந்து கொண்டான்.

1884ம் வருஷத்தில் உத்தியோகஸ்தர்கள் பலர் தீபோவுக்குத் தீங்கு விளைவிக்க சதியாலோசனை செய்வதையுணர்ந்த அரசனின் அந்தரங்க மந்திரி டேய்ந்தா மீஞ்சி என்பவன் அரசன் உத்தரவுப்படி அவர்கள் அனைவரையும் சிறையிலடைத்துப் பிறகு அங்கும் சதியாலோசனைகள் செய்வதையுணர்ந்து அனைவரையும் கொலைசெய்ய உத்தரவிட்டான். மொத்தத்தில் சுமார் 300 பேர்கள் உயிர் துறந்தனர்.

இச்சமயத்தில் தீபோ, பிரெஞ்சுக்காரர்களுடன் உடன்படிக்கை செய்து கொண்டு அவர்களுடைய செலவில் மாந்தலேயிலிருந்து டாங்கிங் வரை புகை வண்டிப்பாதை போடவும், தனக்கு 100-க்கு வருஷத்திற்கு 12 வட்டி வீதம் கடன் கொடுக்க பிரெஞ்சுக்காரர் பாங்கி யொன்று ஏற்பாடு செய்யவும், ரத்தினச் சுரங்கம், தேயிலை முதலியவைகளை மேல்பார்க்கவும் ஏற்பாடு செய்து கொண்டான். அப்பொழுது தன்னிஷ்டம் போல் தேக்கு மரங்களை ஏற்றுமதி செய்து வந்த பாம்பே-பர்மா வியாபார கம்பெனிக்கு பர்மிய சர்க்கார் 23 லட்சம் ரூபாய் வரியாக விதித்தனர்.

இவைகளைக் கண்ட இந்திய வைசிராய் லார்டு டப்ரின் 1885ம் வருஷம் அக்டோபர் மாதம் 22ந் தேதி கீழ்க் கண்டவாறு பர்மிய அரசனுக்குக் கட்டளையிட்டு அறிக்கை அனுப்பினான்:- (1) பிரிட்டிஷ் பிரதிநிதியுடன் கலந்து பாம்பே பர்மா வியாபாரக் கம்பெனியின் வழக்கை நல்லவிதமாக முடித்துக் கொள்ள வேண்டும். (2) அப்பிரதிநிதி வரும் வரை அக்கம்பெனியோடு எவ்வித சச்சரவும் வைத்துக் கொள்ளக் கூடாது. (3) பர்மா சர்க்காரின் தூர

ஜெர்மனியில் ஒரு தமிழ்ப் புலவர்

—நமது அந்நிய நாட்டு நிருபர்

தமிழர்கட்குத் தாய் மொழி மீது குன்றாத காதலுண்டு. யாராவது அந்நியர்கள் தமிழில் பேசுவதைக் கண்டால் ஆனந்த மடைகின்றோம். அந்த ஆனந்தத்தில்—சில சமயங்களில்—நம்மையும் நாம் மறந்து விடுகின்றோம். சில நாட்களுக்கு முன் ஜர்மனியின் தலை நகரான பர்லின் நகரில் ஸ்ரீமான் பைதான் சாஸ்திரியாரைச் சந்தித்த பொழுது நான் ஆனந்தங் கொண்டது இயற்கையே யாகும்.

பைதான் சாஸ்திரியாரைப் படத்தில் பாருங்கள். அவருக்கென்ன வயது இருக்கும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? தமிழ் அச்சுக் கூடங்கள் படங்களை அச்சிடும் திறமையில் சில சமயங்களில் வாசகர்களை ஏமாற்றி விடுகின்றன. படங்களின் கீழே விபரம் குறிப்பிடாவிட்டால், அப்படம் என்னவாயிருக்கலாம் என்று யோசிப்பதற்கு வாசகர்கள் தங்கள் மூளையைச் செலவிட்டாலும், பல சமயங்களில் தோல்வியே யடைய நேரிடுகிறது. இதில் காணப்படும் படம் பைதான் சாஸ்திரியாரின் படந்தான் என்று வாசகர்கள் உறுதியாக நம்பலாம். இவருக்கு சஷ்டியப்த பூர்த்தி முடிந்து இப்பொழுது இரண்டுவருடங்கள் ஆகின்றன. இச் சாஸ்திரியார் 1920ல் அதாவது 45வது வயதில் கல்யாணம்செய்து கொண்டார். மூன்றாவது தாரமல்ல; முதல் தாரந்தான்.

பர்லின் நகரில் இந்திய மாணவர் சங்கக் கூட்ட மொன்றிலே நண்பரொருவர் பைதான் சாஸ்திரியாரை எனக்கு அறிமுகப் படுத்தி வைத்தார். ‘உங்களைச் சந்திக்க நிரம்ப சந்தோஷம்’ என்று வெகு சீக்கிரமாக ஒரு நிமிஷத்திற்குள் கூறி எனது கைகளைக் குலுக்கினார் சாஸ்திரியார். தமிழிலே பேச வகையறியாது தவித்துக்கொண்டிருந்த எனக்கு, தமிழ் பேசுவதற்கு ஒரு ஆள் அகப்பட்டாரே என்று சந்தோஷம். ஆனால் பறவைக் கப்பல்

தேசத்து சம்பந்தமெல்லாம் இந்திய சர்க்கார் கையிலிருக்க வேண்டும்.

இவைகளுக்கு உடன்படாத பதிலைப் பெற்ற ஐந்தாம் நாள், 1885ம் வருஷம் நவம்பர் 14ந் தேதி பர்மாவோடு யுத்தத்திற்கு இந்திய சர்க்கார் ஆரம்பித்தது. மின்லா கோட்டையை 17 தேதியும், பகான் நகரை 23 தேதியும், மீஞ்சான் நகரை25 தேதியும்கைப்பற்றினர். 27ந் தேதி ஆவா நகரையும், 28ந் தேதி தலை நகராயிருந்த மாந்தலே நகரையும் கைப்பற்றி தீபோவையும், அவன் இரு மனைவி மாரோடும் கைதி செய்து 1885ம் வருஷம் டிசம்பர் மீ 3ந் தேதி மாந்தலேயிலிருந்து கொண்டு போய், மதராஸ் நகரில் வைத்துப் பிறகு பம்பாய் மாகாணத்திலுள்ள ரத்னகிரி என்ற விடத்தில் வைத்தனர். தீபோவின் துர்ப்போதனை மந்திரி யெனக் கூறப்படும் டேய்ங்தா மீஞ்சி என்பவனைக் கைதி செய்து இந்தியாவில் கட்டக் என்ற விடத்தில் கொண்டு வைத்தனர். தீபோ 1917ம் வருஷத்தில் காலஞ் சென்றான். ஆகவே 1886ம் வருஷம் ஜனவரி மீ 1 உ பர்மா முழுவதையும் பிரிட்டிஷார் சுவாதீனப் படுத்திக் கொண்டு இந்தியாவோடு சேர்த்து ஆளத் தொடங்கினர்.

காலத்திலே மந்திரி ராமநாதன் மாட்டு வண்டியில் செல்வது போல, இச் சாஸ்திரியாரிடம் பேசுவதற்கு வேண்டிய பொறுமையை ஒருவாறு அடைய முயற்சித்தேன்.

'தமிழ் நாட்டிற்கு நீங்கள் எப்பொழுது சென்றீர்கள்?' என்றேன்.

'முப்பத்தைந்து வருடங்களுக்கு முன்னே, அதாவது சுமார் மூன்று மகா மகங்கட்கு முன்னே' என்றார் சாஸ்திரியார்.

அஞ்ஞானத்தில் அமிழ்ந்து கிடக்கும் இந்திய மக்களைக் கரையேற்றுவான் வேண்டி, நாகரீக நாடுகளிலிருந்து பாதிரிகள் கூட்டம் என்ற வெள்ளைச் சரக்கு இந்தியாவில் இறக்குமதி யாகின்றதல்லவா? ஸ்ரீமான் பைதான் சாஸ்திரியாரும் இந்த இனத்தைச் சேர்ந்தவர். என்றாலும் பரந்த நோக்க முள்ளவர். 'நீங்கள் மீண்டும் தமிழ் நாடு சென்று ஏன் கிறிஸ்துவப் பிரசாரம் செய்யக் கூடாது' என்று நான் கேட்டபொழுது, 'நான் அதை விரும்பவில்லை. நீங்கள் நம்பும் கொள்கையை நீங்கள் ஆதரியுங்கள்; மத மாற்றத்திலே எனக்கு அக்கரை யில்லை. எல்லா மதங்களும் உயர்ந்தவை என்று நான் நம்புகின்றேன்' என்றார். வெளி நாட்டிலிருந்து இந்தியாவுக்கு வருகிற பாதிரிகளிற் பலர், இத்துறையில் விருப்பமில்லாத இளைஞர்கள் என்று கூறுவதில் தவறில்லை யல்லவா?

பைதான் சாஸ்திரியார், ஒரு கிறிஸ்துவ மதப் பிரசாரகர் என்பதற்காகவோ, அல்லது நாஜி இயக்கப் பிரசாரகர் என்பதற்காகவோ நாம் எளிதில் அவரைப் புறக்கணித்துவிட முடியாது. எட்டு வருடங்கள் தமிழ்நாட்டில் தங்கிய இவர், முறைபாகத் தமிழ் பயின்றார். தமிழ்க் கலையில் உண்டாகும் இன்பத்தை ரஸிக்கும் தன்மை இவருக்கு உண்டு. அடுக்களையிலும் ஆங்கிலம் பேசும் தன்மை யுடையோரை மக்களாகக் கொண்ட தமிழனை, வெளி நாட்டிலே யுள்ள இச் சுவீகார புதல்வனைக் கண்டு பெருமை கொள்வான் என்பதில் ஐயமில்லை.

'நீங்கள் என் வீட்டிற்கு ஞாயிற்றுக்கிழமை வந்து சாப்பிட வேண்டும்' என்றார் சாஸ்திரியார். இந்த அழைப்பை மறுக்கக் கூடிய தைரியம் எனக்கு அப்பொழுது இல்லை யென்பதை ஒப்புக் கொள்கிறேன். சொல்லுகின்றபடி நடக்க வேண்டுமென்பதில் கண்டிப்பான கொள்கை எனக்கு உண்டு. அதனை நடை முறையில் காட்ட இதைவிடத் தக்க சந்தர்ப்பம் எப்பொழுது கிடைக்கப் போகிறது?

குறிப்பிட்ட ஞாயிற்றுக்கிழமை இச் சாஸ்திரியார் வீட்டுக்குச் சென்றேன. இவரின் அருமை மனைவியும் அன்பு மகனும் வரவேற்றனர். தமிழ் நாட்டுப்படங்கள், கூஜா, செம்பு, மணி முதலிய பொருள்கள், ஏராளமான தமிழ்ப் புத்தகங்கள், சில தமிழ்ப் பத்திரிகைகள் முதலியவற்றைக் கண்டேன். ஆனால் இந்த இடத்திலும் கிராமபோன் தொல்லைதான். கே. பி. சுந்தராம்பாளின் காந்திப் பாட்டு 'பிளேட்' ஒன்றை கிராமபோன் பெட்டியில் தொடங்கி விட்டார் சாஸ்திரியாரின் மனைவி. அப்பொழுது எனக்கு எப்படியிருந்திருக்குமென்று நீங்கள் கருதுகின்றீர்கள்?

ஸ்ரீமான் சாஸ்திரியார் தில்லை நகர சபையில் அங்கத்தினரா யிருந்திருக்கின்றார். காலஞ்சென்ற திவான்பகதூர் சா. ராம. ராமசாமிசெட்டியாரவர்கள் அப்பொழுது நகரசபைத் தலைவராயிருந்தார். ஸ்ரீமான் செட்டியார் அவர்களை சாஸ்திரியாருக்கு நன்கு தெரியுமாம். 'நாட்டுக் கோட்டைச் செட்டியார்களையும் ஆச்சிமார்களையும் வெகு சீக்கி

ரத்தில் கண்டு பிடித்து விடலாம்' என்றார்.

'எப்படி?' என்றேன்.

'தலை முழு மொட்டை, கழுத்திலே கொட்டை, ஆச்சிமார்கள் கனத்த பூடிகள் அணிந்திருப்பார்கள்' என்றார்.

'நீங்கள் பெருமையாகக் கூறுவதாக நான் கருதுவதா? அல்லது பரிகசிப்பதாகக் கருதுவதா?' என்று கேட்டேன்.

டாக்டர் எச். பெய்தான்

'நாட்டுக் கோட்டைச் செட்டியார்களைப் பற்றி எனக்கு எப்பொழுதும் நல்லபிப்பிராயம் உண்டு. சிதம்பரத்தில் அவர்கள் திருப்பணியை நான் அறிவேன். அவர்களுடைய உதவியின்றேல் தமிழ் நாட்டில் பல கோவில்கள் பாழடைந்திருக்கும். தமிழ் நாட்டின் பண்டைய சிற்பக் கலையைக் காப்பாற்றிய பெருமையிற் பெரும் பகுதி அவர்களைச் சார்ந்தது. செட்டியார்களின் தர்மத்திற்கு முக்கிய காரணம் ஆச்சிமார்களின் மதப் பற்றுத்தான். முப்பத்தைந்து வருடங்கட்கு முன் கண்ட காட்சியைக் கூறுகின்றேன். நீங்கள் தவறாகக் கருத வேண்டாம்' என்றார்.

'சில மாதங்கட்கு முன் ஒரு செட்டியாரும் ஒரு ஆச்சியும் இங்கு வந்தார்களே, உங்களுக்குத் தெரியுமா?' என்றேன்.

'எனக்குத் தெரியவே தெரியாது. அப்படி யாராவது இனி இங்கு வந்தால் தயவுசெய்து எனது விலாசத்தைக் கொடுங்கள். அவர்களை வரவேற்று, அவர்களோடு தமிழில் பேசவும், அவர்கட்கு இந்த ஊரைக் காண்பிக்கவும் பெரிதும் மகிழ்ச்சியடைவேன்' என்றார். இத்தருணத்தில் ரஸமான சம்பவம் ஒன்றையும் கூறினார். இந்தியாவிலிருந்து இவர் ஜர்மனிக்கு வந்ததும் சர்வகலாசாலையில், அன்னிய நாட்டு மாணவர்கள் சம்பந்தமானவைகளைக் கவனிக்கும் அதிகாரியிடத்திற் சென்று 'இந்தியாவிலிருந்து யாராவது மாணவர்கள் வந்தால் தயவு செய்து தெரிவியுங்கள்' என்று கூறினாராம். பல ஆண்டுகள் வரை ஒரு தமிழரையும் இவர் சந்திக்கவில்லை. பன்னிரண்டு ஆண்டுகட்குப் பின்னர் அவ்வதிகாரி 'தமிழ் என்று ஒரு பாஷையிருப்பதாக நான் நம்பவில்லை' என்று கூறினாராம்.

சாஸ்திரியாருக்கு, என்னிடம் பேசப் பேசத் தமிழ் நாட்டு நினைவுகள் அதிகமாயின. இட்லி, சாம்பார், அப்பம், அப்பளம் முதலியவைகளைப் பற்றி அவர் கூறிய பொழுது எனது நாக்கில் ஜலம் ஊறிற்று. அதை நினைக்கப் பரஸ்பரம் இருவரும் வருந்தினோம்.

'அந்தக் காலத்திலேயே அரசியல் உணர்ச்சி வலுக்க ஆரம்பித்துவிட்டது. பரங்கிப்பேட்டையில் நான் பிரசங்

கம் செய்து கொண்டிருந்த பொழுது பல இளைஞர்கள் 'வந்தே மாதரம்' என்று கூறிக்கொண்டு, கூட்டத்திற்கு வந்து என் மீது கல்லை விட்டெறிந்தனர். நான் ஒரு ஆங்கிலேயன் என்று அவர்கள் தவறாகக் கருதியது தான் இதற்குக் காரணம்' என்றார்.

• இவர் தரங்கம்பாடியில் வசித்த காலத்தில் அங்கு ரயில் கிடையாதாம். சியாழி ஸ்ரீமான் முத்துத் தாண்டவராய பிள்ளையிடம் இவர் பாடங் கேட்டார். 'கும்பகோணத்தில் ஒரு கிழப் பார்ப்பான் ஐம்பது ரூபாயை வாங்கிக்கொண்டு மறைந்து விட்டான்' என்று சிரித்துக் கொண்டே கூறினார்.

எங்கள் சம்பாஷணையின் மத்தியில் ஹிந்தியைக் கட்டாய பாடமாக்கும் பிரச்னையைப் பற்றி விவாதித்தோம். சாஸ்திரியார் கூறிய அபிப்பிராயத்தின் சாரம்:—

'ஹிந்தியைக் கட்டாய பாடமாக்குவது நல்லது. ஹிந்தியால் தமிழுக்குத் தீங்குண்டாகும் என்று கருதுவது தவறு. தேசத்திற்குப் பொதுவான பாஷை அவசியம். எவ்விதமாகப் பார்த்தாலும் ஹிந்திதான் அந்த ஸ்தானத்தை ஏற்றுக் கொள்ளக் கூடும். அடுக்களையில் ஆங்கிலத்தை உபயோகிப்பது போல ஹிந்தியைத் தமிழர்கள் உபயோகிக்கக் கூடாது. இவ்விரண்டு பாஷைகளையும் தமிழர்கள் தேவைக்குத்தான் உபயோகப் படுத்திக் கொள்ள வேண்டும். தமிழனோடு தமிழன் ஆங்கிலத்தில் பேசுவதை விட ஹிந்தியில் பேசுவது எந்த விதத்தில் தீமை பயக்கும்? ஐரோப்பாவிலுள்ள பலரும் இரண்டு மூன்று பாஷைகள் பேசுகின்றனர். அதனால் அவர்களுக்குத்தாய் மொழிப் பற்று குன்றுவதில்லை. ஹிந்தியைக் கண்டு தமிழ்ப் பண்டிதர்கள் மருள்வதிலே அர்த்தமில்லை.'

சாஸ்திரியாருக்கு ஹிந்தியிலும் போதிய அறிவுண்டு என்பதை வாசகர்கட்குக் கூற விரும்புகின்றேன். சாஸ்திரியார் இந்தப் பிரச்னையை ஆவலோடு கவனித்து வருகிறார். இது சம்பந்தமான 'நவசக்தி'யின் தலையங்கத்தைப் பெரிதும் பாராட்டினார்.

'ஆ ஹிட்லர் ஆர்' என்ற புத்தகத்தை சாஸ்திரியார் 1936ல் தமிழில் எழுதியுள்ளார். சில சமயங்களில் கட்டுரைகளும் எழுதுகிறார். எல்லாம் நாஜி இயக்கப் பிரசாரம். பாவம், அவர் என்ன செய்யக் கூடும்? ஜர்மனியில் வசித்தால், இவைகளை விரும்பினாலும் விரும்பா விட்டாலும் செய்துதான் ஆகவேண்டும்.

தமிழக்கதைகள் சிலவற்றை ஜர்மன் பாஷையில் ஒரு புத்தகமாக எழுதியிருக்கிறார். திருக்குறள், பெரிய புராணம், திருப்பாடற்றிரட்டு முதலிய நூல்களிலே இவருக்கு அதிக விருப்பம். இவர் ஒரு சித்திரக்காரர். கன்னியாகுமரியை நினைவுள்ளம் கொண்டு இவர் தயாரித்த படம் மிக நன்றாயிருக்கிறது. இவர் புத்தகத்திலுள்ள படங்கள் அனைத்தும் இவர் தீட்டியதே யாகும்.

பாரதியார் நூல்களிலே இவருக்குப் பேரார்வம். பாரதியாரைப் பற்றித் தெரிந்து கொள்ளவும், அவரைப் பற்றி ஜர்மன் இலக்கியப் பத்திரிகைகளில் எழுதவும், பாடல்களை ஜர்மன் பாஷையில் மொழி பெயர்க்கவும் விரும்புகிறார். ஜர்மன் சர்வகலாசாலையில் இவர் தமிழாசிரியராக இருப்பதால் இவர் எழுத்துக்கு இங்கு மதிப்புண்டு. ஜர்மன் அரசாங்க உத்தரவுப்படி இவர் பணத்தை வெளிநாட்டுக்கு அனுப்பி புத்தகம் வாங்குதல் இயலாத காரியம்.

இக் கட்டுரையைப் படிக்கும் 'ஜோதி' வாசகர்கள் யாராவது இவருக்கு 'பாரதியார் நூல்கள்' சிலவற்றை அன்பளிப்பாக அனுப்புவார்களா?

ஆசிரியர்.

ஏக்கம்

(ஸ்ரீமதி சரோஜினி தேவியின் பாடல்)

மொழிபெயர்த்தவர் ---- "அழகன்"

விழித்தெழு தாயே! விழித்தெழு தாயே!
என்றுன் குழந்தைகள் இறைஞ்சிடு கின்றோம்.
தாயே! உனது சக்தி முன்பு
ஊழியஞ் செய்யவும் உவந்தே போற்றவும்
வணங்குகின் றோம்யாம் வணங்குகின் றோம்யாம்.
காலைக் கனவுடன் காரிருள் முகிழ்த்ததே
துன்பத் தளையில் ஏன்துயில் கின்றாய்?
விழித்தெழு தாயே! விழித்தருள் தாயே!
சூழும் எமது துன்பங் களைவாய்!
எம்மை அழைக்கும் வெற்றிக் கோஷம்
கைகளை அர்ப்பணம் காண்குவை தாயே!
அன்புடைத் தாயே! அன்புடைத் தாயே!
துணிவும், பெருமையும், தூயநின் சக்தியும்—
அடைவோம், உன்றன் சேய்கள் அலமோ?
என்றும் மறவோம், என்றும் கைவிடோம்.
தளர்வுற வும்விடோம், தாயே! உனையே.
உன்—மனையும் கவசமும் மரணபலி பீடமும்
எமது இருதயம் என்றும் ஆமே.
விண்ணில் விளங்கும் மீன்கள் தம்மை
ஊடுரு விப்போம் உன்கதை கொண்டே,
வெற்றிமுன் னணியில் மீண்டுனைக் கொணர்வோம்.
தாயே—எமது—வணக்க மலர்கள் வயங்குநின் கிரீடமாய்!
தாயே—எமது—கம்பகம் என்றும் நாடிச் சூழுக!
தாயே—எமது—அன்பாம் வாள்உனை ஆதரஞ் செய்க!
தாயே—எமது—உண்மைப் பாடல் உவந்துனைப் போற்றுக!
எமது பலமும் இறவாப் பக்தியும்
தாயே உனக்குத் தளரா துதவுக!
செவிமடுத் திடுவாய், தேவியே தாயே!
வாழ்த்துகின் றோம்யாம் வணங்குகின் றோமே.

கனகாவின் கடிதங்கள்

—"சரசா"

கடிதம் VI

கீழ வேளூர்

மாதுஸ்ரீ அம்மா அவர்களுக்கு புத்திரி கனகா அநேக நமஸ்காரம் செய்து எழுதுவது. உனக்கு ஒரு சந்தோஷ சமாசாரம். உன் மாப்பிள்ளைக்கு இப்பொழுது புதிய வேலை ஒன்று ஆகியிருக்கிறது. நல்ல சமயத்தில் அப்பா தைத்து அனுப்பின கோட் சூட் முதலியவையெல்லாம் வந்து சேர்ந்தன. இவைகளைப் போட்டுக் கொண்டு வெளியே புறப்படுகிற போது, 'அசல் கலெக்டராத்து மாப்பிள்ளை யாட்டமே இருக்கையே' என்கிறாள் என் மாமியார். மாப்பிள்ளை யாட்டமா என்ன? மாப்பிள்ளைதானே. உன் மாப்பிள்ளை, புதிதாக ஆரம்பித்திருக்கும் ஒரு இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிக்கு ஏஜென்ட். கையிலே ஒரு 'ஹாண்ட்பாக்' எடுத்துக் கொண்டு, காலை காபி சாப்பிட்டு விட்டு வெளியே கிளம்பி விடுகிறார். மறுபடியும் மத்தியானம் ஒரு மணி அல்லது இரண்டு மணிக்குத்தான் வருகிறார். மறுபடியும் சாயந்திரம், கிளப்பு முதலிய இடங்களுக்குச் சென்று பல பேருடனும் பழகுகிறார். எத்தனை பேரை உன் மாப்பிள்ளைக்குத் தெரிகிறது தெரியுமா? தினப்படி, எத்தனை பேர் உன் மாப்பிள்ளையைத் தேடிக் கொண்டு வருகிறார்கள்? அவாளவாளுக்குத் தகுந்த மாதிரி சாமர்த்தியமாகப் பேசுவதற்கு உன் மாப்பிள்ளைக்குத் தெரிகிற மாதிரி வேறொருத்தருக்கும் தெரியாது. வாரத்திலே ஒரு நாள், இரண்டு நாள், யாரையாவது ஒருத்தரை இரண்டு பேரை சாப்பிடச் சொல்கிறார். என் மாமியாருக்கு வயிறு வெடித்துப் போகிறது. அம்மாவுக்கும் பிள்ளைக்கும் சதா சண்டைதான். 'உன் அப்பாவைப் போல எங்கேயாவது ஒரு குமாஸ்தா உத்தியோகம் தேடிக் கொள்ளக் கூடாதா? இதென்ன கடப்புடல்?' என்பது என் மாமியார் வாதம். 'பணம் சம்பாதிக்க வேண்டுமானால் சும்மாதானா?' என்கிறார் உன் மாப்பிள்ளை. என்னமோ, எனக்குத் தினம் இப்பொழுது பட்சணங்கள் கிடைத்துக் கொண்டு வருகின்றது. புது மாதிரியில் ஒரு 'ப்ரூச்' பண்ணிக் கொடுத்திருக்கிறார். நல்ல வருமானம் கிடைக்கலாம். அப்பொழுது பார், எல்லாரையும் ஒரு ஆட்டு ஆட்டி வைக்கிறேன்.

நான் இப்பொழுது ஹிந்தி கற்றுக் கொண்டிருக்கிறேன். அதுதான், இனி இந்தியாவின் பொதுப் பாஷையாக இருக்கப் போகிறதென்று, உன் மாப்பிள்ளை அடிக்கடி சொல்கிறார். இன்ஷூரன்ஸ் ஏஜென்ட் என்றால் சும்மாதானா? எத்தனையோ பேப்பர்களைப் படிக்க வேண்டியிருக்கிறது.! அந்தந்த ஆளுக்குத் தகுந்த மாதிரி பேச வேண்டுமானால் எல்லா விஷயங்களையும் தெரிந்து கொண்டிருக்க வேண்டியிருக்கிறதல்லவா?

இந்த ஹிந்தி படிப்பது கூட என் மாமியாருக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை. சமஸ்கிருதம் படிக்கிறதுதானே என்கிறாள். சமஸ்கிருதம் நல்ல பாஷைதான். எல்லா பாஷைகளுக்குள்ளும் அதன் ஜீவவேகம் புகுந்து கொண்டிருக்கிறதென்பது வாஸ்தவந்தான். ஆனால் அது இப்பொழுது

பேசுகிற பாஷையாக இல்லையே. ஹிந்தி ஒன்று தெரிந்து கொண்டிருந்தால், வட இந்தியா முழுவதிலும் பிரயாணம் செய்யலாம். இந்தக் காலத்தில் இங்கிலீஷும் ஹிந்தியும் தெரிந்திருந்தால் போதுமானது.

எனக்கு இங்கிலீஷ் தெரியும் என்று சொல்லிக் கொள்வதற்கு என் மாமியார் வெட்கப் படுகிறாள் இந்தப் பட்டுக்கிடப்பான் தபால்காரன், தனக்கேதாவது இங்கிலீஷ் விலாசம் தெரியாவிட்டால் 'அம்மா, கொஞ்சம் பாருங்கோ' என்று என்னிடம் கொண்டு வந்து நீட்டுகிறான். அப்பொழுது என் மாமியார் முகத்தைப் பார்க்கணுமே. எள்ளும் கொள்ளும் வெடிக்காத குறைதான். 'மாசம் பிறந்தா முள்ளங்கிப்பத்தை மாதிரி சம்பளம் வாங்கி வீட்டிலே கொண்டு போய் மூடிவைக்கத் தெரிகிறது. கடுதாசிகளுக்கு மேல் விலாசம் படிக்கக் கூட தெரியவில்லையோ!' என்று அவனைப் பார்த்து ஒரு உருட்டல் உருட்டுகிறாள். போதாக் குறைக்கு உன் மாப்பிள்ளையும், தன் தாயாரின் வயிற்றெரிச்சலைக் கிளப்ப என்னோடு இங்கிலீஷில் பேசுவார். 'அடுப்பங் கரையிலே ஆம்படையாளிடத்தில் பண்ணாட உன் ஆர்ப்பாட்டமெல்லாம்' என்பாள். எல்லாக் குடும்பங்களிலும் இந்த மாதிரி வேடிக்கைகள் நடக்கின்றனவா என்பது எனக்குச் சந்தேகமாயிருக்கிறது.

எனக்கு நாத்தனார் ஒருத்தி இருக்கிறாள் என்பது உனக்குத் தெரியுமோ தெரியாதோ! ஏனென்றால் அவள் என் கல்யாணத்திற்குக் கூட வரவில்லை. அவள், எங்கேயோ வடக்கே, விலாஸ்பூர் என்ற ஊரில் இருக்கிறாள். நாத்தனார் புருஷனுக்கு அங்கே ரெயிலில் வேலையாம். பெரிய சம்சாரம் போலிருக்கு. அஞ்சு பெண்களும் மூன்று பிள்ளைகளுமாம். ஆனால் வரும்படி ரொம்பக் குறைவு. மாசம் 80 ரூபாய் சம்பளந்தானாம். இதனால் இங்கிருந்து மாதா மாதம் ஏதாவது பணமும் பார்சலுமாகப் போய்க் கொண்டேயிருக்கிறது. எல்லாருக்கும் பிறந்தகத்துச் சீர் இப்படித்தானே என்பது மட்டும் என் மாமியாருக்குத் தெரிகிறதில்லை. இந்தக் காலத்து மாமியார்களுடைய சாஸ்திர புஸ்தகத்தில், பெண்களுக்கு என்றால் ஒரு சட்டம், நாட்டுப் பெண்களுக்கென்றால் ஒரு சட்டம், இந்த வித்தியாசங்களெல்லாம் எப்பொழுது ஒழியுமோ தெரியாது.

என் நாத்தனார், தன்னுடைய பரிவாரங்களுடன் அடுத்த மாதம் வரப் போகிறாளாம். அதற்காக இப்பொழுது முதற் கொண்டே இங்கே கோடிப்பு நடக்கிறது. பெரிய அமர்க்களந்தான். இவைகளைப் பற்றி சவிஸ்தாரமாக அடுத்த கடிதத்தில் எழுதுகிறேன்.

அப்பாவுக்கு என் நமஸ்காரத்தைச் சொல்லவும். குழந்தைகளுக்கு என் சந்தோஷத்தைத் தெரிவிக்கவும்.

உன் பிரியமுள்ள
கனகா.

சராசரி மணிக்கு எத்தனை மைல் வேகம் போகிறது?

கடல் விமானம்	441 மைல்
ஆகாய விமானம்	352 ,,
மோட்டார் வண்டி	311 ,,
பட்சிகள்	200 ,,
மோட்டார் சைகிள்	153 ,,
ரெயில் வண்டி	144 ,,
மோட்டார் படகு	125 ,,
காற்று	121 ,,
டென்னிஸ் பந்து	118 ,,
பந்தயக் குதிரை	59 ,,
வேட்டை நாய்	25 ,,



பண்டித மதன் மோகன மாளவியா

எழுதியவர்:-ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்; வெளியிட்டோர்:-அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை; விலை: 6 அணா; டபிள் கிரவுன் அளவு 1 x 16; 92 பக்கங்கள்.

கையிலே பிட்சாபாத்திர மேந்தி புத்தர் பிரான், தலை நிமிர்ந்து பாராமல், வீதி வழியே செல்வார். நான் முன்னே, நீ முன்னே என்று சொல்லி, எல்லாரும் அந்தப் பிட்சா பாத்திரத்தை நிரப்புவார்கள்; பக்த ராமதாஸ், திருவோடேந்தி 'பகவதி பிட்சாந் தேஹி' என்று உரத்துச் சத்தமிட்டுச் சென்று கொண்டிருந்த போது, அவருடைய ஓட்டில், சிவாஜி மகாராஜன், தன் ராஜ்யத்தையே சாஸனமாக எழுதிப்போட்டு விட்டான். இவைகளினால் என்ன தெரிகிறது? எவனொருவன், தன்னை மறந்து, பிறர்க்குச் சேவை செய்ய வேண்டு மென்ற லட்சியத்தோடு, பிட்சாபாத்திரத்தை ஏந்திக் கொண்டு புறப்படுகிறானோ, அவனுடைய அந்த பிட்சாபாத்திரம், எப்பொழுதுமே நிரம்பி யிருக்கும். சுயநலப் பற்றில்லாத இந்தப் 'பிச்சைக்காரர்' வரிசையிலே, பண்டித மதன் மோகன் மாளவியாவும் ஒருவர். இவரை காந்தியடிகள் 'தர்மாத்மா' என்று அழைப்பார். ஆம்; 'தர்மாத்மா' என்று ஒருவருக்குப் பட்டஞ்சூட்ட ஒரு 'மகாத்மா'வுக்குத் தானே அதிகாரமுண்டு.

இந்தத் 'தர்மாத்மா'வினுடைய சரித்திரத்தை ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணிய ஐயர் எழுதியிருக்கிறார். சிறு சிறு வாக்கியங்கள். அந்த வாக்கியங்களிலே ஒரு மிடுக்கு. இவருடைய தமிழ் நடையைப் படிக்கிறபோது, 'சாதாரணமாக நடந்துசென்று நமது லட்சியத்தை யடைவதற்கு அதிக தாமதமாகும்; அதனால் சிறுகச் சிறுக வேகமாக அடி எடுத்து வைத்து, வெகு சீக்கிரத்தில் நமது லட்சியத்தையடைந்துவிடவேண்டும்' என்ற ஓர் உணர்ச்சி நமக்கு உண்டாகிறது. ஸ்ரீமான் ஐயர் ஒரு தியாகி. அதனால்தான், சிறந்த தியாகிகளுடைய சரித்திரங்களை எழுத இவருடைய எழுதுகோலுக்கு அலாதியான ஒரு லாகவம் இருக்கிறது. பிரஸ்தாப புஸ்தகத்தை படிக்கிறபோது, பண்டித மாளவியாவின் காசி விசுவ வித்தியாலயத்தொண்டிலே, நாமும் கொஞ்சம் கை கொடுத்து உதவவேண்டாமா என்ற கேள்வியை நம்மை நாமே கேட்டுக் கொள்கிறோம். அந்தக் கேள்வியைச் செயல்முறையில் நிறைவேற்றி வைக்க வேண்டியது எவ்வளவு அவசியம் என்

பதை நாம் சொல்லத் தேவையில்லை. ஸ்ரீமான் எம். பக்தவத்ஸலம், இந்தப் புஸ்தகத்திற்கு முன்னுரை எழுதுகிறபோது 'இத்தகைய நூல்கள் பள்ளிக்கூடங்களில் பாட புத்தகங்களாக வைக்கப்பட வேண்டும்' என்று சொல்கிறார். அந்த நாளை நாம் எவ்வளவு ஆவலுடனும், எவ்வளவு விரைவாகவும் எதிர்பார்க்கிறோம்?

நூலின் 55வது பக்கத்தில் '1907-ஆம் ஆண்டிலே காசியில் மன்னரும் பெருமக்களும் கூடினர். மோகனதாஸ் காந்தியும் பிரசன்னமாயிருந்தார். அந்நாள் ராஜப் பிரதிநிதி ஹார்டிஞ்சே அஸ்திவாரக் கல் நாட்டினார். 1923ஆம் ஆண்டில்தான் வித்தியாலயம் திட்டமான ஓர் உருக் கொண்டது' என்று காணப் படுகிறது. காசி விசுவ வித்தியாலயத்தின் அஸ்திவாரக் கல், 1916ம் வருஷம் பிப்ரவரி மாதம் 4ந் தேதி வஸந்த பஞ்சமியன்று நாட்டப் பட்டது. 1907ம் வருஷத்தில் அல்ல. விசுவ வித்தியாலயத் திறப்பு விழா 1921ம் வருஷம் இளவரசரால் (இப்பொழுது விண்ட்ஸர் பிரபு) நடத்தி வைக்கப் பெற்றது. இந்த வருஷக் கடைசியில், இந்தச் சர்வ கலாசாலையோடு, ஐந்து காலேஜ்கள் இணைக்கப் பட்டிருந்தன.

லாலா லஜபதிராய்

எழுதியவர்:-ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணிய ஐயர்; வெளியிட்டோர்:-அல்லயன்ஸ் கம்பெனியார், மயிலாப்பூர், சென்னை; விலை; 6 அணா; டபிள் கிரவுன் அளவு 1x16; 100 பக்கங்கள்.

1919ம் வருஷம் ஏப்ரல் மாதம் பஞ்சாபிலே, படுகொலை நடைபெறுகிறது. ஜாலியன் வாலா பாக்கிலே நிரபராதிகளான ஜனங்கள், டையரின் பீரங்கிகளினால் சுட்டுக் கொல்லப் பட்டு ரத்தக் குட்டையிலே துடித்துச்சாகிறார்கள். பாரத தேசம்முழுவதும் ஒரேகொந்தளிப்பு. அப்பொழுது பிரிட்டிஷ் ஏகாதிபத்திய தேவதையை உபாசித்து அதன் அநுக்ரஹத்தைப் பெறுவதிலே நம்பிக்கை கொண்டிருந்த தேசபந்து தாஸர், பண்டித மோதிலால் நேரு முதலியவர்களெல்லோரும் கனன்றெழுந்தார்கள். தேசீய உணர்ச்சி என்கிற ஆவேச அலையானது, பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் அஸ்திவாரத்தில் மோதி, அதனைக் கொஞ்சம் துளைக்கத் தொடங்கியது. அப்பொழுது, லாலா லஜபதிராய் அரசாங்கத்தாரால் நாடு கடத்தப் பட்டு அமெரிக்காவில் இருந்தார். அந்தச் சமயத்தில், தன் தாய் நாட்டு மக்களுக்கு அவர் எழுதிய கடிதம் இன்னும், இதையெழுதுவோருடைய செவிகளில் டணார், டணார் என்று அடித்துக்கொண்டிருக்கிறது. 'ஐயோ, என் தாய் நாட்டிற்குப் பறந்துவர எனக்கு இறக்கைகள் இல்லையே. என் உள்ளம் துடிக்கிறதே. எனது சகோதரர்கள் புழுப்போல் துடித்துச்சாக, அவர்களுக்கு ஒன்றுஞ் செய்ய முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலையில் நான் இங்கிருக்கிறேனே. ஆனால் இங்கிருந்து கொண்டு சும்மாயிருக்கப் போவதில்லை; பிச்சை யெடுத்தோ, கடன் வாங்கியோ, திருடியோ என் தாய் நாட்டுக்கு உதவுவேன்' என்று அவர் அலறினார். அவருடைய இந்த ஆழ்ந்த தேச பக்தியையும், வீர வாழ்க்கையையும் சுருணைப் படத்தில் பார்ப்பது போல் நமக்குத் தெரிவிக்கிறார் ஸ்ரீ சுப்பிர மணிய ஐயர் இந்த நூலில். லஜபதியினுடைய மாணிக்க வசனங்கள் சில, இந் நூலில் ஓர் அத்தியாயமாகத் தொகுக்கப் பட்டிருப்பது, லஜபதியினுடைய உள்ளத்தில் தாராளமாகப்பிரவேசிக்க நமக்குஅநுமதி கொடுத்தது போல் இருக்கிறது.

பொதுவாக, இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு வார்த்தை சொல்ல விரும்புகிறோம். ஸ்ரீமான் எம். எஸ். சுப்பிரமணிய ஐயர், தமிழில் எந்த நூல் எழுதினாலும்—அவர் இதுவரை, தம்முடைய பெயரைப் போட்டும் போடாமலும் சுமார் அறுபது நூல்கள் வரை எழுதியிருக்கிறார் என்பது நமது ஞாபகம்—அதிலே ஒரு பிரதியை, ஒவ்வொரு தமிழரும் வாங்கி வைத்துக் கொள்ளுதல் நல்லது என்று நாம் சிபார்சு செய்கிறோம். தமிழ் நாட்டிலே எழுத்தாளர்களுக்குக் குறைவில்லை. அவர்களை ஆதரிக்கிறவர்கள் தான் இன்னும் அதிகமாக வேண்டும்.

கான் அப்துல் கப்பார்கான்

எழுதியவர்:-ஜனுப் பா. தாவூத்ஷா, பி. ஏ; வெளியிட்டோர்:-அல்லயன்ஸ் கம்பெனி; மயிலாப்பூர், சென்னை; விலை: 8 அணு; டபிள் கிரவுன் அளவு 1 x 16; 165 பக்கங்கள்.

வடக் கெல்லையிலே ஒரு காந்தி—அப்துல் கப்பார்கான்; தெற் கெல்லையிலே ஒரு காந்தி—ராஜகோபாலாச்சாரியார். முன்னவர் நெட்டை; ஆள் காட்டி; பின்னவர் குட்டை; ஆள் ஒல்லி. ஆனால் இரண்டு காந்திகளும், ஒரு மத்திய காந்தி—மகாத்மாகாந்தி—எனும் சட்டத்தோடு இணைக்கப் பட்டிருக்கும் இரண்டு சங்கிலிகள். இந்த இரண்டு சங்கிலிகளில், ஒரு சங்கிலியினுடைய சரித்திரத்தைக் கூறுவது இந்த நூல். இது, ஸ்ரீமகாதேவ தேசாய் எழுதிய ஆங்கில நூலின் மொழி பெயர்ப்பு. மொழி பெயர்த்தவர், ஒரு தமிழ்ப் புலவர். (ஜனுப் தாவூத் ஷா, முறையாகத் தமிழ்ப்பயின்ற புலவர் என்பதை இங்குக் குறிப்பிட விரும்புகிறோம்.) பத்திரிகாசிரியர். அரசியலிலே, இப்பொழுது காங்கிரஸில் தீவிரமாக ஈடுபட்டுழைத்து வருகிறார். இவர் இதற்கு முன் பல நூல்களை எழுதியிருக்கிறார். ஆனால் இந்த நூலுக்கு நாம் ஒரு தனிச் சிறப்பைக் கொடுக்க விரும்புகிறோம். ஏனென்றால், எல்லைப்புறவிஷயம், எப்பொழுதுமே பனிப் படலத்தினால் மூடப்பட்ட ஒரு விஷயமாகவே நமக்கு இருந்து வருகிறது. அந்தப் படலத்தைக் கிழித்து, அந்த வீர பட்டாணியர்களையும் அவர்களுடைய 'குதாயி கித்மத்காரை'யும் நம் கண் முன்னே கொண்டு நிறுத்துகிறார் ஜனுப் தாவூத்ஷா. இதொரு விசேஷமான தொண்டல்லவா? ஆகாய விமானங்களி லிருந்து குண்டுகள் பொழியப்படுகின்றன என்ற செய்திகளைப் பத்திரிகைகளில் படிக்கிற போது, 'வாஸ்தவம்; அந்த ஜனங்கள் அவ்வளவு கெட்டவர்களாக்கும்' என்று நம்மை நாமே சமாதானப் படுத்திக் கொண்டு விடுகிறோம். ஆனால், அவர்களுடைய களங்கமற்ற உள்ளத்தை நாம் காண்பதே கிடையாது. அது நமக்குத் தெரிவிக்கப் படுவதுங்கிடையாது. இந்த நூலின் மூலம், இந்த மாதிரியான உண்மைகளை நாம் நன்றாகத் தெரிந்து கொள்கிறோம்.

'ஆங்கிலேயர் அறியவேண்டிய விஷயங்கள்' என்ற அத்தியாயம், ஆங்கிலேயர்கள் மட்டும் தெரிந்து கொள்வதற்காக எழுதப் பட்டதல்ல; அதில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் அத்தனையும் நமக்கு முக்கியமாகத் தெரிந்திருக்க வேண்டியவை. தற்போதைய அரசியல் விவகாரங்களைத் தெரிந்து கொள்வதிலே ஆவல்கொண் டிருக்கும் ஒவ்வொருவரும், இந்த நூலைப் படிக்க வேண்டுவது அவசியம். கான் அப்துல் கப்பார்கானுடைய சரித்திரத்தைத் தெரிந்து கொள்வதோடு மட்டுமல்லாமல், இன்னும் பல அரிய அரசியல் நுணுக்கங்களையும் இதிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

நமது நிருபர்களுடன்—

ஆறு கேள்விகள்.

அன்புள்ள ஐயா,

தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு நமது 'ஜோதி' மூலம் தெளிவு படுத்தக் கோருகிறேன்.

(1) 100 வருட யுத்த மென்றால் என்ன?

(2) சிலுவை யுத்த மென்றால் என்ன?

(3) தெய்வத் தன்மை பொருந்திய ரோம ஏகாதிபத்ய மென்றால், தெய்வத் தன்மை என்ற பதம் ரோமர்கள் சூட்டிக் கொண்டதா? அல்லது உலகத்தாரால் சூட்டப் பெற்றதா?

(4) சிப்பாய் கலகம் எதற்காக எழுந்தது?

(5) கான்பூர் கலகம் எப்படி எழுப்பப் பட்டது?

(6) மீரத் சதி வழக்கு ஏற்பட்டதற்குக் காரணமென்ன?

—சொக்கு

இந்த நண்பருடைய கேள்விகளைப் பார்க்கிறபோது, உலக விஷயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆசை தமிழ் நாட்டிலே எவ்வளவு தீவிரமா யிருக்கிற தென்பது நன்றாகத் தெரிகிறது. ஆனால், துரதிருஷ்ட வசமாக இந்த ஆவலைப் பூர்த்தி செய்யக் கூடிய நூல்கள் தமிழில் இன்னும் வெளிவர வில்லை. இந்த ஒவ்வொரு கேள்விக்கும், தனித் தனி நூல் எழுதினாலும் திருப்திப்படாது. ஆனாலும் சுருக்கமாகச் சொல்வோம்.

1. நூறு வருஷ யுத்த மென்பது இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் 1338–ம் வருஷத்தி லிருந்து 1451–ம் வருஷம் வரை நடைபெற்றது. பிரான்ஸின் மன்னனாகிய நான்காவது சார்லஸ் என்பவன், எவ்வித சந்ததியுமின்றி, 1338–ம் வருஷம் இறந்துவிட்டான். இந்தச் சார்லஸின் சகோதரி இஸபெல்லா என்பவள் இங்கிலீஷ் மன்னனுக்கு வாழ்க்கைப் பட்டிருந்தாள். அவளுடைய மகன், மூன்றாவது எட்வர்ட், அப்பொழுது பிரிட்டிஷ் சிங்காதனத்தில் வீற்றிருந்தான். இவன், பிரான்ஸின் மகுடத்திற்கு உரிமை கொண்டாடினான். இது பிரெஞ்சுக்காரருக்குப் பிடிக்கவில்லை. இதனின்று எழுந்தது இரு நாட்டாருக்கும் யுத்தம். இடை யிடையே, சில பிரெஞ்சுப் பிரதேசங்கள், பிரெஞ்சுக்காரருக்கும் ஆங்கிலேயருக்கும் கைமாறி வந்துகொண் டிருந்தன. கடைசியில் 1451–ம் வருஷம், பிரிட்டிஷார், கலே என்ற ஊர் தவிர, தங்களுடைய ஆதீனத்தி லிருந்த எல்லாப் பிரெஞ்சுப் பிரதேசங்களையும் இழந்தனர். இதனோடு இந்த யுத்தம் முடிவு பெற்றது. நூறு வருஷ யுத்தம் என்றால், நூறு வருஷமும் தொடர்ந்தாற் போல் யுத்தம் நடைபெற்றது என்பது அர்த்தமல்ல. சில்லரைச்சச்சரவுகள் அவ்வப்பொழுது தோன்றிக் கொண்டிருந்தன.

2. சிலுவை யுத்தமென்றால் ஐரோப்பா கண்டத்திற்கும் ஆசியா கண்டத்திற்கும், அல்லது கிறிஸ்தவ மதத்திற்கும் இஸ்லாமிய மதத்திற்கும், அல்லது கீழ் நாட்டு நாகரிகத்திற்கும் மேனாட்டு நாகரிகத்திற்கும் நடைபெற்ற போராட்டம்என்று கூறலாம்.

சுமார் ஏழெட்டு தடவை இத்தயுத்தங்கள் நடைபெற்றதாகச் சொன்னாலும், தொடர்ச்சியாகச் சுமார் இருநூறு வருஷங்கள்வரை (1095–1291) இது நடைபெற்று வந்தது. கிறிஸ்து நாதர் பிறந்து வளர்ந்து உபதேசித்த இடங்களுக்கு (பாலஸ்தீனத்தில்) யாத்திரையாகச் சென்று வணங்கிவருதல் முற்காலத்துக் கிறிஸ்தவர்களின் வழக்கமாயிருந்தது. இப்படி யாத்திரையாகச் செல்கிறபோது, கூட்டங் கூட்டமாகச் செல்வார்கள். இந்த வழக்கங் காரணமாக, பாலஸ்தீனத்திலுள்ள ஜெருசலேத்தில், அராபியர்களுடைய ஆட்சியின் கீழ் கிறிஸ்தவர்களுக்குக் கொஞ்சம் சலுகை இருந்து வந்தது. பின்னர் 11வது நூற்றாண்டுக் கடைசியில், துருக்கியருடைய ஆதீனத்திற்குப் பாலஸ்தீனம் வந்தது. அதுமுதல் கிறிஸ்தவ யாத்திரிகர்களுக்கு அதிக சிரமம் ஏற்பட்டது. யாத்திரிகர்கள் துன்புறுத்தப் படுகிறார்கள் என்ற கதைகள் ஐரோப்பா கண்டத்தில் பரவலாயின. எனவே, ஆயுதந்தரித்த அநேகர் பாலஸ்தீனத்தை, கிறிஸ்தவரல்லாதாரிடமிருந்து மீட்க யாத்திரைக் கூட்டங்களாகப், புறப்பட்டனர். இங்ஙனம் முதன் முதல் புறப்பட்டது. 1095–ம் வருஷத்தில். இந்த மாதிரியான யாத்திரைப் படையெடுப்புகள் 1291–ம் வருஷம் வரை நடைபெற்று வந்தன. இந்த யாத்திரைக் கூட்டத்தினர், சிலுவையைத் தரித்துக்கொண்டு சென்றதனாலேயே, இவர்கள் நடத்தின யுத்தத்திற்கு 'சிலுவை யுத்தம்' (Crusade) என்று பெயர் வந்தது. ஏழெட்டு முறைநடைபெற்ற இந்தச் சிலுவை யுத்தங்களில் மாண்ட உயிர்களும் அழிந்த பொருள்களும் எண்ணிறந்தன.

3. 'தெய்வத்தன்மை பொருந்திய ரோம ஏகாதிபத்தியம்' என்ற சொற்றொடரே வேடிக்கையானது. ஏனென்றால் ரோம சக்ரவர்த்திகள் எவரும், இந்தப் பட்டத்தைச் சூட்டிக்கொண்டதன்பயனாக இந்தப் பிரயோகம் வழக்கில் வரவில்லை. அல்லது ரோம ஏகாதிபத்தியத்திற்கும் இது ஆரம்பத்தில் வழங்கப்படவில்லை. பிரபல ரோம சக்ரவர்த்தியான ஷார்லமேனுடைய சந்ததியைச் சேர்ந்த மஹா ஆட்டோ என்ற ஜெர்மானிய அரசன் 962–ம் வருஷத்தில் ரோமாபுரிக்கு வந்து 'ஜான் 12' என்ற போப்பரசரால் முடிசூட்டப் பெற்றான். அது முதற் கொண்டு, இவன், தனது ஜெர்மன் ராஜ்யத்தை 'தெய்விகத் தன்மை பொருந்திய ரோம ஏகாதிபத்தியம்' என்று சொல்லிக் கொண்டு வந்தான். போப்பரசருக்கும் தனக்கும் இருந்த நெருங்கிய தொடர்பைக் காண்பிப்பதற்காகவே 'தெய்விகத் தன்மை பொருந்திய' என்ற சொற்றொடரை இவன் தன் ராஜ்யத்திற்கு முன்னால் சேர்த்து உபயோகித்து வந்தான். தவிர, அந்தக் காலத்தில், ரோமாபுரியின் பெயரைச் சொல்லிக் கொள்வதிலே அவ்வளவு மகத்துவம் இருப்பதாகக் கருதப்பட்டது. இந்த 'தெய்விகத் தன்மை பொருந்திய' ரோம ஏகாதிபத்தியம் 19வது நூற்றாண்டோடு முடிந்துவிட்டது.

4. சிப்பாய்க் கலகம் 1857ம் வருஷம் நடைபெற்றது. பிரிட்டிஷ் ராணுவத்திலே சேவகம் புரிந்து கொண்டிருந்த சிப்பாய்களுக்குக் கொடுக்கப்பட்டிருந்த துப்பாக்கிகள் துருப்பிடிக்காமலிருக்க பசுவின் கொழுப்பையும் பன்றியின் கொழுப்பையும் உபயோகிக்குமாறு அதிகாரிகள் சொன்னதாகவும், இதைக் கேட்ட ஹிந்து முஸ்லீம் சிப்பாய்கள் வெகுண்டு கலகத்திற்குக்கிளம்பினார்களென்றும், தங்

களெல்லாரையுமே கிறிஸ்தவர்களாக்கி விடப் போவதாக இவர்கள் தவருக நினைத்ததாகவும், சிப்பாய்களுடைய இந்த அதிருப்தியைச் சில வெளியாட்கள் உபயோகித்து இவர்களைக் கலகத்துக்குத் தூண்டி விட்டதாகவும் சாதாரண சரித்திர புத்தகங்களில் எழுதி வைக்கப்பட்டிருக்கிறது. நமது பிள்ளைகளுக்கு இந்தக் கதையைத்தான் சொல்லிக் கொடுக்கிருர்கள். ஆனல் தேசியக் கண்ணும் தேசிய மனமும் படைத்தவர்கள், உண்மையான காரணங்கள் வேறு என்று நம்புகிருர்கள். 1848ம் வருஷத்திலிருந்து 1856ம் வருஷம் வரை கவர்னர்—ஜெனரலாயிருந்த லார்ட் டால்ஹௌஸியினுடைய 'நாடு பெருக்கின' முறைகளே இந்த எழுச்சிக்குக் காரணம். இதனைக் கலகம் என்று சொல்லாது 'தேசீய எழுச்சி' என்று சொல்வதுதான் பொருந்தும். இதைப் பற்றி அன்பர் இன்னும் சவிஸ்தாரமாக அறிந்து கொள்ள விரும்பினுல், சிறிது காலம் பொறுத்திருக்க வேண்டும், தமிழில் இது சம்பந்தமான நூல்கள் வெளிவருகிற வரை.

5. சிப்பாய் கலகம் எதற்காக எழுந்தது என்று கேட்ட நண்பர், கான்பூர் கலகம் எப்படி எழுப்பப் பட்டது என்று ஆழ்ந்த பொருளில் கேட்கிருர். அவ்வளவு ஆழமாக நாமும் இறங்க வேண்டுமென்ற ஆசைதான். ஆனல் பக்கம் நீண்டு கொண்டு போகிறதே. 1931ம் வருஷம் மார்ச்சு மாதம் 24ந் தேதி முதல் 30ந் தேதி வரை கான்பூரில் கோரமான கலகம் நடைபெற்றது. இது ஹிந்துக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் ஏற்பட்ட கலவரமாகக் கொதித்தெழுந்தது. மேற்படி வருஷம் மார்ச் மாதம் 24ந் தேதி பகத்சிங் தினம் நாடெங்கனும் கொண்டாடப் பட்டது. அது போல், கான்பூரிலும் கொண்டாடப் பட்டது. கடையடைப்பு, ஊர்வலம் முதலியன நடைபெற்றன. இதில் முஸ்லீம்கள் கலந்து கொள்ளவில்லை. கேட்க வேண்டுமா? பெரிய கலகம் தொடங்கி விட்டது. பொய் வதந்திகள், இந்தக் கலக நெருப்புக்கு பெட்ரோல் மாதிரி சேர்ந்து கொண்டன. இந்தக் கலகத்திலே உயிர் துறந்தவர்தான் பாபு கணேச சங்கர வித்யார்த்தி என்ற மஹா தியாகி.

6. மீரத் சதி வழக்கைப்பற்றி பண்டித ஜவஹர்லால் நேரு, தமது சுய சரித்திரத்தில் எழுதுகிற போது என்ன சொல்கிருர்:—

'முற்போக்கான அபிப்பிராயங்களைக் கொண்ட சில தொழிலாளர் தலைவர்களைக் கைது செய்வதன் மூலம், தொழிலாளர் இயக்கத்தை 1929ம் வருஷம் மார்ச் மாதம் ஒடுக்க ஆரம்பித்தனர் அரசாங்கத்தார். பம்பாய் கிர்னிகாம்கார் யூனியன் தலைவர்களேயும், வங்காளம், ஐக்கிய மாகாணம், பஞ்சாப் ஆகிய மாகாணங்களிலுள்ள தலைவர்களையும் கைது செய்தனர். இவர்களில் சிலர் பொதுவுடைமை வாதிகள்; இன்னுஞ் சிலர், பொதுவுடைமைத் தத்துவத்திற்கு அருகாமையில் நிற்பவர்கள்; மற்றவர்கள் தொழிலாளர் கட்சியினர். இதிலிருந்துதான், பிரபலமான மீரத் சதி வழக்கு ஆரம்பமாயிற்று. இது நாலரை வருஷ காலம் நடைபெற்றது.'

நண்பர், இப்பொழுது இதனைக் கொண்டு சமாதானம் அடைவாரா? இந்த மீரத் சதி வழக்கில் சம்பந்தப் பட்டவர் நூற்றுக் கணக்கான பேர். செலவழிந்த தொகை ஆயிரக் கணக்கு.

—ஆசிரியர்

தப்புவதற்கு வழி உண்டா?

அன்புள்ள ஐயா,

நான் ஒரு நாடோடி. நண்பர்கட்குக் கூடியவரை கடிதங்கள் எழுதி வருகின்றேன். சில சமயங்களில் 'காபி'க்குச் செலவிடும் பணத்தைக் கூட மீதம் பிடித்துக் கடிதம் எழுதியிருக்கிறேன். அப்படியிருந்தும் பல நண்பர்கள் கடிதம் எழுதவில்லை என்று என் மீது குற்றப் பத்திரிகை படிக்கின்றனர்.

கடிதம் எழுதுவது ஒரு தனிக் கலை. அதில் எனக்குப் போதிய பயிற்சியில்லை. எதைப் பற்றி எழுதுவதென்று யோசிப்பது பெருந் தொல்லை. தன்னைப் பற்றி எழுதினால் தற்புகழ்ச்சி என்கிறார்கள். பிறரைப் பற்றி எழுதினால் குற்றம் கூறுவதாகக் கருதுகிறார்கள். ஒன்றுமே எழுதாதிருந்து விட்டால் 'கர்வம் பிடித்தவன்' என்ற பட்டத்தைச் சூட்டி விடுகிறார்கள். இந்த நிலையினின்று நான் தப்புவதற்கு உங்கட்கு ஏதேனும் வழி புலனாகின்றதா?

உண்மையுள்ள

—'நாடோடி'

ஒரே ஒரு வழிதான் புலனாகிறது. கொஞ்ச காலம் வரை மௌனத்தில் சரண் புகுந்து கொள்ளட்டும் நண்பர். கடிதம் எழுதுவதிலே மட்டும், இந்தச் சிரமம் இருக்கிறதாக நண்பர் நினைக்க வேண்டாம். சாதாரணமாகச் சம்பாஷணை செய்வது முதல் எல்லாவற்றிலும் இந்தக் கஷ்டம் இருக்கத்தான் செய்கிறது. தாராளமாகப் பேசினால், 'வாயாடிப் பேர்வழி' என்கிறார்கள். சொல்வனவற்றையெல்லாம் கிரகித்துக்கொண்டு, ஓரிரண்டு வார்த்தைகள் மட்டும் பதில் சொன்னால் 'ஆழ்ந்த பேர்வழி' என்கிறார்கள். அப்படியுமில்லாமல் இப்படியுமில்லாமல், ஏதோ பேச்சுக்குப் பேச்சு கொடுத்துக்கொண்டு போனால் 'இவனுக்கென்று சொந்த அபிப்பிராயமில்லை; வெண்டைக்காய் சாம்பார்' என்கிறார்கள். என்னதான் செய்வது? இதற்கு மேனாட்டுப் பத்திரிகாசிரியர் ஒருவர் என்ன பரிகாரஞ் சொல்கிறார் என்றால், 'நீ பேசுகிறது முக்கியமல்ல; மற்றவர்கள் பேசுகிறபோது நீ உன் முகத்தை எப்படி வைத்துக் கொள்கிறாய் என்பதுதான் முக்கியம்' என்கிறார். அதைப்போல, நாமும் நமது நண்பருக்கு, 'நீங்கள் கடிதங்கள் எழுதுவதும் எழுதாமலிருப்பதும் அவ்வளவு முக்கியமல்ல; உங்கள் பேனா முனையை, எவ்வளவு கூர்மையாக வைத்துக்கொண்டிருக்கிறீர்கள் என்பதுதான் முக்கியம்' என்று கூறுவோம்.

—ஆசிரியர்

கோச்சியில் முன்னேற்றம்

ஐயா,

கொச்சி சமஸ்தான அரசர், பரம வைதிகம் என்பதற்காகவும், ஹரிஜனங்களின் ஆலயப் பிரவேச சம்பந்தமாக அவர் கொண்டுள்ள மனப்பான்மை காரணமாகவும், அவர் மீது பலருக்கு அதிருப்தி ஏற்பட்டிருக்கிறது வாஸ்தவம். ஆனால், சமீபத்தில் அவர், தமது சமஸ்

தான நிருவாகத்தில், உத்தியோகஸ்தரல்லாதாரும் பங்கெடுத்துக் கொள்ள உரிமை கொடுத்திருக்கிறாரே, அதற்காக அவரைப் பாராட்ட வேண்டாமா?

—பி. துமாரன்

தாராளமாகப் பாராட்டிக் கொள்ளட்டுமே அன்பர். யார் வேண்டாமென்று இவர் கையைப் பிடித்துத் தடுத்தார்கள்? இந்தக் கடிதத்திற்கு 'கொச்சியில் முன்னேற்றம்' என்று தலைப்புக் கொடுத்திருக்கிறார். அதிலிருந்தே இவருடைய மனப்பான்மை நன்றாக வெளியாகிறது. சமஸ்தான நிருவாகத்தில் திவானுக்கு உதவி செய்ய, உத்தியோகஸ்தரல்லாதார் ஒருவர் நியமிக்கப் படுவது இவருக்கு ஒரு பெரிய முன்னேற்றமாகத் தென்படுமானால், இந்தியாவின் பூரண சுயராஜ்ய லட்சியத்தைக் கண்டு இவர் எவ்வளவு தூரம் மருண்டிருக்கிறார் என்பதை ஊகித்துக் கொள்ளலாம். இந்த அரசியல் சீர்திருத்தம், கொச்சி மகாராஜாவினுடைய தாராள மனப்பான்மையைக் காட்டுகிறது என்று சொல்வதை விட, கால சக்கரம், சநாதனிகளின் பூர்ண கும்பத்தினால் சர்வ மங்களங்களையும் பெற்றிருக்கும் கொச்சி மகாராஜாவைக் கூட மாற்றி விட்டது என்று சொல்வது பொருந்தும்.

—ஆசிரியர்

எப்படியாகுமோ?

ஐயா,

இப்பொழுது ஹரிபுரா காங்கிரஸுக்கு, ஆங்காங்கு நடைபெற்ற பிரதிநிதிகளின் தேர்தலில் அபேதவாதக் கட்சியினர் பலர் வெற்றி பெற்று வந்திருக்கின்றனர். இவர்களுடைய எண்ணிக்கையும், செல்வாக்கும் பிரதி வருஷமும் விருத்தி யடைந்து கொண்டுவருகின்றன. இந்தக் கட்சி இப்படியே வளர்ந்து கொண்டு போகும் என்று நினைக்கிறீர்களா? அல்லது காங்கிரஸின் செல்வாக்கு அதிகமாக, ஆக இந்த அபேதவாதக் கட்சி தானாகவே ஒடுங்கி விடுமென்று கருதுகிறீர்களா?

—கே. நாராயணசாமி

அன்பர் ஒரு பெரிய பிரச்னையைக் கிளப்பி விட்டிருக்கிறார். இவர் எந்தக் கட்சியைச் சேர்ந்தவர் என்பது நமக்குத் தெரியாது. ஆனால் அதைப்பற்றி நமக்குக் கவலையுமில்லை. அபேதவாதக் கட்சி வலுத்து வருகிறதென்றால், அது, தேசம் எவ்வளவு தீவிரமாக முன்னேற ஆவல் கொண்டிருக்கிறதென்பதையே காட்டுகிறது. அரசியல் நியதிப்படி, இந்தக் கட்சி, இப்பொழுதில்லா விட்டாலும் கொஞ்ச காலத்தில், செல்வாக்குப் பெற்றுத் தானாக வேண்டும். காங்கிரஸாகட்டும் காந்தியாகட்டும், தேசத்தின் முன்னேற்ற சக்திகளோடு ஐக்கியப்படா விட்டால்—ஆனால் ஐக்கியப்படாவிட்டால் என்ற கேள்வி எழக்கூடிய நிலைமையே ஏற்படாதென்று நாம் திடமாக நம்புகிறோம்—பின் தங்கியிருக்க வேண்டியதுதான். இன்னும் சில வருஷங்களில், காங்கிரஸ் கட்சி வேறு, அபேதவாதக் கட்சி வேறு என்று பிரிக்கமுடியாத ஒரு நிலைமை ஏற்படுமானால் அதைக் குறித்து யாருமே ஆச்சரியப் படத்தேவையில்லை.

—ஆசிரியர்

நமது அரசியல் டைரி

காங்கிரஸ் காரிய கமிட்டி தீர்மானங்கள்

காங்கிரஸ் காரிய கமிட்டி கூட்டம், பம்பாயில் 1938ம் வருஷம்ஜனவரி மாதம் 2-ந் தேதி முதல் 4-ந் தேதி வரை கூடியது. அப்பொழுது கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன:—

1. அரசியல் கைதிகளை விடுதலை செய்ய வேண்டு மென்றும், அடக்கு முறைச் சட்டங்களை ரத்து செய்ய வேண்டு மென்றும், கல்கத்தாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டம் நிறைவேற்றிய தீர்மானத்தைக் காரிய கமிட்டி பரிசீலனை செய்து பார்த்தது. எல்லா மாகாணங்களிலு முள்ள நிலைமையையும், தற்போதைய கஷ்டமான நிலைமையையும் கமிட்டியார் சீர் தூக்கிப் பார்த்த பின்னர், காங்கிரஸ் மந்திரிமார்கள் தற்போதுவரை செய்திருக்கிற வேலைகளை அங்கீகரிப்பதென்ற முடிவுக்கு வருகின்றனர். பிரஜா உரிமையை விசாலப் படுத்தும் விஷயத்திலும், காங்கிரஸ் திட்டத்தை நடைமுறையில் கொணரும் விஷயத்திலும் மந்திரிமார்கள் செய்து வரும் வேலையை இந்தக் கமிட்டி பாராட்டுகிறது. இந்த முயற்சிகளைக் காங்கிரஸ் மந்திரிமார்கள் தொடர்ந்து செய்வார்களென்றும், இதற்கு எல்லாக் காங்கிரஸ் காரரும் ஒத்துழைப்பார்களென்றும் கமிட்டியார் எதிர் பார்க்கின்றனர்.

இந்த மாதிரியான வழிகளில் துரிதமான முன்னேற்றத்தை யடையவும், சுய ராஜ்யப் போராட்டத்தில் காங்கிரஸ் ஸ்தாபனங்களைப் பலப்படுத்த வேண்டு மென்பதற்காகவும், காங்கிரஸின் அஹிம்ஸா தர்மக் கொள்கையை உறுதியாகப் பின் பற்ற வேண்டியது அவசியமா யிருக்கிறது. மற்றும், பலாத்காரத்தைத் தூண்டி விடக் கூடிய எல்லாச் செயல்களையும் இந்தக் கமிட்டி கண்டிக்கிறது. தேசத்தில் ஒழுங்கான வேலைகள் நடைபெறுவதற்கு எல்லாக் காங்கிரஸ் கமிட்டிகளும், எல்லாத் தனிப்பட்ட காங்கிரஸ் நபர்களும் ஒத்துழைக்க வேண்டு மென்று இந்தக் கமிட்டி கோருகிறது. காங்கிரஸின் அஹிம்ஸா தர்மத்திற்கு விரோதமாக நடக்கும் எந்தக் காங்கிரஸ் காரரையும் இந்தக் கமிட்டி எச்சரிக்கை செய்கிறது. அவசியமானால், காங்கிரஸ் கொள்கைகளுக்கு விரோதமாக நடக்கும் எந்தக் காங்கிரஸ்காரர் மீதும் தக்க நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ள வேண்டு மென்று காங்கிரஸ் கமிட்டிகளுக்கு காரியக் கமிட்டி கூறுகிறது.

பிரஜா உரிமைத் தத்துவத்தையும், அடக்கு முறையை விட ஜனங்களை நல்ல முறையில் திருப்புவது என்ற கொள்கையையும் மனத்தில் கொண்டு காங்கிரஸ் மந்திரிச் சபைகள் காரியங்களை நடத்த வேண்டும். ஆனால்,

அடக்கு முறை அவசியமான தென்ற நிலைமையில், காங்கிரஸ் மந்திரி சபைகள் அவைகளைப் பிரயோகிக்கத்தான் வேண்டும். பலாத்காரம் நிகழ்ந்தாலோ, அல்லது பலாத்காரத்திற்குத் தூண்டுதல் செய்தாலோ, அல்லது வகுப்புச் சச்சரவு ஏற்பட்டாலோ, மந்திரிச் சபைகள் அடக்கு முறைகளை உபயோகிக்கலாம்.

2. பீஹார் மாகாணத்தில் கிருஷிகர் சபையினர் செய்யும் சில காரியங்களைப் பற்றி பீஹார் மாகாண காங்கிரஸ் கமிட்டியார் நிறைவேற்றியிருக்கும் தீர்மானத்தைக் கமிட்டியார் கவனித்தனர். இது சம்பந்தமாக வந்த மற்ற மகஜர்களையும் கவனித்தனர். கிருஷிகர்கள், தங்களுடைய நலனுக்கென்று கிருஷிகர் சபைகள் அமைத்துக் கொள்ளும் உரிமையை காங்கிரஸ் அங்கீகரிக்கிறது. ஆனல் காங்கிரஸின் அடிப்படையான தத்துவங்களுக்கு விரோதமாக நடைபெறும் எந்தக் காரியங்களையும் காங்கிரஸ் அங்கீகரிக்க முடியாது. கிருஷிகர் சபையினரோடு சேர்ந்து கொண்டு பலாத்கார நிலைமையை உண்டு பண்ணுவதற்குக் காரணமாயிருந்த சில காங்கிரஸ்காரர்களின் செயல் ஒழுங்கீனமானதென்று பீஹார் மாகாண காங்கிரஸ் கமிட்டியார் நிறைவேற்றிய தீர்மானத்தை, காரியக் கமிட்டி அங்கீகரிக்கிறது. இந்த மாதிரியான நபர்களின் மீது, முன்னெச்சரிக்கை செய்து விட்டு, ஒழுங்கு நடவடிக்கைகள் எடுக்க வேண்டியவது அவசியம்.

3. சமீபத்தில் நடைபெற்ற காங்கிரஸ் தேர்தல்களில் சில மாகாணங்களில், சில அபேட்சகர்களும் அவர்களுக்கு ஆதரவு காட்டுவோரும் பலாத்கார முறைகளைக் கையாண்டதைக் குறித்து இந்தக் கமிட்டி பெரிதும் வருந்துகிறது. காங்கிரஸ்காரர்கள் இங்ஙனம் நடந்து கொள்வதை ஒருபோதும் அங்கீகரிக்க முடியாது. மாகாண காங்கிரஸ் கமிட்டிகள் இது சம்பந்தமாக விசாரணை செய்து கண்டிப்பான நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டும்.

51-வது காங்கிரஸ்

தலைவர்— ஸ்ரீ சுபாஷ் சந்திர போஸ்.

கூடும் இடம்—வித்தல் நகர் ஹரிபுரா.

தேதி— 1938ம் வருஷம் பிப்ரவரி மாதம் 19, 20, 21, தேதி.

அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி அங்கத்தினர்கள்-பர்மாவிலிருந்து

1. பி. கே. தாதா சான்ஜி.
2. ராமேச நாத் சௌதமர்
3. ஸ்ரீ சுனிராம் பொத்தா
4. ஜனார்த்தன பி. சுக்லா

புதிய பிரெஞ்சு மந்திரி சபை

பிரான்ஸில், மந்திரி சபைகள் அடிக்கடி கலைவதும் கூடுவதும் சகஜமென்பதை நேயர்கள் அறிவார்கள். பழைய மந்திரி சபை கலைக்கப்பட்டு 18-1-38ல் புதிய மந்திரி சபை அமைக்கப்பட்டது.

சௌடெம்ப்ஸ்—பிரதம மந்திரி.
டலாடீர்—யுத்த மந்திரி.
டெல்போஸ்-அந்நிய நாட்டு மந்திரி



அறிவுத்துறை

உலகத்தை நிறுப்பதெப்படி?

—"விஞ்ஞான போதகர்"

இயற்கையான இழுக்குஞ் சக்திகள் யாவை?

இப்பூலோகத்தில் இயற்கையாக ஏற்பட்டிருக்கும் இழுக்கும் பலாத்கார சக்திகளை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அதாவது (அ) பதார்த்தங்கள் ஒன்றையொன்று இழுக்குஞ் சக்தி, (Gravitational force) (ஆ) மின்சார சக்தி (இ) காந்த சக்தி என்பனவாம். இவைகளில் காந்த சக்தியானது, காந்த சக்தியற்ற ஒரு சில வஸ்துக்களையும் காந்த சக்தியுள்ள வஸ்துக்களில் ஒரே தன்மை வாந்த பொருள்களையும் தூரத் தள்ளும்; வேறு தன்மை வாய்ந்த பொருள்களைத் தன்னுடன் இழுத்துக் கொள்ளும். இந்த இரண்டு குணமும் காந்த சக்திக்குண்டு. அது போலவே, மின்சாரப் பொறியில் இரண்டு மின்வன்மைகள்—ஆகு மின்னல் (Positive) ஏகு மின்னல் (Negative)—தாவிக்கொண்டுதான் மின்

> **இழுக்குஞ்சக்திகள் யாவை?**
> **அவற்றின் விதி என்ன?**
> **பூமியின் நிறை எவ்வளவு?**
>
> இந்த விஷயங்களெல்லாம் இந்தக் கட்டுரையில் கூறப்பட்டிருக்கின்றன.

சாரசக்தியாலான பலனேற்படுகிறது. இவ்விரண்டு சக்திகளுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. இதனைப்பற்றி வேறொரு சமயம் விவரிப்போம். மின்சாரம், காந்தம் இவைகளுக்குண்டான இழுக்குஞ் சக்திகளைவிட, பதார்த்தங்கள் ஒன்றுக் கொன்று இழுக்குஞ் சக்தி, மிக மிக அற்பமென்றே கூறவேண்டும்.

ஒரு மேஜையின் மீது இரு புத்தகங்கள் சமீபமாக இருந்தால் அவைகள் இரண்டும் ஒன்றை யொன்று இழுத்துக் கொண்டிருக்கின்றனவென்றால் நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்! ஆனால் அது சாஸ்திர உண்மை. ஒன்றையொன்று இழுக்குஞ் சக்தி மிகவும் அற்பமானதாலும், கரடுமுரடான மேஜையின் நகர்வதைத்தடுக்கும் சக்தி (Friction) அதிகமானதாலும், புத்தகங்களிரண்டும் நெருங்கி வரக்கூடாமல் இருந்த விடத்திலேயே யிருப்பதைப் பார்க்கிறோம். அது போலவே இதர வஸ்துக்களும் ஒன்றையொன்று இழுக்குஞ் சக்தியாலான சமீபித்தலை உணர்த்த முடியாதிருக்கின்றன. ஆனால் ஒரு பொருள் உலகத்தைப்போல் அவ்வளவு பிரமாண்டமானதாகவும், மற்றது நாமறிந்த ஓர் உருவமாகி வேறு எந்த சக்தியும் அதனைத் தடுக்காமல் அந்தரமாயிருந்தால், பெரிய பொருளின் இழுக்குஞ் சக்தி அதிகமாகி சிறிய பொருளை அது இழுத்துக் கொள்ளுவதை நாம் பார்க்க முடியும். முன்பு 'ஜோதி' யில் 'சிறிய கல் கீழே வருவதேன்?' என்ற கேள்விக்கு பூமியின் இழுக்குஞ் சக்தியே காரணமென்று விரிவாகக் கூறியிருக்கிறோம். பூமி மிகவும் பிரமாண்டமானதால் அதன் மீதிருக்கும் அல்லது சிறிது தூரத்தில் அந்தரமாயிருக்கும் பொருள்களைத் தன்னுடன் இழுத்துக் கொள்ளும் வல்லமையுடையதாயிருக்கிறது. பூலோகத்தின் இவ்வரிய சக்தியின் உதவியால்தான் நாமும், நம்மைச் சார்ந்த வஸ்துக்களும், பூமி தன்னைத்தானே சுற்றிக் கொண்டுவந்த போதிலும், நம்மிருப்பிடத்தைவிட்டு அந்தரமாய் விலகியோடாமலிருக்கிறோம் என்பதை நினைக்க, நாம் எவ்வளவு சந்தோஷப் படவேண்டி யிருக்கிறது!

இது போலவே இப்பிரபஞ்சத்தில் அந்தரமாய்த் தோன்றி நிற்கும் விண்மீன் முதல் சூரியன் வரை ஒன்றுக்கொன்று இழுக்குஞ் சக்தி யுள்ளது. அவ்வாறானால் சூரியன் எல்லா கிரகங்களை விட பெரிதாயிருந்தும் அந்தரமாய் நிற்கும் இதர கிரகங்களைத் தன்னோடு இழுத்துக் கொள்ளாமலிருப்பதேன்? இது ஒரு நியாயமான கேள்வி. சகல கிரகங்களும் சூரியனைச் சுற்றி வேகமாய்ப் போய்க் கொண்டிருக்கின்றன. நாம் ஒரு கல்லை உறுதியான கயிற்றால் பிணித்துச் சுற்றினால் கட்டுண்டு சுழலும் கல் நம்மீது வந்து விழுவதில்லை. ஆனால் அப்படிச் சுற்றுவதைத் திடீரென்று நிறுத்தினால் மட்டும் நம்மீது வந்து விழுகிறது. அது போலவே பூலோகம் உள்பட சகல கிரகங்களும் சூரியனைச் சுற்றிக் கொண்டிருக்கிற வேகமானது சூரியன் இழுக்கும் வேகத்தை எதிர்த்துக் கொண்டேயிருப்பதால் கிரகங்கள் கீழே விழுந்து தவிடு பொடியாகாமலும், சூரியனில் சென்று ஐக்கியப் படாமலும் அந்தரத்திலேயே இருந்து வருகின்றன.

கனம் என்பது யாது?

நிறை என்பது யாது?

சாதாரணமாக ஒரு பொருளைக் கையிலேந்தி ஒருவாறு அதன் 'கனத்'தின் அளவைக் கூற முயலுகிறோம். நாம் அவ்வாறு கையிலேந்தியிருக்

கும் பொருளை, பூமி, தன் இழுக்குஞ் சக்தியினால் இழுத்துக் கொண்டேயிருக்குமல்லவா? பூமியின் இழுக்குஞ் சக்தி, நாம் கையிலேந்தியுள்ள பொருளின் பதார்த்த அடர்த்திக்குத் தகுந்தவாறு இருக்கும். ஒரு சிறிய கல்லைக் காட்டிலும் ஒரு சிறிய ஈயக் குண்டை பூமி அதிகமாயிழுப்பதால் ஈயக் குண்டு கல்லை விட கனமானதென்று கூறுகிறோம். ஆகவே ஒரு பொருளின் கனத்தை நிதானிப்பதற்கு பூமியின் ஆகர்ஷண சக்தியே காரணமாயிருக்கிறதென்று அறிகிறோம். இப்பொழுது இரண்டு பொருள்களின் கனத்தின் தாரதம்மியத்தையுணர, ஒரு சமயம் அவைகளைத் தனித் தனியே கையிலேந்திப் பார்க்கிறோம். ஆனால் அநேகமாய் இரண்டு பொருள்களையும் இருகையிலுமேந்தி அவைகளின் கனங்களின் ஒருமையைக் கூற முயலுகிறோம். அப்பொழுது பூமி இரண்டு பொருள்களையும் இழுக்கத்தான் செய்கிறது. ஒரு பொருள் மற்றப் பொருளைவிட நிறையில் அதிகமாயிருந்தால் அதிக நிறையுள்ள பொருள் அதிகமா யிழுக்கப்பட்டு, குறைந்த நிறையுள்ளது குறைவாயிழுக்கப்பட்டு அவைகளின் கனத்தின் தாரதம்மியத்தை உணர்த்துகின்றன. ஆகவே ஒரு பொருளின் கனத்தைக் காண அப்பொருள் தனியாக பூமியில் இழுக்கப்பட வேண்டும். இதற்காக முதற் படத்தில் காட்டியிருக்கும் 'ஸ்பிரிங் பாலென்ஸ்' (Spring Balance) என்ற இழுப்புத் தராசு உபயோகப் படுகிறது.

இரண்டு பொருள்கள் ஒரே நிறையை யுடையதனால் அவைகளைப் பூமி ஒரே அளவுடன் இழுக்கிறது. இதற்காக நாம் சாதாரணமாகப் பார்க்கும் இரண்டு தட்டுகளையுடைய தராசில் ஒன்றை ஒரு தட்டிலும் மற்றதை மறு தட்டிலும் வைத்து? அவைகளின் நிறையைச் சரி பார்க்கிறோம். சாதாரணமாக ஒரு தட்டில் ஒரு சாமானும் மறு தட்டில் படிக்கல்லும் வைத்துச் சரி பார்க்கப் படுகிறது. படிக்கல்களெல்லாம், முன்னே குறிப்பிட்ட இழுப்புத் தராசினால் பொருள்களின் கனத்தைக் குறிப்பிடுகின்றன. ஒரு தட்டுத் தராசிலுள்ள இரு சாமான்களையும் பூமி ஒரே அளவுடன் இழுப்பதால் பூமியின் இழுக்குஞ் சக்தி இருபுறத்திலும் சரிப்படுத்தப் படுகிறது.

இதனால் பூமியின் இழுக்கும் சக்தி தெரிவதில்லை. ஆதலால் இரு தட்டுத் தராசில் ஒரு பொருளின் கனத்தைத் தெரிந்து கொள்ள முடிவதில்லை.


படம்-1

ஆனால் ஒரு பொருளின் நிறை அதாவது மற்றொரு பொருளின் பதார்த்த அடர்த்திக்குச் சமானமாயுள்ளதைமாத்திரம் தெரிந்து கொள்கிறோம். இதனால் 'கனம்' என்பது பூமி இழுக்கும் சக்தியின் காரணமாயுள்ளதென்றும், 'நிறை' என்பது அந்தப் பொருளின் அடர்த்தி அளவின் காரணமாயுள்ளதென்றும் உணருகிறோம்.

ஒரு வீசை நிறையுள்ள ஒரு பொருள் உலகில் எங்கும் (இரு தட்டுத் தராசால் நிறுக்கப்பட்டு) ஒரே அளவையே காட்டும். ஆனால் அதன்கனம் (இழுப்புத் தராசால் நிறுக்கப்பட்டு) பூமியின் இழுக்கும் பலம் உலகத்தில் பலபாகங்களிலும் ஒரே விதமாயில்லாததால் வித்தியாசப்படும். இப்பொழுது ஒரு பொருளை மத்திய ரேகையிலிருந்து வட



அ படம்-2 ஆ

அல்லது தென் துருவத்திற்குக் கொண்டு செல்லுகிறோமென்று வைத்துக் கொள்வோம். அப்பொருளின் நிறை குறைவதோ கூடுவதோ யில்லை. ஆனால் அதன் கனம் அதிகரித்துக் கொண்டே போகும். காரணம்? வட தென் துருவங்கள் கொஞ்சம் தட்டையா யிருப்பதாலும், மத்திய ரேகையில் விரிந்திருப்பதாலும் பூமியின் மத்தியிலிருந்து துருவங்கள் சமீபத்திலும், மத்திய ரேகை சிறிது தூரத்திலு மிருக்கின்றன. ஆகவே துருவங்களை யடுத்து பூமி அதிகமாகவும், மத்தியரேகையை யடுத்துக் குறைவாகவும் இழுக்கும் சக்தி வாய்ந்திருக்கிறது. இதனால் பொருள்கள் மத்திய ரேகையை யடுத்து குறைந்த கனத்தையும், துருவங்களையடுத்து அதிக கனத்தையும் காட்டும். கனத்தின் தாரதம்மியத்தை இழுப்புத் தராசால்தான் காண முடியும். ஆனால இருதட்டுத் தராசால் நிறுத்துப் பார்ப்போமானால் நிறையில் குறைவில்லாமலிருக்கும். ஆகவே இழுப்புத் தராசு, ஒரு பொருளின் கனத்தையும், இருதட்டுத் தராசு (படம்- 2) ஒரு பொருளின் பதார்த்த அடர்த்தியின் நிறையையுங் காட்டுகின்றது.

இழுக்கும் சக்தியின் விதியாது?

இதுகால் பூமியின் இழுக்குஞ் சக்தியைப் பற்றி விரிவாக ஆராய்வோம். இப்பொழுது அதன் விதி அல்லது கோட்பாட்டை விளக்குவோம். ஆங்கிலேய சாஸ்திர நிபுணர் சர் ஐஸக் நியூட்டன் (1642—1727) என்பவர் பிரபஞ்சத்திலுள்ள சகல வஸ்துக்களிலும் ஒன்றுக் கொன்று ஏற்பட்டுள்ள இழுக்குஞ் சக்தியை முதன் முதலில் உணர்ந்தார். இவ்வாராய்ச்சி முக்கியமாக வான சாஸ்திரத்திற்கு அடிப்படையாக ஏற்பட்டது. அவருடை ஆராய்ச்சியின் பிரகாரம்

(அ) எப்பொருளும் மற்றொரு பொருளை இழுக்குஞ் சக்தி வாய்ந்தது.

(ஆ) இழுக்குஞ் சக்தி இருபொருள்களின் நிறையைப் பொறுத்திருக்கிறது.

(இ) இழுக்குஞ் சக்தி இருபொருள்களின் தூரங்களை இருதரம் பெருக்கி வரும்தொகை ஒன்றின் கீழ்வரும் பின்னமான (Inversely as the Square of their distance) வீதத்தைப் பொறுத்திருக்கிறது.

அ, ஆ நிறையுடைய இருபொருள்கள் து தூரத்திலிருந்தால் நியூட்டன் விதிப்பிரகாரம், அவைகளின் இழுக்குஞ் சக்தி $\frac{அ \times ஆ}{து \times து} = \frac{அ\ ஆ}{து\ 2}$ என்ற விகிதமாகிறது. இவ்விகிதமாக இழுக்

குஞ் சக்தியை வேறுவிதமாகக் கூறுமிடத்து 3வது படத்தில் காட்டியுள்ள



படம்-3

வாறு அ, ஆ என்ற இரு பொருள்கள் ஒருஅடி தூரத்திலிருந்து ஒன்றை யொன்று இழுக்குஞ் சக்தி 16 என்று வைத்துக் கொண்டால், அவைகள் 2 அடி தூரத்திலிருந்தால் அவைகளின் இழுக்குஞ் சக்தி 4 என்றும், 4 அடி தூரத்திலிருந்தால் இழுக்குஞ் சக்தி 1 என்றும் ஆகிறது. திருப்பிக்கூற வேண்டுமானால் 4 அடி தூரத்திலிருக்கும் இருபொருளின் இழுக்குஞ் சக்தி 2 என்றால், அவைகள் 1 அடி தூரத்திலிருந்து 4 × 4=16 வீதத்துடன் இழுத்துக் கொண்டிருக்கின்றன. இதுவே நியூட்டனின் ஆகர்ஷண சக்தி விதிகளின் சாராம்சம். இவ்வாறு பதார்த்தங்கள் ஒன்றை யொன்று இழுக்குஞ் சக்தியைக்கண்டு அளவிட முடிந்திருப்பினும், காரணத்தை ஒருவரும் விளக்கவில்லை. கூடிய சீக்கிரம் அதுவும் தெரிந்துவிடலாம்.



படம்-4

அ, ஆ என்ற இரு பொருளின் நிறையின் அளவை நியூட்டன் விதிப்படி தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவைகளிரண்டும் தனித் தனியே மூன்றாவதோர் பொருளை இழுக்கும் சக்திகளைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

அ, ஆ வும் மூன்றாவதோர் பொருள் உ விலிருந்து முறையே து, தூ தூரத்திலிருக்கின்றன வென்று வைத்துக் கொள்ளுவோம். நியூட்டன் விதியின் படி அ, உ வுக்குமுள்ள இழுக்கும் சக்தி இ யின் விகிதம் $\frac{அ \times உ}{து^{2}}$ என்றாகிறது.

அது போலவே ஆ, உ வுக்குமுள்ள இழுக்குஞ் சக்தி ஈ யின் விகிதம் $\frac{ஆ \times உ}{தூ^{2}}$ என்றாகிறது. இப்பொழுது இவ்விரு சக்திகள் இ, ஈ யையும் வகுத்தால்:

$$\frac{இ}{ஈ} = \frac{அ \times உ}{து^{2}} \div \frac{ஆ \times உ}{தூ^{2}}$$

$$\frac{இ}{ஈ} = \frac{அ \times உ \times தூ^{2}}{ஆ \times உ \times து^{2}} = \frac{அ\, தூ^{2}}{ஆ\, து^{2}}$$

$$\therefore \frac{அ}{ஆ} = \frac{இ\, து^{2}}{ஈ\, தூ^{2}}$$

ஆகவே அ, உ இவைகளுக்குள்ள இழுக்குஞ் சக்தி இ யும் அவைகளின் தூரம் து வும்; ஆ, உ இவைகளுக்குள்ள இழுக்குஞ் சக்தி ஈ யும் அவைகளின் தூரம் தூ வும் என்று தெரிந்துகொண்டால் அ, ஆ இரு பொருள்களின் நிறைகளின் $\frac{அ}{ஆ}$ அளவைத் தெரியலாமல்லவா? அதிலும் அவைகள் ஒன்றின் அ அல்லது ஆ வின் நிறை தெரிந்தால் மற்ற பொருளின் நிறையை எளிதில் கணக்கிட முடியும். இதில் து, தூ தூரங்களை எளிதில் அளக்க முடியும். இ, ஈ என்ற இரு இழுப்பு

களை மாத்திரம் அளவிட முடிந்தால் நமது கணக்கை எளிதில் கண்டுவிடலாம். ஆனால் இரு சிறு பொருள்களில் உண்டான இழுக்குஞ் சக்திகள் மிக மிகச் சிறிதானதால் அதனை அளவிடக்கூடிய அவ்வளவு நுட்பமான தராசு வேண்டுவதவசியம்.

பூமியின் நிறை யென்ன ?

பூமியின் நிறையைப் பற்றித் தெரிந்து கொள்ளு முன் ஒரு விஷயம் நாமறிந்து கொள்ள வேண்டும். அதாவது பூமிக்கு நிறையுண்டு; கனமில்லை. பூமி உருண்டையா யிருப்பதனால் அதன் மத்தியிலிருந்து ஒரு புறம் இருக்கும் பதார்த்த அடர்த்தியைப் போல மறுபுறமு மிருப்பதால் பூமியின் இழுக்குஞ் சக்தி நாலாபக்கமும் சரிசமானமாய் பதார்த்தத் துண்டுகளை இழுத்துக் கொண்டிருக்கிறது அதாவது பூமியின் மத்திக்கு வலது பக்கமாய் ஒரு சிறு பூமியின் பாகம் பூமியின் மத்தியை நோக்கி இழுக்கப் படுவது போலவே மற்றொரு பாகம் இடதுபுறமாய் பூமியின் மத்தியை நோக்கி இழுக்கப் படுகிறது. இவ்வாறு பூமியின் சகல பாகமும் பூமியின் மத்தியை நோக்கி இழுக்கப்பட்டு மொத்தத்தில் பூமியின் இழுக்குஞ் சக்தி பூமி சம்பந்தப் பட்டவரையில் இல்லாமல் போகிறது. எப்பொழுது பூமியின் இழுக்குஞ் சக்தி வராமல் போகிறதோ அப்பொழுது கனம் என்பது இல்லாமல் போகிறது.

பூமி மிகவும் பிரமாண்டமானது. அது அதன் மேலுள்ள சகல பொருள்களையும் அவைகளின் கனத்திற்குத் தகுந்தவாறு இழுத்துக் கொண்டிருக்கிறது. அதாவது ஒரு வீசை நிறையுள்ள சாமானை ஒரு வீசை கனத்துடன் கீழே இழுக்கிறது. இவ்வாறே மற்றவைகளும் இழுக்கப் படுகின்றன. இவ்வாறு பூமியால் இழுக்கப்படும் ஒரு பொருளை மற்றொரு பெரிய பொருள் அதனருகி லிருந்து இழுத்து இவ்விரு இழுக்குஞ் சக்திகளைக் கண்டு கொண்டோமானால் முன் கூறியபடி பூமியின் நிறையை அளவிடமுடியு மல்லவா? இவ் விழுக்குஞ் சக்திகளைத் தட்டுத் தராசு கொண்டும் முறுக்குந் தராசு (Torsion balance) கொண்டும் அளவெடுத்து பூமியின் நிறையைக் கண்டிருக்கின்றனர். தட்டுத் தராசு கொண்டு 1878-ம் வருஷத்தில் ஆஸ்திரியாவி லுள்ள ம்யூனிக் நகரில் ஜாலி என்ற சாஸ்திர நிபுணர் அளவிட்டார்.



படம்-5

5வது படத்தில் காட்டியுள்ளது ஒரு உயரமான இடத்தில் அமைக்கப் பட்டதோர் தராசு. அதின் இரு தட்டுகள் க, கா வுகளுக்குக் கீழே சுமார் 25 கெஜ தூரத்தில் மற்றிரண்டு தட்டுகள் கி, கீ கட்டித் தொங்கவிடப் பட்டிருக்கின்றன. மேலிரண்டு தட்டுகளிலும் உ, ஊ என்ற இரு ஒரே நிறையும் சுற்றளவுங் கூடிய ரசம்

(Mercury) நிரம்பிய கண்ணாடிக் கூடுகள் வைக்கப் பட்டிருக்கின்றன. கீழிரண்டு தட்டுகளிலும் அதே அளவுடன் கூடிய ஆனால் ரசம் நிரப்பாத எ, ஏ மற்றிரண்டு கண்ணாடிக் கூடுகள் வைக்கப் பட்டிருக்கின்றன. இதனால் வலது புறமும், இடது புறமும் ஒரே நிறையுள்ள கண்ணாடிக் கூடுகள் இருதட்டிலு மிருப்பதினால் தராசு சரி மட்டமாய் நிற்குமல்லவா?

இப்பொழுது, உ கனமான கூட்டைக் கீழ் தட்டு கியிலும்; ஊ இலேசான கூட்டை மேல் தட்டு க விலும் வைத்தால்* என்னவாகுமென்று யோசிக்கிறீர்கள்? கனமான கண்ணாடிக் குண்டு பூமியின் அருகில் வந்துவிட்டதால் அஃது பூமியால் அதிகமாக இழுக்கப்படுமல்லவா? ஆகவே இடது புறம், தராசு கொஞ்சம் தாழ்ந்து நிற்கும். உ வின் நிறை 5000 கிராம் கனத்துடன் இழுத்துக் கொண்டிருக்குமென்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இது பூமியின் இழுக்குஞ் சக்தியின் அளவாகும். இதனை இ என்று கொள்வோம். இவ்வாறு இழுக்கப் பட்டு தாழ்ந்து நிற்கும் தராசை வலது புறத் தட்டில் 0.31 கிராம் நிறையை வைத்து சரிமட்டமாக்கிக் கொண்டோமென்று வைத்துக் கொள்வோம்.

இந்நிலையில் ஆ வென்ற பெரியதோர் ஈயக்குண்டை கீழ் தட்டு கி யின் கீழ் வைத்தால் இப்பொழுது இந்த ஈயக்குண்டால் கண்ணாடிக் குண்டு இழுக்கப்பட்டு மறுபடியும் வலது தட்டு தாழ்ந்து நிற்குமல்லவா? இப்பொழுது தராசைச் சரி மட்டப் படுத்த முன்னைவிட 0.0059 கிராம் அதிகம் வலது தட்டில் வைக்க ஏற்படுகிறதென்று கண்டு கொண்டோம். அதாவது ஈயக் குண்டு கண்ணாடிக் கூட்டை 0.0059 கிராம் கனத்துடன் இழுத்துக் கொண்டிருக்கிறது. ஈயக்குண்டின் இழுக்குஞ் சக்தி .0059 கிராம் ஈ என்று கொள்ளுவோம். ஈயக்குண்டின் மத்திக்கும் தராசுத் தட்டிலுள்ள கண்ணாடிக் கூட்டு மத்திக்கும் உள்ள தூரம் தூ சுமார் 2 அடி என்று கொள்ளுவோம். பூமியின் மத்திக்கும் தராசுத் தட்டுக்கும் அதாவது பூமியின் குறுக்களவின் பாதி (Radius of earth) து என்பது 3963 மைல்.

இ = பூமியின் இழுக்குஞ் சக்தி 5000 கிராம் கனம்.

ஈ = ஈயக் குண்டின் இழுக்கும் சக்தி 0.0059 கிராம் கனம்.

து = பூமி மத்திக்கும் தராசுக்குமுள்ள தூரம் 3963 மைல்.

தூ = ஈயக் குண்டு மத்திக்கும் தட்டுக்குமுள்ள தூரம் 2–அடி.

ஆ = ஈயக் குண்டின் நிறை (தெரிந்தது என்று வைத்துக் கொள்ளுவோம்.)

இவ் வைந்து அளவும் தெரிந்து கொண்டால் பூமியின் நிறை அ வை முன்பு நாம் காட்டிய $\frac{அ}{ஆ} = \frac{இ\ து^2}{ஈ\ தூ^2}$ இதினின்று கணக்கெடுக்க முடியும். இவ்விதமான அளவுகளில ஆங்கிலேய நிறை, தூரம் அளவுகளாகிய பவுண்ட் அடி இவைகளாக மாற்றி கணக்கெடுத்தால் பூமியின் நிறை 5.4×10^{21} டன் ஆகிறது. அதாவது 5,400,000,000,000,000,000,000 டன்.

* எ, ஏ கூடுகளினின்று உ, ஊ கூடுகளை மாத்திரம் உபயோகித்து உ கீழ் தட்டிலும் ஊ மேல் தட்டிலுமிருந்தால் காற்றின் தூக்கும் பலம் அல்லது மேலே தள்ளும் பலம் உ வில் அதிகமாகவும், ஊ வில் குறைவாகவும் ஏற்படும். இதனை மேல் தட்டிலும் கீழ் தட்டிலும் சரிசமானமாக இருப்பதற்கு வேண்டி அதே சுற்றளவைக் கொண்ட எ, ஏ கூடுகளை உபயோகிக்க வேண்டியிருக்கிறது.

நாம் மேலே குறிப்பிட்ட நிறுக்கும் விதத்தில் அனேக சிறிய பிழைகள் வர ஏதுவுண்டு. ஈயக் கட்டிக்கும், கண்ணாடிக் கூட்டிற்கு முண்டான இழுக்குஞ் சக்தி மிகக் குறைவான தெனக் கண்டோம். அந் நிலையில் இதர பிழைகள் சேர்ந்தால் நமது கணக்கில் சிறிது தாரதம்மியம் ஏற்படக்கூடும். எப்படிப் பிழைகள் ஏற்படுமென்றால்:—

(1) தராசுத் தட்டின் கீழிருந்து ஈயக் கட்டியோ அல்லது பூமியோ கண்ணாடிக் கூட்டை மாத்திரம் இழுப்பதல்லாமல் தட்டு, தராசுக் கம்பம் முதலிய இதர சாமான்களையும் இழுக்கவல்லது.

(2) இடதுபுறம் தாழ்ந்து தராசின் மத்திய குறிக்குச்சி (Pointer) காட்டும் ரேகை வெகு சிறியதா யிருப்பதால் அதிற் சொற்பப் பிழைகள் கணக்கில் பெரிய பிழையை உண்டாக்குவிக்கும்.

(3) சீதோஷ்ணம் மாறி தராசின் பல பாகங்களில் மாறுதல்கள் ஏற்படுத்தும்.

(4) சுற்றிலுமுள்ள காற்று அங்கு மிங்கும் வீசி தராசின் சரி மட்டத்தில் தாரதம்மியம் ஏற்படும்.

(5) தராசுக்கடுத்த பாகங்களில் வண்டிமுதலியவை ஓடுவதின் அதிர்ச்சி தராசை வந்தடையும்.

முக்கியமான பிழைகளாகிய மேற்கூறியவைகளை வெகுவாகக் குறைத்து பூமியின் நிறையை அளவெடுக்க 6வது படத்தில் காட்டிய தராசை 1890-ல் பாய்ன்டிங் என்ற ஆங்கிலேய சாஸ்திர நிபுணர் உபயோகப் படுத்தினார். இத் தராசு வட்டமான கட்டடத்தின் மத்தியில் ரப்பர் மேடையில் கட்டப்பட்டு ஆள் உள்ளே செல்லாதவாறு சுவற்றில் துவாரத்தில் வெளிச்சத்தை அனுப்பி தராசின் நேர் கம்ப மத்தியிலுள்ள சிறிய முகக் கண்ணாடியில் விழுந்து பிரதிபிம்பித்து சுவற்றின் துவாரத்தி லிருக்கும் ஒரு கண்ணாடி ரேகையில் விழச் செய்யப் படுகிறது. இதனால் சகல அளவையும் வெளியி லிருந்தே துல்லியமாகத் தெரிந்து கொள்ள முடியும். இவ்விதம் கூடிய அளவு பிழைகளனைத்தையும் போக்கி



படம்-6

பூமியின் நிறை 6×10^{21} டன் என்று திட்டமாகக் கண்டு கொள்ளப் பட்டது.

இவ்விதமாக தட்டுத் தராசு கொண்டு பூமியை நிறுத்தது போலவே முறுக்குத் தராசு கொண்டு நிறுக்கப்பட்டதை ஒரு சில வார்த்தைகளால் விளக்கி முடிப்போம்.

கேவெண்டிஷ் (Cavendish) என்ற ஆங்கிலேயசாஸ்திரநிபுணர் 1798ம்வருஷத்தில் 7வது படத்தில் காட்டியவாறு முறுக்குந் தராசு அமைத்து பூமியை நிறுத்திருக்கிறார். இதில் இரு சிறு குண்டுகளை ஒரு கம்பத்தின் நுனிகளில் கட்டித் தொங்கவிட்டு அவ்வி



படம்-7

ரண்டுக்கும் பக்கமாக இரு பெரிய குண்டுகளை அமைத்து சமதளத்தில் இரு புறமாக இரண்டு பேர் கட்டி இழுப்பதுபோல் இழுக்கப்படச் செய் திருக்கிறது. ஆகவே கம்பம் சமதளத்தில் இரு புறமும் முறுக்கப் படுகிறது. இவ்விதமாக முறுக்கப்படும்அளவை வெளியிலிருந்து அனுப் பப் படும் வெளிச்சத் தின் பிரதிபிம்பிப்பால் கண்டு பூமியின் நிறை யைக் கணக்கெடுத்தி ருக்கின்றனர். இரு கருவியில் மற்ற பிழை கள் குறைக்கப்பட்டி ருந்தாலும் பெரிய ஈயக்குண்டுகள் இரண் டும் சமீபத்திலிருப்ப தால் அவைகள் ஒன்றுக் கொன்று இழுக்குஞ் சக்தி யைக் குறைக்க நீண்ட தராசுக் கம் பம் உபயோகித்தால் முறுக்கப்படும் அளவு குறைந்து காட்டும். இதற்காக பாய்ஸ் என்பவர் 1895ம் வருஷத்தில் 8வது படத்தில் காட்டியவாறு கருவியைச் சீர்ப்படுத்தி அமைத்து பூமியை நிறுத்தார். இதில் சிறியகம்பம் $\frac{9}{10}$ அங்குல நீள முள்ளதோர் முகக் கண்ணாடித் துண்டு. இதில் தொங்க விடப் படும் சிறிய குண்டுகள் ஒன்றுக் கொன்று $\frac{1}{2}$ அடி உயரத்திலிருந்து பெரிய குண்டுகளால் இழுக்கப்படுகின்றன.



படம்-8

ஒரு புருஷனுக்குப் பல மனைவிகள்—ஒரு மனைவிக்குப் பல புருஷர்கள்!

—ஆர். தெய்வ ஸஹாயம்

சாதாரணமாக ஒரு புருஷனுக்கு ஒரு மனைவி என்பதுதான் உலக ரீதி. அதுவே உலகத்திலுள்ள பெரும்பான்மையான சமூகத்தினராலும் அநுஷ்டிக்கப்படுகிற வழக்கமாயிருக்கிறது. ஆனால் இதற்கு மாறுபாடாக, ஒரு புருஷனுக்குப் பல மனைவிகள் என்றும், ஒரு மனைவிக்குப் பல புருஷர்களென்றும் விநோதமான வழக்கங்கள் சில ஜாதியாரால் அநுஷ்டிக்கப் பட்டு வருகின்றன. இவைகளைப் பற்றிக் கூறுகிறது இந்தக் கட்டுரை.

ஐரோப்பிய மகா யுத்தம் முடிந்தவுடன், இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி முதலிய நாடுகளில் ஆண்களின் தொகை குறைந்து, பெண்களின் தொகை அதிகமாகியிருந்தது. அப்பொழுது சில அன்பர்கள் யோசனை கூறினர்கள், புருஷர்கள் ஏன் பல பெண்களை விவாகஞ் செய்து கொள்ளக் கூடாதென்று? பெண்கள் இங்ஙனம் ப்ரஹ்ம சாரிணிகளாயிருந்தால் தேசத்தின் ஜனத்தொகை நாளாவட்டத்தில் சுருங்கி விடும் என்று இவர்கள் அஞ்சினர்கள். எனவே, பெண்கள் கல்யாணமே இல்லாதிருப்பதை விட, பலபேர் சேர்ந்து ஒரு புருஷனை விவாகஞ் செய்து கொள்வது நல்லதில்லையா என்பது இவர்கள் வாதம். ஆனால் இந்த வாதம் அப்பொழுது ஏற்றுக் கொள்ளப் படவில்லை. மதம், ஒழுக்கம் இவை சம்பந்தமாகக் கூறப்பட்ட காரணங்கள் ஒரு புறமிருக்கட்டும்; பல தார மணத்தினால் அதிகச் செலவு ஏற்படும் என்கிற வாதமே, இந்த வழக்கம் அமுலில் வராமலிருந்ததற்கு முக்கிய காரணமாயிருந்தது. சாதாரணமாக ஒரு மனைவியைக் கல்யாணம் செய்து கொண்டவர்களே, செலவுக்குத் திண்டாடிக் கொண்டிருக்க, பலரை மணந்து கொண்டால் அவன் பாடு அதோகதிதானல்லவா?

இஸ்லாமிய மதத்தில், ஒருவன் நான்கு மனைவி வரை கல்யாணஞ் செய்து கொள்ளலாம் என்று இருக்கிறது. ஆனால் எல்லாருமே இங்ஙனம் செய்து கொள்வதில்லை. பணம் படைத்தவர்களே, நான்கு பேரை வைத்துச் சமாளிக்கக் கூடிய யோக்கியதையுள்ளவர்களே இங்ஙனம் செய்கிறார்கள். ஆனால் இந்த வழக்கங்கூட, இப்பொழுது நாகரிகம் அதிகரித்துக் கொண்டு வரவர, குறைந்து கொண்டு வருகிறது. உதாரணமாக துருக்கி முதலிய நாடுகளில் இவையெல்லாம் ஒன்றுமில்லை.

புருஷன்தான், பல பெண்களை இச்சிக்கிற சுபாவம் உடையவன் என்றும் பெண்களுக்கு இந்தக் குணம் கிடையாதென்றும் சிலர் கூறுகிறார்கள். இதனை ஓர் உண்மையென்று அப்படியே ஏற்றுக் கொண்டு விட முடியாது. மனிதனுடைய வளர்ச்சியை ஆதிகாலத்திலிருந்து நாம் ஆராய்ந்து பார்த்தோமானல், அவன் ஒரு சமயத்தில் ஒரு மனைவி என்ற நீதியைக் கடைப்பிடித்து அநுஷ்டித்து வந்தான்; தன்னுடைய வாழ்நாள் முழுவதும் ஒரே மனைவி என்ற நியதியைக் கடைப்பிடித்து நடக்கவில்லை. ஆனால் அரசர்கள், செல்வமுடையவர்கள் முதலியோர் பல தாரங்களைக் கல்யாணஞ்

செய்து கொண்டதாகத் தெரிகிறது. நமது புராண இதிகாசங்களில் கூட, இந்தப் பல தார மணத்துக்குப் பல உதாரணங் களைக் காணலாம். தசரதனுக்கு மூன்று மனைவிகள் இருந்தார்கள். உத்தர ராமாயணத்தில் சீதை காட்டிற்குச் சென்றபிறகு ராமன் அசுவமேத யாகம்செய்யவேண்டுமென்று சொன்னபோது, வசிஷ்டர், பத்தினியுடனிருந்து யாகஞ் செய்ய வேண்மென்றும் அதற்காக மறுமணம் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் உபதேசித்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளையெல்லாம் கட்டுக்கதைகள் என்று ஒதுக்கித்தள்ளி விடுவோம். சுமார் 800 வருஷங்களுக்கு முன்—அதாவது 1285-ம் வருஷத்தில்—மத்திய இந்தியாவிலுள்ள சம்பா என்ற ராஜ்யத்தை ஆண்டு கொண்டிருந்த ஓர் அரசனுக்கு 326 குழந்தைகள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. சுமார் இருபது வருஷங்களுக்கு முன்னாடி, பர்மாவிலுள்ள வடஷான் பிரதேசத்திலுள்ள ஒரு சிற்றரசர் 29 மனைவிகளை ஒருவர் பின் ஒருவராக மணஞ் செய்து கொண்டார்.

இரண்டு மனைவிகளைக் கொண்ட ஒரு எஸ்கிமோ குடும்பம். உட்கார்ந்திருக்கும் இரண்டு பேரும் மனைவிகள். வலது புறத்தில் நின்று கொண்டிருப்பவன் கணவன்.

சென்ற நூற்றாண்டின் கடைசி பாகத்தில் பர்மாவில் அரசாண்ட மிண்டோன் மன்னனுக்கு நான்கு மனைவிகள்; 79 குழந்தைகள். இப்பொழுதுகூட எஸ்கிமோ ஜாதியாரிடத்தில், ஒரு புருஷன் இரண்டு மனைவிகளை விவாகம் செய்து கொள்ளலாமென்ற வழக்கம் சர்வ சாதாரணமாகஇருந்து வருகிறது. இந்த இரண்டுபேரோடும் அவன் நிரந்தரமாக வாழவேண்டும் என்ற கட்டுப் பாடும் இல்லை. புருஷன் விரும்பா விட்டாலும், அல்லது மனைவிமார் விரும்பா விட்டாலும், விவாகரத்து செய்து விட்டு வேறு புருஷர்களையோ ஸ்திரீகளையோ விவாகஞ் செய்து கொள்ளலாம்.

ஆப்ரிக்காவிலுள்ள சில சுதேச ஜாதியார், ஒரு மனைவியைக் கல்யாணம் செய்து கொண்டு அவளோடு வாழ்வது கௌரவக் குறைவென்று கருதுகிறார்கள். அது மட்டுமல்ல. ஒரு மனைவி யுடையவன் பரம தரித்திரனென்றும், சமூகத்தில் அவனுக்கு அந்தஸ்தே கிடையாதென்றும் கருதப்படுகிறான். இந்தச் சுதேசிகள் வசிக்கும் கிராமங்களில், கிராமபெரிய

தனக்காரர்கள் ஒன்று கூடி ஏதேனும் பஞ்சாயத்து நடத்துகிறார்கள் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது ஒரு மனைவியுடனிருப்பவன் வாயை மூடிக்கொண்டிருக்கட்டுமென்றும், யோக்கியதையுடையவர்கள் பேசட்டும் என்றும் சொல்வார்கள். எனவே யோக்கியதை என்பதற்குப் பலமனைவிகளைக் கல்யாணஞ் செய்துகொள்வது குழந்தைகளோடு தன்னுடைய ஏழு விரல்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்று சொன்னான். அதாவது 67 குழந்தைகள் என்று அர்த்தம். இவனுடைய மூத்த மனைவிக்கு வயது 70. கடைசி மனைவிக்கு வயது 17. எனவே, பல மனைவிகளுடையவன் தான் பணக்காரன், யோக்கியப்பொறுப்புடையவன் என்பது இந்தச்

டரோப்ரையண்ட் தீவிலுள்ள ஒரு சிற்றரசனும் அவனுடைய மனைவிமார்களும். படத்தின் நடுவே நின்றுகொண்டிருப்பது சிற்றரசன். கீழே உட்கார்ந்திருப்பவர்கள் அத்தனை பேரும் அவனுடைய மனைவிமார். மனைவிமார் எத்தனை பேர் அதிகமாயிருக்கின்றனரோ அத்தனைக்கு அவனுடைய செல்வாக்கும் அதிகமாகிறது.

என்பது இவர்கள் கருத்து. ஒருசமயம், தென்னாப்பிரிக்காவிலுள்ள காபிரி ஜாதியைச் சேர்ந்த ஒருவனைப்பார்த்து 'உனக்கு எத்தனை குழந்தைகள்?' என்று கேட்டார்கள். இதைக்கேட்டதும் அவனுக்குப் பரம சந்தோஷம். தன்னுடைய ஆறு குழந்தைகளையழைத்து, ஒவ்வொரு குழந்தைக்கும் எத்தனை விரல்கள் உண்டோ அத்தனை

சுதேசிகளின் எண்ணம்; நம்பிக்கை.

நியு கினியா பிரதேசத்திற் கருகாமையில் ட்ரோபரையண்ட் தீவுகள் என்றதொரு பிரதேசம் இருக்கிறது. இங்குள்ள ஜாதியார்கள், பெரும்பாலும் ஏகபத்தினி விரதம் பூண்டவர்களாயிருப்பினும், செல்வவந்தர்கள பல மனைவிகளைக் கல்யாணஞ் செய்துகொள்வதுதான் விசேஷமாகக் கரு

தென் கடல் தீவுக் கூட்டங்களில் டேகுவா என்ற ஒரு தீவு இருக்கிறது. இங்கேஒருஸ்திரீ, இரண்டு புருஷர்களைக் கலியாணம் செய்து கொள்கிற வழக்கம் இருக்கிறது, இடது புறத்தில் நிற்பவள் மனைவி, மற்ற இருவரும் கணவர்கள்.

தப்பட்டது. இவர்களிலே பல சிற்றரசர்கள் இருக்கிறார்கள். இந்தச் சிற்றரசனுடைய ஆதீனத்திற் குட்பட்ட கிராமங்களில், ஒவ்வொரு கிராமத்திலிருந்தும் ஒவ்வொரு பெண்ணை இவன் விவாகஞ் செய்து கொள்கிறான்.

ஒரு பெண், பல புருஷர்களைக் கல்யாணஞ் செய்து கொள்கிற வழக்கம் சில பிரதேசங்களில் நூற்றாண்டுகள் கணக்காக வழங்கி வருகிறது. மகாபாரதத்தில் துரோபதைக்குப் புருஷர்களாயமைந்தவர்கள் ஐந்து சகோதரர்கள். இப்பொழுதும், திபேத்தில் இந்த வழக்கம் இருக்கிறது. பல புருஷர்களை மணந்து கொண்ட ஸ்திரீ என்பதற்கு அடையாளமாக, இந்த திபேத்திய ஸ்திரீயினுடைய தலையணி பிரத்தியேகமானதாயிருக்கும். தவிர, அவள், பலருக்குத் தான் ஒரு மனைவியா யிருப்பதை ஒரு கௌரவமாகக் கருதுகிறாள். இந்தப் பல புருஷ மண வழக்கம், பஞ்சாபிலும், ஐக்கிய மாகாணத்திலும் வசிக்கும் சில ஜாதியார்களிடத்தில் காணப்படுகிறது. நீலகிரியில் வசிக்கும் தோடர்களிடத்திலும் இந்த வழக்கம் உண்டு. பிரான்ஸின் ஆதீனத்திலுள்ள மார்க்வேஸாஸ் தீவில் வசிக்கும் பாலினீஷிய ஜாதியாரிடத்திலும் இந்த வழக்கம் இருக்கிறது.

மத்திய இந்தியாவில் வசிக்கும் சந்தாலர் என்ற ஒருவகை புராதன ஜாதியாரிடத்தில் மற்றொரு வழக்கம் காணப்படுகிறது. அதாவது, ஒரு பெண், ஒரு புருஷனை விவாகஞ்செய்து கொள்கிறாள் என்று வைத்துக் கொள்வோம். அவள், அந்தப் புருஷனுடைய சகோதரர்களுக்கும் மனைவியாயிருக்கலாம். அப்படியே, அந்தப் புருஷனும், அந்த மனைவியினுடைய சகோதரிகளுக்குக் கணவனாயிருக்கலாம். அதே மாதிரி, ஒரு பெண்ணுக்கு அவளுடைய வயதைக் காட்டிலும் குறைந்த வயதில் உள்ள ஒரு பையனுக்கு விவாகம் செய்து கொடுக்கிறார்கள் என்று வைத்துக் கொள்

வோம். அந்தப் பையன், பெரியவனாகும் வரை, அவள், அவனுடைய தகப்பனுடனோ, அல்லது நெருங்கிய உறவினருடனோ சம்பந்தம் வைத்துக் கொள்ளலாம். இதனால் அவளுக்கு ஒழுக்கக் குறைவு உண்டாவதில்லை.

ஆஸ்திரேலியாவில் வசிக்கும் புராதன ஜாதியாரிடத்தில் ஒரு புதிய வழக்கம் உண்டு. அதாவது, அந்தச் சமூகத்தைச் சேர்ந்த பெண்கள், விவாகத்திற்கென்று விற்கப்படுவது வழக்கம். எவனொருவன், விலை கொடுத்து ஒரு பெண்ணை வாங்குகிறானோ அவன்தான், அந்தப் பெண்ணை அடைய முடிகிறது. அப்படியானால் வயது வந்த புருஷர்கள் என்ன செய்வார்கள்? இதற்காக இந்தச் சமூகத்தில் ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதாவது பெண்கள், சம வயதுடைய புருஷர்களைத் தங்களுடைய புருஷர்களாகத் தெரிந்தெடுத்துக் கொண்டு அவர்களுடன் சுகமனுபவிக்கலாம். பணம் கொடுத்து வாங்கின புருஷர்கள் இதற்கு ஆட்சேபிக்கக் கூடாது.

இங்ஙனம் பலதார மணமும், பல புருஷ விவாகமும் சில சில ஜாதியாரிடத்தில் மிகச் சொற்பமாகக் காணப்படுகின்றதே யாயினும், உலகத்திலே பொதுவாக ஏகபத்தினி முறைக்குத்தான் அதிக மதிப்பு இருக்கிறது.

பெரிய மனிதன் யார்? மற்றவர்கள் நிலைமையில் தன்னை வைத்துக் கொண்டு பேசுகிறவன்; தான் பிரவேசிக்கத் துணியாத இடத்தில் மற்றவர்களைப் பிரவேசிக்கச் செய்கிறவன், மற்றவர்களைப் பற்றிக் கவலைப் படாமல், தன் மனச்சாட்சி, எதைச் சரியென்று சொல்லுகிறதோ அதன்படி நடக்கிறவன்.

——ஜான் கால்ஸ் வொர்த்தி

வாழ்க்கையிலே துன்பப் படாதிருக்க வேண்டுமானால்—

1. கல்யாணம் செய்து கொள்ள ஒரு பெண்ணைப் பார்க்கப் போகிறாய் என்று வைத்துக் கொள்வோம். அவள் மேலழகை மட்டும் பார்த்து மயங்கி விடாதே. அவளுக்கு மனம் இருக்கிறதா என்று பார்.

2. ஆடம்பரத்தில் பிரியமுள்ள ஒரு பெண்ணைக் கல்யாணஞ் செய்து கொள்ளாதே.

3. உன் கிரகசாரம்; அப்படிப்பட்ட பெண்தான் உனக்கு லபித்தது என்று வைத்துக்கொள். அவளிடத்தில் கொஞ்சம் பிகுவாகவே இரு.

4. உன்னிடத்தில் இல்லாத சரக்கை இருப்பதாகப் பாசாங்கு செய்யாதே. உன் வரவுக்குத் தகுந்த செலவு செய்.

5. உனக்கு நிரந்தரமான பண வருமானம் இருந்தாலொழிய மோட்டார்கார் வைத்துக் கொள்ளாதே.

6. உன்னுடைய பண நிலைமை நன்றாக இருக்க வேண்டுமென்பதற்காக, குதிரைப் பந்தயங்கள் நடத்தப் படுகின்றன என்று நினைத்து விடாதே.

7. குடியிலே இறங்காதே. குடி கெட்டு விடும்.

8. உனக்கு வேலையில்லாமலிருக்கலாம்; அதனால் ஜெயிலுக்குப் போகிற வழி எது என்று தேடிக்கொண்டிராதே.

9. உள்ளத்திலிருந்து உதட்டின் மூலமாக வரும் வார்த்தைகள், ஓர் அளவோடு வெளிவரட்டும்.

10. இந்த வாழ்க்கை சதமல்ல. ஆகையால், சந்தர்ப்பத்தைக் கை நழுவ விடாமல், நேரான பாதையில் செல்.

எங்களூர்க் கோவில்

—பெசா

எங்கள் ஊரே அலாதி. 140 தலைக்கட்டு. 30—வீடு. வெகு காலம் வரை—எங்கள் பாட்டனாரின் பாட்டன் காலந்தொட்டு அரச மரத்தடிப் பிள்ளையார் தான் ஊரைக் காக்குந் தெய்வமாயிருந்தார். இந்தப் பிள்ளையார்தான், தாயைப்போல் பெண் வேண்டுமென்று, கைலாசம், வைகுந்தம், எமலோகத்தில் கூடப்போய்ப் பார்ப்போம் என்று வந்தபோது, முதலில் எங்களூருக்கு வந்து, குளத்தங்கரையின் அரச மரத்தடியில் தங்கியிருந்து, ஊருணியில் நீராட வந்த பெண்மணிகளைப் பார்த்து, ஒவ்வொருவரும் தாயைப்போல் தோன்றக் கண்டு, மயங்கி உட்கார்ந்துவிட்ட ஆசாமியென்று, சைவ ஸ்ரீ சோமநாத யதீந்த்ர ஸ்வாமிகள் எங்களூர்ப் புராணத்தில் எழுதியிருக்கிறார்.

வருஷப்பிறப்பு, மாட்டுப்பொங்கல், கல்யாணம், தலைவலி, மாட்டுநடம், மழை வேண்டல் ஆகிய எல்லா விசேஷங்களுக்கும் இந்தத் தொந்தி வயிற்றுக் கணபதிக்கு ஊரார் பொங்கல் இடுவார்கள்.

இவரைச்சுற்றி எறும்புப் புற்றுக்கள் ஏராளம். பொங்கலிட்டுச் சிந்தியிருக்கும் அரிசிகளை இவ்வெறும்புகள் தின்று இவரை வலம் வந்து கொண்டிருக்கும். பைரவ மூர்த்தி இவருக்கு அபிஷேகஞ் செய்வதில் சளைக்க மாட்டார். இவருடைய தகப்பனாருக்கு விருஷபம், வாகனம் அல்லவா? அந்த உறவோ என்னவோ கன்றுக்குட்டிகள் அடிக்கடி வந்து இவருக்கு முத்தங் கொடுத்துச் செல்லும். அப்பனுக்குக் குண்டலமானோம், இவருக்குக் குடையாயிருப்போம் என்றெண்ணி, புற்றிலே பதுங்கியிருக்கும் பாம்புகள் ஒருவருமில்லாத சமயம் பார்த்து இவர் மீது படமெடுத்தாடும். அந்தச் சமயத்தில் மாடு மேய்க்கும் பிள்ளைகள், ஏதாவது ஒரு தகரக் குழாயை வைத்துக் கொண்டு ஊதுவார்கள். இந்தமாதிரியான போகம் நமக்குக் கைலாஸத்தில்கூட கிடைக்காது என்று நினைத்து, எங்கள் கிராமத்திலே நிலைத்து உட்கார்ந்துவிடத் தீர்மானித்து விட்டார் கணபதியார். பின்னாலே வரப்போகிற வாழ்வு இவருக்கு என்ன தெரியும்?

என் தந்தையார் காலத்தில் சில செல்வ வான்கள், மழையிலும்—வெயிலிலும்—பனியிலும் அடிபட்டுப் பரதவிக்கும் இப்பிள்ளையாரை ஒரு கோவில் கட்டி அதிலே வைத்து விட்டால் நம்மைப்போல் அவரும் சௌக்யமாய் வாழ்வார் என்று நம்பினார்கள். ஆதலால் எங்கள் ஊரிலுள்ள அனைவருக்கும், குதிரை வண்டி வைத்திருந்த குப்பான் முதல்—ஆப்பம் சுட்டு விற்கும் அழகம்மா வரை ஆளுக்குத் தகுந்தபடி வரிப் போட்டுப் பணம் வசூலித்தார்கள்.

புரோகிதர் தனக்குச் சௌகர்யமான ஒரு நல்ல நாளைப் பார்த்துக் கொடுத்தார். திருப்பணியும் ஆரம்பித்து விட்டது. இக்கோவிற் பணியாளர்களில் செங்கல், சுண்ணாம்பு வண்டி யோட்டியவர்களும், சட்டி தூக்கியவர்களும், தண்ணீர் கொணர்ந்தவர்களும் தீண்டப் படாதவர்கள் தான். இரண்டு வருஷத்தில் ஒரு வகையாய்க் கோவில் கட்டி முடிந்தது.

கோபுரத்திற்கு மட்டும் 470 (பெயிண்ட்) வர்ணப் புட்டில்களுக்கு

35000 கோழி முட்டைகள் செலவா யின என்று கோவிற் கணக்கில் எழுதி யுள்ளார்கள்.

இந்தக்கணபதி, பிரமசாரி யென்று எங்களுக்குச் சொல்லித் தந்திருந்தார் கள். நாங்களும் அப்படித்தான் நம்பி யிருந்தோம். அந்த வர்ணக்காரனுட் பிராகாரச்சுவரில் தொப்பை வயிற்றுக் கணபதிக்கு நம்மைப் போல் இரண்டு கையும் இரண்டு காலும்—தும்பிக்கை யும், யானை முகமும் வைத்து உட் கார்ந்து இருந்த பாவனையாய் எழுதி, அவர் வலப் பக்கத்தில் ஒரு பெண்ணை யும், இடப்பக்கத்தில் ஒரு பெண்ணை யும், மடியில் கூட ஒருத்தியையும் வைத்து விட்டான்.

'இது என்ன வேடிக்கை'? என்று நான் என் பாட்டனுரைக் கேட்ட துண்டு. அதற்கவர் 'அதிகப் பிர சங்கி, சும்மாயிரு' என்று தடிக் கம்பை நீட்டினர். வாயை மூடிக் கொண்டு விட்டேன்.

பிறகு, ஒரு நல்ல நாள் பார்த்தார் கள் கும்பாபிஷேகத்திற்கு. குறித்த நாளிலே பாண்டு வாத்தியக்காரர் களும், பிரபல நாதஸ்வர விற்பன்னர் களும், பரத நாட்டியத்திற் கென்று அழைத்ததாகக் கருதப்படும் அம்மா மார்களும் வந்து சேர்ந்தனர். பொய்க் கால் குதிரையும், சீனிப் பலகாரக் கடைகளும், இளநீர், கரும்பு வண்டி களும் வந்து சேர்ந்தன.

காலை ஏழரை மணிக்குக் கும்பாபி ஷேகம். ஆறு மணிக் கெல்லாம் கோவிலைச் சுற்றிப் பதினயிரக் கணக் கான ஜனங்கள் சூழ்ந்து விட்டார்கள். ஏதோ முணு முணுத்துக் கொண்டு ஒரு கிழட்டுப் பிராமணர் மாவிலை செருகிய தண்ணீர்க் குடத்தினைத் தலை யில் தூக்கிக் கொண்டு, அல்லது பக் கங்களில் வருகிற பிராமணர்கள் அக் குடத்தை அவர் தலையில் வைத்து அமுக்கிக் கொண்டு, பனைமரத்து ஏணிப் படிக்கட்டு வழியாய்க் கோபு ரத்தின் மேலேறினர். குடத்துத் தண்ணீரைக் கும்பத்தில் ஊற்றி னர். அத்தனை பேருங் கன்னங் களைப் பளார் பளாரென்று தட்டிக் கொண்டார்கள். பிறகு ஒரு தாம்பா ளத்தில் கற்பூரம் வைத்து ஆரத்தி காட்டினர். அவர் கை கால்கள் மிக ஆட்டங் கொடுத்து விட்டன. அவர் கையிலிருந்த தாம்பளம் ஒரு எகிறு எகிறிப் பக்கத்தில் நின்றவரின் உத்த ரீயத்திற்கு மோட்சங் கொடுத்துக் கீழே விழுந்து விட்டதற்கும் அப் பெரியவரின் மேல் விநாயக மூர்த்தி ஆவேசம் வந்ததற்கும் பாக்குக் கடி நேரங்கூட இல்லை. கற்பூரத் தட்டு விழுந்ததையும் மேல் வேஷ்டி எரிந்து கரிந்து செல்வதையுங் கூடக் கவனி யாது, அனைவரும் ஆடுகின்ற சாமியை ஓடிச் சென்று உத்தாரங் கேட்டனர். 'இன்னி முதல் இந்த ஊரை நன்னு, பேஷாக் காப்பாத்தறேன்' என்று சொல்லி விநாயக மூர்த்தி மயங்கி விழுந்தார்.

பிறகு, அனைவரும் கீழிறங்கி, மூல ஸ்தானத்திற்கும் மற்ற குட்டித் தேவதைகளுக்கும் முறைப்படி பூஜை செய்து, விபூதி தருவதற்காக, குருக் கள், 'அசலூர் நகரத்தார்' என்று கூப்பிட்டார். ஒரு பெரியவரை முன் னல் தள்ளி வாங்கச் செய்தார்கள்.

நகரத்தார்! என்று கூப்பிட்டார்.

இரண்டு கைகள் ஏக காலத்தில் நீட்டப் பெற்றன. ஒன்று வாயாடி முருகப்ப செட்டியார் கை; மற் றென்று வம்புக்கார நாகப்ப செட்டி யார் கை.

யாருக்கு முதல் விபூதி கொடுப்ப தென்று குருக்கள் திகைத்தார். சிலர் முருகப்பையாவுக்கும் சிலர் நாகப்பை யாவுக்கும் என்று இரைந்தனர்.

'யாருக்கையா வயது கூட?' என்று அயலூரார் ஒருவர் கேட்டார்.

மீண்டும்முருகப்பையாவுக்கு என்று ஒரு கட்சியாரும், நாகப்பையாவுக்கு என்று மற்றக் கட்சிக் காரரும் சத்த மிட்டனர்.

'இதுக்குப் புரூப் என்ன?' என்றார் அந்த நியாயக்கார அயலூரார்.

'அந்தக் காலத்லே சாதகம் எழுதியா வச்சிருக்காக பொட்டி மக்கள்' என்றனர் சிலர்.

'பஞ்சம் வந்த தாது வருஷத்துக்கு முந்தி வந்துச்சே மாமாங்கம். அதுக்கு நாலுநா முந்தி நாம் பொறந்தேன் என்றார்' முருகப்பையா.

'அவனுக்கு முந்தி நாம் புறந்தே' னென்று தன் வார்த்தையினாலேயே வலியுறுத்தினார் நாகப்பையா.

பாவம், இதற்கிடையில் குருக்கள் விபூதித் தாம்பாளத்தில் கற்பூரத்தை வைத்துக் கொளுத்திக் கொண்டே இருக்கிறார்.

பிறகு, இந்தத் 'தண்டா'வில் மாட்டிக் கொள்ள விரும்பாத ஊரார் சொன்னார்கள்:—'குருக்களையா யாருக்கும் தன் கையால் விபூதி கொடுக்க வேண்டாம். அவர் தட்டைக் கையில் வைத்துக்கொள்ளட்டும். நாமள் எடுத்துக் கொள்வோ' மென்று.

இவ்வாறு மிகக் குறைச்சலான சிரமத்தோடு எல்லோரும் விபூதி தரித்துக் கொண்டனர். ஆனால் இந்த வம்பு—வழக்குத் தீரும்வரை நாங்கள் கோவிலுக்கு வர மாட்டோ மென்று முருகப்பையா தன் கட்சியார் புடைசூழ கிழக்கு வாயில் மூலமாகவும், நாகப்பையா தெற்கு வாயில் மூலமாகவும் வெளியேறி விட்டனர்.

உள்ளூரார் சிலர் கும்பாபிஷேகப் பாதுகாப்பிற்காக எட்டு ஜவான்களோடு வந்திருந்த சப் இன்ஸ்பெக்டர் மூலநாத பிள்ளையையும் அசலூர் நகரத்தார் இருவரையும், நல்லூர் ஜமீன் பழனியப்ப சேர்வை காரரையும், ஏமாந்தூர் ஜமீன் இராமசாமி ஐயரையும் கூட்டிக் கொண்டு முருகப்பையா வீட்டிற்குப் போய்ச் சமாதானப் பேச்சைப் பகல் 12 மணிக்கு ஆரம்பித்தனர்.

உடனே நாகப்பையா ஒரு பஸ் எடுத்துக் கொண்டு 15 மைலிலுள்ள டவுன்ஷிப் மாஜிஸ்ட்ரேட்டிடம் சென்று இரவு சுவாமி எழுந்தருளக் கூடாது என்றும் அப்படி எழுந்தருளினால் பலத்த கலகம் வருமென்று தாம் பயப்படுவதாகவும், அதற்குத் தம் மோடு உடன் வந்திருக்கும் நகரத்தாரே சாட்சி என்றும் சொல்லி ஒரு 'இன்ஜங்ஷன்' ஆர்டரை வாங்கிக் கொண்டு எங்களூருக்கும் வராமல் எங்கேயோ போய் விட்டார்.

முருகப்பையா வீட்டில் 2 மணிவரை சமாதானம் பேசிய பஞ்சாயத்தார் மனக் கசப்போடு எழுந்து நாகப்பையா வீட்டிற்கு வந்து காத்திருந்தார்கள். ஆனால் நாகப்பையா வீட்டிலுள்ளோரின் நா கப் என்று ஆய் விட்டது.

5 மணிவரை ஒன்றும் புலந்தெரியவில்லை. பிறகு மெதுவாக எப்படியோ விஷயம் பரவி விட்டது. 6 மணிக்கு நாகப்பையா வந்து ஸப் இன்ஸ்பெக்டரிடம் 'மாஜிஸ்ட்ரேட்' உத்தரவு என்று நீட்டினார். குறிச்சியிலிருந்த ஸப் இன்ஸ்பெக்டர் பதறி எழுந்து ஸலாம் செய்து உத்தரவை வாங்கிப் படித்துப் பார்த்து விட்டு இரண்டு ஜவான்களைக் கூப்பிட்டு 'சுவாமி எழுந்தருளப் பண்ணக் கூடாது' என்று கோவிலுக்குப் போய்ச் சொல்லுங்களென்று அனுப்பினார்.

பிறகு முருகப்பையாவும் ஊராரும் பலத்த யோசனை செய்து, நாகப்

பனுக்கு நாம் இளைப்பதா என்று, பஸ்களைப் பிடித்து அதே மாஜிஸ்ட்ரேட் இடம்சென்று 'கோவிலைப்பூட்ட வேண்டும்; திறந்திருந்தால் அதிக வம்பும் அடிபிடியும் வருமென்று நாங்கள் பயப்படுகிறோம். நாகப்பன் மேல் கேஸ் தொடுக்கப்போகின்றோம். அதன்பின் கோவில் திறந்தாகட்டும்' என்று காரணங்காட்டிக் கோவிலைப் பூட்டுவதற்கு ஆர்டர் கேட்டனர். 'தரும எஜமான்' அதற்கும் அட்டியின்றி உத்தரவு எழுதிக் கொடுத்தார். வளர்ப்பானேன்? போனவர் திரும்பினர். மாலை ஏழு மணிக்குக் கோவில் பூட்டிச் சீல் வைக்கப்பட்டது.

மறு நாள் ஊர்க் கூட்டம் கூடியது. ஊரார் விலகிக் கொண்டனர் கோவிலை நடத்த வேண்டியது நகரத்தார் பொறுப்பென்று. உடனே முருகப்பையா கட்சி கோவில் மண்டபத்திலும், நாகப்பையா கட்சி கச்சேரிக் கூடத்திலும் கூடி மேல் நடக்க வேண்டிய விஷயத்தை ஆலோசித்து, நாகப்பையாவும் முருகப்பையாவும் நகரத்தாருக்காக வென்று வாதி பிரதிவாதியாய் நின்று கீழ்க் கோர்ட் முதல் மேல் கோர்ட் வரை செலவு செய்து பார்த்ததில் புல் பெஞ்ச் தீர்ப்பு வருமாறு:—

'இக் கேஸ் போட்டது நகரத்தார். கோவிலைப் பற்றியது இக் கேஸ். கோவிலின் ஒரிஜினலைப் பார்த்தால், கோவில் கட்டுவதற்கு ஊரார் அனைவரிடமும் சக்திக்குத் தகுந்த வரி வசூலிக்கப் பெற்றிருக்கிறது. அதனால் இக் கோவில் ஊரார் அனைவருக்கும். ஆனால் ஊரார் தம் பாத்தியதையை விட்டு விட்டதாகக் கீழ்க்கோர்ட் விசாரணை உறுதிப் படுத்துவதால் இக் கோவிலைத் தேவஸ்தான தர்ம பரிபாலன சபையார் கைக் கொண்டு நடத்திவர இதன் மூலம் உத்தரவிடுகிறோம். மற்றும் வாதி, மான நஷ்டத்திற்காக பிரதி வாதியின் பேரிற் போட்ட கேசும், பிரதிவாதி டாமேஜுக்காக வாதியின் பேரிற் போட்ட கேசும் அநுசிதமானவை யென்று தள்ளி விடுகிறோம்.'

இத் தீர்மானம் வந்தது முதல் கோவிற் பக்கம் யாரும் போவதில்லை. இப்பொழுது மினுக்கு மினுக்கென்று ஒரு அகல் விளக்கு தொப்பை வயிற்றுக்கு முன் எரிகிறது.

75 வயது—ஆனால் 54 வருஷம் சிறை வாசம்

ஜார்ஜ் ஆலன் என்ற ஒரு இங்கிலீஷ்காரப் பேர்வழி. இவனுக்கு இப்பொழுது வயது 75 ஆகிறது. இதில் 54 வருஷத்தைச் சிறையிலேயே கழித்து விட்டான். எவ்வளவு யோக்கியன் பார்த்தீர்களா? 27 தடவை இவன் தண்டனை விதிக்கப்பட்டிருக்கிறான். கடைசி தடவையாக இரண்டு பவுன் திருடின குற்றத்திற்காக இவன் தண்டிக்கப்படுகிற போது நீதிபதியைப்பார்த்து 'கோர்ட்டாரவர்களே! கிழவனாகி விட்டேனே! இன்னுங் கூட என் மீது உங்களுக்குத் தயவு பிறக்கவில்லையா?' என்றான். நீதிபதியும் கொஞ்சம் மனமிளகி, 9 மாதக் கடுங் காவல் தண்டனை விதித்தார்.

எனது தாயார்

—பண்டித ஜவஹர்லால் நேரு

பண்டித ஜவஹர்லால் நேருவின் தாயார் ஸ்ரீமதி ஸ்வரூப ராணிநேரு, 10-1-1938 ல் அலகாபாத்தில் காலஞ் சென்று விட்டார். அவரைப்பற்றி, பண்டித ஜவஹர் கூறியுள்ள பாகங்களை மட்டும், அவருடைய சுய சரிதத்திலிருந்து திரட்டித் தந்திருக்கிறோம். தாய்க்கும் திருமகனுக்கும் எத்தகைய தொடர்பு இருந்தது என்பதை இதனின்று நாம் ஒருவாறு தெரிந்து கொள்ளலாம்.

என் தாயார் விஷயத்தில் எனக்குப் பயமே கிடையாது. நான் எதைச் செய்தாலும் அவள் மன்னித்து விடுவாள் என்பது எனக்குத் தெரியும். அவள் என் மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்ததனால், அவள் மீது நான் கொஞ்சம் ஆதிக்கமும் செலுத்த ஆரம்பித்தேன். தகப்பனாரை விட, தாயார்தான் எனக்கு நெருங்கியவளாக இருந்தாள். தகப்பனாரிடத்தில் கனவிலும் சொல்லக் கூடாத அநேக விஷயங்களை நான் அவளிடத்தில் சொல்லியிருக்கிறேன். அவள் குள்ளம். சிறு வயதிலேயே நான் அவளுடைய சம உயரத்திற்கு வந்து விட்டேன். அதனால் என்னை அவளுக்குச் சமமாகவே நினைத்துக் கொண்டேன். அவளுடைய அழகிலே நான் ஈடுபட்ட வண்ணமிருப்பேன். அவளுடைய அழகிய கைகளையும் பாதங்களையும் பார்த்துப் பார்த்துச் சந்தோஷப் பட்டுக் கொண்டிருப்பேன்.

ஃ ஃ ஃ

எனக் களிக்கப் பட்ட உபசாரப் பத்திரங்களிலே, என்னை 'தியாக மூர்த்தி' என்றும் 'பாரத பூஷணம்' என்றும் அழைக்கப் படுவதைப் பார்த்து, என் மனைவி, பெண், சகோதரிகள் எல்லாரும் என்னைக் கேலி செய்வார்கள். ஆனால் என் தாயார் என்னைப் பற்றிப் பரிகாசஞ் செய்வதை விரும்ப மாட்டாள். என்னைப் பற்றிக் கூறியுள்ளன யாவும் சரியென்பது அவள் கருத்து.

ஃ ஃ ஃ

1932ம் வருஷம் ஏப்ரல் மாதம் 6ந் தேதி முதல் 13ந் தேதி வரை தேசீய வாரம் கொண்டாடப் பட்டது. இந்த வாரத்தில் எதிர் பாராத சம்பவங்கள் பல நடைபெறும் என்பது எங்களுக்குத் தெரியும். அப்படியே பல சம்பவங்கள் நடைபெற்றன. ஆனால் ஒரே ஒரு சம்பவம் மட்டும், மற்றெல்லாச் சம்பவங்களையும் ஒளி மழுங்கச் செய்து விட்டது. அலகாபாத்திலே ஓர் ஊர்வலம் நடைபெற்றது. இதற்குத் தலைமையாக என் தாயார் இருந்தார். ஓர் இடத்தில் போலீஸார் இதனைத் தடுத்து, தடியடிப்பிரயோகம் செய்தனர். ஊர்வலம் நிறுத்தப் பட்ட இடத்தில், யாரோ ஒருவர், என் தாயாருக்கு ஒரு நாற்காலி கொண்டு போட்டார். என் தாயார் அதன் மீது உட்கார்ந்தார். அவரைப் பாது காத்துக் கொண்டிருந்த சிலரும் என் காரியதரிசியும் முதலில் கைது செய்யப் பட்டனர். பின்னர் தடியடிப் பிரயோகம் ஆரம்பமாயிற்று. என் தாயார் நாற்காலியிலிருந்து கீழே இழுத்துத் தள்ளப் பட்டு, தலை மீது பிரம்பினால் அடிக்கப் பட்டார். தலையில் ஏற்பட்ட காயத்திலிருந்து ரத்தம் வடிய ஆரம்பித்தது. மூர்ச்சையாகி அவர் நடு

ரோட்டிலேவிழுந்துவிட்டார். பாதையிலே ஒருவரும் இல்லாமல் கலைக்கப் பட்டு விட்டார்கள். சிறிது நேரங் கழித்து, ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர், தனது மோடார் வண்டியில் என் தாயாரை எடுத்துப்போய் ஆனந்த பவனத்தில் கொண்டு விட்டார்.

திருமதி ஸ்வரூபராணி நேரு

சில நாட்கள் கழித்து, இந்த நிகழ்ச்சிகளெல்லாம் (சிறையிலே இருந்த) எனக்குத் தெரிய வந்தது. தூர்ப்பலமாயுள்ள என் தாயார், புழுதிபடிந்த மண்ணிலே ரத்தம் கசிய வீழ்ந்து கிடப்பதாகிற எண்ணமானது, என் உள்ளத்தை அலைத்துக்கொண் டிருந்தது. அங்கே நான் இருந்திருந்தால் அப்பொழுது நான் என்ன செய்திருப்பேன்? என்னுடைய அஹிம்சா தர்மம், என்னை எவ்வளவு தூரம் கொண்டுவந்து விட்டிருக்கும்? சென்ற பன்னிரண்டு வருஷகாலமாக நான் கற்றுக்கொண்ட அஹிம்சாதர்ம பாடமெல்லாம், இந்தக் காட்சியைப் பார்த்தவுடனே மறந்துபோய் விட்டிருக்கும். இப்படி மறப்பதனால் ஏற்படும் பலா பலன்களையும் நான் கவனித்திருக்க மாட்டேன்.

என் தாயார் மெதுவாகக் குணமடைந்தார். அடுத்த மாதம் பேரெல்லி சிறையில் அவர் என்னைக் காண வந்தபோது, அவர் தலையிலே இன்னும் கட்டு இருந்தது. ஆனால், மற்றத் தொண்டர்களோடு தானும் சேர்ந்து தடியடி பட்டதற்காக அவர் சந்தோஷப் பட்டார்.

ஃ ஃ ஃ

அலகாபாத் சிறையிலே இருந்த என் மைத்துனர் ரஞ்சித் பண்டிதரைப் பார்க்க, என் தாயார், கமலா, இந்திரா ஆகிய மூவரும் சென்றார்கள். ஆனால் அவர்களுடைய தவறு ஒன்றுமில்லாமலே அவர்கள் அவமானப் படுத்தப் பட்டார்கள். இதைத் தெரிந்துகொண்ட நான் பெரிதும் வருத்தப்பட்டேன். இது சம்பந்தமாக அரசாங்கத்தார் எடுத்துக்கொண்ட நடவடிக்கையும் எனக்கு ஓர் அதிர்ச்சியை உண்டுபண்ணி விட்டது. மீண்டும், சிறையதிகாரிகளால் என் தாயார் அவமானப் படாமலிருக்க வேண்டுமென்பதற்காக. என்னைப் பார்க்க வரும் உறவினர் எவரையும் கண்டு பேசுவதில்லையென்று தீர்மானித்தேன். டேராடூன் சிறையிலே நான் இருந்த ஏழு மாத காலம் வரை நான் எவரையுமே பார்க்கவில்லை.

ஃ ஃ ஃ

1934-ம் வருஷம் ஆகஸ்ட் மாதம் 23-ந் தேதி. மோடாரில் ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் வந்து, என்னுடைய கெடுவு ஆகிவிட்ட தென்றும் நான் நைனி சிறைக்குச் செல்ல வேண்டுமென்றும் சொன்னர். எனவே, என் உறவினர்களிடத்தில் விடை பெற்றுக் கொண்டேன். போலீஸ் காரில் நான் ஏறுகிற சமயத்தில், நோயாய்ப் படுத்துக்கொண் டிருந்த என் தாயார், இரண்டு கைகளையும் நீட்டிக்கொண்டு காரண்டை ஓடி வந்தார். அவருடைய அந்தப் பரிதாபகரமான முகம், என் மனக்கண்ணி லிருந்து நீண்ட காலம் வரை மறையாம லிருந்தது.

ஸாபியா ஹானெம்—'எங்கள் தாய்'

—பி. சி.

ஒவ்வொரு நாட்டிலும், சுதந்திர ஜோதி, சுடர் விட்டெரிவதற்குத் தூண்டு கோலா யிருக்கிறவர்கள் தாய்மார்கள் தான். இதை நினைக்கிறபோது, நமது நாட்டிலும் ஒத்துழையா இயக்கம் தொடங்கப்பெற்ற காலத்தில், எத்தனையோ தாய்மார்கள் 'பதியிழந்து, பாலனையிழந்து, படைத்த நிதியிழந்து', தேசத்திற்காக 'எண்ணுதற்கும் ஆக்குதற்கும்' அரியதான பல தியாகங்களைச் செய்திருக்கிறார்கள். மாதா கஸ்தூரி காந்தியையும், தேவி ஸ்வரூப ராணியையும், இன்னும் பல தாய்மார்களையும் 'பாருள்ளளவும், கடல் நீருள்ளளவும்' மறக்க முடியாதல்லவா? இப்படியே தான் ஒவ்வொரு நாட்டிலும். சீன தேசீய இயக்கத்தின் பிதா மகனென்று கருதப்படும் ஸன்—யாட்—ஸென்னின் தர்ம பத்தினியாருடைய தியாகமும், எகிப்தில் தேசீய விதை போட்ட ஜக்லுல் பாஷாவின் உத்தம மனைவியாரையும் யார்தான் மறக்க முடியும்? இந்தக் கட்டுரையில் 'பி. சி.' என்ற அன்பர், தேவி ஸாபியாஹானெம்—ஜாக்லுல் பாஷாவின் மனைவியார் பெயர்—அவர்களுடைய வாழ்க்கையில் ஓரிரண்டு சம்பவங்களைக் குறிப்பாக எடுத்துக் காட்டுகிறார். இவர், எகிப்திய உயர்தர மன்றத்திலே ஒரு நீதிபதியாக இருந்தவர். எகிப்தியர்களுடைய அபிமானத்தைப் பெற்றவர்.

எகிப்திய தேசீயக் கட்சித் தலைவரான ஜாக்லுல்பாஷா இறந்து விட்டார் அப்பொழுது எகிப்திய அரசியல் துறையிலே ஒரே ஒரு பிரச்னை தான் முக்கியமாகத் தோன்றியது. அதாவது, இங்கிலாந்துக்கும் எகிப்துக்கும் ஏதேனும் சமரஸம் ஏற்பட வேண்டுமானால், அது முதலில் ஜாக்லுல்பாஷாவின் உத்தமபத்தினி ஸாபியா ஹானெம் அவர்களுடைய அங்கீகாரத்தைப்பெற வேண்டுமென்பது தான் இந்தப் பிரச்னை. இதைப் பகிரங்கமாகச் சொல்லிக் கொள்வதற்குப் பதில், பிரிட்டிஷ் ராஜ தந்திரிகள், இங்கிலாந்துக்கும் எகிப்துக்கும் ஏற்படுகிற எந்த ஒப்பந்தமும், எகிப்தியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் அடங்கிய பார்லிமெண்டினால் அங்கீகரிக்கப்பட வேண்டும் என்று ராஜதந்திர பாஷையில் கூறினார்கள்.

ஸாபியா ஹானெம் அவர்களை, எகிப்தியர்கள் 'எங்கள் தாய்' என்றுதான் அழைக்கிறார்கள். எகிப்திய சுதந்திரத்திற்கு எத்தனையோ நாரீமணிகள் போராடி யிருக்கிறார்கள். ஆனால் அவர்கள் அனைவரும், மாதா ஜாக்லுலுக்குத்தான் முதல் ஸ்தானம் கொடுப்பார்கள். அழகான வடிவம்; இனிமையான குரல்; மற்றவர்களுடைய ஆக்மாக்களைப் பரிசோதனை செய்கிறாப் போன்ற பார்வை. இவர் சொல்வது, எகிப்திலே வேத வாக்கு. ஸாபியா ஹானெம், ஒரு செல்வக் குடும்பத்திலே பிறந்தவர். இவருடைய தகப்பனார் முஸ்தபா பெஹ்மி பாஷா, பதிமூன்று வருஷகாலம் எகிப்தின் பிரதம மந்திரியாயிருந்தார். நல்ல செல்வாக்குப் பெற்றவர். இவர், தம் மகளை ஜாக் ஜாக்லுல்பாஷா என்ற ஓர் அரசியல் வாதிக்கே விவாகஞ் செய்து கொடுத்தார். கணவனுக்கும் மனைவிக்கும் இருபது வயது வித்தியாசம் இருந்தது. ஜாக்லுல் பாஷா, ஆரம்பத்தில் சிறந்த ஒரு வக்கீலாகத் தமது வாழ்க்கையை ஆரம்பித்து, வெகு சீக்கிரத்தில் மந்திரிச் சபையில் ஒரு ஸ்தானம் பெற்றார். ஆனால் ஐரோப்பிய யுத்தம் முடிகிறவரை,

ஜாக்லுல் பாஷாவின் பெயர் பிரபலமாக வெளிவரவில்லை.

1918ம் வருஷம் நவம்பர் மாதம் 11ந் தேதி ஐரோப்பிய யுத்த நிறுத்தம் ஏற்பட்டது. 13ந் தேதி, இவருடைய பெயர் எங்கும் அடிபட ஆரம்பித்தது. அன்றைய தினம், ஜாக்லுல் பாஷாவைத் தலைமையாகக் கொண்ட ஒரு பிரதிநிதித்துவக் கூட்டமானது எகிப்தின் ஹைகமிஷனராயிருந்த ஸர் ரெஜினல்ட் வின்கேட்டினிடம் சென்று, எகிப்தின் சுதந்திரத்தை கிரேட்பிரிட்டன் அங்கீகரிக்க வேண்டுமென்று ஒரு மகஜர் தயாரித்துக் கொடுத்தது. இது முதற்கொண்டு எகிப்தின் சுதந்திரக்கிளர்ச்சி தீவிரமாகஆரம்பிக்கத் தொடங்கியது. பிரிட்டிஷ் அரசாங்கத்தார், ஜாக்லுலை மால்டா தீவிலுள்ள ஒரு சிறையில் கொண்டு வைத்தனர். இதனால், தேசத்தில் கிளர்ச்சி அடங்கிவிடுமென்று நினைத்தனர் பிரிடிஷார். அதற்கு மாறாக அது வலுக்கத்தொடங்கியது. ஜாக்லுலின் ஸ்தானத்தில், அவருடையமனைவி ஸாபியா ஹானெம் அமர்ந்து கிளர்ச்சியை நடத்தினார். அப்பொழுது இவர், ஹைகமிஷனருக்குத் தம் கைப்பட ஒரு வேண்டுகோள் விடுத்தார். அதில் தாம் அனுப்பும் கடிதங்களைத் தணிக்கை செய்யாமல் அனுப்புமாறு ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும், அந்தக் கடிதங்களில் அரசியல் விஷயங்கள் ஒன்றும் இராதென்று தாம் உறுதி கூறுவதாகவும் குறிப்பிட்டிருந்தார். இந்த வேண்டுகோள், ஹைகமிஷனரிடம் போய்ச் சேர்ந்திருக்குமோ என்னவோ, திடீரென்று இவருக்கு ஒரு யோசனை தோன்றியது. 'சே! இந்த மாதிரியான வேண்டுகோளை அனுப்புவது, நான் யாரைக் காதலிக்கிறேனோ அவருக்கு அவமானமல்லவா? எகிப்து தேசத்திற்கு மானக் குறைவல்லவா?' என்றெல்லாம் எண்ணி விட்டு, உடனே ஹைகமிஷனரோடு பேச, டெலிபோனைக் கையிலெடுத்தார். அப்பொழுது ஹைகமிஷனர், அவருடைய மாளிகையில் இல்லை.

'நான்தான் ஸ்ரீமதி ஜாக்லுல் பாஷா பேசுவது. ரெஸிடென்ஸியிலுள்ள ராங்கிங் ஆபீஸரை உடனே டெலிபோனண்டை கூப்பிடுங்கள்.'

'தங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்?' என்றது ஒரு குரல் பிரெஞ்சுப் பாஷையில்.

'இன்று காலை நான் அனுப்பின வேண்டுகோளை வாபீஸ் வாங்கிக் கொள்கிறேன் என்று உங்கள் எஜமானரிடம் சொல்லுங்கள். அவரிடமிருந்தோ, அவருடைய அரசாங்கத்திடமிருந்தோ நான் எவ்வித தயவையும் எதிர் பார்க்கவில்லையென்று அவரிடம் தெரிவியுங்கள். எகிப்திய சுதந்திரத்திற்காக என்னுடைய ஒவ்வோர் எண்ணத்தையும் ஒவ்வொரு சக்தியையும் உபயோகிக்கத் தீர்மானித்திருக்கிறேன். இந்த என்னுடைய தீர்மானம், என்னுடையவும் என் கணவனுடையவும் மரண சாஸனமாக அமையுமானால், எகிப்திற்காக இறந்த பெருமையை யடைவோம். எங்களுக்காகப் பழி தீர்த்துக் கொள்ள, எகிப்து உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கும்' என்றார் அழகிய பிரெஞ்சு பாஷையில் ஸாபியா ஹானெம்.

அந்தப் புரத்தில் அடங்கிக் கிடந்த பெண்மணிகள், தேசத் தொண்டு செய்ய வெளியே வந்து விட்டால், அப்பொழுது தேசீய இயக்கத்தை அடக்குவது மகா கடினம் என்று அப்பொழுதே நான் தீர்மானித்து விட்டேன்.

ஜாக்லுல் பாஷாவின் தேசப் பிரஷ்டத்திற்குப் பிறகு, தேசத்தில் பலத்த கிளர்ச்சி ஏற்பட்டது. ஸர் ரெஜினால்ட் விங்கேட் திருப்பியழைக்கப் பட்டார். அவருக்குப் பதிலாக லார்ட் அல்லென்பி நியமிக்கப் பட்டார். இவர் உடனே ஜாக்லுல் பாஷாவை விடுதலை செய்தார்.

சில மாதங்கள் கழிந்தன. மறுபடியும் ஜாக்லுலை செய்செல்லெஸ் தீவுகளுக்குப் பிரஷ்டம் செய்தார்கள் அதிகாரிகள். கணவனுடைய ஸ்தானத்தில் ஸாபியா ஹானெம் மீண்டும் வந்து அமர்ந்தார். இந்தத் தடவை அதிகாரிகள், ஜாக்லுலை மட்டும் கைதி செய்யவில்லை. அவருடன் சகாக்களாயிருந்து, வாப்த் கட்சியின் மத்திய கமிட்டியில் வேலை செய்து கொண்டிருந்த நான்கு பேரையும் பிரஷ்டம் செய்து விட்டார்கள். இவர்களுக்கு பதில் வேறு நால்வர் வந்தனர். இவர்களுக்கும் சிறை வாசம். இப்படி ஒரு கூட்டத்திற்குப் பின் மறு கூட்டமாக வந்து கொண்டிருந்தது. அரசாங்கத்தாரும் சளைத்துப் போய் விட்டனர்.

இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில், ஸாபியா ஹானெம், தமது மாளிகையை வாப்த் கட்சியின் தலைமை ஸ்தானமாக ஏற்படுத்திக் கொண்டார். முக மூடியணிந்த தனது சகோதரிகள் பலரையும் ஒன்று கூட்டி அவர்கள் மூலம் பிரிட்டிஷ் சாமான் பகிஷ்கார இயக்கத்தை நடத்தினார். இந்த கோஷா ஸ்திரீகள், பிரிட்டிஷ் சாமான்கள் விற்கும் கடைகளுக்கெதிரே நின்று மறியல் செய்யத்தொடங்கினார்கள். போலீஸாரும் இவர்களைக் கைது செய்யமுடியவில்லை. ஏனென்றால் இஸ்லாமிய நாடுகளில் பெண்களைத் தொட்டுக் கைதுசெய்ய முடியுமா? பிரிட்டிஷாரும், தங்கள் வியாபாரத்திற்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை நன்றாக உணர்ந்தனர்.

ஜாக்லுல் பாஷா 1927ம் வருஷ மத்தியில் இறந்து போனார். ஆனால், ஸாபியாஹானெம், அதற்காகத் துக்கித்துக் கொண்டு நாட்டை மறந்து விடவில்லை. எப்பொழுதும் போலவே, அவருடைய மாளிகை, வாப்த் கட்சியின் தலைமை ஸ்தானமாயிருந்தது. வாப்த் கட்சியின் தலைவராகவே அவர் கௌரவிக்கப்பட்டு வந்தார். கட்சியைச் சேர்ந்தவர் அனைவரும் அவரை 'எகிப்தின் தாயார்' என்றுதான் அழைப்பார்கள். ஜாக்லுல் பாஷா இறந்துபோன பிறகு, வாப்த் கட்சியில் பல சில்லரைப் பிளவுகள் ஏற்படலாயின. ஸாபியா ஹானெம் இவைகளை யெல்லாம் சரிப்படுத்திக்கொண்டு வந்தார். கட்சியைச் சேர்ந்த பிரமுகர்கள் அத்தனை பேருடைய மனப்பான்மையையும் இவர் நன்கு அறிந்திருந்தார். யாராரிடத்தில் எப்படி எப்படி பேச வேண்டுமோ அப்படியெல்லாம் பேசி இவர் அனைவரையும் நல்ல உற்சாகத்தில் வைத்திருந்தார். ஜாக்லுல் பாஷா தமது, மாளிகைக்கு 'ராஜ்ய பவனம்' என்று பெயர் வைத்திருந்தனர். உண்மையிலேயே, அவர் இறந்து போன பிறகு கூட, இது, ராஜ்யத்தின் தலை விதியை நிர்ணயிக்கும் மாளிகையாகவே இருந்தது.

ஸாபியா ஹானெமின் பெரு முயற்சியால், வாப்த் கட்சியினர் இடையில் அரசாங்க நிருவாகத்தை ஏற்றுக் கொள்ளமுடிந்தது. எனவே, இவரை, 'எங்கள் தாயார்' என்று எகிப்தியர்கள் கொண்டாடுவதில் என்ன ஆச்சரியம்?

அயல் நாட்டு இந்தியர் பிரச்னை

—வி. தேவாச்சாரியன்

நமது நண்பர், இந்தக் கட்டுரையில் ஒரு முக்கியமான பிரச்னையைக் கிளப்பியிருக்கிறார். 'என்னைப் பிறர் எப்படி நடத்த வேண்டுமென்று விரும்புகிறேனோ அப்படியே பிறரையும் நான் நடத்த வேண்டும்' என்ற தர்மத்தை வெளி நாடுகளிலே குடியேறி யுள்ள இந்தியர்கள் கடைப் பிடித்தல் அவசியம் என்பதை நாம் முற்றிலும் அங்கீகரிக்கிறோம். நண்பர் விரும்புவதுபோல், இந்த முக்கியமான பிரச்னையைப்பற்றி அன்பர்கள் பலரும் தங்கள் தங்கள் கருத்தை 'ஜோதி' வாயிலாகத் தெரிவிக்க வேண்டுகிறோம்.

ஒரு நாட்டினர் மற்றொரு நாட்டில் குடியேறுவதற்கான காரணங்களை ஆழ்ந்து நோக்குவோமானால் அவை அடியிற்கண்ட மூன்று இனங்களின் கீழ் அடங்கும். (1) வியாபார சம்பந்தம் (2) மத சம்பந்தம் (3) பிழைப்பு சம்பந்தம். கடந்த சுமார் 150 ஆண்டுகளாக இந்தியர் வெளி நாடுகளில் குடியேறுவதற்குக் காரணமாகவிருந்தது பெரும்பாலும் பிழைப்பு சம்பந்தமானதே. இந்தியர்களுடைய உழைப்பின் திறமை பல நாட்டினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டிருப்பது உலகங்கண்ட உண்மை.

இந்தியர்களுடைய குடியேற்றத்திற்கும் வெள்ளையர்களுடைய குடியேற்றத்திற்கும், குடியேறிய நாடுகளில் அவரவர்கள் நடந்துகொள்ளும் மாதிரிக்கும் உள்ள வித்தியாசம் மலைக்கும் மடுவுக்கும் உள்ளதாகும். வெள்ளையர்கள் செல்லுமிடங்களிலெல்லாம் 'தாங்கள் எஜமானர்களாக விளங்க வேண்டும்; அந்நாட்டு பூர்வீகக் குடிகளை அடிமைகளாக்க வேண்டும்' என்னும் ஒரே நோக்கத்துடன் இருப்பவர்கள். இந்தியர்களோ 'வயிற்றைக்கழுவினால் போதும்' என்ற ஒரே பல்லவியுடன் இருப்பவர்கள். அவர்கள் அந்த ரீதியில் எண்ணுவதற்கும், இவர்கள் இந்த ரீதியாய் நினைப்பதற்கும் அவரவர்களுடைய தாய்நாட்டு அந்தஸ்து இடங்கொடுப்பதைப் பொறுத்திருக்கிறது என்று கூறுதல் போதுமானது.

இந்தியாவின் அரசியல், பொருளாதார நிலைமையைக் குடியேற்ற நாட்டு இந்தியர்கள் அறியாததல்ல. கடந்த சில வருஷங்களாக, இவர்கள் சம்பந்தப்பட்ட பிரச்னைகளைக் கவனிப்பதற்கென்றும், இந்தியாவின் அயல்நாட்டுக் கொள்கை நிர்த்தாரண விஷயங்களைக் கவனிப்பதற்கென்றும், காங்கிரஸ் மஹா சபையானது, தன் தலைமைக் காரியாலயத்தில் 'அந்நிய நாட்டிலாகா' என்று ஓர் இலாகாவை நியமித்திருக்கிறது. இந்த இலாகா மிக்க தீவிரவாதிகளின் கையில் ஒப்படைக்கப்பட்டு, வேலையும் சுறு சுறுப்புடன் நடந்து வருகிறதென்பதை விஷயமறிந்தவர்கள் பத்திரிகை வாயிலாக உணர்ந்திருக்கலாம்.

காங்கிரஸின் முதல் வேலை, இந்தியாவை ஆங்கில ஏகாதிபத்தியத்தினின்று மீட்பது. ஆகவே அது தன் கவனம் முழுவதையும் அதன் சார்பாகத் திருப்பி யிருக்கிறது. ஆதலின் ஒவ்வொன்றுக்கும் காங்கிரசையே நம்பியிருப்பது அதற்கு மிகுந்த சிரமத்தைக் கொடுப்பது போலாகும். அது, தன் முதல் வேலையில் வெற்றி

பெற்றுவிட்ட மறு நிமிஷம் தன் கவனத்தை அயல் நாட்டு இந்தியர்களின் பிரச்னையின்பால்தான் திருப்பும் என்று கூறத்தேவையில்லை. இதற்கிடையில் குடியேற்ற நாட்டு இந்தியர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டுவதும், உடனே செய்கையில் காட்டவேண்டியதும் ஒன்று இருக்கிறது. அதனை மேற்கொள்ளுவது தங்கள் சுயமரியாதைக்கும் இந்தியாவின் மானத்திற்கும் மிக்க பெருமையைத் தரக்கூடியதாகவிருக்கும்.

ஒரு பெரிய உண்மையை மட்டும் நாம் மறத்தல் கூடாது. எந்த நாடு நமக்கு இருக்க நிழலும், உண்ண உணவும், உடுக்கஉடையும் தருகிறதோ அதையே தாய் நாடாகக் கருதுதல் வேண்டும். நமது உழைப்பின் மிகுதியால் சிறிது பொருள் கையில் சேர்ந்ததும், தன் நாட்டை நோக்கிக் கிளம்ப வேண்டும் என்னும் எண்ணம் இருந்து வருவது மகாபாதகமானது. இந்த எண்ணமே 'நமது நாட்டிற்கும் குடியேற்ற நாடு வேண்டும்' என்னும் மனப்பான்மை கூட இல்லாமல் செய்து விட்டது.

நம்மைச் சுற்றி ஒரு முறை பார்ப்போம்.

இப்பொழுது அமெரிக்காவிலுள்ள 'அமெரிக்கர்க' ளெனப்படுவோர் யாவர்? அவர்கள் அனைவரும் 17-வது நூற்றாண்டில் குடியேறிய ஆங்கிலேயர்களல்லவோ? சிறிது காலம் தாய் நாட்டின் ஆட்சிக்கு அடங்கி வாழ்ந்தனர். பின்னர் தாய் நாட்டினர், 'சுரண்டல்' கொள்கையை அவலம்பிக்கத் தலைப்படவே பெருங் கிளர்ச்சியும் போரும் புரிந்து, விடுதலை பெற்று, சுதந்தர நாட்டினர் ஆயினர். இப்பொழுது அவர்கள் கையாளும் கொள்கைகளைக் கூர்ந்து நோக்குங்கள். 1914—18ல் நடந்த ஐரோப்பிய மகா யுத்தத்தில் இங்கிலாந்துக்கு ஆபத்து நேரிடும் என்ற சூசனை ஏற்பட்டதோ இல்லையோ, தயக்கமின்றி அவர்களுக்கு உதவ முன் வந்தனர். இப்படியே சமயம் வரும்பொழுதெல்லாம் உதவத் தயாராக விருக்கின்றனர்.

ஆப்ரிக்காப் பக்கமாகத் திரும்புங்கள். அங்கு எத்தனை நாட்டார் குடியேறியிருக்கின்றனர் என்பதைக் கவனியுங்கள். தத்தம் தாய் நாட்டின் மீது அவர்களுக்குள்ள பற்றையும், ஆற்றும் உதவியையும் நோக்குங்கள்.

எல்லாவற்றிற்கும் மேலாக, இந்தியாவில் 1928-ஆம் ஆண்டில் கூடிய சர்வ கட்சி மகா நாடு வெளியிட்டதும், 'நேரு கமிட்டி ரிப்போர்டு' என்று வழங்கப் படுவதுமான யாதாஸ்தில் 'பிரஜை' என்பதற்குக் கூறப்பட்டிருக்கும் வியாக்கியானத்தை உற்று நோக்குங்கள். அதில் கூறியிருப்பதாவது:—

'இந்திய சாம்ராஜ்ய எல்லையிற் பிறந்து, வேறு எந்த நாட்டிலும் பிரஜா உரிமைபெறாத ஒவ்வொருவரையும், அல்லது இங்குப்பிறந்து பிரஜா வுரிமை பெற்று மற்றெந்த நாட்டிலும் பிரஜா வுரிமை உடையவராக இராத தகப்பனைப் பெற்ற ஒவ்வொருவரையும் குறிக்கவே இந்தத் திட்டத்தில் ஆங்காங்கு 'பிரஜை' என்ற வார்த்தை பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. தற்போதுள்ள சட்டப்படி இந்திய சாம்ராஜ்யத்தில் பிரஜாவுரிமை பெற்றிருப்பவர்களும் இச் சட்டப்படி பிரஜைகள் ஆவர்.'

'அந்நிய நாட்டின் பிரஜை ஒருவர் சட்டப்படி அந் நாட்டுப் பிரஜாவுரிமையைத் துறந்து விட்டாலொழிய இந்திய சாம்ராஜ்யத்தின் பிரஜையாக விருக்க முடியாது.'

இதுவரையில் பிரஜாவுரிமையின் முக்கியத்துவத்தை நாம் அறியாமலி

ருந்திருந்தால், இனியாவது எச்சரிக்கையுட னிருக்க வேண்டும்.

இந்தியாவில் பாபருக்கு முன் வந்த சந்ததிகள் இந்தியாவைக் கேவலம் கொள்ளையடிக்கத் தகுந்த நாடென்று கருதி, கேவலமான ரீதியில் நடந்து கொண்டதால்தான் பிணக்கும் போரும் சர்வ சாமான்யமாகி, மஹம்மதியப் பூண்டே இந்தியாவில் இருக்க இடந்தரலாகாது என்ற முடிவுக்கு அக் காலத்திய ஹிந்துக்கள் வர நேர்ந்தது. பாபர் காலந் தொடங்கி—சிறப்பாக, அக்பர் காலந் தொடங்கி—மொகலாயர்கள் இந்தியாவைத் தாய் நாடாகக் கருதி, ஹிந்துக்களுடன் சம்பந்தா சம்பந்தங்கள் நடைபெற ஆரம்பமானது முதல் போரொழிந்து சமாதானம் நிலவத் தொடங்கியது. முந்திய வர்க்கத்தைச் சார்ந்த துருக்கர்கள் ரீதியில் இந்த இருபதாவது நூற்றூண்டிலும் ஆங்கிலேயர்கள் நடந்து கொள்வதால்தான் ஹிந்து—முஸ்லீம் இந்தியா, சுதந்திர துவஜத்தைத் தூக்கி விட்டது.

எவரும் சரித்திரங்கண்ட உண்மையைப் புறக்கணிக்க முடியாதல்லவா! அதற்காகவே சற்று விரிவாக எழுத நேர்ந்தது. பிரஜாவுரிமை விஷயமாகப் பிறருக்கு நாம் எந்த நிபந்தனைகளை விதிக்கிறோமோ, அதே நிபந்தனைகளை நாமும் பிறநாட்டில் ஏற்றுக் கொள்ள வேண்டும். நம்மவர்கள் எந்தெந்த நாடுகளில் குடியேறியுள்ளனரோ, அவ்வந்நாட்டுப் பிரஜைகளாகக் கருதி, அவ்வந் நாடுகளின் பிரஜாவுரிமைச் சட்டத்திற்கு முரண்படாத நிலைமையில் பிரஜைகளாக அநும்பாடுபடல் வேண்டும். இந்தக்காரியம் எளிதல்ல வெனபது இப்பொழுது இலங்கையில் இந்தியர்களின் பிரஜாவுரிமை சம்பந்தமாக நடைபெறும் விவாதத்தால் தெளிவாக அறியக் கிடக்கிறது. எனினும் அங்குள்ள அறிஞர்கள் சலியா முயற்சிசெய்து வருகிறார்கள். இந்திய தேசியத் தலைவர்களும் அப்பிரச்னையில் தங்கள் முழுக் கவனத்தையும் செலுத்தி வருகிறார்கள்.

ஒரு நாட்டில் காலடிவைக்கும் பொழுதே மேனாட்டார்பாடும் பல்லவி பலரும் அறிந்ததே. ஒருகால், இந்தியா, தனக்குச் செல்வாக்கிருந்த காலத்தில் இதே பல்லவியைப் பாடிற்றோ என்னமோ! காலங் கடந்த செய்தியாதலால் அறியக்கூடாததொன்று. ஒருகால் பாடி யிருப்பினும் இப்பொழுது இருக்கும் சந்ததியார் மறந்தும் அப்பல்லவியைச் சிந்தியார்கள் என்பது திண்ணம். ஏன்? இந்த யுகம் சமதர்மமும் சுதந்தரமும் சகோதரத்துவமும் ஏற்பட உழைக்கும் யுகம். அயல் நாடுகளில் குடியேறியுள்ள இந்தியர்கள் அந்தந்த நாட்டு சுதேசிகளுடன் மனங்கலந்து, தாராளமாகப்பழகி, கொள்வன, கொடுப்பன முதலிய சம்பந்தங்களைச் செய்து கொண்டு, மனம், வாக்கு, காயத்தால் தானும் அந்நாட்டவனே என்னும் உணர்ச்சியை உண்மையில் அதன் மனதில் பதியுமாறு நடந்து கொள்ள வேண்டும். படிப் படியாக இதர உரிமைகளில் கவனஞ் செலுத்தும் மனப்பான்மையை வளர்க்க வேண்டும். இதனை மேற்கொண்டாலொழிய எதிர்பார்த்த பலன் உண்டாகாது.

இந்த உறுதியும், உத்தேசமும் மனதிலிருத்தப் படாமல் கேவலம் 'சம்பாத்தியம் முடிந்தபின் வீடு திரும்புவது' என்னும் ஒரே நோக்கம் உடையவர்களாக இருப்போமானால், நாமும் 'சுரண்டும் பேர்வழிகள்'

என்னும் ஜாபிதாவின் கீழ் வந்துவிடுவோம். நிலைமை நமக்கு முற்றிலும் விரோதமாக மாறிவிடும். இந்தியா, தன் விடுதலையை முன்னிட்டு நிகழ்த்தி வரும் போரை ஒவ்வொரு ஐரோப்பிய நாடும் நன்கு கவனித்து வருகிறது. இந்தியர்களுக்கு விரோதமான பிரசாரத்தை மேற்கொள்ளவோ, அல்லது ஏற்கனவே மேற்கொண்டிருந்தால், பிரசாரம் பலிதமாகாத முறையிலோ நடந்து கொள்ள, குடியேற்ற நாட்டு இந்தியர்கள் முஸ்தீபுகள் செய்து கொள்ள வேண்டும்.

ஜான்ஸிபார் வெள்ளையர்கள் இந்தியர்களை விரட்டும் மறை முகமான முயற்சியில் எங்ஙனம் இந்தியாவில் நடைபெறும் கிராம்பு பஹிஷ்காரத்தால் தோல்வியுறுகின்றனர் என்பதைப் பலரும் அறிந்து கொள்ளாமலிருக்க முடியாது. இந்த உண்மையை யுணர்ந்தவர்கள், பாமரர்களுக்குணர்த்தி, கிளர்ச்சியைத் தொடங்க வேண்டும்.

இது, குடியேற்ற நாடுகளில் வசிக்கும் இந்தியர்களாகிய உங்கள் கையில் ஒப்படைக்கப் பட்டிருக்கும் காரியம். ஆகவே உங்கள் கர்த்தவ்யமாகிறது. எதிர்கால இந்தியாவின் மதிப்பு உங்கள் அயல் நாட்டுப் பிரஜாவுரிமைப் போராட்டத்தில் அடங்கியிருக்கிறது.

இனி இக்காரியத்தில் ஈடு படவேண்டியவர்கள் யாவர் என்பதைக் குறித்துப் பேசுவோம். இந்தப் பிரச்னையின் பொறுப்பு முழுவதும் முதன் முதலாக பத்திரிகைகளின் மீதே விழுகின்றன என்பதைக் குறித்துச் சொல்ல வேண்டுவதில்லை. இந்தக் கிளர்ச்சிக்கு அங்குரார்ப் பணம் பத்திரிகைகளே செய்ய வேண்டும். உணர்ச்சி, மனிதத் தன்மை, பொறுப்பு முதலிய சிறந்த குணங்களையுடைய தனிகர்கள் அவர்களுக்கு அரணாக நிற்க வேண்டும். இந்தியாவின் கலை, நாகரீகம், உலக சமாதானம் முதலியவைகள் உலக மடங்கலும் பரவ வேண்டும் என்பதில் தீவிர சிந்தனையுடைய வாலிபத் தொண்டர்கள் தமது அனைத்தையும் அர்ப்பணஞ் செய்து தொண்டாற்ற வேண்டும்.

பிரஜாவுரிமையை அடைவதில் குடியேற்ற நாட்டு இந்தியர் முனைந்து நிற்கின்றனர் என்ற செய்தி இந்தியாவில் பரவிய நிமிஷமே அவர்களுக்கு வேண்டிய உதவி கிடைக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை. தென் ஆப்ரிக்காவில் காந்தியடிகள், குடியேறிய இந்தியர் விஷயமாக நடத்திய அறப் போரில் இந்தியா செய்த உதவி மகத்தானது என்பதை விரித்தோத வேண்டுவதில்லை.

இப்பொழுது இந்தப் பிரச்னைக்கு என்ன அவசரம் வந்து விட்டது என்று ஒரு சாரார் கேட்கலாம். எப்பொழுது மில்லாத அவசரம் இப்பொழுதுதான் வந்துவிட்டது என்று அவர்களுக்குக் கூறவேண்டி யிருக்கிறது. ஐரோப்பியர்கள் தங்கள் வாழ்க்கை முறையை டாம்பீகமானதாகச்செய்து கொண்டதன் பயனாக இப்பொழுது பெரும் அவதிக்கு ஆளாகியிருக்கிறார்கள். தொழிலற்றுத் தவிக்கும் தனது நாட்டு மக்களைக்குடியேற்ற நாடுகளில் ஏற்றுக் கொள்ளுமாறு தாய் நாடுகள் விண்ணப்பித்துக் கொள்ளுகின்றன. உண்மையும் உழைப்பும் நிறைந்த வெள்ளையர் வர்க்கத்தைத்தான் ஏற்றுக் கொள்ளத் தயாராகவிருப்பதாகவோ, அல்லது, ஆலோசிப்பதாகவோ, ஆஸ்திரேலியா கூறியதாக பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. மற்றக் குடியேற்ற நாடுகளும் இதே நீதியால் தத்தம் தாய் நாட்டுப்பிரச்னையைக்கவனிக்கின்றன. 'எந்த வேஷம்

வந்தாலும், தீவட்டி பிடிப்பவன் வேலை விடாது' என்பதைப் போல், யாவர் வரினும் இந்தியர் கஷ்டம் குறையாது. ஆதலின் இந்தச் சந்தர்ப்பத்தில்—ஐரோப்பாவில் யுத்த மேகங்கள் கர்ச்சிக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில்—இந்தியா, ஆங்கில ஏகாதிபத்தியத்திற்குத் தகுந்த எச்சரிக்கை செய்து, அதை எளிதில் தன் கோரிக்கைக்கு இணங்க வைக்க முயற்சிக்கும் இந்த சந்தர்ப்பத்தில்—குடியேற்ற நாடுகளெல்லாம், தாய் நாடுகள் சம்பந்தப்படும் யுத்தத்தில் கலந்து கொள்வது யுக்தானுசாரத்தைப் பொறுத்து என்று தீர்மானிக்க யோசித்துக் கொண்டிருக்கும் இந்தச் சந்தர்ப்பத்தில்—அயர்லாந்திடமிருந்து இங்கிலாந்து நல்ல 'சூடு' வாங்கிக்கொண்ட இந்தச் சந்தர்ப்பத்தில்—எல்லாவற்றிற்கும் மேலாக, வெளி நாட்டு இந்தியர் விஷயத்தில் துடிதுடித்துக்கொண்டிருக்கும் உத்தமர் சுபாஷ்பாபு காங்கிரஸுக்குத் தலைமை வகிக்கப் போகும் இந்தச் சந்தர்ப்பத்தில்—உங்கள் கிளர்ச்சியை ஆரம்பித்தால் வெற்றி உங்களுக்கு நிச்சயம் என்பதை மறுக்க எவராவது துணிவரா? ஆதலின் இன்றே விரைந்தெழுங்கள்! உறுதி பெறுங்கள்! கடவுள் உங்களுக்குக் கருணை புரிவாராக!

காந்தி யடிகளால் தென்னாப்பிரிக்காவில் ஆரம்பிக்கப் பட்ட இந்தியர் சங்கமும், 'இந்தியன் ஒபினியன்' என்னும் பத்திரிகையும் இந்தியாவின் உரிமை சம்பந்தமாக உழைக்கும் உழைப்பை யாவரே அறியாதார்? 'ஜோதி' யும் இப் பணியில் பர்மாவுக்கு மட்டுமின்றி ஏனைய இந்தியக் குடியேற்ற நாடுகளுக்கும் வழி காட்டியாக இருந்து, கிளர்ச்சியைத் தொடங்க அங்கு ரார்ப்பணம் செய்து அழியாப் புகழை எய்துமாக. பர்மாவிலுள்ள இந்தியர் உரிமை விஷயமாக, விவரமான கட்டுரைகளைப் பர்மாவிலுள்ள இந்திய நண்பர்கள் எழுதி உதவி புரிவார்களாக!

இப்படியும் நடக்குமா?

ஜப்பானிலும் ஜெர்மனியிலுந்தான் தற்கொலைகள் அதிகம்.

ஃ ஃ ஃ

உலகத்தில் அதிகமான ஆகாரப் பொருளாக உபயோகப்படுவது அரிசி.

ஃ ஃ ஃ

ஜெர்மனியில் 55,259 டாக்டர்கள் இருக்கிறார்கள். இவர்களில் 4,339 பேர் பெண்கள்.

ஃ ஃ ஃ

1937-ம் வருஷத்தில் உலகத்தில் 35,400,000 அவுன்ஸ் தங்கம் உற்பத்தியா யிருக்கிறது. ருஷ்யாவில் மட்டும் 6,000,000 அவுன்ஸ் உற்பத்தி.

ஃ ஃ ஃ

பார்வை இல்லாதவர்களுக்கு, இறந்தவர்கள் கண்ணைப் பிடுங்கிவைத்தால் பார்வை தெரிகிறது. ருஷ்ய விஞ்ஞான நிபுணர் ஒருவர் இதனைக் கண்டு பிடித்து அநுஷ்டானத்தில் கொண்டு வந்திருக்கிறார்.

ஃ ஃ ஃ

சீனாக்காரர்கள், கெட்ட செய்திகள் ஏதேனும் வந்தால், சிரிப்பார்கள். ஏதேனும் யோசனைக்கு வழியில்லையானால், தலையைச் சொறிவதற்குப் பதில் காலைச் சொறிவார்கள். இன்னொரு விஷயங்கூட. தங்களுக்கு வேண்டாத ஒரு விருந்தாளி வந்து விட்டான் என்று வைத்துக் கொள்வோம். அப்பொழுது அவர்கள், 'தாங்கள் இங்கேயே இருக்கலாமே' என்பார்கள். இந்தஜாடையை அறிந்து, விருந்தாளி உடனே வெளியே போய்விடுவான்.



1938

ஜனவரி

1 சீனாவின் பிரதம மந்திரியாக ஸ்ரீ எச். எச். குங் நியமிக்கப் பட்டார். சியாங்-கை-ஷேக் இனி, சேனாதிபதியாக இருந்து யுத்தத்தை மும்முரமாக நடத்துவார்.

லாலா லஜபதிராயின் மகள் ஸ்ரீமதி பார்வதிதேவி குஜரன்வாலாவில் இறந்து விட்டாள்.

மத்திய மாகாண கவர்னரின் மனைவி கதராடை தரித்துக் கொண்டார்.

2 மஹேஸ பருவா என்ற ஓர் அரசியல் கைதி ராஜஷாஹி சிறையில் இறந்து விட்டார்.

பீஹார் மாகாணத்திலுள்ள சீதாமாரி சப்டிவிஷனில் ஹரிபுரா காங்கிரஸ் பிரதிநிதிகள் தேர்தல் நடைபெற்ற போது, கலவரம் நடந்து தேர்தல் நின்று விட்டது.

எகிப்திய பார்லிமெண்டை ஒரு மாதம் வரை கலைத்து விட்டிருப்பதாக, எகிப்திய மன்னர் ஓர் உத்திரவு பிறப்பித்தார்.

அகில இந்திய மாணவர் மகாநாடு திரு மஸானி தலைமையில் சென்னையில் கூடியது.

சமஷ்டி அரசியல் திட்டத்தை எதிர்த்து அகில இந்திய தொழிலாளர் காங்கிரஸ் (டெல்லியில்) ஒரு தீர்மானம் நிறைவேற்றியது.

காங்கிரஸ் காரியக் கமிட்டி கூட்டம் பம்பாயில் திரு புலாபாய் தேசாய் பங்களாவில் கூடியது.

3 அமெரிக்காவின் 75வது காங்கிரஸை பிரசிடெண்ட் ரூஸ்வெல்ட் திறந்து வைத்தார்.

தென்னாப்ரிக்காவிலுள்ள டிரான்ஸ்வாலில், இந்தியர்கள் ஸ்தாவர சொத்துக்களைச் சுவாதீனப் படுத்திக் கொள்ளும் விஷயமாகவும் கலப்பு மண விஷயமாகவும் விசாரணை செய்யத் தனித்தனிக் கமிஷன்கள் இரண்டு நியமிக்கப்படுமென்று ஓர் அறிக்கை கூறுகிறது,

எகிப்திய பார்லிமெண்ட் இன்று கூடிய போது, பெரிய கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டன.

ருமேனியாவின் சர்வாதிகாரியான எம், கோகா என்பவர், 'ருமேனியா ருமேனியர்களுக்கே' என்று பகிரங்கப் படுத்திய பிறகு, பல யூதர்கள் வெளி நாடுகளுக்குக் கிளம்பி விட்டார்கள். கோகா, ஹிட்லருக்கு, தன்னுடைய நட்பைத் தெரிவிப்பதாகத் தந்தி கொடுக்க, பின்னவரும் அதற்கு வந்தனந் தெரிவித்திருக்கிறார்.

4 கொச்சி மகாராஜாவின் 76-வது பிறந்த நாளை யொட்டி, சமஸ்தான நிருவாகத்தில் திவானுக்கு உதவி செய்ய ஓர் உத்தியோகஸ்தரல்லாதாரை நியமிப்பதாக ஓர் அறிக்கை வெளியாயிற்று.

சீன-ஜப்பானிய யுத்தத்தில் கன்பூஷியஸ் என்ற பிரபல தத்துவஞானி பிறந்த இடமாகிய சூபூ என்ற ஊரை ஜப்பானியர்கள் கைப்பற்றி விட்டார்கள்.

ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகள் விழுந்தால் ஜனங்கள் எம்மாதிரி நடந்து கொள்ளவேண்டுமென்று பம்பாயில் இன்று பரிசோதனை நடைபெற்றது.

1-1-38முதல் குறிப்பிட்ட சில இடங்களில் கள் விற்பனை கூடாதென்றும், கள்

விற்பனை செய்யும் கடைகளை எடுத்து விடவேண்டு மென்றும் மத்திய மாகாண அரசாங்கத்தார் உத்திரவு பிறப்பித்தனர்.

5 சென்னையில் மௌலானா முகம்மதலி தினம் கொண்டாடப்பட்டது,

திருவாங்கூர் மகாராஜாவின் சகோதரிக்கு ஒரு குழந்தை பிறந்தது. இதுதான், இப்பொழுதைய மகாராஜாவுக்குப் பின் பட்டத்துக்கு வரும்.

வங்காள அரசாங்கத்தார், சுமார் இரண்டாயிரம் அரசியல் கைதிகளை விடுதலை செய்யத் தீர்மானித்து விட்டதாக ஓர் அறிக்கை கூறுகிறது.

ஸ்பெயின் யுத்தம் மும்முரமாக நடந்து கொண்டுதானிருக்கிறது. யுத்தத்தில் சம்பந்தப்படாத மற்றவர் அனைவரும், மாட்ரிட் நகரத்தை முப்பது நாட்களுக்குள் காலி செய்து விட வேண்டு மென்று ஓர் உத்திரவு கூறுகிறது.

6 இத்தலியின் அபிசீனிய ஆக்ரமிப்பை ருமேனியா அங்கீகரித்திருக்கிறது.

இப்பொழுது இந்தியா அரசாங்கத்தின் வியாபார அங்கத்தினரா யுள்ள ஸர். ஜாபருல்லாகான், இந்தோ-பிரிட்டிஷ் வியாபார ஒப்பந்த சம்பந்தமாக இங்கிலாந்து செல்வதால் அவருடைய ஸ்தானத்தில் ஸர் முகம்மது யாகூப் நியமிக்கப்பட்டார்.

7 தேக சௌகரியத்தை முன்னிட்டு பம்பாய்க்கு அருகாமையிலுள்ள ஜுஹுவில் 32நாட்கள் தங்கியிருந்த மகாத்மா காந்தி இன்று வார்தாவுக்குப் புறப்பட்டார்.

இரண்டு பெரிய யுத்தக் கப்பல்களும், பல நீர் மூழ்கிக் கப்பல்களும் உடனே தயார் செய்யப் படவேண்டு மென்று முஸோலினியின் ஓர் உத்திரவு கூறுகிறது.

ஜப்பான் சாமான்களைப் பகிஷ்கரிக்க வேண்டு மென்று பிரிட்டிஷ் தொழிலாளர் கட்சியினர் ஒரு தீர்மானம் நிறைவேற்றி யிருக்கின்றனர்.

ஹாங்கோ நகரத்தில் சீன தளகர்த்தர்கள் ஒன்று கூடி, ஜப்பான் மீது நடத்தும் போராட்டத்தைத தீவிரப்படுத்த வேண்டுமென்று தீர்மானித்தனர்.

டெல்லியில் கூடிய மாகாணச் சட்டசபைத் தலைவர்களின் மகாநாடு, சட்ட சபைகளில் தெய்வப் பிரார்த்தனை ஒன்றுங் கூடாதென்று தீர்மானித்தது.

பம்பாய் மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கு திரு. புலாபாய்தேசாய் தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார்.

8 கல்கத்தாவிலே கூடிய 'இந்திய சையன்ஸ் காங்கிரஸ்' இன்றோடு முடிந்தது. 1939ம் வருஷம் ஜனவரி மாதம் 2ந் தேதியிலிருந்து 9ந் தேதிவரை கூடுகிற மகாநாடு லாகூரில் நடைபெறத் தீர்மானிக்கப் பட்டது.

ஷாங்காய் நகரத்தில் ஜப்பானியப் படைகளுக்கும் பிரெஞ்சுப் போலீஸுக்கும் கைகலந்த சண்டை ஏற்பட இருந்தது. தெய்வாதீனமாக அது நீக்கப்பட்டது.

9 ஸ்பெயின் சண்டையில் டெருயெல் என்ற ஊரைக் கைப்பற்ற, இரண்டு கட்சியினரும் நீண்ட நாட்களாகச் சண்டைபோட்டுக்கொண் டிருந்தனர். இது கடைசியில் இன்று அரசாங்கத் துருப்புகளால் கைப்பற்றப் பட்டது.

இந்தியாவின் பல பாகங்களிலும் அகில இந்திய சீனா தினம் கொண்டாடப்பட்டது.

கிரீஸ் அரசிளங் குமரனுக்கும், பிரடெரிக்கா ஹாயிஸே என்ற சீமாட்டிக்கும் ஏதென்ஸ் நகரில் சிறப்பாக விவாகம் நடைபெற்றது.

லார்ட் பால்ட்வின், திரு ரூஸ்வெல்ட் ஆகிய இருவருடைய பேச்சுக்கள் அடங்கிய நூல்கள் வெளியாகி யுள்ளன. இவை ஜெர்மனியில் வரக்கூடா தென்று தடுக்கப்பட்டிருக்கின்றன.

துருக்கிய ஆகாயவிமானப் படையை நவீன முறையில் அபிவிருத்தி செய்ய 15 லட்சம் பவுன் தேவையென்று துருக்கி பார்லிமெண்டில் ஒரு மசோதா கொண்டுவரப்பட்டது.

10 பண்டித ஜவஹர்லால் நேருவின் தாயார் ஸ்ரீமதி ஸ்வரூபராணி இறந்து விட்டார்.

ஹிந்து-முஸ்லீம் பிரச்னையை ஒருவாறு தீர்த்து வைக்க வேண்டு மென்று காங்கி

ரஸ் ஏற்றுக் கொண்டுள்ள முயற்சி சம்பந்தமாக பம்பாயில் மௌலானா அபுல் கலாம்அஜாத்தும் ஜனாப் ஜின்னாவும் கலந்து பேசினார்கள்.

லார்ட் லின்லித்கௌ, தமது பரிவாரங்களுடன் இன்று சென்னைக்கு விஜயஞ் செய்தார்.

திரு சுபாஷ் சந்திரபோஸ் வியன்னாவிலிருந்து இன்று லண்டன் வந்துசேர்ந்தார்.

பம்பாய் சட்டசபை இன்று ஆரம்பித்தது. ஆயிரக் கணக்கான கிருஷிகர்கள், சட்டசபைக் கட்டிடத்திற்கு முன் நின்று ஆர்ப்பாட்டஞ் செய்தார்கள்.

ஹிட்லருக்கு முன்னால் ஜர்மனியின் சான்ஸலரா யிருந்த டாக்டர் லூதர் என்பவர், இந்தியாவில் சுற்றுப்பிரயாணஞ் செய்து வருகிற வழியில் இன்று காசிக்கு வந்து பல இடங்களைப் பார்த்தார்.

11 திருமதி ஸ்வரூபராணியின் மூத்தசகோதரி, தன் இளைய சகோதரி இறந்து விட்டார் என்று கேட்டுத்தாமும் இறந்துபோனார்.

ஜப்பானில் இன்று பெரிய பூகம்ப அதிர்ச்சி ஏற்பட்டது.

எகிப்திய அரசாங்கத்து மந்திரிமார், தங்களுடைய சம்பளத்தில் நூற்றுக்குப் பத்து விகிதம் குறைத்துக் கொண்டனர்.

இன்று லண்டனில் ஒரு பெரிய கூட்டத்தில் திரு. சுபாஷ் சந்திரபோஸ் பேசினார்.

இத்தலியின் எத்தியோப்பிய ஆக்ரமிப்பை ஹாலந்து அங்கீகரித்துக் கொண்டுவிட்டது.

கல்கத்தாவிலுள்ள ஒரு சணல் மில்லில் இரண்டு ஸ்திரீகள் வேலையினின்று நீக்கப் பட்டார்க ளென்பதற்காக, மூவாயிரம் தொழிலாளர்கள் வேலை நிறுத்தஞ் செய்திருக்கின்றனர்.

சீன சேனாதிபதியான சியாங்-கை-ஷேக், ஹாங்கோவிலிருந்து இன்று லுங்கை போர்முனைக்கு ஆகாய விமான மூலம் சென்றார்.

அந்நிய நாடுகளி லிருந்து சீனா வாங்கி யிருக்கும் கடனைச்சாத்தியமான வரையில் தான் கொடுக்க முடியுமென்றும், அப்படி கொடுக்க முடியாவிட்டால் அந்நிய நாடுகள் கொஞ்சம் பொறுத்துக்கொள்ள வேண்டுமென்றும் சீன மந்திரி கூறினார்.

12 வங்காள மாகாண அரசாங்கத்தார், 1938ம் வருஷம் ஏப்ரல் மாதம் 4ந் தேதி முதல் நோயாக்கள்ளி ஜில்லாவில் மதுவிலக்குத் திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரத் திட்டம் போட்டிருக்கின்றனர்.

ருஷ்யாவின் புதிய அரசியல் திட்டப்படி இன்று புது பார்லிமெண்ட் கூடியது. இந்தப் பார்லிமெண்டுக்கு மொத்தம் 1143 பிரதிநிதிகள்.

ஐர்லாந்தின் புதிய பார்லிமெண்ட் இன்று கூடியது.

கல்கத்தா சர்வகலாசாலை, மாணவர்களுக்கு ராணுவப்பயிற்சி அளிக்கவேண்டுமென்று போட்டிருந்த திட்டம் இன்று முதல் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது.

ஸ்பெயினில் தளபதி பிராங்கோவின் ஆதிக்கத்தை அங்கீகரிப்பதாக, இத்தலி ஆஸ்திரியா, ஹங்கேரி ஆகிய நாடுகள் சேர்ந்து ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கின்றன.

ஜெர்மன் யுத்த மந்திரியான வான் ப்ளாம்பெர்க்குக்கும் க்ரூஹுன் என்ற ஒரு சீமாட்டிக்கும் இன்று விவாகம். ஹிட்லரும் கோயரிங்கும் ஆஜராகியிருந்தார்கள்.

போர்த்துகல் தேசத்தின் தலைநகரான லிஸ்பனில் அநேக பொதுவுடமை வாதிகள் கைது செய்யப் பட்டார்கள்.

கிராம உத்தியோகஸ்தர்கள் முன்னர் காங்கிரஸ் இயக்கங்களில் ஈடுபட்டிருந்தார்கள் என்பதற்காக, அவர்களை மீண்டும் மேற்படி உத்தியோகங்களில் நியமிக்கக்கூடாதென்றிருந்த கட்டளையை பம்பாய் அரசாங்கத்தார் ரத்து செய்து விட்டனர்.

13 1937ம் வருஷம் செப்டம்பர் மாதத்தி லிருந்து, கல்கத்தாவிலுள்ள சீனத்தொழிலாளர்கள் சீனக் கஷ்ட நிவாரணநிதிக்கு 50,000 ரூபாய் வரை சேர்த்து அனுப்பியிருக்கிறார்கள்.

ஷாங்காய் நகருக்கு அருகிலுள்ள நான்டோ பிரதேசத்தில் ராணுவச் சட்டம் அமுலுக்குக் கொண்டுவரப் பட்டது.

லண்டனில் ஒரு பெரிய பொதுக்கூட்டத்தில் திரு. சுபாஷ் சந்திரபோஸ் பேசினார். ஜார்ஜ்லான்ஸ்பரி தலைமைவகித்தார்.

லார்ட் சாமியலும் பண்டித ஜவஹர்லால் நேருவும் ஒன்றரை மணி நேரம் பேசிக் கொண்டிருந்தார்கள்.

14 திரு, சௌடெம்ப்ஸைத் தலைமையாகக் கொண்ட பிரெஞ்சு மந்திரிச் சபை இன்று கலைந்து விட்டது.

கல்கத்தாவுக்கு ஆறு மைல் தொலைவிலுள்ள பேலூரில் கட்டப்படும் ஸ்ரீராம கிருஷ்ண மடத்தின் கோயிலுக்கு திருமதிகள் ஹெலென் ருபெல், அன்னா வூர்செஸ்டர் என்ற இரண்டு ஸ்திரீகளும் ஏழு லட்சம் ரூபாய் நன்கொடையாகக் கொடுத்திருக்கிறார்கள்.

15 திரு, சுபாஷ் சந்திரபோஸ், இன்று லண்டனிலுள்ள ஒரு ஹோட்டலில், டிவேலராவைச் சந்தித்துப் பேசிக்கொண்டிருந்தார்.

16 வத்தலகுண்டுவில் தமிழ் நாட்டு அரசியல் மகாநாடு திரு. சி. என். முத்துரங்க முதலியார் தலைமையில் கூடியது.

வங்க பாஷையின் பிரபல கதாசிரியரான திரு சரத் சந்திர சட்டர்ஜி காலமடைந்தார்.

ஐக்கிய மாகாண காங்கிரஸ் கமிட்டிக்கு திரு மோஹன்லால் சாக்ஸேனா, தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார்.

இந்தியன் சாண்டோ என்று சொல்லப் பட்ட திரு. ராமமூர்த்தி பலாங்கீர் என்ற ஊரில் இறந்து விட்டார்.

17 பிரிட்டிஷ் அரசாங்கப் பிரதிநிதிகளும் ஐர்லாந்து அரசாங்கப் பிரதிநிதிகளும் இன்று, வியாபார ஒப்பந்த சம்பந்தமாக கலந்து பேசினார்கள்.

எதியோப்பியாவின் மாஜி சக்ரவர்த்தினி இன்று லண்டனிலிருந்து ஜெருசலேத்துக்குப் புறப்பட்டார். அப்பொழுது தேம்பித்தேம்பி அழுதார்.

சோவியத் அரசாங்கத்தின் தலைவராக, காலினின் என்பவர் தெரிந்தெடுக்கப் பட்டார். ஸ்டாலின், சாதாரண ஒரு மந்திரிப்பதவியை ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆனால் இவரே பொதுவுடமைக் கட்சியின் தலைவர்.

18 பிரெஞ்சு புதிய மந்திரி சபை மறுபடியும் இன்று திரு சௌடெம்ப்ஸ் தலைமையில் அமைக்கப் பெற்றது.

பாபு ராஜேந்திர பிரசாத் இன்று பாட்னாவில் நோயாகப் படுத்துக் கொண்டார்.

ஸர் ஸ்டான்லி ரீட் பம்பாய் ரோடரி கிளப்பில் ஒரு பிரசங்கம் செய்கிறபோது, ஒவ்வொரு நாடும் தனது ஆயுத பலத்தைப் பெருக்கிக் கொள்வதன் மூலந்தான், உலக சமாதானத்தை நிலை நிறுத்த முடியும் என்று கூறினார்.

19 லார்ட் லோதியன், ஷேகான் கிராமத்தில் இன்று மகாத்மா காந்தியுடன் நெடுநேரம் பேசிக்கொண்டிருந்தார்.

கவர்னருக்குப் புதிதாக அளிக்கப்பட்டிருக்கும் விசேஷ அதிகாரங்களை ரத்து செய்யும் முயற்சியில் மந்திரி சபையினர் வெற்றி பெறும் வரையில், இந்தச் சட்ட சபை, தன் காரியங்களை நடத்துவதில்லை யென்று இலங்கை சட்ட சபையில் ஒரு தீர்மானம் நிறைவேறியது.

20 எகிப்திய மன்னரான பரூக்குக்கும் திருமதி பரீதாஜுல்பிகாருக்கும் இன்று கெய்ரோவில் எவ்வித ஆடம்பரமுமின்றி விவாகம் நடைபெற்றது.

அந்தமானில் பாக்கியிருந்த 109 அரசியல் கைதிகளையும் இந்தியாவுக்குக் கொண்டு வந்து கல்கத்தாவுக் கருகிலுள்ள டம்டம் சிறையில் வைப்பதாக இந்தியா அரசாங்கத்தார் தீர்மானித்துள்ளார்கள்

திரு, சுபாஷ்சந்திரபோஸ் இன்று ஜெக்கோ—ஸ்லோவேகியாவின் தலைவரான டாக்டர் பெனஸைக் கண்டு பேசினார்.

அபிசீனியாவில் இதுகாறும் வழங்கி வந்த தாலெர் நாணயச் செலாவணியை ரத்து செய்வதாக இத்தாலிய அரசாங்கத்தார் ஓர் உத்திரவு பிறப்பித்தனர்.

25 வருஷ காலமாக வெளியிலே யிருந்த திரு, எம். என். ராயும் அவர் மனைவியும் இன்று கல்கத்தாவுக்கு விஜயஞ் செய்தார்கள். ஜனங்கள் ஏராளமாகக் கூடி உற்சாகமாக வரவேற்றார்கள்.

21 பிரெஞ்சு பார்லிமெண்டில் திரு, சௌடெம்ப்ஸ், புதிய மந்திரிச் சபையின் கொள்கைகளை விவரிக்கிறபோது, சர்வ தேச சங்கவிதிகளுக் குடன்பட்டு நடக்கப் போவதாகக் கூறினார்.

22 சமீபத்தில் அந்தமானிலிருந்து கொண்டு வரப்பட்டு நைனி சிறையில் வைக்கப்பட்டிருக்கும் சம்புநாத் அஜாத் என்ற அரசி

யல் கைதி 15—1—38 லிருந்து உண்ணு விரதமிருந்து வருகிறார்.

பிரான்ஸின் பிரதம மந்திரியா யிருந்த திரு. ப்ளம்மின் மனைவி இறந்துவிட்டார்.

யுத்த தளவாடங்களைச் செய்வதற்கென்று பிரிடோரியா நகரத்தில் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த தென்னாப்பிரிக்க அரசாங்கததார் தீர்மானித்திருக்கின்றனர்.

23 திரு. சுபாஷ் சந்திரபோஸ் இன்று விமானத்தில் கராச்சியில் வந்திறங்கினார்.

24 லாயிட் ஜார்ஜூம் அவர் மனைவியும் இன்று தங்களுடைய விவாகத்தின் தங்க ஜூபிலி கொண்டாட்டத்தைக் கொண்டாடினார்கள்.

திரு. சுபாஷ் சந்திர போஸ் இன்று ஆகாய விமானத்தில் கல்கத்தா வந்து சேர்ந்தார்.

ஹரிஜனங்களுக்கு எல்லாப் பொது ஆலயங்களையும் திறந்து விட வேண்டுமென்று பம்பாய் சட்ட சபையில். சட்ட மந்திரி திரு. கே. எம். முன்ஷி ஒரு மசோதா கொண்டு வந்தார்,

கௌரவப் பட்டங்கள் இனி அரசாங்கத்தாரால் வழங்கப்படக் கூடாதென்று பம்பாய் சட்ட சபையில் பிரதம மந்திரி கொண்டு வந்த தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

டாக்டர், பி. சி. ராய் இன்று காந்தியடிகளைப் பரிசோதனை செய்து, அவருடைய தேக நிலை முன்னை விட திருப்திகரமாயிருக்கிறதென்று தெரிவித்தார்.

பஞ்சாப் அரசாங்கத்தார், அரசியல் கைதிகள் அனைவரையும் விடுதலை செய்ய வேண்டுமென்று. சுமார் நாலாயிரம் பேர் கொண்ட ஒரு பெரிய கூட்டம் பஞ்சாப் சட்டசபை முன்னர் பெரிய ஆர்ப்பாட்டம் செய்தது. போலீஸார், இதனைத் தடுக்கவும், இவர்கள் கல்லெறிய, போலீஸார் பதிலுக்குத் தாக்க, இரு தரப்பிலும் பலருக்குக் காயம் ஏற்பட்டது.

ஒரு பிரதிநிதிக் கூட்டத்தை வரவேற்று இதைப்பற்றிப் பேசத்தாம் தயாரென்று பிரதம மந்திரி சட்டசபையில் கூறினார்.

லார்ட் லோதியன், டெல்லியிலிருந்து ஓர் அறிக்கை விடுத்து, அதில், இந்தியாவில் மாகாணப் பொறுப்பாட்சி வெற்றிகரமாகநடைபெறுவதாகக்குறிப்பிட்டார்.

பண்டித ஜவஹர்லால் நேரு வடமேற்கெல்லைப் புற மாகாணத்தில் சுற்றுப் பிரயாணம் செய்யத் தொடங்கி, இன்று கோஹட் நகரத்தில் ஒரு பெரிய பொதுக் கூட்டத்தில் பேசினார்,

சோவியத் அரசாங்கத்தின் பிரதிநிதி இன்று சீன அரசாங்கத் தலைவரைப் பேட்டி கண்டு, ருஷ்யாவின் அநுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டார்,

பல்கேரியாவில் மந்திரி சபை மாற்றியமைக்கப்பட்டது. இதுகாறும் யுத்த மந்திரியாயிருந்த லூகோவ் என்பவரை நீக்கிவிட்டு, அவருக்குப் பதில் தஸ்காலோ என்பவரை அரசர் நியமித்தார்.

25 தமது தென்னிந்திய சுற்றுப் பிரயாணத்தை முடித்துக் கொண்டு லார்ட் லின்லித்கௌ தமது பரிவாரங்களுடன் இன்று டெல்லி வந்து சேர்ந்தார்,

வங்காள அரசாங்கத்தார் கைத் தொழில்களை அபிவிருத்தி செய்வதற்கு ஒரு திட்டம் போட்டிருப்பதாக இன்று வியாபார மந்திரி ஒரு பொருட் காட்சிக் கூட்டத்தில் கூறினார்.

ஸ்பெயினில் பார்ஸிலோனா நகரத்தின் மீது, கலகக்காரர் ஆகாய விமானங்களிலிருந்து குண்டுகளைப் பொழிந்து பலத்த சேதத்தை உண்டாக்கினர்.

சர்வதேச சங்கத்தின் கூட்டம் ஜினிவாவில் கூடியது.

பர்மாவிலுள்ள ஏனாஞ்சாங், சௌ என்ற இடங்களில் பர்மா ஆயில் கம்பெனியாருடைய பெட்ரோல் உற்பத்தித் தொழில் ஸ்தாபனங்கள் இருக்கின்றன, இங்கு வேலை செய்யும் சுமார் பதினாயிரத்துக்கு மேற்பட்ட தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்திருக்கின்றனர். இவர்களில் பலர் ஒன்று கூடி, வேலை நிறுத்தத்தைத் தொடர்ந்து நடத்தி வருவதென்று தீர்மானித்தனர். இது சம்பந்தமாகச் சமரஸம் செய்து வைக்க, பர்மா அரசாங்கத்தின் பிரதம மந்திரி முதலியோர் முயற்சி செய்து வருகின்றனர்.

26 அகில இந்திய சுதந்திர தினக் கொண்டாட்டம் இந்தியாவெங்கணும் அதி விமரிசையாகக் கொண்டாடப் பட்டது.